அவன்படியிதுவான பின்பு, விரோதியான தேஹத்தைக்கழித்து[உ]ஜ்ஜீவிக்கும்படி ஸம்வத்ஸராபத்தி பண்ணவேண்டியிருப்பாராகத், (ஶரீரத்தையொறுத்து ஸாயுஜ்யம் தாமே பண்ணவேண்டா, அவனுகந்து வர்த்திக்கிற திருச்சித்ரகூடத்தை ஆஶ்ரயங்கொள்ளுங்கோளென்கிறார்.) † "மனனுமழல் நுகர்ந்தும் வண்டடத்தினுட்கிடந்தும்" என்கிறபடியே — கோடைகாலம் பஞ்சாக்நிமத்யஸ்தராயும், ஶீதகாலம் தடாகங்களிலே அவமாதங்கள் பண்ணி அதின்மேல் பாசிப்பற்றிக் கிடந்தும், இப்படி ஶரீரத்தையொறுத்து அம்புப⁴க்ஷராயும், வாயுப⁴க்ஷராயும், ஶாகமூலபலாதிகளை ப⁴க்ஷித்தும் தபஸ்ஸு பண்ணிக் கலேஶிக்கவேண்டா, பரம்யாபத்துக்களில் அபேக்ஷாநிரபேக்ஷமாக ரக்ஷிக்கும் ஸ்வபா⁴வனுடைய, ராவண ஹிரண்யாதிகளாலே நலிவுபட்டகாலத்து ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணி ரக்ஷித்தும், இப்படி ஸர்வப்ரகாரமாக ஸர்வரக்ஷகனான ஸர்வேஶ்வரன், ஸ்ரீபதி, திருச்சித்ரகூடத்திலே ஸந்நிஹிதனானவனை, அத்தேஶத்தைச் சென்று சேரவே ஸகலவிரோதிகளும் போய் அவனைப் பெறலாம், சடக்கென அத்தேஶத்திலே சென்று சேருங்கோளென்று பரோபதேஶம் பண்ணுகிறார்.

முதற்பாட்டு —(ஊன்வாட) மாம்ஸமானது குறையும்படி அஶநவஸநாதிகளைக் குறைத்து, ப்ராணன்களைப் போகாதபடி அல்பப⁴க்ஷண வாயுப⁴க்ஷணங்களாலே காற்கட்டி, ஶரீரத்தைவிட்டுப் போகாத இந்த்ரியங்களைந்தும் ஸ்வஸ்வவிஷயங்களைப் பெறாமையாலே நொந்திடும்படி

முதற்பாட்டு.— (ஊனித்யாதி.) "உண்ணாது" என்றது உடாமைக்கு உபலக்ஷணமாயருளிச்செய்கிறார் (வஸநாதிகளையென்று.)

† குண்டலத்தகரந்தம் சில ஸ்ரீகோஶங்களிலில்லை.

http://acharya.org

மூ.—ஊன்வாட வுண்ணா துயிர்காவலிட்
டுடலிற்பிரியாப்புலனைந்தும் நொந்து
தாம்வாட வாடத்தவம்செய்யவேண்டா
தமதாவிமையோருலகாள கிற்பீர்!
கானாட மஞ்ஞைக் கணமாடமாடே
கயலாடுகானீர்ப் பழனம்புடைபோய்த்
தேனாடமாடக் கொடியாடுதில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. ங.

ப - ரை.—இமையோருலகு - பரமபதத்தை, தமதா - தங்களதாக, ஆளகிற்பீர் - ஆளவேண்டியிருக்குமவர்களே!. ஊன் - மாம்ஸமானது, வாட - வாடிப்போகும்படி, உண்ணாது - போஜநாதிகளைத் தவிர்ந்து, உயிர் - ப்ராணனை, போகாதபடியாக நீர் காற்று முதலானவற்றால், காவலிட்டு - காத்துக்கொண்டு, உடலில்பிரியா - சரீரத்தை விட்டுப்போகாத, ஐந்துபுலனும - ஐந்து இந்த்ரியங்களையும், நொந்து - வருந்த. தாம் - தாங்கள், வாடவாட - மேன்மேலும் களைக்கும்படி, தவம்செய்யவேண்டா - தபஸ்ஸுபண்ணவேண்டா; கான் - வண்டுகள், [illegible], ஆட - பாடவும். மஞ்ஞைக்கணம் - மயிலினங்கள், ஆட - நடனம், மாடே - பக்கத்திலே, கயல் - கயலமத்ஸ்யங்கள், ஆடு - ஸஞ்சரிக்கிற, கானீர் - தேனுநிற நீரையுடைய, பழனம்புடை - நீர்நிலங்களருகே, போய் —, தேன் - வண்டுகள், ஆட - மேலேயெழப்பறக்க, அக்காற்றாலே, மாடம் - மாடங்களிலுண்டான, கொடி - கொடிகள், ஆடு - அசையாநிற்கிற, தில்லைத் திருச்சித்ரகூடம் - தில்லைத் திருச்சித்ரகூடத்தை, சென்று சேர்மின்கள் - சென்று சேருங்கள். [illegible] விரோதிகளும்போய் அவனைப்பெறலாம் என்று [illegible]. (௩)

இப்படி செய்கையாலே சரீர ஸம்பந்தத்தாலே நிகள வாடி வாடி நின்று தபஸ்ஸுபண்ணவேண்டா. அதுவின்றி உபாயத்தாலே மோக்ஷம்பெறுவதென்ன; இத்தாலேயென்கிறார் (கானாடவித்யாதி) கானென்று - வண்டும், தேனும், இசையும், நறுநாற்றமும், காடும், இவையைந்துக்கும்பேர். (கானாட) வண்டுகள் மதுபானமத்தமாய்ப் பாட. (மஞ்ஞைக்கணமாட) மயில்திரள்கள் மதுபானமத்தமாயாட. (மாடே) பக்கத்தே. (கயலாடுகானீர்ப்பழனம்புடைபோய்த்தேனாட) கயல், ஆடு - ஸஞ்சரிக்கிற, தேனுநிற நீரையுடைய நீர்நிலங்களருகேபோய் வண்டுகள் மதுபானம்பண்ணி ஆட. (மாடக்கொடியாத்யாதி) கொடியணிமாடத்தில்லை சித்ரகூடம்சென்று சேர்மின்களே. க.

தாங்கள் மேன்மேலும் களைக்கும்படி தபஸ்ஸுபண்ணவேண்டா. (தமதாவித்யாதி) பரமபதத்தைத் தங்களதாக ஆளவேண்டியிருக்கு[கிறீ]பீர்!.— (கானாட) சோலையசையும்படியாக மயிலினங்களாட, அத்தாலே சோலையிலநின்றும் கிளம்பின வண்டுகளானவை, அச்சோலையருகே கயல்கள்களித்துப் பாயாநின்றுள்ள நீரோடு காலையுடைத்தாயிருக்கிற நீர்நிலங்கள் அருகிட்டுப்போய், தேனுண்டு - வண்டுகளானவை, மேலேயெழப் பறக்க, அக்காற்றாலே மாடத்திலுண்டான[சுய]கொடிகளானவை அசையாநிற்குமாய்த்து. ... ... க.

“வாடவாட” என்றமீமிசையினர்யம் (மேன்மேலும்களைக்கும்படியென்றது.) “இமையோருலகு - தமதா-ஆளகிற்பீர்” என்றந்வயித்தருளிச்செய்கிறார் (பரமபதத்தையித்யாதி.) “மஞ்ஞைக்கணம்” என்றதினர்யம் (மயிலினங்களென்றது.) “மாடே” என்றதினர்யம் (சோலையருகேயென்றது.) “நீர்-கால - பழனம்”[சரு]என்றந்வயித்தர்யமருளிச்செய்கிறார் (நீரோடித்யாதி.) “புடை” என்றதினர்யம (அருகிட்டென்றது.) ... ... க.

http://acharya.org

மூ.—காயோடுநீடு கனியுண்டுவீசு
கடுங்காலநுகர்ந்து நெடுங்காலமைந்து
தீயோடுநின்று தவஞ்செய்யவேண்டா
திருமாலைச் சிந்தையுள்வைத்துமென்பீர்!
வாயோதுவேதம் மல்கின்றதொல்சீர்
மறையாளர்நாளும் முறையால்வளர்த்த
தீயோங்கவோங்கப் புகழோங்கு தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. ௨.

ப [illegible] — தி[illegible]மாலை [illegible] ஸ்ரீ[illegible]பதியை, சிந்தையுள்-நெஞ்சில், வைத்தும்[illegible] என்பீர் - வை[illegible] [illegible]மென்பீர், காயோடு - இளங்காய்களையும், நீடு கனி - நெடு[illegible] பழங்களையும், உண்டு - புஜித்து, வீசு-அடிக்கிற, கடுங்கால- வேட்டை[illegible] [illegible] பக்ஷணம், நெடுங்காலம் நெடுநாள், ஐந்து தீயோடு [illegible] [illegible] பஞ்சாக்நி மத்யஸ்தராய் நின்று, தவஞ்செய்யவேண்டா - தபஸ் [illegible] [illegible] [illegible] வாய் [illegible], வேதம் - வேதமானது, ம[illegible] [illegible] [illegible] தொல் ஸ்வாபாவிகமான, சீர் ஸம்பத்தையுடைய, மறையாளர் [illegible] [illegible] நாளும் - [illegible]தோறும், முறையால் முறையாலே, வளர்த்த [illegible] [illegible] [illegible] வளர, அதனாலே, [illegible] [illegible] [illegible] [illegible]தியுடைய, தில்லைத்திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்கள் — (௨)

[illegible] [illegible] (கா[illegible]) கருக்காய்களையும் பெரியபழங்களையும் [illegible], அ[illegible]நகாரத்தை ஸேவித்தும், இப்படி நெடுங்காலம் [illegible] [illegible] நின்று தபஸ்ஸுபண்ணவேண்டா. (தி[illegible]மாலை[illegible]) ஸ்ரீ[illegible]யை நெஞ்சிலே கொண்டு. திருச்சித்ரகூடம் [illegible] (வா[illegible]) வாயாலே யெப்போதும் வேத[illegible] [illegible] [illegible]யுடைய ப்ராஹ்மணர் நாள் தோறும் [illegible] [illegible]யாக அதனாலே யோங்குகிற புகழையுடைய தில்லை திருமாலைநெஞ்சிலே வைத்துக்கொள்ள வேணுமென்[illegible] [illegible]. .. ... ௨.

(இ)ரண்டாம்பாட்டு—(காயோடிதயாதி) பருவமில்லாதான காய்களையும், [illegible] [illegible] [illegible] முலர்ந்து பசையற்ற கனிகளையும் [illegible], [illegible]னைவெட்டிய பகாறைப்பாருங்கி, நெடுங்காலம் பஞ்சாக்நி மத்யமத்[illegible] நின்று [illegible]தபஸ்ஸுபண்ணவேண்டா, ஸ்ரீயப்பதியை ஹ்ருதயத்திலேபிரியாதபடி வைத்துக்கொள்வோமென்பீர்!.—(வாயோதித்யாதி) வாயாலேஓதும் வேதம் குறைவறுகையால்வந்த ஸவாஹாராவிசஸம்பத்தையுடைய ப்ராஹ்மணர் என்றுமொக்க முறையாலே அநுஷ்டித்த அக்நி வளர்வளரப் புகழோங்காநின்றுள்ள தில்லை. ௨.

இரண்டாம்பாட்டு.— (காயிதயாதி.) ஊனவா—வுணஞ்தார் உயிரைக்காவிடும்படியெங்ஙனேயென்ன, அதனை விவரியாநின்றுகொண்டு, தபஸ்விஜுடைய துஷ்கரதையும் காட்டுகிறாரென்றுஸங்கதி.

நீடுகனி - நெடுநாளுலர்ந்தகனியென்றுய, அங்ஙன் காய்க்குவிசேஷணமிடார்மையால், இளங்காயென்ற பரகரணத்துக்குச்சேர வருளிச்செய்கிறார் (பருவமித்யாதி.) வெட்டிய - உஷ்ணமான. ... ...

மூ.—வெம்புஞ்சினத்துப் புனக்கேழலொன்றாய்
விரிநீர்முதுவெள்ளமுள்புக்கழுந்த
வம்புண்பொழில்சூழலகன்றெடுத்தா
னடிப்போதணைவான் விருப்போடிருப்பீர்!
பைம்பொன்னுமுத்தும் மணியுங்கொணர்ந்து
படைமன்னவன்பல்லவர்கோன் பணிந்த
செம்பொன்மணிமாடங்கள் சூழ்ந்த தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. ௩

ப - ரை.—வம்பு - புதிதாய், உண் - ஊணுக்கு விஷயமான, பொழில் - சோலை,(யி) சூழ் - சூழ்ந்த, உலகு - பூமியானது, விரி - பரந்த, முதுநீர்வெள்ளமுள் - மஹாஜலமான கடலிலே, புக்கு அழுந்த - மக்னையாக, அனறு - அப்போது, வெம்பும் சினம் - மிக்க கோபத்தையுடைத்தாய், புனம் - காட்டிலேவர்த்திக்கிற, ஒன்று - ஒப்பற்ற, கேழலாய் - மஹாவராஹமாய்க்கொண்டு, அத்தை, எடுத்தான் - இடந்தெடுத்தவனுடைய, அடிப்போது - திருவடித்தாமரைகளை, அணைவான் - சேரவேணுமென்கிற, விருப்போடு - ஆதரத்தோடே, இருப்பீர் - வர்த்திக்கிறவர்களே!; பைம் - அழகிய, பொன்னும் - பொற்பூக்களையும், முத்தும் - முத்துக்களையும், மணியும் - மாணிக்கங்களையும், கொணர்ந்து - கொண்டுவந்து, படை - பரிகரத்தோடேகூட, மன்னவன் - ராஜாவான, பல்லவர்கோன் - பல்லவராஜா, பணிந்த - அனுவர்த்தித்தாய, செம்பொன் - அழகியபொன்னாலும், மணி - மாணிக்கங்களாலும் செய்யப்பட்ட, மாடங்கள் - மாடங்களால், சூழ்ந்த - சூழப்பட்ட, தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்கள்—. ... ... ௩)

மூன்றாம்பாட்டு. (வெம்பித்யாதி) மிக்க சினத்தையுடைத்தான காட்டிலே வர்த்திக்கும் வராஹமாய். (விரிநீரித்யாதி) பரந்தமஹாஜலத்திலே பரிமளப்ரசுரமான பொழில்சூழ்ந்த பூமியைத்தெடுத்தவன் திருவடித்தாமரைகளைச் சேரவேணுமென்றிருக்கிற ஆதரமுடையீர். (பைம்பொனித்யாதி) அழகிய பொற்பூக்களையும் முத்தும் மாணிக்கங்களையுங்கொண்டு ஸபரிகரமாகவந்து பல்லவர்கோன் பணிந்த. (செம்பொனித்யாதி) அழகிய பொன்னாலும் மாணிக்கங்களாலும் செய்யப்பட்ட மாடங்கள்சூழ்ந்த தில்லை. ... ... ௩.

மூன்றாம்பாட்டு.—(வெம்புமித்யாதி) மிக்க சினத்தையுடைத்தாய் புனத்திலேவர்த்திக்கும் மஹாவராஹமொன்றாய், பரந்திருந்துள்ள கடலிலே ஸூமியழுந்த, அப்போது பரிமளத்தையுடைத்தான பொழில்சூழ்ந்த பூமியையெடுத்தவனுடைய திருவடித்தாமரைகளையணையவேணுமென்னும் விருப்பத்தோடே வர்த்திப்பீர்!.— (பைம்பொன்னித்யாதி) ரத்நாதிகளைக்கொண்டு பரிகரத்தோடும் பல்லவர்கோன் பணிவதும்செய்து, செம்பொன்னாலும்மணியாலும்செய்த மாடங்கள் சூழாநின்றுள்ள தில்லை. ... ... ௩.

மூன்றாம்பாட்டு.— (வெம்புமித்யாதி) "தவம்செய்யவேண்டா, திருச்சித்திரகூடம் - சேர்மின்கள்" என்றீர், நாங்கள் ஸம்ஸாரப்ரளயத்திலழுந்திக்கிடக்க உபேக்ஷிப்பதென்ன; ப்ரளயார்ணவமக்நையான பூமியை யெடுத்தாப்போல் உங்களை உபேக்ஷிக்கவல்லவனன்றென்கிறாரென்று ஸங்கதி.

வம்பு - புதிதாய், உண் - ஊணுக்குவிஷயமாய், அவற்றையுடைத்தான பொழிலென்று விலக்ஷித்தருளிச்செய்கிறார் (ஸலேத்யாதி.) பைம்பொன் - அழகிய பொற்பூக்கள். ... ... ௩.

http://acharya.org

மூ — அருமாநிலமன்றளப்பான் குறளா
யவுணனபெருவேள்வியில் சென்றிரந்த
பெருமான்திருநாமம்பிதற்றி நுந்தம்
பிறவித்துயர்நீங்குது மென்னகிற்பீர் !
கருமாகடலுள் கிடந்தானுவந்து
கவைநாவரவினணைப பள்ளியின்மேல்
திருமால்திருமங்கையொடாடு தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. ௪.

ப-ரை.— அன்று-இந்த்ரன் தன்ராஜ்யத்தையிழந்தவன்று, அரு-அளக்கவரிதான, மாநிலம்-மஹாப்ருதிவியை, அளப்பான்-அளக்கைக்காக, குறளாய-வாமநரூபியாய, அவுணன - அஸுரனுன மஹாபலியுடைய, பெருவேள்வியில - மஹாயாகத்தில, சென்று இரந்த - சென்று ஆர்த்தித்த, பெருமான - ஸர்வேஸ்வரனுடைய, திருநாமம் - திருநாமங்களை, பிதற்றி - அடைவுகெடச்சொல்லி, நுந்தம் - உங்களுடைய, பிறவித்துயர - ஜந்மதுக்கத்தை, நீங்குதும - போக்குவோம, என்னகிற்பீர்-என்று சொல்லிற்பீர் ; கருமா - மிகவும்பெரிய, கடலுள் - திருப்பாற்கடலிலே, கவைநா - இரண்டுநாவையுடைய, அரவினணைப்பள்ளியின்மேல- திருவனந்தாழ்வானுகிற படுக்கையிலே, உவந்து - உகந்து, கிடந்தான - பள்ளிகொண்டருளின, திருமால - ஸ்ரீயபதி, திருமங்கையொடு - பெரியபிராட்டியாருடனே, ஆடு - நித்யவாஸம்பண்ணுகிற, தில்லைத் திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்கள்—. ... (௪)

நாலாம்பாட்டு. (அருமாநிலமித்யாதி) அளக்கவரிதான மஹாப்ருதிவியை, தன்னையொழிய வொருவராலளக்கப்போகாதே. (அவுணனித்யாதி) அஸுரனுடைய யாகத்திலே வாமநனுய்ச்சென்று இரந்த ஸர்வேஸ்வரனுடைய திருநாமத்தைச்சொல்லி உங்கள் பிறவியால் வருந்துக்கங்களைப் போக்கவேணுமென்னிலிருப்பீர். கருமை-பெருமை; மஹத்தையும பெருமையுமுடைய பெரியகடலிலே. இரண்டு நாவையுடைய திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடையனாயக்கொண்டு அதின்மேலே உகந்து பள்ளிகொண்ட ஸ்ரீயபதி. (திருமங்கையித்யாதி) பெரியபிராட்டியாருடனே நித்யவாஸம்பண்ணுகிற. ... ... ௪.

நாலாம்பாட்டு.— (அருமாவித்யாதி) அளக்கவரிதான மஹாப்ருதிவியை அளக்கைக்காக வாமநனாய, அஸுரனுடைய மஹாயாகத்திலே சென்றிரந்த ஸர்வேஸ்வரனுடைய திருநாமத்தை அடைவுகெடப் பேசி உங்களுடைய ஜந்மது:க்கத்தைப் போக்குவோமென்று சொல்லியிருப்பீர் — (கருமாவென்றுதொடங்கி) இரண்டுநாவுடைய திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே, கறுத்துப்பெருத்த கடலிலே, [கூடு] உகந்து கண்வளர்ந்தருளின ஸ்ரீயஃபதி, பெரியபிராட்டியாரோடேகூட விடாதே ஸஞ்சரிக்கிற தில்லை. ... ... ௪.

நாலாம்பாட்டு.— (அருமாவித்யாதி.) ஸ்ரீலக்ஷ்மிபிராட்டிக்கு அவன்பரம ப்ராப்யமாகையாலுதவிஞ்ஞையாகிலும், அதுகொண்டு நாங்கள்தேறும்படியெங்ஙனேயென்ன; தன்னை அர்த்தித்தார்க்காகவேதானர்த்தியாய்க்காரியம்செய்து தலைக்கட்டினவனன்றோ, உங்கள்பேக்ஷிதமுமசெய்யவல்லனென்றருளிச்செய்கிறுரென்று கருத்து.

"கடல்கள்தோறும் கண்வளர்ந்தருளுமென்றொருப்ரமாணப்ரஸித்தியுண்டு" என்று முன்னே தாம் நிர்வஹித்தநிர்வாஹத்தைத் திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறா (கறுத்துப்பெருத்தகடலிலே யென்று.) ... ...

http://acharya.org

௫.—கோமங்க வங்கக்கடல்வையமுய்யக்
குலமன்னரங்கம் மழுவில்துணியத்
தாமங்கமருள்படைதொட்டவென்றித்
தவமாமுனியைத்தமக்காக்ககிற்பீர் !
பூமங்கைதங்கிப் புலமங்கைமன்னிப்
புகழ்மங்கையெங்குந் திகழப் புகழ்சேர்
சேமங்கொள்பைம்பூம் பொழில்சூழ்ந்ததில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. ௫.

ப - ரை.—கோ - ராஜாக்கள், மங்க - அடங்கவும், வங்கம் -மரக்கலங்கள்[மி] நிறைந்த, கடல - கடல்சூழ்ந்த, வையம் - பூமியிலுள்ளார், உய்ய - உஜ்ஜீவிக்கும படியாகவும், குலமன்னர் - ராஜாக்களுடைய, அங்கம் - சரீரமானது, மழுவில் - மழுவிலே, துணிய-துணியும்படியாகவும், தாம் - தாமே, அமருள்-பூசலிலேபுக்கு, படைதொட்ட - ஆயுதமெடுத்த, வென்றி - ஜயிக்குமவரும், தவம் - பின்பு தபஸ்ஸுபண்ணப்புக்க, மாமுனியை-மஹாமுனியான ஸ்ரீபரசுராமாழ்வானை, [இந்] தமக்கு - தங்களுக்கு, ஆக்ககிற்பீர்-ஆக்கக்கொள்ளவேணடியிருப்பீர் ; பூமங்கை-பெரியபிராட்டியார், தங்கி-திருமார்பிலேதங்கியும், புலமங்கை - ஸ்ரீபூமிப்பிராட்டி, மன்னி-இடவருகேபொருந்தயும், அத்தாலே,புகழ்மங்கை—, எங்கும்-எங்குமொக்க, திகழ - உஜ்ஜ்வலமாய்விளங்காநிற்க, புகழ்சேர்-புகழையுடைத்தாய், சேமங்கொள்-அரணையுடைத்தான,பைம்பூம்பொழில்சூழ்ந்த-பரப்புத்தசோலையாலசூழப்பட்ட, தில்லைத் திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்கள்—. ... ... (௫)

அஞ்சாம்பாட்டு. (கோமங்கவித்யாதி) ராஜாக்களென்று பேர் பெற்றார் அடங்க. ராஜாக்கள் சரீரமானது மழுவிலேதுணிய. (தாமங்கவி த்யாதி) தாமேபூசலிலேபுக்கு ஆயுதமெடுத்து அவர்களையறுத்துப் பொகட்டுச் சினந்தீர்ந்தபின்பு தபஸ்ஸுபண்ணப்புக்க மஹாமுனியை உமக்காகவேணுமென்றிருப்பீர் !.— (பூமங்கையித்யாதி) பெரியபிராட்டியாரும், ஸ்ரீபூமிப்பிராட்டியாரும் நித்யவாஸம்பண்ணுகையாலே புகழ்மங்கையெங்கும் உஜ்ஜ்வலமாய் விளங்காநின்ற.(புகழ்சேரித்யாதி) மிக்கபுகழையும் அரணையும் அழகியபொழில்சூழ்ந்த தில்லை. ௫.

அஞ்சாம்பாட்டு.— (கோமங்கவித்யாதி) ராஜாக்களென்று பேர் பெற்றாரடங்கலும் மங்க, கடல்சூழ்ந்தபூமி உய்ய, ராஜாக்களுடைய ஶரீரம் மழுவிலேதுணித்தவிடத்திலும் கோபம்மாறாதே ஆயுதம் தொட்ட அதிமாத்ரமான மஹாவீர்யத்தையுடையருன ஸ்ரீபரசுராமாழ்வானைத் தந்தாமக்காக்கிக்கொள்ள வேண்டியிருப்பீர் !.— (பூமங்கையித்யாதி) பெரியபிராட்டியாரும் ஸ்ரீபூமிப்பிராட்டியும் நித்யவாஸம்பண்ணி, புகழ்மங்கை யெங்குமுஜ்ஜ்வலமாய் வர்த்திப்பதும் செய்து, புகழையும் காப்பையுமுடைய பொழில்சூழ்ந்த தில்லை. ௫.

அஞ்சாம்பாட்டு.— (கோமங்கவித்யாதி.) இவ்ஷ்டாஜுக்குவிரோதியாய் உதார ஜுனமஹாபலிபோலேயோ எங்களுடைய ப்ரபலவிரோதிகள் என்னும் ஜிஜ்ஞா ஸுக்களுக்கு விரோதிநிரஸநஶீலதையை யருளிச்செய்யக்கோலி, ஸ்ரீவாமநாவதா ரத்துக்கு அநுஜாஹவியான ஸ்ரீபரசுராமாழ்வான் வீரசரிதத்தையருளிச்செய்கி றாரென்று ஸங்கதி.

மழுவில்துணித்தபின்பும் படைதொட்டிருக்கையால் வலித்தவர்யம் (கோபம் மாறாதேயென்று.) ... ... ௫.

http://acharya.org

மூ.— நெய்வாயழலம்புதுரந்து முந்நீர்
துணியப்பணிகொண்டணியார்ந்திலங்கும்
மையார்மணிவண்ணனையெண்ணி நுந்தம
மனத்தேயிருத்தும்படிவாழவல்லீர்!
அவ்வாயிளமங்கையர் பேசவுந்தா
னருமாமறையந்தணர் சிந்தைபுகச்
செவ்வாய்க்கிளி நான்மறைபாடு தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. சு.

ப - ரை.—நெய - கூரிய, வாய - வாயையும, அழல-அக்நிபோன்ற தேஜஸ்ஸையுமுடைய. அம்பு - அம்பை, துரந்து - விட்டு, முந்நீர் துணிய - கடலும்கலங்கிராவணனும் பரிகரமும் துணிய, பணிகொண்டு - அசதைச்சாரிபுங்கொண்டு, அணி - ஆபரணமாய், அதனால், ஆர்ந்து - பூரணமாய், இலங்கும் - விளங்காநிற்பதாய், மையார - கருமைமிக்க, மணிவண்ணனை - மணிபோன்றவடிவழகையுடையவனை, எண்ணி - அநுஸந்தித்து, நுந்தம - உங்களுடைய, மனத்தே - நெஞ்சிலே, இருத்தும படி - நித்யவாஸம்பண்ணும்படி, வாழவல்லீர் - வாழவேண்டியிருப்பீர்!; அவ்வாய - அவ்விடத்தில், இளமங்கையர - சிறுபெண்கள், தமப்பன்மார்அசயயநம்பண்ணக்கேட்டிருக்கையாலே, அருமாமறை - வேதத்தை, பேசவும் - சொல்லவும், அப்பெண்களுடனேகூட, செவ்வாய்க்கிளி - சிவந்தவாயையுடையகிளிகள், அந்தணர் சிந்தைபுக - ப்ராஹ்மணர்ஹ்ருதயத்திலே புகும்படி, நால்மறை - நான்குவேதங்களையும், பாடு - பாடிநிற்கும், தில்லைத்திருச்சித்ரகூடம் சென்றுசேர்மின்கள்—.

ஆறாயிரப்படி. (நெய்வாயித்யாதி) நெய் - கூர்மை. கூரியவாயையும் அழல்போன்ற தேஜஸ்ஸையுமுடைய அம்பைவிட்டு. (முந்நீரித்யாதி) கடலும்கலங்கி ராவணனும் பரிகரமும் துணியப் பணிகொண்டு. (அணியித்யாதி) ஆபரணங்களாலே அலங்க்ருதமாய் விளங்காநிற்பதாய் உருத்தான நீலமணிபோன்ற வடிவழகையுடையவனை, உங்கள்நெஞ்சிலே வைத்து வாழவேண்டியிருப்பீர்!— (அவ்வாயித்யாதி) அவ்விடத்திற் சிறுபெண்கள், தமப்பன்மார் அத்யயநம்பண்ணக்கேட்ட செவியேற்றாலே, அப்பெண்களுடனேகூட, சிவந்தவாயையுடைய கிளிகளானவையும் ப்ராஹ்மணர்ஹ்ருதயத்திலே புகும்படி நாலுவேதங்களையும் பாடும். இளமங்கையர் அருமாமறைபேச, கிளி நான்மறைபாட என்று கொள்வது ... ... சு.

ஆறாயிரப்படி.— (நெய்வாயித்யாதி) கடைந்து நெய்யிட்ட வாயையுடைத்தாய், நெருப்பையுமிழுகிற அம்பையேவிக் கடலைத் துணித்து, அதனைப்பணிகொண்டு, உஜ்ஜ்வலமாய் கருமைமிக்கிருந்துள்ள மணிபோலேயிருக்கிற திருநிறத்தோடேகூடின விக்ரஹத்தையுடையவனை யநுஸந்தித்து, உங்களுடைய ஹ்ருதயத்திலே நித்யவாஸம்பண்ணும்படி வாழவல்லீர்!.— (அவ்வாயென்றுதுடங்கி) தன்வாயில் பழுப்புப்போலேயிருக்கிற பாலைகளான பெண்கள் ஓத்துக்கேட்ட செவியேற்றாலே சொல்லவும் ப்ராஹ்மணருடைய ஹ்ருதயத்துக்கேற, சிவந்தவாயையுடைத்தான கிளியானது நல்ல ஸ்வரத்தோடே நாலுவேதத்தையும் பாடாநின்றுள்ள தில்லை. சு.

ஆரும்பாட்டு.—(நெய்வாயித்யாதி.) மேலா+த்தலைதரிட்டராஜாக்களைவென்றதுவும் எங்களுடையஅபாரஸம்ஸாரஸமுத்ரத்தைவெல்லவல்லனேயென்ன; அந்தராவதாரத்தில்கடலைக்கலக்கின அம்மாறுவசேஷ்டிதத்தையருளிச்செய்கிறாரென்றுலக்ஷ்மதி.

அணி - ஆபரணமாய், அத்தாலே, ஆர்ந்து-பூர்ணமாய், இலங்குமதாயென்று விக்ரஹவிசேஷணமென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (உஜ்ஜ்வலமாயென்று.) "அவ்வாயிளமங்கையர் - அருமாமறை - பேசவும், அந்தணர்சிந்தைபுக, செவ்வாய்க்கிளி - தான்-நான்மறைபாடு" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னித்யாதி.) ... ... சு.

http://acharya.org

மூ.—மௌவல்குழலாய்ச்சி மென்தோள்நயந்து
மகரஞ்சுழலச் சுழல்நீர்பயந்த
தெய்வத்திருமாமலர்மங்கைதங்கு
திருமார்வனைச் சிந்தையுள்வைத்துமென்பீர்!
கௌவைக்களிற்றின் மருப்பும்பொருப்பில்
கமழ்சந்தும்உந்தி நிவா வலங்கொள்
தெய்வப்புனல்சூழ்ந் தழகாய தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. எ.

ப - ரை.— மௌவல - முல்லைமலரை, குழல்-கருகுழலையுடைய, ஆய்ச்சி - நப்பின்னைப்பிராட்டியுடைய, மென் - மார்தவமான, தோள் - திருத்தோளோடே, நயந்து - கலந்து, மகரம் - மகரமத்ஸ்யம் தொடக்கமானவை, சுழல-சுழலும்படி, சுழல - சுழன்றுவருகிற, நீர்பயந்த - கடல்பெற்ற, தெய்வம் - அழகிய, திருமாமலர்மங்கை - பெரியபிராட்டியார், தங்கு - தங்குகிற, திருமார்வனை-திருமார்வையுடையவனை, சிந்தையுள் - நெஞ்சில், வைத்துமென்பீர் - வைக்கவேண்டியிருப்பீர்!; ஸிம்ஹத்தோடே பிணங்குகையாலே, கௌவை - பிளிறுகிற, களிற்றின் - யானையின், மருப்பும் - கொம்பையும், பொருப்பில் - பர்வதத்திலே, கமழ்-நறுநாற்றம் கமழுகிற, சந்தம் - சந்தநத்தையும், உந்தி - தள்ளிக்கொண்டுவருகிற, நிவா - வெள்ளாறு, வலங்கொள - வலங்கொள்ளாநிற்கிற, தெய்வம் - அழகிய, புனல்சூழ்ந்து - ஜலம்சூழ்ந்து, அழகாய - தர்ஶநீயமான, தில்லைத் திருச்சித்ரகூடம் சென்றுசேர்மின்கள்—. ... ... (எ)

ஏழாம்பாட்டு. (மௌவலித்யாதி) மௌவற்பூவைக் குழலிலே யுடைய நப்பின்னையுடைய மிருதுவான தோளுடனே கலந்து. (மகரமித்யாதி) மகரமென்கிற மத்ஸ்யவிஶேஷந்தொடக்கமானவை சுழன்று வருகிற கடல்பெற்ற பெரியபிராட்டியார் தங்குகையாலே திருமார்வனென்னும் திருநாமத்தையுடையவனை நெஞ்சிலே வைக்கவேண்டியிருப்பீர். கவ்வை - ஆரவாரம். யானைகள்பிளிறி ஆரவாரிக்க, யானைகள்கொன்றுபறித்த கோடுகளும் பர்வதத்தில் நறுநாற்றம்கமழுகிற சந்தனத்தையும் கொண்டுவந்துதள்ள நிவாஎன்கிற ஆறு சூழப்பட்டு அழகிய புனல்சூழ்ந்து அழகிய தில்லை. ... ... எ.

ஏழாம்பாட்டு.— (மௌவலித்யாதி) மௌவலோடேகூடின திருக்குழலையுடைய நப்பின்னைப்பிராட்டியுடைய மிருதுவான திருத்தோளிலே கலந்து, அங்குண்டான மத்ஸ்யங்கள் சுழலும்படி சுழன்றுவருகிற கடல்பெற்ற பெரியபிராட்டியார்தங்கும் திருமார்வையுடையவனை ஹ்ருதயத்திலே வைத்துக்கொள்வோமென்பீர்!.—(கௌவையித்யாதி) ஸிம்ஹத்தோடு பிணங்கிப் பிளிறுகிற ஆனையினுடைய கொம்பும், மலையில்பரிமளிதமான சந்தநத்தையும் தள்ளி, நிவாஎன்கிற ஆறு வலங்கொள்ளாநிற்கிற விலக்ஷணமான புனல்சூழ்ந்து தர்ஶநீயமான தில்லை. ... ... எ.

ஏழாம்பாட்டு.— (மௌவலித்யாதி.) “ஸ ஸாரஸமுத்ரத்தைக் கலக்கவல்ல [illegible]ரவசதிருக்கிறக்ஷேத்ரத்தில் சென்று சேர்மின்கள்”என்னுகின்றீர், எங்களால்கிட்டப்போமோவென்ன ; புருஷகாரபூதர் அருகேயுண்டு, பிற்காலியாதேசென்று சேருங்கோளென்கிறாரென்று [illegible].

மௌவலோடேயென்றது - முல்லைமலரோடேயென்றபடி. அங்குண்டானவென்று - மேலேசொல்லப்படுகிற ஸமுத்ரத்திலுண்டானவென்றபடி. கௌவை - ஆரவாரமாய், (பிளிறுகிற) என்றருளிச்செய்கிறார். ... ... எ.

http://acharya.org

மூ.— மாவாயினங்கம் மதியாதுகீறி
மழைமாமுதுகுன்றெடுத் தாயர்தங்கள்
கோவாய்நிரைமேய்த் துலகுண்டமாயன்
குரைமாகழல்கூடும் குறிப்புடையீர் !
மூவாயிரநான்மறையாளர் நாளும்
முறையால்வணங்க வணங்காயசோதித்
தேவாதிதேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. ௮.

ப - ரை.— மா - கேசி என்னும் குதிரையின், வாய்-வாயையும், அங்கம்-[ய உடலையும், மதியாது - ஒருசரக்காகநினையாதே, கீறி - பிளந்துபொகட்டு; இந்த்ரன் வர்ஷிப்பித்த, மழை - கல்வர்ஷத்துக்கு, மா - எல்லாரும் ஒதுங்க இடம்பெறும்படி பெரிதாய், முது - பழையதான, குன்று - கோவர்த்தநமென்னும் மலையை, எடுத்து - குடையாக எடுத்து, ஆயர்தங்கள்கோவாய் - இடையர்க்குத்தலைவனாய், நிரை - பசுத்திரளை, மேய்த்து—; ப்ரளயாபத்திலே, உலகு - லோகத்தை, உண்ட - திருவயிற்றிலேவைத்த, மாயன் - ஆஶ்சர்யபூதனுடைய, குரை - ஆபரணங்களால் ஶப்திக்கிற, மா-பெருமைதங்கிய, கழல் -திருவடிகளை, கூடும்-சேரவேணுமென்னும், குறிப்புஉடையீர்! - நினைவுடையீர் !; மூவாயிரம் - அநேகம், நான்மறையாளர் - ப்ராஹ்மணர், நாளும் - நாள்தோறும், முறையால் - ஸ்வரூபத்துக்குத்தக்கபடி, வணங்க - ஆஶ்ரயிக்க, அணங்காய - அப்ராக்ர்தமான, சோதி - தேஜஸ்ஸையுடைய, தேவாதிதேவன் - ஸர்வேஶ்வரன், திகழ்கின்ற - விளங்குகிற, தில்லைத் திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்கள்—. ... ... (௮)

எட்டாம்பாட்டு. (மாவாயித்யாதி) கேஶிவாயையும் அதினுடலையும் ஒருசரக்குப்பண்ணாதேபிளந்து. (மழையித்யாதி) ஆயர்கோவாய், மழைக்கு, யானைகளையுடைய பெரியமலையையெடுத்து அவற்றை மேய்த்து. (உலகுண்டவித்யாதி) ப்ரளயாபத்திலே லோகம் நஶியாமே வயிற்றிலே வைத்து ரக்ஷித்தஸர்வேஶ்வரன் நூபுராத்யாஹரணங்களாலே ஶப்திக்கிற பெரியதிருவடிகளைச் சேரவேணுமென்னும் நினைவுடையீர் !.— (மூவாயிரமித்யாதி) மூவாயிரம் ஸ்ராஹ்மணர் நாள்தோறும் ஸ்வரூபாநுரூபமாகவணங்குகிற அப்ராக்ஜதமானதேஜஸ்ஸையுடைய ஆதிதேவன் விளங்குகிற. ... ... ௮.

எட்டாம்பாட்டு.— (மாவாயித்யாதி) கேஶியுடைய வாயோடேகூட உடம்பை அநாயாஸேந இரண்டாகக்கிழித்து, இந்த்ரனால்வந்த மழையிலே பெருத்துப் பழைதான கோவர்தநத்தையெடுத்து, ஆயர்தலைவனாய்ப்பசுமேய்த்து,லோகத்தைத்திருவயிற்றிலேவைத்த ஆஶ்[சர்ய ஸ்ருதனுடைய, ஆபரணவொலியையுடைத்தாய் போக்யதைமிக்க திருவடிகளைக் கூடவேணுமென்று குறிப்புடையீர் !.— (முறையால்வணங்க அணங்காயசோதி) ஶாஸ்த்ரங்களில் சொல்லுகிறபடியே ஆஶ்ரயிக்க, அவர்களுக்காஶ்ரயணீயனாய் தேஜஸ்ஸையுடைய ஸர்வேஶ்வரன். ... ... ௮.

எட்டாம்பாட்டு.— (மாவாயித்யாதி.) கீழ்ப்பாட்டிற்சொன்னபுருஷகாரஸந்நிதானமுன்னிட்டாஶ்ரயித்தார்க்கு விரோதிபாபங்களைப்போக்கி உக்ரவர்ஷத்தை நீக்கித்தன்வயிற்றிலே வைத்துநோக்கவல்லனென்னுமதுக்கு த்ருஷ்டாந்தமான அபதாநங்களைஸூசிப்பித்து, அவனிருக்கும் தேஶத்திலே சேருங்கோளென்கிறாரென்று ஸங்கதி.

அணங்காய - அப்ராக்ருதமான, சோதியென்றாய், அத்தையருளிச்செய்கிறார் (தேஜஸ்ஸையுடைய வென்று.) ... ... ௮.

௯.— செருநீலவேற்கண் மடவார்திறத்துச்
சினத்தோடுநின்று மனத்தால்வளர்க்கும்
அருநீலபாவமகலப்புகழ்சே
ரமரர்க்குமெய்தாத வண்டத்திருப்பீர் !
பெருநீர்நிவாவுந்தி முத்தங் கொணர்ந்தெங்கும்
வித்தும்வயலுள்கயல்பாய்ந்துகளத்
திருநீலநின்று திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. ௯.

ப - ரை.—செரு - யுத்தத்துக்குப்பரிகரமான, வேல் - வேலபோலேகூரிதாய், நீலம் - நீலம்போலேகுளிர்ந்த, கண் - கண்ணழகையுடையராய், மடவார்திறத்து - மடப்பத்தையுமுடைய ஸ்த்ரீகளிடத்தில், புசிக்கநினைத்தபோகங்களைவிலக்குவார் பக்கல், சினத்தோடு - கோபத்தோடே, நின்று - இருந்து, மனத்தால் - நெஞ்சினாசையாலே, வளர்க்கும் - வளர்த்து வருமதாய், அரு - போக்கவொண்ணாத, நீலம் - தண்ணிய, பாவம் - பாபமானது, அகல-போம்படி, புகழ்சேர்-புகழை[யுடை]யுடைய, அமரர்க்கும் - ப்ரஹ்மாதிகளுக்கும், எய்தாத - கிட்டவரிய, அண்டத்து - பரமபதத்தில், இருப்பீர்! - இருக்கவேண்டியிருப்பீர்!, பெருநீர்-மிக்கநீரையுடைய, நிவா - வெள்ளாறு, முத்தம்கொணர்ந்து - முத்துக்களைக்கொணடுவந்து, உந்தி - தள்ளி, வித்தும் - விதைக்கிற, வயலுளெங்கும் - வயல்தோறும், கயல - கயல மத்ஸ்யங்கள், பாய்ந்து உகள - குதித்துத்துள்ள, திருநீலம்-அழகியநெய்தல்மலர், நின்று - எங்குமொக்கப்பரந்து, திகழ்கின்ற - விளங்குகிற, தில்லைச் திருச்சித்திர கூடம் சென்றுசேர்மின்கள்—. ... ... (௯)

ஒன்பதாம்பாட்டு. (செருவித்யாதி) செருவேல்போலவும் நிலம் போலவும் கூர்த்துக்குளிர்ந்த கண்ணழகையுடையருமாய் மடப்பத்தை யுடைய ஸ்த்ரீகள்விஷயமாக ஸஞ்ஜிக்க நினைத்தபோகங்களுக்கு ப்ரதிபந்தகரானவர் பக்கல் சினத்தாலே வளர்த்துவந்த உங்கள் நெஞ்சை யிருளப்பண்ணினபாபமகல. (புகழித்யாதி) புகழையுடைய ப்ரஹ்மாதிகளுக்கும்கிட்டாதபரமபதத்தேயிருக்கவேண்டியிருப்பீர். (பெருநீரித்யாதி) மிக்கநீரையுடைய நிவாவந்து முத்துக்களைக்கொண்டுவந்து தள்ளி வயல்தோறும்வித்த, அத்தாலே அவ்வயலிற்கயல்கள் கல்விட்டெறிந்தாப்போலே பயப்பட்டுத்துள்ளிப்போக. (திருநீலமித்யாதி) அழகிய நீலமானது விளங்காநின்றவயலையுடைய தில்லை. ௯.

ஒன்பதாம்பாட்டு.— (செருவித்யாதி) யுத்தத்துக்குப் பரிகரமாய் நீலமானநிறத்தையுடைய வேல்போலேயிருக்கிற கண்ணையுடைய ஸ்த்ரீகள்திறத்தில், அதுக்கு ப்ரதிபந்தகர்பக்கல் சினத்தோடே நெஞ்சிலாசையாலே வளர்ந்து பரிஹரிக்கவொண்ணாதே தண்ணிதானஸம்பந்த ப்ரதிபந்தகமானபாபம்போக ப்ரஸித்தரானப்ரஹ்மாதிகளுக்கும் கிட்டவரிய பரமபதத்திலே யிருக்கவேண்டியிருப்பீர் !.— (பெருநீரென்றுதுடங்கி) மிக்கநீரையுடைய நிவாஎன்கிற ஆறு முத்தைக் கொடுவந்துவித்துகிற வயலிலே வித்ஜிதமானகயல்கள் பாய்ந்து தாவித்திரிய தர்ஶநீயமான நீலம் நின்று திகழாநின்றுள்ள தில்லை. ... ௯.

ஒன்பதாம்பாட்டு.— (செருவித்யாதி.) தாமுபதேஶித்த ஆஶ்ரயணத்துக்கு ஸ்வரூபந்தான் ப்ராப்யாநுரநிவ்ருத்தி பூர்வகஸம்பந்தப்ராப்தி என்றுஸௌரவத்தை நெஞ்சில்படுத்துகிறாரென்று ஸங்கதி.

“நீலம்” என்று - கறுப்பாய், அத்தால் - தண்ணிமையைச்சொல்லுகிறதென்றருளிச்செய்கிறார் (தண்ணிதானவென்று.) வித்ஜிதமானவென்றது - முத்தைவித்து கையாலேகல்விட்டெறிந்தாப்போலே பயப்பட்டிருக்கிறவென்றபடி. நீலம்-நெய்தல்.

http://acharya.org

மூ.— சீரார்பொழில்சூழ்ந் தழகாய தில்லைத்
திருச்சித்திரகூடத் துறைசெங்கண்மாலுக்
காராதவுள்ளத்தவர் கேட்டுவப்ப
வலைநீருலகுக்கருளே புரியும்
காரார்புயற்கைக்கலிகன்றி குன்றா
வொலிமாலையோ ரொன்பதொடொன்றும்வல்லார்
பாராருலகமளந்தானடிக்கீழ்ப்
பலகாலம்நிற்கும்படி வாழ்வர்தாமே. ௧௦.

ப - ரை.—சீர் ஆர - அழகுமிக்க, பொழில்சூழ்ந்து - சோலையால்சூழப்பட்டு, அழகாய - அழகையுடைத்தான, தில்லைத் திருச்சித்திரகூடத்து—, உறை - நித்யவாஸம்பண்ணுகிற, செங்கண்மாலுக்கு - சிவந்த கண்ணழகையுடைய ஸர்வேஶ்வரன்விஷயமாக, ஆராத - பகவதநுபவத்தில்திருப்தி பிறவாத, உள்ளத்தவர்-நெஞ்சையுடைய ஸ்ரீவைஷ்ணவர்கள், கேட்டு—, உவப்ப - ஸந்தோஷிக்கும்படியாக, அலைநீர் - அலையெறிகிற ஜலத்தையுடைய கடலால் சூழப்பட்ட, உலகுக்கு - பூமியிலுள்ளார்க்கு, அருளே - ப்ரஸாதத்தையே, புரியும் - பண்ணும் ஸ்வபாவத்தையுடையராய், கார்ஆர் - மிகவும்பெருத்த, புயல் - மேகம்போலே, கை-உதாரரான, கலிகன்றி - ஆழ்வார், குன்றா - குறையாத,ஒலி - ஓசையையுடைத்தாம்படியருளிச்செய்த, மாலை - ஸப்தஸந்தர்ப்பத்தையுடைய, ஓரொன்பதோடொன்றும் - பத்துப்பாட்டையும், வல்லார் - அர்த்தத்துடன் கற்கவல்லவர்கள், பார் ஆர் உலகம் - பூமியையும், ஸ்வர்க்காதிலோகங்களையும், அளந்தான் - அளந்துகொண்டவனுடைய, அடிக்கீழ் - திருவடிகளின்கீழே, பலகாலம் - ஸர்வகாலமும், நிற்கும்படிவாழ்வர்-அடிமைசெய்து வர்த்திக்கும்படியான வாழ்வைப்பெறுவர்கள். ... (௧௦)

பத்தாம்பாட்டு. (சீராரித்யாதி) அழகார்ந்தபொழிலாலே சூழப்பட்டு அழகிய தில்லைத்திருச்சித்ரகூடத்திலே நித்யவாஸம்பண்ணுகிற புண்டரிகாக்ஷனைச்சொன்ன. (ஆராதவித்யாதி) பகவதநுபவத்தால் ஒருக்காலுமாராத த்ருஷ்ணையத்தையுடைய ஸூரிகள்கேட்டுகக்க. (அலைநீரித்யாதி) கடல்சூழ்ந்தபூமிக்கு அருளேபண்ணும். (காராரித்யாதி) கார் - பெருமை. மிகவும்பெருத்த மேகம்போலே வரையாதேகொடுத்தகையையுடைய ஆழ்வாரருளிச்செய்த பத்துப்பாட்டையும் வல்லார்.

பத்தாம்பாட்டு.— (சீராரித்யாதி) அழகுமிக்க பொழில்சூழ்ந்து தர்ஶநீயமான தில்லையில் நித்யவாஸம்பண்ணுகிற ஸர்வேஶ்வரனுக்கு, ஒருநாளும் ஆராத ஸ்நேஹத்தையுடைய ஸ்ரீவைஷ்ணவர்கள்கேட்டு ஸந்தோஷிக்க, கடல்சூழ்ந்தபூமிக்கு ப்ரஸாதத்தைப்பண்ணும் ஸ்வபாவராய், கார்காலத்து மேகம்போலே பரமோதாரரான திருமங்கையாழ்வார்குறையாதவோசையையுடைத்தாகவருளிச்செய்ததிருமொழி பத்தும் வல்லார் ;

பத்தாம்பாட்டு.— (சீராரித்யாதி.) "உள்ளம்" என்கிறபதம் லக்ஷணயா ஸ்நேஹத்தைச் சொல்லுமென்றருளிச்செய்கிறார் (ஸ்நேஹத்தையென்று.) " அருளே புரியும்" என்கிற அவதாரணஸ்வாரஸ்யம் (ஸ்வபாவராயென்றது.) ௧௦.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

http://acharya.org

(பாராரித்யாதி) பூமியையும் ஸ்வர்காதிலோகங்களையுமளந்தவன்திருவடிகளிலே ஸர்வகாலமுமடிமைசெய்து நிற்கும்படியான வாழ்ச்சியைப்பெறுவர். ... ... ௧0.

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ப்ருதிவீப்ரப்ருதிமானலோகத்தை யளந்தவன்றிருவடிகளின்கீழே காலமெல்லாம் வர்த்திக்கும்படியான வாழ்வைப்பெறுவர். ... ௧0.

அடிவரவு.—ஊன் காய் வெம்பு அருமா கோ நெய் மௌவல் மாவாய் செருச் சீரார் வாட.

திருமங்கையாழ்வார்திருவடிகளேஶரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

ஆக, திருமொழி - ௨௨ - க்கு, பாட்டு - ௨௨0.

மூன்றாம்பத்து - மூன்றாந்திருமொழி-வாடமருதிடை. ப்ரவேஶம்.

திருவவதரித்தபோது துடங்கி விரோதிநிரஸநஶீலனான க்ருஷ்ணன் பூதநாஶகடயமளார்ஜுநாதிகளை நிரஸித்தாப்போலே த்வஹ்ருதஸவிரோதியான அவித்யாதிகளைப்போக்க ஆஶ்ரிதஸுலபனாய்க்கொண்டு திருச்சித்ரகூடத்திலே க்ருஷ்ணன் நித்யவாஸம்பண்ணாநின்றான், அவனை நீங்கள் சென்றாஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்கிறார். ✻

க்ருஷ்ணாவதாராதிகளில் விரோதிநிரஸநத் திருச்சித்ரகூடத்திலே வந்து ஸந்நிஹிதனானான், எல்லாருமாஶ்ரயியுங்கோளென்கிறார். ... ✻

அ.— வாடமருதிடைப்ரவேஶம்.— கீழ்த்திருமொழியில் ராமக்ருஷ்ணாதிவிபவங்களிலபதாநங்களை யாஶ்ரயிக்கைக் குறுப்பாகச்சொல்லி, "திருச்சித்திரகூடத்தில் சென்று சேர்மின்கள்" என்றார்; இதுகேட்டசேதநர்க்கு விபவத்தில்நெஞ்சு சென்று அங்கே ஆஶ்ரயிக்கையில் ருசிபிறந்து அதுகாலாதீதமென்று பிற்காலிக்கவும் கூடுமென்று திருவுள்ளம்பற்றி, அந்தவிபவங்களில் விரோதிநிரஸநஶீலதையை ஸஹஸ்ரமுவமாகவருளிச்செய்துகொண்டு, அவனே திருச்சித்திரகூடத்துள்ளானென்றுஸம்ஸாரிகள்நெஞ்சில்படுத்துகிறாரென்னும்ஸங்கதியை ஸங்க்ரஹேணஸூசிப்பிக்கிறார் (க்ருஷ்ணாவதாரேத்யாதி.) ஆதிஶப்தத்தாலே - ராமாவதாரமும், நரஸிம்ஹாவதாரமும் சொல்லுகிறது. ... ... ✻

http://acharya.org

மூ.—வாடமருதிடைபோகி மல்லரைக்கொன் றொக்கலித்திட்
டாடல்நன்மாவுடைத் தாயராநிரைக்கன்றிடர்தீர்ப்பான்
கூடியமாமழைகாத்த கூத்தனென வருகின்றான்
சேடியர்பூம்பொழில்தில்லைச் சித்திரகூடத்துள்ளானே. க.

ப - ரை.— கம்ஸன்வரவிட்ட விரோதிகளான, மருதிடை - இரண்டுமருதமரங்களின்நடுவே, வாட - அவைமுறிந்து விழும்படி, போகி - தவழ்ந்துபோய்; மல்லரை - சாணூரமுஷ்டிகராதிமல்லவர்க்கத்தை, கொன்று - நிரஸித்து; ஒக்கலித்திட்டு - நடைபழகினதாய், ஆடல் - ஆடிக்கொண்டு வருமதாய், நல் - அழகிதான, மா - குதிரைவடிவுகொண்டு வந்த கேஶியை, உடைத்து-கொன்று; அன்று-இந்த்ரன்வர்ஷிப்பித்தவன்று, ஆயர் - இடையருடைய, ஆநிரைக்கு - பசுக்கூட்டத்துக்குவந்த, இடர் - துக்கத்தை, தீர்ப்பான் - தீர்க்கைக்காக,கூடிய - திரண்ட, மாமழை-கல்வர்ஷத்தை, கோவர்த்தநமலையையெடுத்து, காத்த-ரக்ஷித்த, கூத்தன் என-மநோஹாரிசேஷ்டிதத்தையுடையவன் என்று எல்லாரும் சொல்லும்படி, வருகின்றான் - வருமவன் ; சேடு - இளகிப்பதித்ததாய், உயர்-ஓங்கின, பூம்[யிடு பொழில் - அழகியசோலைகளையுடைய, தில்லைச்சித்திரகூடத்து - தில்லைத்திருச் சித்திரகூடத்திலே, உள்ளான்-நித்யவாஸம்பண்ணுகின்றான் ; அவனே ஆச்ரயியுங் கோளென்கிறார். ... ... (க)

முதற்பாட்டு. (வாடமருதிடையித்யாதி) வாணூரமுஷ்டிகரைக் கொன்று,ஆவாலங்கொட்டி ஆடஉர்ஸநீயமான குதிரைவடிவுகொ[உய ண்டுவந்த கேஶியைக்கொன்று. (ஆயரித்யாதி) இடையருடைய பசுநிரைக்கு இந்த்ரனாலே ஆபத்துவந்தவன்று, இடர்தீர்ப்பான். (கூடியவித்யாதி) திரண்டகல்வர்ஷத்தை மலையெடுத்துக்காத்த கூத்தனென வருகின்றான். (சேடித்யாதி) சேடு - திரட்சியும், இளமையும். இளகிப்பதித்து ஓங்கின பொழிலையுடைய தில்லை. ... ... க.

முதற்பாட்டு.— (வாடவித்யாதி) அஸுராவேஶத்தாலே வந்த மருதாகையாலே இவன்கிட்டக்கிட்ட அவைவாட, மருதின்நடுவே போய்.(மல்லரைக்கொன்று)வாணூரமுஷ்டிகரைநிரஸித்து; ஆவாலம் கொட்டி;(ஆடல்)தன்ஸஞ்சாரத்திலேயிவன்அங்கபரணும்படிஆடிக்கொண்டுவந்து தோற்றின கேஶியைக்கொன்று, இடையருடைய பசுநிரைக்கு அன்றிடர்தீர்க்கைக்காக இந்த்ரன்ப்ரேரித்த புஷ்கலாவர்த்தகாதிமேகங்களெல்லாம் கூடிவர்ஷித்தபெருமழையைக்காத்த மநோஹாரிசேஷ்டிதத்தையுடையவன் என்று எல்லாரும்சொல்லவருகிறவன்.— (சேடு) இளமையும், திரட்சியும். ... ... க.

முதற்பாட்டு.— (வாடவித்யாதி.) “இணைமருதிற்றுவீழ” என்னுமாப்போலே-முறிந்து விழுகையைச்சொல்லவேண்டியிருக்க, “வாட” என்றதுக்கு - வாடும்போது போனுனென்று விவக்ஷித்து, ஹேதுபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அஸுரேத்யாதி.) ஒக்கலித்திட்டு - பழகின, ஆடலுடைத்தாய் நல்லதானமாஎன்று ஸ்வாரஸ்யமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆவாலமித்யாதி.) ஆவாலங்கொட்டுகை - குதிரைநடைபழக்குகைக்குக்கொட்டுகை. ... க.

http://acharya.org

மூ.— பேய்மகள் கொங்கைநஞ்சுண்ட பிள்ளைபரிசிது வென்றால்
மாநிலமாமகள் மாதர்கேள்வனிவனென்றும் வண்டுண்
பூமகள்நாயகனென்றும் புலன்கெழு†கோவியர்பாடித்
தேமலர்தூவவருவான் சித்திரகூடத்துள்ளானே. உ.

ப - ரை.— பேய்மகள் - பேயான பூதனையுடைய, கொங்கை - முலையில், நஞ்சு - விஷத்தை, உண்ட - அமுதுசெய்தருளின, இது - ஆச்சர்யமான விச்செயல், பிள்ளைபரிசு என்றால் - பிள்ளையுடைய ப்ரகாரம் என்றால்; இவன்—, இளம்பிள்ளையல்லன், மா - பஞ்சாஶத்கோடிவிஸ்தீர்ணையான, நிலமாமகள்மாதர் - ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு, கேள்வன் என்றும்-வல்லபன் என்றும்,வண்டு-வண்டுகள்,உண்-[ம மதுபானம் பண்ணவிழிகிற,பூமகள் - தாமரைப்பூவைப்பிறந்தகமாகவுடையபெரிய பிராட்டியார்க்கு, நாயகன் என்றும் - பதிஎன்றும், புலன்கெழு - கண்டார்நெஞ்சைக்கவரும் வடிவையுடைய, கோவியர் - இடைப்பெண்கள், பாடி - ஸ்தோத்ரபூர்வகமாகப்பாடி, தேன்மலர் - செவ்விகுன்றாதபூவை, தூவ-பணிமாற, வருவான்-வருமவன், சித்திரகூடத்துள்ளான்—. ... ... (உ)

இரண்டாம்பாட்டு. (பேய்மகளித்யாதி) பூதனைமுலையில் நஞ்சையுண்ட பிள்ளைப்ரகாரமிது வென்றால். (மாநிலமித்யாதி) இவனிளம்பிள்ளையல்லன், லக்ஷ்மீஸஹிகளுக்குவல்லபனிவனென்று. (புலமித்யாதி) கண்டாருடைய இந்த்ரியங்கள் பிணிப்புண்ணும்படி அழகையுடைய பெண்கள் இவனைப்பாடிச் செவ்விப்பூவைப் பணிமாறவரும் க்ருஷ்ணன் சித்ரகூடத்துள்ளான். ... ... உ.

இரண்டாம்பாட்டு. — (பேய்மகளித்யாதி) பிள்ளையுடையபடி—பேயாய்வந்தஸ்த்ரீயினுடைய முலையில்நஞ்சையுண்ட ஆஶ்சர்யமான செயலென்றால், "இவன் கேவலம் பிள்ளையல்லன், ஸ்ரீஸஹிப்பிராட்டிக்குவல்லபன், பெரியபிராட்டியார்க்கு நாயகன்" என்று, கண்டாருடைய இந்த்ரியங்களைப்பிணிக்கும் வடிவையுடைய இடைப்பெண்கள்பாடி, செவ்விப்பூவைத்தூவ வருமவன். (பொலன்கெழுகோவியர்) என்று - பொன்னாலே செய்த ஆபரணத்தையுடைய கோவியரென்னவுமாம். ... ... உ.

இரண்டாம்பாட்டு.—(பேயித்யாதி.) ஆஶ்சர்யசேஷ்டிதங்களைச்செய்தவனே சித்ரகூடத்துள்ளானென்றறிந்து நிஶ்சயிக்கும்படியெங்ஙனே? என்னும் ஜிஜ்ஞாஸையிலே; இடைப்பிள்ளையாயிருக்கச்செய்தே ஸ்ரீயப்பதியென்று நிஶ்சயித்தார் இடைப்பெண்கள் கண்டீர்களே, அங்ஙனே நீங்களும் கொள்ளுங்கோளென்கிறாரென்று ஸங்கதி.

"பிள்ளைபரிசு - பேய்மகள்கொங்கைநஞ்சுண்ட - இதுவென்றால், மாநிலம்" இத்யாதி என்றந்வயம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (பிள்ளையித்யாதி.) (பிள்ளையுடையபடி) என்று சில ஸ்ரீகோஶங்களிலுண்டாயிருக்கும்; அப்போது, அந்வயத்திலே திருவுள்ளம். அன்றிக்கே, சிலஸ்ரீகோஶங்களில் (பிள்ளையுடையபடியே) என்று முண்டு; அப்போது, பிள்ளையைப்போலே மாநுஷ்யமானபடியே! என்றாய், "பேய்" என்றும் "மகள்" என்றும்சொன்னபடித்வயத்துக்கும்-பேயானது மநுஷ்ய வேஷங்கொண்டதென்று கருத்தருளிச்செய்கைக்கு த்ருஷ்டாந்தமென்று கொள்ள வேணும்; இப்போது, யதாவஸ்திதமேயந்வயம். பொலன் - ஆபரணம், கெழுமுகை - சேருகையாய், அருளிச்செய்கிறார் (பொலனித்யாதி.) உ.

† "பொலன்கெழு" என்று பாடாந்தரம்.

http://acharya.org

மூ.—பண்டிவன்வெண்ணெயுண்டானென்றாய்ச்சியர்கூடியிழிப்ப‡
எண்டிசையோரும்வணங்கவிணைமருதூடு நடந்திட்
டண்டரும்வானத்தவரு மாயிரநாமங்களோடு
திண்டிறல்பாடவருவான் சித்திரகூடத்துள்ளானே. ௩.

ப - ரை.— இவன - இச்சிறப்பிள்ளை, வெண்ணெய்உண்டான் என்று - வெண்ணெயைக்களவுகண்டு அமுதுசெய்தான் என்று, ஆய்ச்சியர் - இடைப்பெண்கள், கூடி - திரண்டு, இழிப்ப - பழிக்க ; எண்திசையோரும் - எட்டுதிக்கிலுள்ளாரும், வணங்க - ஸேவிக்கும்படியாக, இணைமருதூடு - ஒன்று என்னலாம்படி சேர்ந்து நின்ற இரண்டுமருதின்வடிவுகொண்ட அஸுரர்களின்நடுவே, நடந்திட்டு-தவழ்ந்துபோய், அண்டரும் - நித்யஸூரிகளும்,வானத்தவரும் - ப்ரஹ்மாதிகளும், ஆயிர நாமங்களோடு - ஸஹஸ்ரநாமங்களையுஞ்சொல்லி, அவனுடைய, திண் - திண்ணிதான, திறல் - ஆண்பிள்ளைத்தனத்தை, பண்டு—, பாட—, வருவான் - வருமவன், சித்திரகூடத்துள்ளான்—. ... ... (௩)

மூன்றாம்பாட்டு. (பண்டித்யாதி) பண்டு வெண்ணெயைக் களவு கண்டு அமுதுசெய்தானென்று இடைச்சிகள் திரண்டுகூப்பிட. (எண்டிசையித்யாதி) எட்டுதிக்கிலுள்ளாரும் வணங்க, சேரநின்றமருதுகள் நடுவேபோய். (அண்டருமித்யாதி) நித்யஸூரிகளும் ப்ரஹ்மாதிகளும் ஆயிரந்திருநாமங்களைச்சொல்லி, திண்டிறல்பாடவருவான். ௩.

மூன்றாம்பாட்டு.— (பண்டித்யாதி) "இவன்வெண்ணெயுண்டான்" என்று இடைப்பெண்கள் கூடியேச, எட்டுதிக்கிலுள்ளாரும் திருவடிகளிலே வணங்கும்படியாக, நிர்விவரமானமருதினுள்ளிட்டுப்போய், இடையர்களும் தேவர்களுமாய் ஆயிரந்திருநாமங்களைச் சொல்லிக் கொண்டு, தன்னுடைய ஆண்பிள்ளைத்தனத்தைப்பண்டுபாடவருவான்.

மூன்றாம்பாட்டு.— (பண்டித்யாதி) பேய்முலையுண்டபடியைக்கண்ட இடைப் பெண்கள் மேன்மைபேசினாாகிலும், வெண்ணெயுண்டபோது இடைப்பிள்ளையென்றே ஏசவுங்கண்டோமே! என்ன ; வெண்ணெயுண்டுகட்டுண்டு நின்றபோதே, நின்றமருதிறுத்து தேவராலும் இடையராலும் கொண்டாடப்பட்டான் கண்டீரென்று நெஞ்சிலுறைக்கச்சொல்லுகிறாரென்று ஸங்கதி.

அழைக்கை-கூப்பிடுகையாய், ஃலித்தவர்யம்(ஏசவென்றது.) "இவன்" என்று தொடங்கி "திண்டிறல் - பண்டு - பாடவருவான்" என்றந்வயம். ௩.

நாலாம்பாட்டு.— (வளையித்யாதி.) மருதிறுத்தவளவன்றிக்கே பாம்பின்படத்தில்தானேபோய் நடமாடின அபதாநத்தாலும் அவர்கள் பரனென்றிருந்தார்களென்று வியாமகாரூர மருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

‡ "அழைப்ப" என்று நஞ்ஜீயர்படியிலும் அரும்பதத்திலும் பாடம்.

http://acharya.org

மூ.—வளைக்கைநெடுங்கண்மடவாராய்ச்சியரஞ்சியழைப்பத்
தளைத்தவிழ்தாமரைப்பொய்கைத்தண்டடம்புக்கண்டர்காண
மூளைத்தவெயிற்றழல்நாகத்துச்சியில்நின்றதுவாடத்
திளைத்தமர்செய்துவருவான் சித்திரகூடத்துள்ளானே. ச.

ப - ரை.— வளை-வளைகளாலே அலங்கரிக்கப்பட்ட, கை - கைகளையும், நெடு-நீண்ட, கண் - கண்களையும், மடவார் - மடப்பத்தையுமுடையரான, ஆய்ச்சியர்-ஸ்ரீகோபிமார்கள், அஞ்சி - பயப்பட்டு, அழைப்ப - கூப்பிட; தளை அவிழ் - கட்டு அவிழுகிற, தாமரைப்பொய்கை - தாமரைத்தடாகத்தின், தண்- குளிர்ந்த, தடம்-கரையிலே, புக்கு - போய், அண்டர் - இடையர், காண-காணும்படியாக, முளை[மு]த்த—, எயிறு - பற்களையும், அழல் - விஷாக்நியையுமுடைய, நாகத்து உச்சியில்-காளியனாகிற பாம்பின்தலையிலே, நின்று - ஒருபடிப்படநின்று, அது வாட - அது இளைக்கும்படி, திளைத்து - களித்து, அமர்செய்து -பூசல்பண்ணி, வருவான் - வருமவன், சித்திரகூடத்துள்ளான்—. ... ... (ச)

நாலாம்பாட்டு.(வளைக்கையித்யாதி)வளைகளாலே அலங்க்ருதமான கையையும் அழகிய கண்ணையுமுடையராய், மடப்பத்தையுமுடைய ஸ்ரீகோபிமாரஞ்சிக்கூப்பிட.(தளைத்தவிழித்யாதி)தளை அவிழுகிற-கட்டு அவிழுகிற, தாமரைப்பொய்கையில் குளிர்ந்தகரையிலேசென்று,அண்டர்காண – இடையர்காண, முளைத்தபல்லையும் விஷாக்நியையுமுடைய காளியன்தலையிலேநின்று, அதுவாட – அது இளைக்க, அதினுச்சியிலே நின்று திளைத்துப் பூசல்பண்ணிவருவான். ... ... ச.

நாலாம்பாட்டு.—(வளைக்கையித்யாதி)வளையாலேஅலங்க்ருதமான கையையும், ஹ்ருதைகளாய்ப்பார்க்கும் நோக்கையுமுடைய இடைப்பெண்கள் அஞ்சிக்கூப்பிட, கட்டவிழ்ந்தலர்ந்த தாமரைப்பொய்கையினுடைய ம்ருமஹரமான கரையிலேசென்று; இடையர்காண,முளைத்த வெயிற்றையுடைய பாம்பினுடைய வுச்சியிலேபுக்குநின்று, அதுவாடும்படி கூடவிளையாடி அமர்செய்துவருமவன். ... ... ச.

“ தளைத்தவிழ்” என்றவிடத்தில், “அத்து” - சாரியைச்சொல்லாய், “தளை-அவிழ்” என்று யருளிச்செய்கிறார் (கட்டவிழ்ந்தலர்ந்தவென்று.) அமர்செய்து-யுத்தம் பண்ணி. ... ... ச.

அஞ்சாம்பாட்டு.—(பருவமித்யாதி.) கீழ்நாலுபாட்டாலும் - அவனதிமாநுஷ சேஷ்டிதங்களைச்சொல்லி, அத்தால் அவன் பரனென்றுப்போலே நீங்களுமவனை நிர்ணயித்தாச்ரயியுங்கோளென்றார் ; இனிமேல்பாட்டுக்களில் - நப்பின்னைமுதலானார்க்கு விரோதிநிவர்த்தநமுவத்தாலே யுதவினாப்போலே உங்களுக்கு முதவுவானென்பாராய், அதில் நப்பின்னைக்குதவினவித்தை யிதிலருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

http://acharya.org

மூ.---பருவக்கருமுகிலொத்து முத்துடைமாகடலொத்து
அருவித்திரடிகழ்கின்ற வாயிரம்பொன்மலையொத்து
உருவக்கருங்குழலாய்ச்சித்திறத் தினமால்விடைசெற்றுத்
தெருவில்திளைத்துவருவான் சித்திரகூடத்துள்ளானே. ரு
எய்யச்சிதைந்ததிலங்கை; மலங்கவருமழைகாப்பான்
உய்யப்பருவரைதாங்கி யாநிரைகாத்தானென்றேத்தி
வையமெவரும்‡வணங்க வணங்கெழு மாமலைபோலே
தெய்வப்புள்ளேறிவருவான் சித்திரகூடத்துள்ளானே. சு

ப-ரை.— பருவம் - கார்காலத்திலுண்டான, கருமுகில்ஒத்து - காளமேகம் போலேயும், முத்துஉடை - முத்துக்களை உடைய, மா - கறுத்த, கடலொத்து - கடல்போலேயும், அருவித்திரள - அருவிகளாலே, திகழ்கின்ற - விளங்காநின்றுள்ள, ஆயிரம் பொன்மலையொத்து - அநேகரத்நபர்வதங்கள்போலேயுமாய், உருவம் - அழகிய வடிவையும், கரு - கறுத்த, குழல் - திருக்குழலையுமுடைய, ஆய்ச்சித்திறத்து - நப்பின்னைப்பிராட்டிக்காக, இனம் - ஒன்றாய்த்திரண்ட, மால்விடை - பெரிய ரிஷபங்களை, செற்று - நிரஸித்து, தெருவில - வீதியிலே, திளைத்து - களித்துவிளையாடி, வருவான் - வருமவன், சித்திரகூடத்துள்ளான்—. ... ... (ரு)

ப-ரை.— எய்ய - * எரிதரும்சரத்தாலே இவன்எய்தபோது, இலங்கை - லங்கையானது, சிதைந்தது - அழிந்தது; திருவாய்ப்பாடியிலுள்ள இடையரும், ஆநிரை - பசுத்திரளும், மலங்க - கலங்கும்படி, வரும் - வருகிற, மழை - மழையை, காப்பான் - போக்குகைக்காக, உய்ய - அவைஉஜ்ஜீவிக்கும்படி, பருவரை - பெரிய மலையை, தாங்கி - எடுத்து, அவற்றை, காத்தான் என்று - ரக்ஷித்தான்என்று, வையம் - பூமியிலுள்ள, எவரும் - எல்லாரும், ஏத்தி - ஸ்தோத்ரம்பண்ணி, வணங்க - ஆச்ரயிக்கும்படியாக, அணங்குஎழு - தேவாவிஷ்டமான, மா - பெரிய, மலைபோலே - மலையைப்போலே, தெய்வம் - அழகிய, புள் - பெரியதிருவடிமேலே, ஏறி - ஏறிக்கொண்டு, அரைகுலையத்தலைகுலைய, வருவான் - வருமவன், சித்திரகூடத்துள்ளான்—.

அஞ்சாம்பாட்டு. (பருவமித்யாதி) கார்காலத்தில் காளமேகத்தை யொத்து, முத்துப்படுகிற கருங்கடலொத்து. மா-கறுப்பு. (அருவி யித்யாதி) அருவிகளாலே விளங்காநின்ற அநேகம் பர்வதங்களை யொத்து. உருவம்--அழகு. அழகியகருங்குழலையுடைய நப்பின்னையின் பொருட்டு இனமான பெரிய விடைகளைச்செற்று, வீதியிலேசெருக்காலே யாடிவருவான். ... ... ரு.

அஞ்சாம்பாட்டு.— (பருவமித்யாதி) வர்ஷுகவலாஹகம்போலேயும், முத்துடைய பெருங்கடல்போலேயும், அருவித்திரள்களாலே விளங்காநின்றுள்ள ஆயிரம் பொன்மலைபோலேயுமாய், அழகிய வடிவையும், கறுத்த திருக்குழலையுமுடைய நப்பின்னைப்பிராட்டி யிடையாட்டத்துக்காக, திரண்டுபெருமையையுடைய ருஷபங்களைக்கொன்று, தன்பருவத்திற்பிள்ளைகளோடே தெருவிலே கூடிவிளையாடிவருமவன்.

நப்பின்னை க்ருஷ்ணனோடொத்தநிறமுடையவளென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (வர்ஷுகேத்யாதி.) பொன்மலைபோலேயுமென்றது-ஆபரணச்சேர்த்தியாலே.

ஆறும்பாட்டு.— (எய்யவித்யாதி.) இதில் - பிராட்டிக்கும் பசுக்களுக்கும் முதவினாற்போலே யுதவுமவனென்றருளிச்செய்கிறாரென்ற ஸங்கதி.

‡ "வையத்தவரும்" என்றும் பாடம்.

http://acharya.org

மூ.—ஆவரிவைசெய்தறிவாரஞ்சனமாமலைபோலே
மேவுசினத்தடல்வேழம் வீழமுனிந்தழகாய
காவிமலர்நெடுங்கண்ணார் கைதொழவீதிவருவான்
தேவர்வணங்குதண்டில்லைச் சித்திரகூடத்துள்ளானே. ௭.

ப-ரை.— ஆச்ரிதர்க்காக, இவை - இப்படிப்பட்ட (க) ஆனைத்தொழில்களை, செய்தறிவார் ஆர்?-செய்தார் ஒருவருமில்லை; அதாவதென்னென்னில்; மா-பெரிய, அஞ்சனமலைபோலே - அஞ்ஜநகிரிபோலேயாய், சினம்-கோபத்தை, மேவு-ஸ்வபாவமாகவுடைத்தாய், அடல் - மிடுக்கையுடைய, வேழம் - குவலயாபீடம் என்னும் யானை, வீழ - விழும்படி, முனிந்து - சீறியருளி, அழகாய-அழகையுடைத்தாய், காவிமலர்-நீலோத்பலம்போலே கறுத்த, நெடு - நீண்ட, கண்ணார் - கண்களையுடைய ஸ்த்ரீகள், கைதொழ - ஸேவிக்கும்படியாக, வீதி - திருவீதியிலே, வருவானை - எழுந்தருளுமவனை; தேவர்வணங்கு - தேவர்கள்வந்து ஆச்ரயிக்குமதாய், தண் - ச்ரமஹரமான, தில்லைச்சித்திரகூடத்துள்ளான்—. ... ... (௭)

ஆறாம்பாட்டு. (எய்யவித்யாதி) இவன்கிட்டினவளவிலே லங்கை அழிந்தது. (எய்ய) அம்புஎய்யவென்றுதல். (மலங்கவித்யாதி) திருவாய்ப்பாடியி லிடையருமிடைச்சிகளும் கலங்கும்படி வந்த மழையைக்காக்கைக்காக. (உய்யவித்யாதி) பர்வாதிகளெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி பெரியமலையையெடுத்து ரக்ஷித்தானென்று ஊருலகமுற்றுள்ளாரும் ஏத்திவணங்க. (அணங்கித்யாதி) தைவாவிஷ்டமாயதொரு மலைபோலே அப்ராக்ருதமான புள்ளை மேற்கொண்டு வருவான். ௬.

ஏழாம்பாட்டு. (ஆவரிவையித்யாதி) இவ்வரியதொழில் செய்தார்

ஆறாம்பாட்டு.— (எய்யவித்யாதி) இவன்பண்டெய்ய, லங்கை அழிந்தது; பசுக்களுமிடையரும் மலங்கும்படியாக வருகிற மழையைக் காக்கைக்காக, அவை உய்யும்படிக்காகப் பெரியமலையையெடுத்துக் காத்தானென்றேத்தி, பூமியிலுள்ளாரெல்லாரும்வணங்க, தேவாவிஷ்டமான மலைபோலே பெரியதிருவடிமேலே ஏறிவருமவன். ௬.

ஏழாம்பாட்டு.—(ஆவரித்யாதி) எவரிவைசெய்தறிவார்?;

(பூமியிலுள்ளாரெல்லாரும்) என்றதுக்கு-"வையத்தவர்" எனப்படுகையால் ஸஜ்ஜநர்களைச்சொல்லிற்றேயாகிலும், ஸர்வப்ரகாரரான தைவப்ராக்ருதர்களெல்லாரையுஞ்சொல்லுமென்று திருவுள்ளம். ... ... ௬.

ஏழாம்பாட்டு.— (ஆவரித்யாதி.) ஆந்ரகாசத்வளமேயன்றிக்கே, ஸ்ரீமதுரையில் பெண்களுக்குக் களிறுதருபுணர்ச்சிகொடுத்தவன் உங்களுக்குதவுவனென்கிறாரென்ற ஸங்கதி. அதாவது-ஆனையால்வந்த ஆபத்தைப்போக்கித் தன்னைக்கண்ணாரக்கண்டநுபவிக்கக் கொடுத்தானென்கை. சுலக்ஷணன்மேலே யானைவருமதுவே பெண்களுக்காபத்திறே.

(எவரிவைசெய்தறிவார்) என்றதுக்கு - மூன்றுயோஜநை. அதாவது - செய்தவிவை - குவலயாபீடநிரஸநாதி வ்யாபாரங்களை, எவரறிவார் - ஒருவருமறிவாரில்லை என்று ஆழ்வார் தம்மிலே தாம்நொந்து எத்தனைநாளுபதேசித்தாலும்திருந்தவாரிதாயிருந்ததென்று நொம்படுகிறாரென்னுதல்; அன்றிக்கே, ஆச்ரிதர்க்காக

(க) ஆனைத்தொழில்கள் - அதிமாநுஷசேஷ்டிதங்கள்.

http://acharya.org

மூ.—பொங்கியமரிலொருகால் பொன்பெயரோனைவெருவ
அங்கவனாகமளைந்திட்டாயிரந்தோளெழுந்தாடப்
பைங்கணிரண்டெரிகான்றநீண்டவெயிறொடுபேழ்வாய்ச்
சிங்கவுருவில்வருவான் சித்திரகூடத்துள்ளானே. ௮.

ப-ரை.— ஒருகால - எங்குமுளன் கண்ணனென்ற தன்மகனை ப்ரஹ்லாதனைச் சீறினவனாய், அமரில - யுத்தத்தில, பொன்பெயரோனை - ஹிரண்யனை, வெருவ- அஞ்சும்படி, பொங்கி - கிளர்ந்துதோற்றி; அங்கு - அவ்விடத்திலே, அவன் ஆகம்- அவனுடைய உடம்பை, அளைந்திட்டு - பிளந்து, ஆயிரம்தோளெழுந்தாட-அநேகம் திருத்தோள்களும் தோற்ற வ்யாபரிக்க, எரிகான்ற-நெருப்பை உமிழாநின்றுள்ள, பை - பசுத்த, இரண்டுகண் - இரண்டுகண்களையும, நீண்ட—, எயிறு - கோரைப்பற்களையும, பேழ் பெரிய, வாய் - வாயையுமுடைய, சிங்கஉருவில -நரஸிம்ஹரூபியாய், வருவான - வருமவன, சித்திரகூடத்துள்ளான—. ... (அ)

இனியொன்று சொல்லவேண்டாவிவரில்லை. பெரியஅஞ்ஜநகிரிபோலேயிருக்கிறவனாயும பொருந்தின சினத்தையும மிடுக்கையுமுடைய குவலயாபீடம் விழும்படிமுனிந்து. (அழகியதயாதி) அழகிய கருங்குவளைபோன்று மிகச்சோபையானதையுமுடைய கண்ணார் கைதொழ வீதிவருவான். (தேவர்வணங்கு) ஸராஹமேராநாதிகள் வணங்கு. எ.

எட்டாம்பாட்டு. (பொங்கியித்யாதி) கிளர்ந்துகொண்டு யுத்தத்திலே

பெரியதொரு அஞ்ஜநகிரிபோலே, ஸ்வாபாவிகமான சினத்தையுடைத்தாயிருப்பதாய் மூர்க்கமான ஆனை குட்டிச்சுவர்போலேவிழும்படிசீறி, தர்சநீயங்களாய காவிமலர்போலே கறுத்து நெடியகண்ணையுடைய ஸ்த்ரீகள் கைதொழும்படி வீதியிலேவருமவன், தேவாளாஸ்ரயிக்கும்தில்லைச் சித்திரகூடத்துள்ளானே. ... ... எ.

எட்டாம்பாட்டு.—(பொங்கியித்யாதி)யுத்தத்திலேயொண்டொருகால்

இவருக்குத்தொழுகைகளைச் செய்தாரார் - ஒருவருமில்லை என்று எம்பெருமானுடைய ஷ்டித்தத்தி லீடுபடுகிறாரென்றுமாம; ஆங்கனுமன்றிக்கே, ஸ்ரீமதுரையில பெண்களின்பாட்டாய, "செய்தறிவார்" என்றவநுஸாரம், என்று என்றொருபக்ஷத்தை மூலமாகயாங்களில அய்யாஹரித்துக்கொண்டு,(கைதொழும்படி)என்றபதத்தோடேவயித்துக் கொள்ளவுமாம.(அஞ்ஜநகிரிபோலே)என்றதுக்கு-(வீதியிலேவருமவன) என்றதோடேவயம். (அஞ்ஜநகிரிபோலேயிருக்கிற) என்று-குவலயாபீடத்துக்கு விசேஷணமாகவுமாம. ... ... எ.

எட்டாம்பாட்டு.— (பொங்கியித்யாதி.) கீழ்ப்பாட்டிலே-திருந்துவாரொருவருமில்லை என்றபக்ஷத்தில, தம்முடைய க்ஷோபாதிசயத்தாலே திருந்தாதலோகத்தார்க்கு அச்சம் பிறக்கும்படி, விலங்கிப்போனரெல்லாரும ஹிரண்யன்பட்டது படுவரென்கிறாரென்று ஸங்கதி; மற்றைப்பக்ஷங்களில, பெண்களுக்குதவினவளவன்றிக்கே ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு வந்துதோற்றினாப்போலே யுதவுமவனென்கிறாரென்று ஸங்கதி.

"அமரிலொருகால பொன்பெயரோனைவெருவ- பொங்கி-அங்கு" இத்யாத்யந்வயமுகேநவருளிச்செய்கிறார் (யுத்தத்திலேயித்யாதி.)

http://acharya.org

மூ.—கருமுகில்போல்வதோர்மேனி கையனவாழியும்சங்கும்
பெருவிறல்வானவர்சூழவேழுலகும்தொழுதேத்த
ஒருமகளாயர்மடந்தை யொருத்திநிலமகள் மற்றைத்
திருமகளோடும்வருவான் சித்திரகூடத்துள்ளானே. கூ.

ப - ரை.—கருமுகில்போல்வது - காளமேகம்போலேகறுத்த, ஓர் - ஒப்பற்ற, மேனி-வடிவழகையுடையனாய், ஆழியும்-திருவாழியாழ்வானையும், சங்கும்-ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானையும், கையன - திருக்கைகளிலுடையனாய், பெருவிறல் - மிக்கமிடுக்கையுடைய, வானவர்-தேவர்கள், சூழ-சூழ்ந்து ஸேவித்துநிற்கவும், ஏழுலகும்-ஏழுலோகங்களிலுள்ளாரும், தொழுது-ஸேவித்து, ஏத்த - ஸ்தோத்ரம்பண்ணும்படிக்கீடாக; ஒருமகள் ஆயர்மடந்தை - நப்பின்னைப்பிராட்டியோடும், ஒருத்தி நிலமகள் - ஸ்ரீபூமிப்பிராட்டியோடும், மற்றை—, திருமகளோடும்-பெரியபிராட்டியாரோடுங்கூட, வருவான்-வருமவன், சித்திரகூடத்துள்ளான்—. (கூ)

ஒருக்கால். (பொன்பெயரோனித்யாதி) ஹிரண்யனஞ்சும்படி அங்கவனுகமனைந்திட்டு ஆயிரந்தோள்களும் தோற்ற வ்யாபரித்து. (பைங்கணித்யாதி) பசுத்த கண்களிரண்டும் அக்நிஜ்வாலையாய்நிற்க, நீண்ட எயிறுகள் பெரியவாயையுமுடைய ஸ்ரீநரஸிம்ஹமாய்வந்தவன். அ.

ஒன்பதாம்பாட்டு. (கருமுகிலித்யாதி) காளமேகமொத்தவடிவு; கையன ஶங்கசக்ரங்கள்; மிகமிடுக்கையுடைய தேவர்கள் ஸேவிக்க ஸப்தலோகங்களிலுள்ளாரும் தொழுது ஸ்தோத்ரம்பண்ண. (ஒருமகளித்யாதி) ஒருத்தி நப்பின்னைப்பிராட்டி, ஒருத்தி ஸ்ரீபூமிப்பிராட்டி, மற்றைப் பெரியபிராட்டியாருடனே வருகிறவன். ... கூ.

ஹிரண்யனை வெருவும்படி சீறி, அவ்விடத்திலே அவனுடைய உடம்பை யளைந்து, ஆயிரந்தோள்தோற்ற வ்யாபரித்த, ஜாத்யுசிதமாக எரிகான்றபசுமையையுடைய கண்ணும், நீண்ட எயிறும், பெரிய வாயுமுடைமான ஸிம்ஹரூபத்தைப்புடையனாய்வருமவன். பொங்குதை-மிகுதி. அ.

ஒன்பதாம்பாட்டு.—(கருமுகிலித்யாதி) காளமேகம்போலேயிருக்கும் வடிவையும், கையில்திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுமுடையனாய், பெரியமிடுக்கையுடையப்ரஹ்மாதிகள்சூழ்ந்துஸேவிக்க, ஸப்தலோகத்திலுள்ளாரும் திருவடிகளிலே விழுந்தேத்த, பிராட்டிமார் மூவரோடுங்கூட வருமவன். ... ... கூ.

பொங்குதை-மிகுதியாய், கோபத்தால வந்த மிகுதியாய, ஷலிதவீர்யம் (சீறியென்றது.) கான்ற-உமிழ்ந்த. ... ... அ.

ஒன்பதாம்பாட்டு.—(கருமுகிலித்யாதி.) கீழ் - எம்பெருமானுடைய அபதானங்கள்சொல்லிக்கொண்டுமேக்கை ஆச்ரயணோபயுக்தமாகச்சொல்லி, இவையொன்றுமில்லாவிட்டாலும் விடலாமோ விவனுடையஸௌந்தர்யத்தையென்று திருவுள்ளம்பற்றி, வடிவழகும் ஆயுதச்சேர்த்தியழகும் பிராட்டிமாரோட்டைச்சேர்த்தியும் கண்டு ஊர்த்வமாங்களான ப்ரஹ்மாதிகளும் வணங்கும்படி பாரீரென்று உபதேசிக்கிறாரென்று ஸங்கதி. ... ... கூ.

http://acharya.org

மூ.—தேனமர்பூம்பொழில்தில்லைச் சித்திரகூடமமர்ந்த
வானவர்தங்கள்பிரானை மங்கையர்கோன்மருவார்
ஊனமர்வேல்கலிகன்றியொண்டமி ழொன்பதோடொன்றும்
தானிவைகற்றுவல்லார்மேல் சாராதீவினைதானே‡. க0.

ப - டை.— தேன் - வண்டுகள், அமர் - மொய்த்த, பூ - அழகிய, பொழில்- சோலையையுடைய, தில்லைச்சித்திரகூடம் - தில்லைத்திருச்சித்திரகூடத்திலே, அமர்ந்த - நித்யவாஸம்பண்ணுகிற, வானவர்தங்கள் பிரானை - அயர்வறுமமரர்களுக்குத்தலைவனானவனை விஷயமாக; மங்கையர்கோன் - திருமங்கையிலுள்ளார்க்குராஜாவாய், மருவார் - ஶத்ருக்களுடைய, ஊன - ஶரீரத்தில், அமர் - பொருந்தினதக்கும்படி, வேல்-வேல்தொழிலில்வல்லரான, கலிகன்றி- ஆழ்வார், அருளிச்செய்த, ஒண்தமிழ்-அழகியதமிழ்பாஷையாலான, இவை ஒன்பதோடொன்றும்-இப்பத்துப்பாட்டையும், கற்று-அர்த்தத்துடன் அப்யஸித்து, வல்லார்மேல்-அதிகரிக்கவல்லவர்கள் பக்கல், தீவினை - பாபங்கள், சாரா - கிட்டமாட்டா. ... ... (க0)

பத்தாம்பாட்டு. (தேனமரித்யாதி) வண்டுகள் மொய்த்து அழகியபொழிலையமர்ந்த தில்லைத் திருச்சித்ரகூடமமர்ந்த * அயர்வறுமமரர்களதிபதியை. (மங்கையரித்யாதி) திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகராய், ஶத்ருக்களுடம்பிலே தைக்கும் வேலைவல்ல ஆழ்வாரருளிச்செய்த பத்துப்பாட்டையும் கற்றவர்கள்மேல்சாராவினைகள். க0.

ஈட்டுஜீயர் திருவடிகளே ஶரணம்.

பத்தாம்பாட்டு. (தேனமரித்யாதி) வண்டுகள்படிந்து பூத்த பொழிலையுடைய தில்லையில் சித்திரகூடத்திலே யமர்ந்த*அயர்வறுமமரர்களதிபதியை, திருமங்கைக்குராஜாவாய் ஶத்ருக்கள்ஶரீரமேதனக்கு உறையாகவுடைய வேலையுடைய ஆழ்வாரருளிச்செய்த அழகிய தமிழான விப்பத்துமப்யஸித்தவர்கள்பக்கல், அவர்கள்பண்ணினபாபம் மேலாதுறைக்குக்காகச் சாரா. ... ... க0.

அடிவரவு.— வாடப் பேய் பண்டு வளை பரு எய் ஆவர்
பொங்கிய கருமுகில் தேனமர் ஒருகுறள்.

திருமங்கையாழ்வார் திருவடிகளேஶரணம்.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

பத்தாம்பாட்டு.— (தேனித்யாதி.) கீழ்ப்பாட்டில் "வானவர்" என்றபதத்தை ஆஶ்ரயிப்பார்க்குறுப்பாக தர்மாதிகளும் வநதாஶ்ரயிக்கககண்டீர்களே யென்ன வேண்டுகையால், அதுக்காக ப்ரஹ்மாதிகள் பரமாக்ஞரேயாகிலும்,இப்பாட்டில் "வானவா" என்றதுக்கு - "தங்கள்" என்று அஸாதாரண்யம் தோற்றச்சொல்லுகையாலும், ஆழ்வார்க்கு ப்ரஹ்மாதிகளுக்குப் பிரானென்றது-அதிஶயமாய்த்தோற்றுமையாலும், "அமரர்க்குமெய்தாதவண்டத்திருப்பீர்" என்றுஹலஸ்வரூபத்தைக் கீழ்த்திருமொழியிலருளிச்செய்தத்தோடு இத்திருமொழிக்கு ஏகவாக்யதத்தைச்சொல்லுகையாலே ப்ராப்யகோடிவெடிதரான நித்யஸூரிகளேயாகவேணுமென்றருளிச்செய்கிறார்(அயர்வறுமமரர்களதிபதியையென்று;)இப்படிக்குக்கு அருளிச்செய்த) என்றத்தோடர்வயம். "மருவார்" என்றதினர்யம் (ஶத்ருக்களென்றது.) க0.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

‡ "சாரகில்லாவினைதானே" என்று சில ஸ்ரீகோஶங்கள்.

http://acharya.org

நீங்களவனைப்பெறுகைக்குறுப்பாகப் பண்ணும ஸாயநாநுஷ்டானத்தை அவன்றானுங்களைப் பெறுகைக்குறுப்பாக ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணிக்கொண்டு வந்தான், அவற்றுக்குப்பிற்பாடரு மிழக்க வேண்டாதபடி அர்ச்சாவதாரஸ்தலஹ்ஸயநின்றான், அவனுபடி யிதுவானபின்பு, அர்த்தித்வம் துடக்கமாக மேலுள்ளவற்றை அவன் தலையிலே யேறிட்டு நீங்கள அவனுகந்தருளுகிற திருமணிண்ணகரை ஆஶ்ரயியுங்கோளென்கிறார். ... ...

மூதற்பாட்டு. (ஒருகுறளாயித்யாதி) அத்விதீயமான குறள்வடிவைக்கொண்டு, மஹாப்ஸிஷியை "மூவடிமண்" என்றுவேண்டி.[ய

நீங்கள் அவனைப்பெறுகைக்குறுப்பாகப் பண்ணும ஸாயநாநுஷ்டானத்தை அவன்றான் உங்களைப்பெறுகைக்குறுப்பாக அவதாராதி முலங்களாலே பண்ணிக்கொண்டு இங்கேவந்து நின்றானென்றார்; அவன் படி யிதுவானபின்பு, அர்த்தித்வம் துடக்கமாக மேலுள்ளவற்றை யெல லாம் அவன்கையிலேயேறிட்டு நீங்கள் அவனுகந்த திருமணிண்ணகரை யாஶ்ரயியுங்கோளென்கிறார். இவன்பரமஹங்கமாகப் பண்ணி னும் அதடைய ப்ராதிகூல்ய நிவ்ருத்திமாத்ரத்திலே நிற்கும்படி யிறே பேற்றினுடைய வைலக்ஷண்யத்தைப்பார்த்தால் இருப்பது.

மூதற்பாட்டு.— (ஒருகுறளாய) வடிவைக்கண்டபோதே சொல விற்றடையக் கொடுக்கவேண்டும்படியான அத்விதீயவாமநனாய். (இரு நிலம்) பரப்பையுடைத்தான பூமியை. (மூவடிமண்வேண்டி) தன க்கென்னக் காலபாவுகைக்கு ஓரிடமில்லாதானைப்போலே இத்தையவனு க்காக்கி, அவன்பக்கலிலே யிரந்து. இந்தலோகங்களடைய இரண்டடி

அ.—ஒருகுறளின் ப்ரவேசம். ஏழிரண்டுதிருமொழியாலுமாக - நீங்களொரு ஸாயநாநுஷ்டானம பண்ணவேண்டா, சித்திரகூடத்துள்ளானை யாஶ்ரயியுங்கோ ளென்றுநின்றீர்; பேற்றினகனத்தைப்பார்த்தால இவ்வளவினாலே ஸலம கைபபடு மென்று நாஙகள் விஶ்வஸிக்கும்படி யெங்ஙனே யென்னும் ஶங்கையிலே, வத்த ஸ்வாமியாகையா லுங்களைப் பெறவேணுமென்று, ப்ராப்யதாவும் ப்ராபகனும் ப்ராப்திக் குசப்பானுமவனாயிருக்கையா லுங்களுக்கு விஶ்வஸிக்கத்தட்டென், அவ னிலும் அவனுகந்தவூரை யாஶ்ரயிக்கையே யமையுமென் றருளிச்செயகிறரென் னும் ஸங்கதியையருளிச்செய்கிறா (நீஙகளித்யாதி.) அர்த்தித்வமாத்ரமாகிலும் இவன பக்கலிலேவேண்டாவோ, இதனையு மவன்தலையிலேயேறிட்டு நிர்பரனாயிருக்கக் கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (இவனித்யாதி;) பேற்றுக்கு அப்ரதிஷேதமேவேண்டுவது அதுக்குமேற்பட்ட அர்த்தித்வம் முதலானவையெல்லா மிவனுக்கு வேணுமென்கிற நிர்பந்தமில்லையென்று கருத்து. ... ...

மூதற்பாட்டு.—(ஒருகுறளித்யாதி.) "மூவடிமண்வேணுமென்று-இருநிலத்தை-வேண்டி" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி தாத்பர்யமருளிச்செய்கிறார் (தனக் கென்னவித்யாதி.) .

http://acharya.org

மூ.—ஒருகுறளாயிருநில மூவடிமண்வேண்டி
யுலகனைத்துமீரடியாலொடுக்கி யொன்றும்
தருகவென்னுமாவலியைச் சிறையில்வைத்த
தாடாளன்தாளணைவீர் ; தக்ககீர்த்தி
யருமறையின்திரள்நான்கும் வேள்வியைந்து
மங்கங்களவையாறு மிசைகளேழும்
தெருவின்மலிவிழாவளமும் சிறக்கும்
காழிச்சீராமவிண்ணகரே சேர்மினீரே. க.

அவர்களை மறந்துவந்து. (நின்னித்யாதி) உன்னுடைய அழகியதிருவடிகளை மறவாதபடி பண்ணிவைத்தாய். ஆல் - அசை. (புன்னையித்யாதி) புன்னையும் செருந்தியும் செறிந்து அழகிய பொழிலிடத்து உள்ளான நீர்நிலங்களிலும் அன்னங்கள் கலந்து மன்னுகிற வயலையுடைய அணியாலீ. ... ... ௪.

அப்ராப்தவிஷயங்களிலுண்டான வாஸநையைத்தவிர்த்து,ப்ராப்தவிஷயத்தையாசைப்படும்படிபண்ணினவிது தான் போருமோ உபகாரம்!; அவற்றை நானே கைவிட்டு, உன்பக்கலிலே வந்து, *ஸைகரூபமான வுன் திருவடிகளிலே, எனக்கு மறவாமையாகிற பேறுண்டாம்படியாக, நானபேக்ஷிக்கவன்றிக்கே தண்ணீர்ப்பந்தல்வைப்பாரோபாதி நிர்ஹேதுகமாகச் செய்தருளினாய். புன்னை, செருந்தி இவை மன்னிநின்றுள்ள அழகிய பொழிலினுள்ளே பொய்கைகளிலே அன்னங்களானவை அந்யோந்யம் கலந்துநித்யவாஸம்பண்ணுகிற வயலையுடைத்தாய் ஸ்ப்ருஹணீயமான திருவாலியில்நிற்கிற ஸர்வேச்வரனே. ... ... ௪.

அத்தைமறந்து என்றும், "அடி-மறவாமை" என்றும் சொன்னதுக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார்(அப்ராப்தேத்யாதிவாக்யத்வயத்தாலே.)"வைத்தாய்" என்ற பதவாஸநை (நானித்யாதி.) பொழில்வாய் - பொழிலிடமாய், அகன் - அதுக்குள்ளே யிருக்கிற, பணைகள் என்று பாவஹார்யம்திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (பொழிலினுள்ளேயென்று.) "பணைகள்" என்றதினர்த்தம் (பொய்கைகளிலே யென்றது.) ... ... ௪.

அஞ்சாம்பாட்டு.— (நீடித்யாதி.) கீழ்ப்பாட்டில் - அவன்செய்தமஹோபகாரத்தைச்சொல்லுகைக்காக, விஷயாந்தரங்களை மறக்கும்படிபண்ணினாய் என்றார்; அந்தப்ரஸங்கத்திலே, அவை வாஸநாபலத்தாலே மறுவலிடில்செய்வதென் என்று அஞ்சி, "மனம்வாடநினையேல், நினைத்தாயாகில் பிழையேன்" என்று ப்ரார்த்திக்கிறாரென்று ஸங்கதி.

http://acharya.org

அஞ்சாம்பாட்டு. (நீடித்யாதி) நீடு - காலநீட்சி. "ஒழிவில்காலமெல்லாம்" "எண்டிசையுமுள்ள பூக்கொண்டு" என்கிறபடியே - உன் திருவடிகளிலே நல்லபூக்களையும் மாலைகளையும்சாத்தி, "தொழுதெழு" என்கிறஎன்னெஞ்சை. (வாடவித்யாதி) என்மநஸ்ஸானது உன்னைப் பிரிந்து வாடும்படி நினையாதொழியவேணும் மராமரமெய்த மாமுனிவா. (பாடலித்யாதி) ஸமஸ்தமாயைகளைப்பாடுகிற த்வநியும் ஸங்கத்வநியும். (பல்பணை) பணையென்று - முரசும், பல்லியமும்பெறும்; இயமென்பது - வாத்யம். மலிதல் - மிகுதல். கானத்வநிதுடக்கமானவற்றாலே யெங்கும் மிக்கு ந்ருத்தம் பண்ணுகிற கோஷமும் மாறாத அணியாலி. ... ... ௫.

ஆறும்பாட்டு. (கந்தமித்யாதி) கந்தவத்தான புஷ்பங்களெட்டையுமிட்டு. அவையாவன - கருமுகை, கற்பகம், நாழல், மந்தாரம், ஸௌகந்தி, செங்கழுநீர், தாமரை, கேதகை.

அஞ்சாம்பாட்டு.—(நீடித்யாதி)"ஒழிவில்காலமெல்லாம்" "எண்டிசையுமுள்ள பூக்கொண்டு" என்கிறபடியே - பலவகைப்பட்ட மலரையுடைத்தான மாலைகளையிட்டு, உன்னுடைய ஒன்றுக்கொன்றொப்பாயிருக்கிற திருவடிகளைத்தொழுதேத்துகிற என்னுடைய மநஸ்ஸானது தளிர்போலே வாடும்படியாக நீநினையாதொழியவேணும். (மராமெய்தமாமுனிவா) ஆஸ்ரிதர்க்கு விஸ்வாஸத்தைப் பண்ணிக்கொடுக்குமவனன்றோ!. (மாமுனிவா) எங்களுடைய நினைவுபோலே தப்பிலும் தப்பி ஸஹிக்கிலும் ஸஹிக்கும்படியன்றிறே உன்நினைவிருக்கும்படி. பாட்டின்னிய த்வநி, மற்றுமுண்டான ஸங்கத்வநி, இவைபரம்பி, பின்னையும் பலவகைப்பட்டிருந்துள்ள வாத்யகோஷங்களும்மிக்கு, பார்த்தவிடமெங்கும் ஆடுகிறவர்களுடைய த்வநிமாறாத. பணை - முரசும், பல்லியமும். ... ... ௫.

ஆறும்பாட்டு.— (கந்தமித்யாதி) கந்தவத்தான விலக்ஷணபுஷ்பங்களெட்டையுமிட்டு. அவையாவன - கருமுகை, கற்பகம், நாழல், மந்தாரம், ஸௌகந்தி, செங்கழுநீர், தாமரை, கைதை.

நீட்சி - காலக்ஷேபமான நீட்சியாய், அகதாஸம் "இட்டு" என்றதுக்கு விசேஷணமென்று ப்ரமாணம் காட்டுகிறார் (ஒழிவிலித்யாதி.) (என்கிறபடியே) என்றபின், காலமெல்லாம் என்றுசேஷம். மராமெய்த, மாமுனி - மஹத்தான, மநநத்தையுடையவனே என்று ஸாபிப்ராயமாய், ஸஹிதார்த்தமருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதர்க்கித்யாதி.) மஹத்வத்தை விவரிக்கிறார் (எங்களுடையவித்யாதி.) பல்லியம் என்றதும்-வாத்யவிசேஷம். ... ... ௫.

ஆறும்பாட்டு.—(கந்தமித்யாதி.) "என்மனம்வாட நீநினையேல்" என்று-நம்மை விட்டு விஷயாந்தரபரராய்ப்போகாமல் நினைப்பிடச்சொன்னீர், நானும்மைப் பெறுகைக்காகவந்து புகுந்திருக்க அதுக்கு ப்ரஸக்திதானுண்டோ, நீர்தானே வாஸநாபலத்தாலே நம்மைவிட்டு மீண்டுபோக நினைத்தீராகில் நாம்செய்வதென் என்னும் ஸங்கையிலே, நானென்னை யுனக்காக்கி த்ருடாத்யவஸாயநிஷ்டனாயிருக்கும்படி நீவந்தபின்பு நான்போகவொட்டுவேனோ வென்கிறானென்றுஸங்கதி.

http://acharya.org

மூ.—கந்தமாமல ரெட்டுமிட்டு நின்காமர்சேவடிகைதொழுதெழும்
புந்தியேன் மனத்தேபுகுந்தாயைப் போகலொட்டேன்
சந்திவேள்விசடங்குநான்மறை யோதியோது வித்தாதியாய்வரும்
அந்தணாளரறுவணியா லியம்மானே. ௮.

ப - ரை.—சந்தி - நித்யகர்மங்களையும், வேள்வி - நைமித்திக கர்மங்களையும், சடங்கு - காம்யகர்மங்களையும், இவற்றின் அநுஷ்டாநப்ரகாரங்களை விதிக்கிற, நால்மறை - நாலுவகைப்பட்ட வேதங்களையும், ஆதியாய் - ஸ்ருஷ்டி தொடங்கி, ஓதி - முன்புள்ளவர்களிடத்தில்கற்றும், ஓதுவித்துவரும்-பிறர்க்குச்சற்பித்தும்போருகிற, அந்தணாளர் - ப்ராஹ்மணர், அறு - மாறுதேவர்த்திக்கிற, அணி ஆலி அம்மா[ய]னே!—, கந்தம் - பரிமளப்ரசுரமாய், மா - ம்லாக்யமான, எட்டு மலரும் - எண் பகர்பூக்களையும், நின் - உன்னுடைய, காமர் - அழகிய, சேவடி - சிவந்த திருவடிகளில், இட்டு-ஸமர்ப்பித்து, கைதொழுது-கையாலேதொழுது, எழும்-உத்தவேணு மென்கிற,புந்தியேன் மனத்து-அத்யவஸாயத்தையுடையவன்னெஞ்சில்,புகுந்தாயை-உனைப்பெறுகவந்து புகுந்தவுனை, போகலொட்டேன் - இனிநான்போகவொட்டேனென்கிறார். ... ... (௮)

ஸ்வாபதேசம்- †பரமஹோம்யமான திருமந்த்ரத்தால் ப்ரதிபாத்யமான வஸ்துவின்பக்கலிலே தன்னை ஸமர்ப்பித்து; "ஸர்வமங்ய:" என்கிற வஸ்துவாகையாலே. (காமரித்யாதி) காமர் – அழகு. அழகிய சிவந்த திருவடிகளைத் தொழுதெழவேணுமென்று அய்யவஸாயமுடைய வென்னெஞ்சிலேபுகுந்தவுன்னைப்போகவொட்டேன்.

ஸ்வாபதேசம் †பரமஹோம்யமான திருமந்த்ரத்தாலே ப்ரதிபாத்யனான வஸ்துவின்பக்கலிலேதன்னை ஸமர்ப்பித்து; "ஸர்வமங்ய:" என்கிறவஸ்துவாகையாலே: உன்னுடைய ப்ரீவுறவியமான சிவந்த திருவடிகளைக் கையாலே தொழுது உஜ்ஜீவிக்கவேணுமென்னும் அய்யவஸாயத்தையுடைய வென்னுடைய நெஞ்சிலே. (புகுந்தாயைப்போகலொட்டேன்) நானுன்னை அபேக்ஷியாதிருக்க நீயேவந்து புகுந்தபின்பு, இனிப்போகவொட்டேன். நின்னையின்றிக்கேயிருக்க வந்த ஸம்பத்தைத் தள்ளுவாருண்டோ!.

"பனமலர்மாலையிட்டு" என்று கீழ்ச்சொன்னவர், இப்பாட்டில "எட்டு"[கூய] என்று ஒரு ஸங்க்யாவிசேஷம்சொல்லுகைக்கு ப்ரயோஜநமென்னென்ன வருளிச்செய்கிறார் (ஸ்வாபதேசமென்று.) அத்தையருளிச்செய்கிறார் (பரமேத்யாதி.) இத்தால் - பரிமளப்ரசுரமான மலர்போலே ஒரோவெழுத்தே பரமஹோம்யமாயிருக்கிற திருவெட்டெழுத்தாலே தத்ப்ரதிபாத்யவஸ்துவில தன்னை ஸமர்ப்பிக்கை விவக்ஷிக்கைக்காகச் சொன்னதென்றதாயிற்று. * எட்டெழுத்துக்கு பரிமள[கூ]ப்ரசுராபுஷ்பஸாம்யதைசொல்லுகைக்கு மூலமென்னென்ன வருளிச்செய்கிறார்(ஸர்வேதயாதி.) "நின்" இத்யாதிக்கு ஸாத்பர்யம் (உனனுடையவித்யாதி.) "கைதொழுதெழும்புந்த்" என்னும்படி அத்யவஸாயநிஷ்டையுண்டானபின்போ அவன்புகுந்ததென்ன வருளிச்செய்கிறார் (நானுன்னையித்யாதி.) மனத்தேபுகுருகையாவது - நெஞ்சுக்கு விஷயமாகையாலே, இவருக்கு அத்யவஸாயம் பிறந்தபின்பு அவன் புகுகையென்றென்றில்லாமையால், முதற்பாட்டிற்சொன்னபடியே முன்னேபுகுந்தத்தை யருளிச்செய்தாரென்று கருத்து. "ஒட்டேன்" என்றதுக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார் (நின்னையின்றிக்கேயித்யாதி.) ... ... ௮.

† "அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரியநிக்ரஹ:| ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத:|| த்யாநபுஷ்பம் தப:புஷ்பம் ஜ்ஞாநபுஷ்பம் ததைவ ச| ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத்" என்கிற ச்லோகம் இவ்விடத்தில் அநுஸந்தேயம்.

http://acharya.org

உலவுதிரைக்கடல் பள்ளிகொண்டுவந் துன்னடியேன்மனம்புகுந்த அப்
புலவபுண்ணியனே புகுந்தாயைப்போகலொட்டேன்
நிலவுமலர்ப்புன்னை நாழல் நீழல் தண்டாமரை மலரின்மிசை மலி
யலவன்கண்படுக்கு மணியாலியம்மானே. எ.

ப - ரை.— நிலவு - எப்போதும்மலராநின்றுள்ள, மலர் - புஷ்பஸம்ருத்தியை யுடைய,புன்னை—,நாழல்-பலிசு, இவற்றின்,நீழல்-நிழலில்,தண்-குளிர்ந்த, தாமரை மலரின்மிசை-தாமரைமலரின்மேல், மலிஅலவன்-பெரியஆண்நண்டுகள், கண்படுக்கும்-பள்ளிகொள்ளுகிற, அணிஆலிஅம்மானே! —; திரைஉலவு-திரைக்கிளப்பத்தை யுடைய,கடல்-திருப்பாற்கடலில், பள்ளிகொண்டு-கண்வளர்ந்தருளி, என்பக்கல்[ப] புகுருகைக்குஅவஸரம் பெற்றவாறே, உன் அடியேன் - உனக்கு சேஷபூதனான என்னுடைய,மனம் - நெஞ்சில், வந்து புகுந்த-உன்பேறாகவந்துபுகுந்த, அப்புலவ - அந்த ஸர்வஜ்ஞனானவனே!, புண்ணியனே - எனக்குஸாதநமானவனே!, புகுந்தாயை - நிர்ஹேதுகமாகப்புகுந்தவுன்னை, போகலொட்டேன் - நான்போகவொட்டேன் என்கிறார். ... ... (எ)

(சந்தியித்யாதி) நித்யகர்மம், நைமித்திககர்மம். (சடங்குநான்மறை) காம்யகர்மம். இவற்றினநுஷ்டாநங்களைவிதிக்கிற நாலுவேதம். (ஓதியித்யாதி) முன்புள்ளாருடனே தாங்களோதி, பின்புள்ளார்க்குத் தாங்களோதுவித்துவருகிறப்ராஹ்மணராறுத அணியாலி. ... ௬.

ஏழாம்பாட்டு. (உலவித்யாதி) திரைக்கிளப்பத்தையுடைய கடலிலே பள்ளிகொண்டபின்பு, வந்துன்னடியேன்மனம் புகுந்த.

(சந்தியித்யாதி) நித்யகர்மம், நைமித்திககர்மம், சடங்கு - காம்யகர்மம், நான்மறை - இவற்றினுடைய அநுஷ்டாநப்ரகாரங்களை விதியாநின்றுள்ள நாலுவகைப்பட்டவேதம், இவற்றை, முன்புள்ளவர்களோடே தாங்களோதி, பின்புள்ளாரைத் தாங்க ளோதுவித்து, இப்படி பழையராய்ப் போருகிற ப்ராஹ்மணர் மாறுத திருவாலியிலே, அவர்களுக் காஸ்ரயணீயனாய்க்கொண்டு நிற்கிற ஸர்வேச்வரனே, அவர்களுமுண்டாயிருக்க நீயேவந்து என்ஹ்ருதயத்திலே புகுந்தபின்பு இனிப்போகலொட்டேன். ... ... ௬.

ஏழாம்பாட்டு.— (உலவித்யாதி) ஸஞ்சரியாநின்றுள்ள திரையையுடைத்தான திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளி; அங்குச்சாய்ந்தருளிற்று என்பக்கல்புகுருகைக்கு அவஸரம் பெறுமளவுமாய்,பின்பு என்பக்கலிலே விலக்காததொரு அவகாசம் பெற்றவாறே, உனக்குப் புகுருகைக்கு யோக்யமாயிருக்கிற என்ஹ்ருதயத்திலே புகுந்த.

ஏழாம்பாட்டு.—(உலவித்யாதி.) நீர் "போகலொட்டேன்" என்றீர், நான் நிர்ஹேதுகமாசப்புகுந்தவன, நானேபோகில் நீர் செய்வதென், நீரென்னவலங்கொண்டு இங்ஙன்சொன்னதென்று, இவர்நெஞ்சை சோதிக்கைக்காகச்சொல்ல; இரண்டாம்பாட்டிற்சொன்னபடியே - திருப்பாற்கடலிலே யென்னைப்பெறுகைக்காகவேகிடந்து வந்து நீபுகுந்த வலங்கொண்டே "நான்போகலொட்டேன்" என்கிறாரென்று ஸங்கதி.

தாத்பர்யமருளிச்செய்கிறார் (அங்கித்யாதி.)

http://acharya.org

மூ.—சங்குதங்குதடங்கடல் கடன்மல்லையுட்கிடந்தா யருள்புரிந்
திங்கென்னுள்புகுந்தா யினிப்போயிறலறையோ
கொங்குசெண்பகம்மல்லிகைமலர்புல்கியின்னிளவண்டுபோயிளந்
தெங்கின்தாதளையும் திருவாலியம்மானே. அ.

ப - ரை.—இன்னிளவண்டு-இனியவிளம்வண்டுகளானவை, கொங்கு-பரிமளம் மிகுந்த, செண்பகமலர் - செண்பகப்பூவையும், மல்லிகைமலர்-மல்லிகைப்பூவையும், புல்கி - மதுபானத்திற்காகவிழுந்து தழுவி, அவைகொதித்தவாறே, இளந்தெங்கின் - இளம்தெங்கிலே, அவ்வெம்மையாற்றுகைக்காக, போய் - சென்றுபுக்கு, தாதளையும் - அதின்தாதைஅளையாநின்றுள்ள, திருவாலியம்மானே—, சங்கு-சங்கங்கள், தங்கு - மாறுதேயிருப்பதான, தடம் - பெரிய, கடலுள் - திருப்பாற்கடலிலும், கடன்மல்லையுள்-திருக்கடன்மல்லையென்னும் திவ்யதேசத்திலும், கிடந்தாய் - பள்ளிகொண்டருளினவனே, இங்கு - இவ்விடத்திலே, என்னுள்-தாஸனுடைய ஹ்ருதயத்தில், அருள்புரிந்து புகுந்தாய் - க்ருபைபண்ணிவந்து போந்தாய்; இனிப்போயினால் - இனிநீயேவிட்டுப் பிரிந்துபோனாயாகில், அறையோ-அறையோ வறை (ஜயம்). ... ... (அ)

(அப்புலவவித்யாநீ)புலவன்-வித்வான். ஸர்வஜ்ஞனானவனே!, எனக்கு ஸுலபனானவனே, புகுந்தவென்னைப்போகவொட்டேன். (நிலவித்யாநீ) நித்யமானமலரையுடைத்தான புன்னை, ஞாழல், இவற்றின்நிழலிலே. ஞாழல் - ஷலிநீ குளிர்ந்த தாமரைமலரின்மேலே பெரிய ஆண்நண்டானது பள்ளிகொள்ளுமளவியாவி. "பள்ளிகமலத்திடைப்பட்ட பகுவாயலவன்" என்னும்படியே. ... ... எ.

(அப்புலவ)விமர்ஷஜ்ஞனல்லையோ!. அவஸரமறியாயோ புகுருகைக்கு. (புண்ணியனே)உன்னைப்பெறுகைக்கொரு கைம்முதலில்லாதபடியிருக்கிறவெனக்கு ஸுலபனானவனே. (புகுந்தாயைப்போகவொட்டேன்) நீயேவந்து புகுந்தபின்பு, உன்னை நானினிப்போகவொட்டேன். (நிலவித்யாநீ) நித்யமான மலரையுடைத்தாயிருக்கிற புன்னை, ஞாழல், இவற்றினுடைய நிழலிலே பரந்ததாமரைமலரின்மேலே. (மலியலவன் கண்படுக்கும்) அப்பரப்புக்கெல்லாம் போரும்படி பெரியவடிவையுடைய ஆண்நண்டானது, மற்றொருநியமத்தையறியாதே படுக்கைவாய்ப்பாலே கிடந்து உறங்காநிற்குமாய்த்து. வயலாலிமணவாளனுடைய வ்யாபாரத்தோடு அங்குண்டான திர்யக்குக்களுடைய வ்யாபாரத்தோடு வாசியற்றிருக்கிறதாய்த்திவர்க்கு அந்நிலத்திலுள்ளவை யாகையாலே. ... ... எ.

"ஞாழல்" என்றது - ஷலிநிஎன்கிற வ்ருக்ஷம். தண் - தட்பமாய், பெருமையைச்சொல்லுமென்றருளிச்செய்கிறார் (பரந்தவென்று.) நியமத்தை - ஸம்ஶ்லேஷத்தை. ... ... எ.

http://acharya.org

எட்டாம்பாட்டு. (சங்கித்யாதி) சங்குகள் வர்த்திக்கிற பெரிய கடற்கரையிலே திருக்கடன்மல்லையிலே பள்ளிகொண்டாய்; பின்னை அருள்பண்ணி யிங்கே என்ஹ்ருதயத்திலே புகுந்தாய்; இனிப்போனாயாகில் அறையோவறை: "விதிவாய்க்கின்று காப்பாரார்" இத்யாதிப்படியே. (கொங்கித்யாதி) தேனையுடைத்தான செண்பகப்பூ, மல்லிகைப்பூ, இவற்றைத்தழுவி, நல்ல இளவண்டுகள்போய் இளந்தெங்கின் தாதளையும் திருவாலியம்மானே!, இனிப்போயினாலறையோவறை. அ.

எட்டாம்பாட்டு.— (சங்கித்யாதி) சங்குமாறாதே யிருப்பதாய் பரப்பையுடைத்தான திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினாய்; அங்குநின்றும் ஆஶ்ரிதனுக்காகத் திருக்கடன்மல்லையிலே கண்வளர்ந்தருளினாய்; இவ்வோவிடங்கள் உனக்குவாஸஸ்தாநமா யிருக்க, என்பக்கலிலே க்ருபைபண்ணிவந்து புகுந்தாய். (இனிப்போயினாலறையோ) உனக்கந்த க்ருபைமாறாதபடி யிருக்கையாலே, இனிநீபோனாயாகில் அறையோவறை. ஹேதுமாறிலிறே அதின்கார்யமும் மாறுவது. உன்னாலல்லது செல்லாதவென்னைவிட்டு நீயிருக்கவுமாய்ப்போகவுமாயிருப்பார்நெஞ்சி லிருக்கவொண்ணாது. (கொங்கித்யாதி) பரிமளத்தையுடைத்தான செண்பகம், மல்லிகைமலர், இவற்றிலே, மது பாநார்த்தமாக இழிந்தவண்டுகளானவை அவற்றோடேதழுவி, அவைகொதித்தவாறே அந்தவெம்மையாற்றுகைக்காக, கோடையிலே நோவுபட்டவர்கள் வந்து நபங்கத்திலே கைவைத்துக்கொண்டுகிடக்குமாப்போலே, இளந்தெங்கிலேபோய் அதின்தாதைஅளையும்திருவாலியம்மானே. அ.

எட்டாம்பாட்டு.— (சங்கித்யாதி.) "போகவொட்டேன்" என்றுசொன்னத்தைக்கேட்டு எம்பெருமான் "இவரப்போதுசொல்லும் சொலவுகேட்கவேணும்" என்று போக்கிலேயொருப்படவே, நீஶ்ரீபுண்டரீகர்க்காகத் திருப்பாற்கடலிலே [உரு]நின்றும் வந்து தரைக்கிடைகிடக்கிறப்போலே என்னெஞ்சிலருளாலே புகுந்தாய், இனி "போகிறோம்" என்று நீபோனாயாகில் நானென்செய்வேன், என்னைவிட்டுப்போறுக்கமாட்டாதே நீயே வருவாயென்கிறாரென்று ஸங்கதி.

அறையோவறைஎன்றது-நீபோனால்எனக்கேஜயமென்றுஜயம்கூறுகிறபடி. போனாகில் போனவிடத்திலிருக்கமாட்டாமையால் க்ருபையாலேவருகை ஸித்யமாகையால், தாம்ஜயித்தமைவஶ்யம், அவன் போகவேமாட்டானென்று கருத்து. அவன் க்ருபையாலே போகமாட்டாதவனானால் நான்ஜயித்தேனென்னப்போமோ, இந்த உக்தியாலே அவன்போனாலோவென்னவருளிச்செய்கிறார் (ஹேதவித்யாதி.) இவர் எத்தனை வெற்றிதோற்றச்சொன்னாலும், "விதிவாய்க்கின்று காப்பாரார்" என்கிறபடியே க்ருபை அவனைக்காற்கட்டுமென்று கருத்து. க்ருபை கால்கட்டப் போகமாட்டாமையைக் கண்டு தாமவனைவென்றாராய், அவனை நியாம்யனாக்கி நியமித்தாரோவென்ன; பிறரொருவர், "வன்னெஞ்சம் புக்கிருக்கவொட்டேன்" என்றாரே என்று விவக்ஷித்து, அந்தபாசுரார்த்தத்தை யருளிச்செய்கிறார் (உன்னாலித்யாதி.) (ஒண்ணாது) என்றவநுஸந்தாநம், என்றாரிறேஎன்று போஷம். "புல்கி" என்றதினர்த்தம் (தழுவியென்றது.) ... ... அ.

http://acharya.org

மூ.— ஓதியாயிரநாமமும்பணிந்தேத்திநின்னடைந்தேற்கொருபொருள்
வேதியாவரையாவுரையா யொருமாற்றமெந்தாய்
நீதியாகிய வேதமாமுனியாளர் தோற்றமுரைத்து மற்றவர்க்
காதியாயிருந்தாயணியாலியம்மானே. ௯.

ப - ரை.— நீதியாகிய - நாட்டாரநுஷ்டிக்கும்படியை விதிக்கக்கடவதான, வேதம் - வேதம், மாமுனியாளர் - அவ்வேதத்துள் மந்த்ரரூபமானவற்றைக்காண வல்லரானமஹர்ஷிகளுடைய, தோற்றம் - உத்பத்தி, ஆகியவிவற்றை, உரைத்து - சொல்லி, மற்றவர்க்கு - மற்றெல்லார்க்கும், ஆதியாய்இருந்தாய் - காரணபூதனுயிருக்கிறவனே, அணியாலியம்மானே—, வேதியா-வேதமொன்றிலேயே யறியத்தக்கவனே, அரையா - குறும்பறுத்தாள்பவனே, எந்தாய் - எனக்குஸ்வாமியானவனே, ஆயிரநாமமும்ஓதி - உன்ஸஹஸ்ரநாமங்களையுஞ்சொல்லி, பணிந்து ஏத்தி- திருவடிகளில் விழுந்து ஸ்தோத்ரம்பண்ணி, நின்அடைந்தேற்கு - உன்னைத்தஞ்சமாகப்பற்றினவெனக்கு, ஒருபொருள்-அத்விதீயபுருஷார்த்தஸாதநமான, ஒருமாற்றம் - ஒருவார்த்தை,உரையாய்-பராங்முகம்பண்ணாது அருளிச்செய்யவேணும். (௧)

ஒன்பதாம்பாட்டு. (ஓதியித்யாதி) ஆயிரந் திருநாமங்களையும் வாயாரச் சொல்லி உன்திருவடிகளிலே பணிந்து ஸ்தோத்ரம்பண்ணி உன்னையடைந்த வெனக்கொருபொருள். (வேதியாவித்யாதி)வைதிக ஸமாராத்யனே. (அரையா) என்னை வன்னியமறுத்தாண்டவனே. (உரையாயித்யாதி) "உனக்கென்னைப்பெறுகைக்கு உபாயமிதுதான்" என்று ஒருவார்த்தையருளிச்செய்யவேணும். உனக்கு ஒருவார்த்தை, எனக்கு ஸத்தாஹேது.

ஒன்பதாம்பாட்டு.— (ஓதியித்யாதி) திருநாமங்களாயிரத்தையும் வாயாலே சொல்லித் திருவடிகளிலே விழுந்து ஸ்தோத்ரத்தைப் பண்ணி உன்னைக்கிட்டின வெனக்கு. (ஒருபொருள்)"உனக்கென்னைப் பெறுகைக்குஸாதநமிதுவே" என்று ஓரர்த்தத்தைச் சொல்லவேணும். (வேதியா)வைதிகஸமாராத்யனே, (அரையா) என்னை வன்னியமறுத்தாளுகிறவனே, எனக்கு ஸ்வாமியானவனே, ஒருவார்த்தையருளிச்செய்யவேணும் - "மாஶுசஃ" என்று நானுஜ்ஜீவிக்கும்படி ஒருவார்த்தை யருளிச்செய்யவேணும்.

ஒன்பதாம்பாட்டு.— (ஓதியித்யாதி.) "இனிப்போயினுலறையோ" என்று தாம் வெற்றிதோற்றச்சொனனவர், அவன் தம்மைவிட்டுப்போகாமலிருக்கச்செய்தேயும் தமக்குப்பிறந்த ப்ராப்யத்வரையாலே உபாயவிஶேஷப்ரஶ்நம் பண்ணுகிறுரென்று ஸங்கதி.

திருநாம ஸங்கீர்த்தநாதிகளையெல்லாம் அதிகாரிஸ்வரூபத்திலே சேலவெழுதி, ஸித்தோபாயமவனென்றிருக்கச் செய்தேயும் அதுசடக்கென ஸஹியாமையால் உன்வாயாலே "நானே உபாயம்" என்றொருவார்த்தைசொல்லவேணுமென்றுகேட்கிறுரென்றருளிச்செய்கிறுர் (உனக்கித்யாதி.) வன்னியம் - குறும்பு. "எந்தாய்" என்றதினர்த்தம் (எனக்கித்யாதி.)

http://acharya.org

புல்லிவண்டறையும்பொழில்புடைசூழ் தென்னாலியிருந்தமாயனைக்
கல்லின் மன்னுதிண்டோள் கலியனொலிசெய்த
நல்லவின்னிசைமாலைநாலுமோரைந்துமொன்றும்நவின்று தாமுடன்
வல்லராயுரைப்பார்க்கிடமாகும் வானுலகே. ௧0.

ப - ரை.— வண்டு - வண்டுகளானவை, புல்லி - ஒன்றுக்கொன்று ஆலிங்கநம் பண்ணிக்கொண்டு, அறையும் - பாடாநின்றுள்ள, பொழில் - சோலை, புடைசூழ் - சுற்றுஞ்சூழ்ந்த, தென் - அழகிய, ஆலி - திருவாலியென்னும் திவ்யதேசத்திலே, இருந்த - எழுந்தருளியிருக்கிற, மாயனை - ஆஸ்சர்யபூதனான ஸர்வேஸ்வரனை விஷயமாக, கல்லின் - மலைபோலே, திண் - திட்டமாயும், மன்னு - நித்யமாயுமிருந்துள்ள, தோள் - தோளையுடைய, கலியன் - ஆழ்வார், ஒலிசெய்த - அருளிச்செய்த, நல்ல - அழகிய, இன் இசை - இனிய இசையையுடைத்தான, மாலைநாலும்ஓரைந்தும்ஒன்றும் - பத்துப்பாட்டையும், நவின்று - சொல்லி, தாம்உடன்வல்லராய் உரைப்பார்க்கு - எப்போதும் அதினர்த்தாநுஸந்தாநம் பண்ணிக்கொண்டேயிருப்பவர்க்கு, வானுலகே - பரமபதமே, இடமாகும் - இருப்பிடமாகும். ... ... (௪0)

(நீதியித்யாதி) நாட்டார்க்கு அநுஷ்டாநத்தை விதிக்கிற வேதம். (மாமுனியாளர்தோற்றம்) அவ்வேதத்தில் மந்த்ரரூபமானவற்றைக் காணக்கடவராயிருக்கிற ரிஷிகளுடைய உத்பத்தி, இவற்றைச்சொல்லி, எல்லார்க்கும் காரணபூதனானவனே. "யதாபூர்வமகல்பயத்" என்கிறபடியே-பூர்வக்ரமத்திலே ஸ்ருஷ்டியாநிற்கிறவனென்னுதல்; அதாவது-பூ: என்று பூமியை ஸ்ருஷ்டித்து, இவ்வகைகளிலே அவற்றைச்சொல்லிச்சொல்லி ஸ்ருஷ்டிக்கை. ௬.

(நீதியித்யாதி) நாட்டாரநுஷ்டிக்கும்படியை விதிக்கக்கடவ வேதம். (மாமுனியாளர்தோற்றம்) அதில் மந்த்ரரூபமானவற்றைக் காணக்கடவராயிருக்கிற ரிஷிகளுடைய உத்பத்தி ; இவற்றைச்சொல்லி, எல்லார்க்குமொக்க காரணபூதனாயிருக்கிறவனே. வேதப்ரஸித்தின்படியே பூர்வக்ரமத்திலே ஸ்ருஷ்டியாநிற்கிறவனென்னுதல். அதாகிறது - "பூ:" என்று பூமியை ஸ்ருஷ்டித்து, இவ்வகைகளிலே அத்தைச்சொல்லி ஸ்ருஷ்டிக்கை. ... ... ௯.

வேதமுரைக்கை - நேரே வேதஸ்ருஷ்டியாய், முனிகளுடைய தோற்றத்தையுரைக்கையாவது - ப்ரஹ்மாவுக்கு ஸ்ருஷ்டிக்கும் ப்ரகாரத்தைச் சொல்லுகையாய், அதுவும் பரம்பரயா முனிகளுக்கு ஸ்ருஷ்டியாமென்று தாத்பர்யம் திருவுள்ளம்பற்றி, ஸ்வாரஸ்யம் காட்டுகிறார் (நாட்டாரித்யாதி.) நீதியாகிய வேதமுரைத்து, அவ்வழியால், மாமுனியாளர்தோற்றமென்ன, மற்றவரென்ன, இவையெல்லாவற்றுக்கும் ஆதியானவனே என்று யோஜநாந்தரம் திருவுள்ளம்பற்றி தாத்பர்யமருளிச்செய்கிறார் (வேதேத்யாதி.) ... ... ௧.

http://acharya.org

பத்தாம்பாட்டு. (புல்லியித்யாதி) வண்டுகளானவை ஒன்றுக்கொன்று ஆலிங்கநம்பண்ணிப் பாடாநின்றுள்ள பொழில் சுற்றுஞ்சூழ்ந்தழகிய திருவாலியிலே யிருக்கிற ஸர்வேஶ்வரனை. (கல்லித்யாதி) கல்லைப்போலே திண்ணியதோளையுடைய ஆழ்வாரருளிச்செய்த.(நல்லவித்யாதி) அழகிய இனிய இசையையுடைத்தான பத்துப்பாட்டையும் கற்கவல்லவர்க்கு பரமபதமிருப்பிடமாம். ... ௧௦.

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

பத்தாம்பாட்டு.— (புல்லியித்யாதி) வண்டுகளானவை தழுவி மயூபாநமத்தமாய்க் கொண்டு அறையாநின்றுள்ள பொழிலை பர்யந்தத்திலே யுடைத்தான திருவாலியிலே யெழுந்தருளியிருக்கிற ஆஶ்சர்ய ஸ்ருதனைக்கவிபாடிற்று. மலைபோலே திண்ணியதாய் நித்யமாயிருந்துள்ள தோளையுடைய ஆழ்வாரருளிச்செய்த நல்ல இன்னிசையான தொடை; இதிலுண்டான ஆதராதிஶயத்தாலே விடமாட்டாமை பிரித்துப்பிரித்தருளிச செய்கிறார். ... ... ௧௦.

அடிவரவு.— வந்து நில தென்னெல் மின்னில் நிடி கந்தம் உலவு சங்கு ஓதி புல்லி தூவிரி.

திருமங்கையாழ்வார் திருவடிகளேஶரணம.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

பத்தாம்பாட்டு.— (புல்லியித்யாதி.) அறையாநின்றுள்ள - பாடாநின்றுள்ள. "மனனு" என்றதின்னர்யம் (நித்யமாயென்றது;) சிரகாலஸ்தாயியா யென்றபடி. "தாமுடன் - நவின்று-வல்லராயுரைப்பார்க்கு" என்றதுக்கு - தங்கள்மனத்தோடேகூடச்கிட்டிச் சொல்லவல்லார்க்கென்று ஸம்பந்தார்யம்கண்டு கொள்வது. ௧௦.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

மூன்றாம்பத்து - அஞ்சாந்திருமொழி ஸம்பூர்ணம்.

ஆக, திருமொழி - உ௫ - க்கு, பாட்டு - உ௫௦.

http://acharya.org

"வந்துனதடியேன்மனம் புகுந்தாய்" என்றும் "அடியேன்மனம் புகுந்ததிம்மைக்கென்றிருந்தேன்" என்றும்மாநஸாநுபவமாய்நின்றது- கீழ்த்திருமொழி; அதுதான் ப்ரத்யக்ஷஸமாநாகாரமாய், அத்தை ப்ரத்யக்ஷஸமாநாகார மென்றிருக்கையன்றிக்கே ப்ரத்யக்ஷமென்றே[று] ப்ரதிபத்திபண்ணி அநந்தரம் பாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து, அது தாம் நினைத்தபடி அநுபவிக்கக்கிடையாமையாலே ஆற்றாமை மிக்கு ஒருபிராட்டிதஶையை ப்ராப்தராய், அதுதானும் புணர்ந்து பிரிந்தாளொருபிராட்டிதஶையாய், ஆற்றாமைகைகொடுக்கஉத்யாநத்திலே புறப்பட்டு, அங்கே வர்த்திக்கிற வண்டுகளைத் தூதுவிடுகிறார்.

நஞ்ஜீயருடையநோவிலே பெற்றிஅறியப்புகுந்து, "இங்குத்தைக்கு வேண்டியிருக்கிறதென்?' என்றுகேட்க; * தூவிரியமலருழக்கிப்பாட்டுக்கேட்கவும், பெருமாளெழுந்தருள பின்னும் முன்னும் சுற்றும்வந்து திருவடித்தொழவும் வேண்டியிராநின்றேன் என்றருளிச்செய்தருளினார்; அப்போதே, வரந்தரும்பெருமாளரையரை அழைத்துவிட்டுப் பாட்டுக் கேட்டருளாநிற்க, "மீனையகொடி நெடுவேள் வலிசெய்யமெலிவேனோ" என்னுமளவிலே வந்தவாறே, "காமஶரங்களாலே ஏவுண்பதுக்கு முன்பே வாராவிட்டால், பட்டபுண்பரிஹரிக்கவாகிலும் வந்தாலாகாதோ!" என்றருளிச்செய்தருளினார்.

"வந்துனதடியேன் மனம் புகுந்தாய்" என்றும், "அடியேன் மனத்திருந்தாய்" என்றும், "என்மனத்தே புகுந்ததின்மைக் கென்றிருந்தேன்" என்றும் - மாநஸாநுபவமாத்ரமாய்நின்றது - கீழ்த்திருமொழி; மாநஸாநுபவமானது முதிர்ந்து, அதுதான் ப்ரத்யக்ஷஸமாநாகாரமாய், அத்தை ப்ரத்யக்ஷஸமாநாகார மென்றிருக்கையன்றிக்கே ப்ரத்யக்ஷமென்றே ப்ரதிபத்திபண்ணி, அநந்தரம் பாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷைபிறந்து, அதுதான் நினைத்தபடியநுபவிக்கக்கிடையாமையாலே ஆற்றாமைகரைபுரண்டு, ஒருபிராட்டிதஶையை ப்ராப்தராய், அவள் பேச்சாலே ஸ்வதஶையைப்பேசுகிறார்.

தூவிரிய ப்ரவேஶம்.— அதிகாரிகளுக்கெல்லா மித்திருமொழியில் மிகவு மாதரமுண்டாகைக்காக அபியுக்தாபிமதமென்னுமத்தை ஓரைதிஹ்யத்தாலே யருளிச்செய்கிறார்(நஞ்ஜீயரித்யாதி.)பெற்றி-நஞ்ஜீயர் ஸ்ரீபாதத்திலவர். ஆளவந்தார்க்கு * அறக்கும்வினை அபிமதமானாப்போல் இவர்க்கு இது அபிமதம். திருமொழிகளெல்லாவற்றிலும் வைத்துக்கொண்டு இத்திருமொழி அபிமதமாகைக்கு நியாமகமென்னென்ன வருளிச்செய்கிறார் (அப்போதேயித்யாதி;) தாம்நோவுபட்டது பின்தஶையாகையாலே நோவுபடுவதற்குமுன்பே யுதவவேணும்,இதில்லாவிட்டால் நோவுபட்டபின்பாகிலும் உதவலாகாதோவென்னும் கருத்தாலே, அபிமதமாய்த்தென்று கருத்து.

ஸங்கதிகாட்டுகிறார் (வந்தித்யாதி.)

http://acharya.org

அவ்வளவில் அவன்தான் ஸந்நிஹிதனாக, அவனுக்குத்தன்னளவுகளைச் சொல்லித்தலைக்கட்டுகிறாள். ... ... ●

[யதாம்நிஸங்காத்கநகமபதோஷம் ப்ரஜாயதே। ஸம்ஶ்லிஷ்டம் வாஸுதேவேந மநுஷ்யாணாம்தயாமந:] பொன் நெருப்பிலேயிடவிட அழுக்கற்றுத் தன்னிறம்பெற்று ஸௌம்யமாமாப்போலே, ஸமவஸ்விஷயத்திலே அவகாஹிக்க அபதோஷனும்; பின்னை, பிராட்டிமார்படியுண்டாகக்கடவதாய்த்து ஸகலாத்மாக்களுக்கும். பிராட்டிமாருடைய பிறந்தபடிதானென்னென்னில்; அநந்யார்ஹஶேஷத்வமென்றொன்றுண்டு; அது இரண்டுதலைக்குமொத்திருக்கும்; கலந்தபோது ப்ரீதிபிறக்கையாலும், பிரிந்தபோது ஆற்றாமைபிறக்கையாலும், ததேகஶோகத்தாலும், அவன் நிர்வாஹகனாக இத்தலை நிர்வாஹ்யமாகையாலும், ஸ்வயத்நத்தாலே பேறென்றிருக்கையன்றிக்கே அத்தலையாலே பேறென்றிருக்கையாலும், பிராட்டிமார்படி யுண்டாகத்தட்டில்லை. ஸர்வயாஸாத்ருஶ்யம் சொல்லுகிற விடங்களிலே வந்தால், தாமரைபோலே கண்கால் என்னுமத்தை தாமரைதானென்று தாமரை என்றே வ்யவஹரிக்குமிறே; "நவஸீதாக்வயாஹீநாநவாஹமபி" என்றுக்கச்சொன்னானிறே இளையபெருமாள்; இவ்வோவழிகளால் பிராட்டிமாருடைமை ப்ராப்தராகத் தட்டில்லை. நாயகனோடேயியற்கையிலே கலந்து பிரிந்து பிரிவாற்றாமைநோவுபடுகிறாளொரு பிராட்டி, அவன் வருந்தனையும்பொறுத்திருக்க மாட்டாமையாலே தூதுவிடப்பார்த்து, அதுக்குத் தன்பரிகரத்தில் கால்நடைதந்து போகவல்லாரில்லாமையாலும், இனித்தான் வேதநாவேதநவிபாகமற இரங்கவேண்டும்படியான உடைமையை யுடையளாயிருக்கையாலும், ராமாவதாரத்துக்குப் பின்பு திர்யக்குக்கள் போனகாரியம் தலைக்கட்டிவரக்கண்ட வாஸனையாலும், கண்ணால்கண்ட பக்ஷிகளையடையத் தூதுவிட்டு, அதுதற்குச்சொல்லுகிற வார்த்தையாலே, தன்நெஞ்சுதான் புண்பட்டிருக்கிற ஸமயத்திலே அவன்றான் ஸந்நிஹிதனாய்க்கொண்டுவர, அவனுக்குத் தன்னிழவுகளைச் சொல்லித் தலைக்கட்டிற்றாய்ச்செல்லுகிறது. ... ●

அதில், ஒருவண்டைக்குறித்துத் தூதுவிடுகிறாள்-முதற்பாட்டில். உனக்கு உன்காரியம் குறையற்றிருந்தது, எனக்கென்காரியம் குறைபட்டிருக்கிறபடிகண்டாயே!, என்குறை தீர்க்கைக்காக வந்திருக்கிறவனுக்கு அறிவியாயோ என்கிறாள்.

வையடிமையில் பிராட்டிமாருடைமை பிறக்ககூடுமோவென்ன அருளிச்செய்கிறார் (யதேத்யாதி.) அபதோஷனாய்த் தன்னிறம்பெற்றாலும் நித்யரோபாதிபேசலாமித்தனைபோக்கி, பிராட்டிமாருடைமைபிறக்கக்கூடுமோ என்னும் ஶங்கையையநுவதித்துப் பரிஹரிக்கிறார் (பிராட்டிமாருடைமையித்யாதி.) பிராட்டிமாரோட்டை ஸாயர்ம்யமுண்டானாலும் அவர்தானாகச்சொல்லுகை கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (ஸர்வயாவித்யாதி.) ஸாம்யஸௌகர்யார்யம் திருமொழியில் ப்ரமேயத்தை உபந்யஸிக்கிறார் (நாயகனோடேயித்யாதி.) ... ...

முதற்பாட்டு.— (அவிரியவித்யாதி.) தூதுவிடுகிறாளென்றது-உதவாக்யத்தை வாய்விடுகிறாளென்றபடி. பாட்டுக்கெல்லாம் தொகுத்த ஸாரமருளிச்செய்கிறார் (உனக்கித்யாதி.)

http://acharya.org

மூ.— தூவிரியமலருழக்கித் துணையோடும் பிரியாதே
பூவிரியமதுநுகரும் பொறிவரிய சிறுவண்டே
தீவிரியமறைவளர்க்கும் புகழாளர்திருவாலி
ஏவரிவெஞ்சிலையானுக் கென்னிலைமையுரையாயே. க.

ப-ரை.—தூ - சிறகு, விரிய - விரியும்படியாக, மலர் - கழியமலர்ந்தமலரை, உழக்கி - மிதித்து, துணையோடும் - ஸஹசரத்தோடும், பிரியாதே - பிரியாமலே, பூ - பூக்களானவை, விரிய - விகஸிக்க, மது - அவற்றிலுள்ள தேனை, நுகரும் - பானம் பண்ணுகின்ற, பொறி - புள்ளிகளையும், வரி - ரேகைகளையுமுடைய, சிறுவண்டே - சிறுத்தவண்டே, தீவிரிய - அக்நிவிஸ்தீர்தமாம்படி, மறை - வைதிகமர்யாதையை, வளர்க்கும் புகழாளர் - குறைவறநடத்துகையால்வந்த புகழையுடையவர்களது, திருவாலி - திருவாலியிலே நித்யவாஸம்பண்ணுகிற, ஏவரிவெஞ்சிலையானுக்கு - அம்பையும் அழகியவில்லையும் கையிலேந்திய ஸர்வேச்வரனுக்கு, என்னிலைமை - என் தசையை, உரையாய் - மறவாதுசொல்லவேணும்என்று தூதுவிடுகிறாள். (க)

முதற்பாட்டு. (தூவிரியவித்யாதி) தூவியுண்டு-சிறகு, அது விரியும்படியாக மலரையுழக்கியென்னுதல்; அன்றிக்கே, தூய்தாகவிரித்த-கழியமலர்ந்தமலரையுழக்கி யென்னுதல்; அன்றிக்கே, தூவியாலே-சிறகாலே, பெரியமலரையுழக்கியென்னுதல்.

(தூவிரியமலருழக்கி) தூவிரிய - தூவிரியும்படியாக - சிறகுவிரியும்படியாக, மலரையுழக்கியென்னுதல்; அன்றிக்கே, தூய்தாகவிரிந்த-கழியவலர்ந்த, மலரையுழக்கியென்னுதல். பிரிவாலே பூக்காணவிருய்த்து ஒடுங்காநின்றாளிறே தான்; அவை, ஸம்ச்லேஷத்தால்வந்த ஹர்ஷத்தாலே சிறகை விரியாநின்றன வாய்த்து. [நைஷாபச்யதிராக்ஷஸ்யோ நேமாந் புஷ்பபலத்ருமாந் । ஏகஸ்யஹ்ருதயாநூநம் ராமமேவாநுபச்யதி] ராக்ஷஸிகளர்சநத்தோடு புஷ்பபலத்ருமங்களினுடைய தர்சநத்தோடுவாசியற்றிருக்கிறதிறேயிவளுக்கு. [நமோத்தமம்புஷ்பிதமாஸஸாத] எரிகிறநெருப்பைச் சென்று கிட்டுவாரைப்போலே ; ஓங்கிப்பரப்படங்கலும் புஷ்பமேயாய்க்கிடக்கை. [ஆஸஸாத] தன்ஜீவநத்திலே நைராச்யம் விளைந்தமைதோற்றியிருக்கிறது. (மலருழக்கி) இவளுக்கு நெருப்பானபூ, அவற்றுக்கு அள்ளற்சேறுபட்டது படாநின்றது. அல்லியும், தேனும், தாதும், சுண்ணமும், ஒன்றாகவுழறாநின்றதாய்த்து. புஷ்பம் என்றால் கூசி அடியிடவேண்டாவே அவற்றுக்கு; "புன்னைமேலுறை பூங்குயில்காள்" என்னுமாப்போலே: நெருப்பிலே அடியிட்டாப்போலே யிருக்குமிறே தனக்கு.

"மலருழக்கி" என்னவமைந்திருக்கவும், "தூவிரிய" என்றுவிசேஷித்ததுக்குக்கருத்தருளிச்செய்கிறார் (பிரிவாலேயித்யாதி.) பிரிவிலே பூக்காண ஒடுங்கினவிடமெங்கேயென்ன வருளிச்செய்கிறார் (நைஷேத்யாதி.) "ராக்ஷஸ்ய:" என்கிற ப்ரதமை - த்விதீயார்த்தேயாக்கி, அர்த்தமருளிச்செய்கிறார் (ராக்ஷஸீத்யாதி.) "தூய்தாம்படி கழியவலர்ந்த" என்ற இரண்டாமர்த்தத்தில் - இவளுக்கு அக்நிஸாத்ருச்யம் தோற்றிற்று என்றுவிவக்ஷித்து, அதுக்கு த்ருஷ்டாந்த மருளிசசெய்கிறார் (நமோத்தமமித்யாதி.) அள்ளற்சேறு - குளிர்ந்தசேறு. வர்ஷபங்கமென்கை. ஏதி என்னாதே, "உழக்கி" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அல்லியுமித்யாதி.) தானும் * மலர்மேல்மங்கையன்றோ, இவற்றை "உழக்கி" என்கிற தென்னென்ன வருளிச்செய்கிறார் (புஷ்பமென்றாலித்யாதி.)

http://acharya.org

(துணையோடுமித்யாதி) ஸஹவாஸத்துடன் பிரியாதே. (பூவிரியவித்யாதி) பூக்கிங்கிணிவாய்ச்செய்தவளவிலே புக்கு மதுபானம் பண்ணும்,

நம்முடைய நெருப்பிலே யிவை அடியிடுகைக்கு ஹேதுவென்? என்று விசாரித்துப்பார்த்தாள்; அக்நிஸ்தம்பநமந்த்ரம் கையிலேயுண்டாயிருந்தது; அம்மந்த்ரந்தானிருக்கிறபடி (துணையோடும்) இருவராயிருப்பார்க்குப் பூவும் பொறுக்குமாகாதே!; என்னைப்போலே தூதுவிடாதே கூடவர்த்திக்கப்பெறுவதே!. (துணையோடும்) தன் வாஸனையிருக்கிறபடி. துணையென்றால், ஒருதலை கழுத்துக்கட்டியாய், ஒருதலை ரக்ஷகமாயேகாணு மிருப்பது; "துணைபிரிந்தார் துயரமும் நினைகிலை" என்னக்கடவதிறே. சிறியாத்தான், "துணையென்றால்-த்விதீயமன்றுகாண், ஏகாஸ்ரயத்திலேகிடக்கும்" என்னுமாம். உன்னைப் பிரிந்தார் என்னவேண்டும் ஸ்தாநத்திலே, "துணைபிரிந்தார்" என்கிறதிறே; இப்போதும் (துணை) என்கிறது-இங்கு சேவலை. (பிரியாதே) இவ்வைச்வர்யம் முன்னம் ஓரிடத்திலேயுண்டாகப்பெற்றோமே!. (தூவிரிய மலருழக்கித்துணையோடும்பிரியாதே) இதென்னநோயாசைதான்!. [மயூரஸ்யவநேநாஸ ரக்ஷஸாநஹ்ருதாப்ரியா] இந்தமயில்களிருந்த விடத்தில் வந்திலனோ அப்பையல் என்கிறார். இருவராயிருப்பாரெல்லாரையும் தனியாக்கினானென்றேயாய்த்திருப்பது.

(பூவிரியமதுநுகரும்)செருக்கராயிருக்கும் ராஜபுத்ரர்கள் முசிந்த படுக்கையைக் கால்கடைக்கொண்டு செவ்விப்படுக்கையிலே சென்றேறுமாப்போலே, கழியவலர்ந்த பூவில்நின்றும்போய் செவ்விப்பூவிலே படிந்துகாணும் மதுபானம் பண்ணுகிறது; இவற்றினுடைய ப்ரவேசமும் பூவலருகையுமொத்தாய்த்திருப்பது.

மேலுக்கவதாரிகை (நம்முடையவித்யாதி.) துணையோடிருக்கைமலருழக்குகைக்குறுப்பென்று தாத்பர்யமருளிச்செய்தது. தூதுவிடுகைக்கு உபயுக்தமென்று தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (என்னைப்போலேயித்யாதி.) சேவலோடென்னாதே, "துணை" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (தன்னித்யாதி.) கழுத்துக்கட்டி-ரக்ஷ்யம். நாயகனே துணையென்னுமதுக்கு ப்ரமாணம் (துணைபிரிந்தாரித்யாதி.) துணை - மாத்ராதிகளாகவொண்ணாதோ, நாயகனேயாகவேணுமோவென்னவருளிச் செய்கிறார் (சிறியாத்தானித்யாதி.) நாயகனே துணையென்னுமதுக்கு ஜ்ஞாபகமேதென்ன (உன்னையித்யாதி.) "துணையோடு" என்றத்தாலே - ஸாஹசர்யம் தோற்றியிருக்க, "பிரியாதே" என்றது - தான்பிரிந்திருக்கிறதசையில் முந்துறவிவைபிரியாதிருக்கை அஸம்பாவிதம்!, இதென்ன ஆச்சர்யம்!, இதுபெற்றோமே! என்றதுதன் கார்யத்துக்குடலென்றநுஸந்திக்கிறாளென்றருளிச்செய்கிறார் (இவ்வைச்வர்யமித்யாதி.) ஸம்ச்லேஷம் உக்மஸ்கமானால் அதுஸாத்மிக்கைக்காகவும் பிரியாதேயிருப்பதே!, இதென்ன ஆச்சர்யம்!" என்னும் தாத்பர்யாந்தரம்சொல்லுகைக்காக ப்ரதீகக்ரஹணம் (தூவிரியவித்யாதி.) தான் பிரிந்திருக்கும்போது எல்லாரும் பிரிந்திருக்கிறதாகவெண்ணின விடமுண்டோவென்ன (மயூரஸ்யேத்யாதி.)

"விரிய" என்றவநந்தரம் "நுகரும்" என்கையாலே பலித்த காலஸாமீப்யத்தைத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (இவற்றினுடைய ப்ரவேசமுமித்யாதி;) இத்தால் - சாற்றும் புகுராத நூதநமான தேனை நுகர்ந்ததென்றதாய்த்து.

http://acharya.org

பெரி – வ்யா.— தென்றலோபாதி, ஆதித்யகிரணத்தோபாதி, காலத்தோபாதி, இவற்றின் ஸந்நிதியும் பூவினுடைய விகாஸத்துக்குறுப்பாயிருக்கை. க்ஷீதஸங்கேதராயிருப்பார் உள்ளே நின்று கதவைத்தொட்டவாறே திறக்குமாப்போலே, இவற்றின் சிறகின்[று] காற்றாலே அலரும்படியாயிருக்கை. (பூவிரிய) இவற்றினுடைய வரவு, புஷ்பத்தினுடைய ஸங்கோசஹேது வாகையன்றிக்கே விகாஸஹேது வாகாநின்றதாய்த்து. (மதுநுகரும்) [நமாம்ஸம் ராவணோ ஹுங்க்தே நவாபிமது ஸேவதே] ※ உபவாஸக்ருசையாயிருக்கிற வென்படிக்கு எதிர்த்தட்டாயிராநின்றதீ உன்படி !; அத்தைப் பழியிடுகிறாள். ஒன்றுக்கொன்று ஸம்ச்லேஷார்த்தமாக பலாயாநம் பண்ணுகிறபடி. (நுகரும்) மதுபாநம் பண்ணிற்றாய் மீளுவதொரு போதில்லை ; தனக்குத்தான் மதுபாநம்பண்ணிவிறேமீளுவது. ஒன்று க்கொன்று பரார்த்தமாகவிறே ஹுஜிப்பது; ஒன்றுக்காக ஒருகலத்திலே யெடுக்குமாப்போலே ;மிடற்றுக்குக்கீழேயிழியிலிறே தெகுட்டி மீளுவது. இனித்தான் தேன்பாரகமாக விழிந்ததொன்றன்றே !; கூடவொன்றைத் தொட்டுக்கொண்டிருக்கைக்குக் கைதொடுமானமாகக் கொண்டதொன்றன்றே!. என்னையுமிப்படிஹுஜிப்பித்து ஹுஜித்தாலன்றோ உங்கள் ஹோமத்துக்குச் செலவுள்ளது. இராவுண்ணுதாரை யூட்டியுண்ணவேண்டாவோ ; இதென்னகுறையற்றுவர்த்திக்கைதான் !.

ராஜபுத்ரர்கள் ஸமாபியாலே-முசிந்தபடுக்கையை விட்டுப்போகுப்போலே, அலராமலரில்போனால் அது கோதகாலமாயன்றோ விருப்பது, அப்போது தென்றல் முதலாகஇல்லையே, இவற்றினுடைய ப்ரவேசமும் அலருகையும் ஏககாலமாம்படி விகஸிக்கைக்குஹேதுவென்னென்ன வருளிச்செய்கிறார் (தென்றலித்யாதி.) ஸந்நியி - சிறகின்காற்று. கீழ்வாக்யவிவரணம் (க்ஷீதேத்யாதி.) ஸ்வாபதேசார்த்தத்தை ஸூசிப்பிக்கிறார் (இவற்றினுடைய வரவித்யாதி.) ஸாதவதர்களுடைய ஸந்நிதி ஹ்ருதயகமலவிகாஸஹேதுவாயத்தென்று கருத்து. என்னைப்பிரிந்து வருமவரைப் பிரிந்து நானுமுண்ணதிருக்க நீயும் துணையோடே மதுநுகருகை உங்களுக்குத் தகுமோ என்கிறாளென் றருளிச்செய்கிறார் (நமாம்ஸமித்யாதி ;) ஹ்ரமரம் தன்னைப்போலே பண்ணுமென்னும் பூணத்துக்கு ஹாநிவரும் என்கிலையை உரையாயாகிலென்று கருத்து. மதுநுகருகை ஆறுபோகைக் குடலன்றோ, பழியிடுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (ஒன்றுக்கொன்று ஸம்ச்லேஷார்த்தமாகவித்யாதி;) ஆறுபோகைக்குக் காலக்ஷேபதரவேணுமென்றன்றோ நீங்கள் மதுநுகருகையென்று கருத்து. வர்த்தமாநார்த்தம் (மதுபாநமித்யாதி.) மீளாதே மதுநுகரக்கூடுமோ, வாய் நோவாதோவென்ன (தனக்குத்தானித்யாதி ;) ஸ்வார்த்தமாகில் நோவு தெரிவதென்று கருத்து. பரார்த்தமேயாகிலும் தெகுட்டாதோவென்ன வருளிச்செய்கிறார் (ஒன்றுக்காகவித்யாதி.) ஒருகலத்திலேயெடுக்கை - ஒருதார்பார்த்தமாக ரஸ்யபதார்த்தங்களை ஒரு பாத்ரத்திலே வைத்துக்கொடுக்குமாப்போலே,நெஞ்சிலே வைத்துக் கொடுக்கையாலே பரார்த்தமுமாய் கீழிழிச்சாமையாலும் தெகுட்டாதென்று கருத்து. மதுநுகருகை - ஒன்றுக்கொன்று பலாயாநார்த்தமாகவென்றொரு தாத்பர்யமருளிச்செய்து, கூடியிருக்கையில் ஹார்த்யதயா என்று தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார்(இனித்தானித்யாதி.);கூடவொன்றை-துணையானவண்டை. கைதொடுமானமென்றது - ஆலம்பநமென்றபடி. செலவு - ப்ரயோஜநமென்றபடி

http://acharya.org

பொறியையும் அழகையுமுடைய சிறுவண்டே.(தூவிரியவித்யாதி) அம்பி

(பொறிவரிய) பொறியையும் வரியையுமுடைத்தான வண்டே. ஸம்ஶ்லேஷத்தால் வந்தபுகரடங்கலும் வடிவிலே தொடைகொள்ளலாம்படியிருக்கை. வடிகராயிருப்பாருடைய தேஹஶோபைத்தோடு ஆத்மஶோபைத்தோடு வாசியற உத்தேஶ்யமாகக்கடவதிறே. சேர்ப்பார்பக்கல் ஜாத்யாவரும் தன்மைபார்க்கக் கடவதல்லவாய்த்து. (சிறுவண்டே) இவள் கார்யம் செய்கைக்கு முன்பே ஶ்ரமம் செய்திருப்பாரைப்போலே வடிவுசிறுத்திருந்ததாய்த்து. கார்யகாலத்தில்வந்தவாறே அணுத்வத்தையேயிட்டுக்கொள்ளவேண்டாதேயிருக்கை. "ப்ஜீஷடீம்ஶகமாத்ரஃ"[ம] என்று சிறுக்கினானிறே. "வஹாரநாநாவிபவேஷயாரீ †" என்னவேண்டாவாய்த்து இவற்றுக்கு.

(பொறிவரியவித்யாதி) ‡ [ப்ராம்ஶஸத மஹாகபிம்] என்னுமாப்போலே - "ஏத்தவேத்தவெங்கெய்தும்" என்னும் நிலையிறே (க) இவனது; கடலைவற்ற இறைக்கக்கோலுவாரோபாதியிறே ரென்கிறார். [ததஸ்ஸா] திருவடி ராமவ்ருத்தாந்தத்தைச்சொல்லக்கேட்டவநந்தரம் உளளானாள். [ஹ்ரீமதி] "ஸதியர்மணியர்மாம்ஶவிந்த்யஞ" இதிங்யாயேநஸத்தையுண்டாகவுண்டாமது உண்டாய்த்து. [பாலா] ஹர்ஷம் பொறுக்கவொண்ணாதவளாய்த்து. [ஹர்த்துஸ்ஸங்தேஶஹர்ஷிதா] ரக்ஷகரானவர்வார்த்தைகேட்டு ஹ்ருஷ்டையானாள். [பரிதுஷ்டா] அந்தஹர்ஷம் புறவெள்ளமிட்டபடி. [விஶாலாக்ஷீப்ராம்ஶஸத] ஏத்தத்துடங்கினாள். [மஹாகபிம்] கடலைவற்ற இறைக்கக் கோலுவாரைப்போலே.

இப்படிசொன்னவாறே, வண்டு லஜ்ஜித்து, "நீ ஏவிற்றுச்செய்யவிருக்கிறவெங்களைக் கிடந்து இங்ஙனே ஸ்தோத்ரம்பண்ணுகிறதென்?, உன்னோடே கலந்து பிரிந்து உன்தஶையைக்கண்டு இரங்காதேபோனவன் எங்கள் வார்த்தைகேட்குமோ! என்றன்றோ எங்களுக்கு விளம்பம்" என்றனவாகக்கொண்டு, மேல்வார்த்தைசொல்லுகிறாள் (நீவிரியவித்யாதி) நீங்கள் அது நினைக்கவேண்டா,

---

பொறியையுமென்றது - மாநஸோல்லாஸத்தால்வந்த புகரையுமென்கை. ஸ்வாபதேஶம் (வடிகரித்யாதி.) "வரி" என்றத்தைப்பற்ற (தேஹஶோபைத்தோடென்றது.) திர்யக்கானவண்டைச் சொன்னதுக்கு ஸ்வாபதேஶம் (சேர்ப்பாரித்யாதி.) வண்டுக்குண்டான ஸ்வாபாவிகமான சிறுமையை யிங்குச்சொல்லுகைக்குக் கருத்தருளிச்செய்கிறார் (இவளித்யாதி;) திருவடியைப்போலே கார்யகாலத்தில்சிறுக்க வேண்டாதபடி வ்ருஷபஸாமநுராணஸேநைமுதலியார் முன்புபோகக்கூசாதே, அவன்வளையத்தில் வண்டுகளோடு ஒருவண்டாய்ப்போய், என்னிலைமை சொல்லும்படி யமைந்திருந்தாயே யெனகிறாளென்று கருத்து.

‡"மஹாகபிம்" என்றதுக்குத்தாத்பர்யம் (ஏத்தவித்யாதி.) எங்கெய்தும் - எங்கே கிட்டுவோம், கரைகாணமாட்டோமென்கை. ஆனால், ப்ராம்ஶஸிக்கக்கூடுமோ வென்ன (கடலையித்யாதி.) எடுத்தப்ரமாணத்துக்கெல்லாம் வ்யாக்யாநம் பண்ணுகிறார் (ததஇத்யாதி.)

மேலுக்கவதாரிகை (இப்படியித்யாதி.)

---

† "ஸமாருநாநாவிபருபயாரீ" என்று அச்சுஸ்ரீகோஶங்கள். ‡ "பொறிவரிய சிறுவண்டு" என்று இப்படிகொண்டாடின விடமுண்டோவென்ன; பிராட்டி திருவடியைக் கொண்டாடினாளென்கிறாள் (ப்ராம்ஶஸதமஹாகபிமித்யாதி.) (க) இவனது - திருவடி - வைபவம்.

http://acharya.org

விஸ்தீர்ணமாம்படி வேதோக்தமானபடியே அக்நியை வளர்க்கும் புகழாளர்திருவாலி. (ஏவரிவெஞ்சிலையானுக்கு) அம்பையும் அழகியவில்லையும் கையிலேயுடையவற்கு, என்னிலைமையைச்சொல்லவேணும். ...௧.

அவ்வூரிலுள்ளார் தார்மிகராயாய்த்திருப்பது, நீங்களென்னிலைமையை யங்கேயறிவிக்க அவனைப்புறப்பட விடுவர்கள்; — "ஸ்த்ரீவாதகனாயிருக்கிறவவன்நடுவேயோ நாம்யஜிக்கிறது" என்று புறப்பட விடுவர்கள், அறிவிக்குமதுவே வேண்டுவதென்கிறாள். நொந்தாரை "ஐயோ!" என்னுமவர்களாய், யுக்தகாரிகளடங்கலும் திரண்ட தேசங் காணுங்கோள்; புறப்படவிடுவர்கள்; புறப்படவிட்டால், பின்னை அவனுக்கு நாணல்லது மதியில்லை. (தீவிரியவித்யாதி) அலர்ந்த தாமரை போலே அக்நிவிஸ்தீர்ணமாம்படி வைதிகமர்யாதையைக் குறைவற நடத்துகையால் வந்த புகழையுடையவர்களுடைய திருவாலியில்.

மூணவித்துக்கள் திரண்டவிடமாய்த்து; உங்கள்வடிவைக்காட்டி "ஸ்த்ரீவாதகன்கிடிகோளிவன்" என்று பழிசொல்லிப்போருங்கோள் நீங்கள்; "நாங்கள் சென்றறிவித்தாலும், அவன்றான் வருவானொருவனாலும், வழியிலே ப்ரபலப்ரதிபந்தகங்களுண்டாகிற் செய்யலாவதில்லையே!" என்ன; "அதுவேண்டாகாண் கையில்வில்லிருக்க" என்கிறாள் - வரப்புக்கால் ப்ரதிபந்தகமொன்று கிடவாது அவனுக்கு (ஏவரிவெஞ்சிலையானுக்கு) ஆர்த்தத்வநி செவிப்படாமைக்கன்றே[உம்] கையிலே விற்பிடித்தது. ஆரேனுமாகக் கையிலே விற்பிடித்தாரை யுய்யத்திலே மூட்டுமதாய், கட்டையுடைத்தாகையாலே வரிவரிப்பட்டு தர்ஶநீயமாய், பிடித்தபிடியிலே யெதிரிகள் குடல் குழம்பும்படியான வில்லைக் கையிலேயுடையவனுக்கு. தூதுபோகிற எங்கள்படிசொன்னாய், நாங்கள்போயறிவிக்குமவன்படி சொன்னாய், உன்வார்த்தையாக நாங்களவனுக்குச் சொல்லுவதென்னென்ன(என்னிலைமை)பாசுரமில்லாததுக்கு என்றாலே பாசுரமிடப்போமோ!. என்வடிவிருக்கிறபடி கண்டிகோளே; இனி நீங்களே பாசுரமிட்டுச்சொல்லுமித்தனை. தன்னிலும் தன்னைக்கண்டார்க்குப் பாசுரமிட்டுச்சொல்லலாமென்றிருக்கிறாள். ஒரு ஐந்த்ரவ்யாகரணபண்டிதனோபாதியாகக்காணுமிவள் தானித்தை நினைத்திருக்கிறது. (உரையாயே) ஒருமஹாப்ராஹ்மணன் ஊர்போயநனைக் கட்டிக்கொடு போகாநிற்கச்செய்தே, தர்மபுத்ரன்பேரைச் சொல்லிக்கூப்பிட, அவனை பின்னை ஆந்ருஶம்ஸ்யத்தாலே மீட்டான் என்னாநின்றது; அங்ஙனன்றிக்கே, தன்னையாசைப்பட்டுப் பிரிந்திருந்து நோவுபடுகிறபடியைக்கேட்டால் உதவாத ஸ்வபாவனோ! என்கிறாள். (உரையாயே) கொடுவரவேண்டா, அறிவிக்குமித்தனையிறே இத்தலைக்குவேண்டுவது; வருகை அவன்பணியே; வாராதொழியுமன்று ரக்ஷகனுக்குக் குறையாமே. நீங்களறிவித்தவநந்தரம் உங்கள் பேச்சுக்கேட்டுத் தானே வாராநிற்கும். ... ௧.

உத்தரார்த்தக்கெல்லாம் தொகுத்ததாத்பர்யத்தை யருளிச்செய்து,அத்தை[சம] விவரிக்கிறார் (ஸ்த்ரீவாதகனித்யாதி.) மேலுக்குஉக்திப்ரத்யுக்திரூபேண தாத்பர்யமருளிச்செய்கிறார்(மூணேத்யாதி, கிடவாது அவனுக்குஇத்யந்தம்.) ஸ்வதார்த்யம் (ஆர்த்தத்வநியித்யாதி.)உரைகேட்டுஉதவுமென்கைக்கு ஆந்ருஶம்ஸ்யம்(ஒருமஹாப்ராஹ்மணனித்யாதி.)

http://acharya.org

மூ.—பிணியவிழுநறுநீலமலர்கிழியப் பெடையோடும்
அணிமலர்மேல்மதுநுகரு மறுகாலசிறுவண்டே
மணிகழுநீர்மருங்கலரும் வயலாலிமணவாளன்
பணியறியேன் நீசென்றென்பயலைநோயுரையாயே. ௨.

ப - ரை.—பிணிஅவிழும் - கட்டவிழாநின்றுள்ள, நறுநீலமலர் - செவ்விய நீல மலர்கள், கிழிய - கிழியும்படி, பெடையோடும் - துணையுடனே, அணிமலர்மேல்- செறிந்தபூக்களில்இருந்து, மதுநுகரும் - தேனைப்பருகுகிற, அறுகால-ஷட்பதமான, சிறுவண்டே - சிறந்தவண்டே, மணி - அழகிய, கழுநீர் - செங்கழுநீர், மருங்கு- காற்பக்கத்திலும், அலரும் - விகஸிக்கிற, வயல் - கழனிசூழ்ந்த, ஆலி - திருவாலியிலே எழுந்தருளியிருக்கிற, மணவாளன் - ஸ்வாமியினுடைய, பணி - க்ரியையை, அறியேன் - நானறியமாட்டேன்; நீசென்று - நீபோய், என்பயலைநோய் - என்னுடம் படைய வைவர்ண்யம் பரந்திருப்பதை, உரையாய் - அநாதரவுபண்ணாமற் சொல்ல வேணும். .. .. (௨)

இரண்டாம்பாட்டு. (பிணியித்யாதி) கட்டவிழுகிற நறுநாற்றத்தையுடைய நீலமலரானது கிழியும்படியாகவும்,

இரண்டாம்பாட்டு. — (பிணியவிழுநறு நீலமலர்கிழிய) இதினுடைய ப்ரவேஶம் பாதியும் காலம் பாதியுமாகவாய்த்துப் பூவில்பிணி அவிழுவது. கழியவலர்ந்துபோனவற்றுக்கும், பிஞ்சாய்ப்பருவமில்லா தானவற்றுக்கும் வாசியறிந்திருக்கை. இத்தால்—அவன் வாய்விடும்[உம் போதே அவன்கருத்தறிந்து பரிஹரிக்கவற்றென்கை. (பிணியவிழு மித்யாதி) கட்டவிழாநின்றுள்ள செவ்வியையுடைத்தான நீலமலர் கிழியும்படியாகவாய்த்து மதுபானம்பண்ணுகிறது. ஆவதென்னென்னில்; போகவிடுகிறவிடத்தில் அளவறிந்துகாரியம் செய்யவற்றென்கை.

இரண்டாம்பாட்டு.— பிணியித்யாதி.) என்றும் இவர்கள் பேடையைமுன்னிட்டே சேவலைக்கார்யங்கொள்ளுமவர்களாகையாலே, கீழ்ப்பாட்டில் * துணையோடும்பிரியாத பெண்வண்டைமுன்னிட்டுத்தூதுரைத்தாள்; இதில், அத்தோடு கூடின சேவலைப்பார்த்துத் தூதுவிடுகிறளென்று ஸங்கதி.

பிணிப்பவிழாநின்றுள்ள நறுநீலமாகிற மலர்ந்தபுஷ்பமென்று ஸம்போர்ய மாகையால், அவிழாநிற்கைக்கும்மலருகைக்கும்வ்யுத்க்ரமேண ஹேதுஹேதுமத்பாவம்காட்டுகிறார் (இதினுடையவித்யாதி.) காலம் - ஸம்ஶ்லேஷோபக்ரமம். "நறுநீலமலர் கிழிய" என்னவமைந்திருக்க, "பிணியவிழும்" என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார்(கழியவித்யாதி.) இத்தால்-கழியவலர்ந்தவற்றையும் கேவலமிளைதானவற்றையும்விட்டு, மத்யமாவஸ்தாபந்நமானவற்றில் வாசியறியவல்ல விசேஷஜ்ஞதையுண்டென்றதாய்த்து.இந்தவிசேஷஜ்ஞதை சொன்னதுக்கு ப்ரக்ஷேபோபயோகம்காட்டுகிறார் (இத்தாலித்யாதி;) அவ்வூரில் தார்மிகரானவர்கள் "ஸ்த்ரீவதம் பண்ணினான்" என்றுபுறப்படவிடுவர்கள் என்னுநின்றாய், அதுக்கு அவனுள்ளிடத்தில் குற்றங்களைச்காட்டினால் செய்வதென்னென்ன; அவன்கருத்தையறியுமுன் விசேஷஜ்ஞதை கண்டோமே, அதுக்கு நீயே பரிஹரிக்கவல்லை என்கிறாளென்று கருத்து. ஸம்போர்யகபூர்வகம் தாத்பர்யார்த்தமருளிச்செய்கிறார் (கட்டித்யாதி.) (ஆய்த்து) என்றவர்த்தம், பேடையோடு கலந்து என்று சேஷம்.

http://acharya.org

மற்றுமுண்டான அழகிய பூக்களின்மேலேபுக்கு மது பானம்பண்ணும் அறுகால சிறுவண்டே.

(மலர்கிழிய)பேணிக்கலக்க வறியாவாய்த்து; தன் செருக்காலே தன் படுக்கையென்றும் பாராதே யழித்துப்பொகடுகிறதாய்த்து, இவை[டு தா னங்கு ஜபிக்கைக்குப் புகுகிறனவன்றே !. காரியப்பாடற்றுக் கலக்கிறவற்றுக்கு மற்றொன்று தெரியாதிறே; உந்மத்தங்காய் தின்றிருப்பார்க்கு நெஞ்சிருண்டு வேறொன்றுதெரியாதிருக்குமிறே. அந்த உந்மத்தங்காய்தா னேதென்றால் (பெடையோடும்)இவைதனக்கொரு படுக்கைவேண்டா, ஆகாசத்தேகலக்கவற்றுக்காணும், ஒன்றினுடம்பிறே யொன்றுக்குப்படுக்கை ; “ தவாங்கேஸமுபாவிசம்” என்னுமாப்போலே. (அணிமலர்மேல் மதுநுகரும்) செறிந்தபூவிலேயிருந்து மதுபானம்பண்ணாநிற்கும். ஒருபூவிலேயிருந்து மதுபானம்பண்ணாநின்றால், மற்றைப்பூவிலே போம்போது பறந்து போகவேண்டாதபடியிருக்கை. பொய்கையடங்கப் பரப்புமாறப்பூத்து ஒன்றோடொன்று நெருங்கிக்கிடக்கையாலே,ஒன்றில்நின்றும் மற்றையதில் போம்போது நடந்துசென்று மதுபானம்பண்ணலாயிருக்கை. பூவில்செறிவு தேட்டமாய் மதுபானம்பண்ணுமிதுவே யாத்ரையாயிருப்பதே உங்களுக்கு !. (அறுகால) இரண்டுகாலுடையாரைப்போலன்றிக்கே, ஆறுகாலுடையார்க்குக் கடுகப்போய்க் காரியம் தலைக்கட்டலாமிறே. “ ‘நித்யம்யஜீயவரணௌஸரணம்மதீயம்’ என்று – சேர்ப்பார்காலேயிறே யிவர்கள் ஜீவநமாக நினைத்திருப்பது, என் ஜீவநம் கூடுபூரித்துக் கிடந்தபடியென்றான்!” என்கிறாள். “வரணௌ” என்று மிருக்குப்படவேண்டாதபடியாயிருக்கை. (சிறுவண்டே) காரியவாய்ப்புப்பெருத்து எம்பார்திருமேனிபோலே வடிவுசிறுத்திராநின்றனவாய்த்து.

(மணிகழுநீர்மருங்கலரும்) மணிகளும் செங்கழுநீருமாயாய்த்து பர்யஞங்களடங்கலுமிருப்பது. அன்றிக்கே. மணியென்று - அழகாய், அழகியசெங்கழுநீர் அலருமென்னுதல்.

கிழியாதேகலக்கவொண்ணாதோவென்ன (பேணியித்யாதி.)அநுக்ருஹேது(தன்னித்யாதி.)கலவாதே மதுநுகரலாகாதோவென்ன (இவைதானித்யாதி;)மதுநுகர்ந்தால அநந்தரம் ஜபிக்கை இதின்கார்யமன்றே என்றுகருத்து. மலர்கிழியப்பெடையோடு கலந்து, அநந்தரம் மதுநுகரும்போது முந்துறச்செருக்குவாஹேதுவென்னென்ன (காரியப்பாடித்யாதி.) காரியப்பாடு - வேறொருகார்யம். உந்மத்தங்காயான பேடையோடேகலக்கிற வண்டை “தூதுபோ” என்றால், படுக்கையை விட்டுப்போமோவென்ன ; “வண்டு” என்றதைப்பற்றவருளிச்செய்கிறார்(இவைதனக்கித்யாதி.) கீழ் வாக்யவிவரணம் (பொய்கையித்யாதி.) வெறுப்பாக இதுக்கு ப்ரக்ஞாதோபயோகம் காட்டுகிறார் (பூவிலித்யாதி.) வண்டானபோதே அறுகாலுமுண்டாயிருக்குமே, இப்படிவிசேஷிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார்(இரண்டித்யாதி;) இறகாலே பறந்தும் போகச்செய்தே இளைப்பாலுல் காலாலே நடக்கவும் மும்மடங்காயிருக்கிறதிறே உனக்குமங்களாயநமென்று கருத்து. ஸ்வாபதேசத்தில் தாத்பர்யம் (நித்யமித்யாதி.) ஜீவநமாகையாலே (மிருக்சென்றது.) கீழேவிசேஷஜ்ஞதையைச்சொல்லி, சிறுமையைச்சொன்னால்சேருமோவென்னவருளிச்செய்கிறார் (காரியவாய்ப்பித்யாதி.)

http://acharya.org

(மணியித்யாதி) அழகிய செங்கழுநீரானது பக்கத்திலே அலரா நின்ற. (வயலாலிமணவாளன் பணியறியேன்) இங்கேவரவிருக்கிறானே, அன்றிக்கே, ஜாம்பவதிபோல்வார்க்குப் பூப்பறித்துத்தொடாநிற்கு மோ, அறியேன். அன்றிக்கே, ஶகுந்தலையை உபேக்ஷித்த துஷ்யந்த னைப்போலே அறியாமை பாவித்திருக்குமோ, அதுவுமறியேன் ; நீ சென்று

(மணிகழுநீரித்யாதி) அழகியசெங்கழுநீர்களானவை அலராநின்றுள்ள பர்யந்தங்களையுடைத்தான வயலாலே சூழ்ந்த திருவாலியிலே வந்திருந்தவன். அன்றிக்கே, நீர்களானவை கொழித்தெறடாநின்றுள்ள மணிகளையும் செங்கழுநீரையுமுடைத்தான பர்யந்தங்களென்றுமாம். (வயலாலிமணவாளன்பணியறியேன்) என்னையணைக்கையே தொழிலாய் இங்கேறவருகையிலே யொருப்பட்டிருக்கிறானே ; அன்றிக்கே, ஜாம்பவதிபோல்வார்க்குப் பூப்பறித்துத்தொடாநிற்குமோ, அறியேன். அன்றிக்கே, பணியென்று-ஶகுந்தலையையுபேக்ஷித்த துஷ்யந்தனைப் போலே அறியாமைபாவித்திருக்குமோ, அதுவுமறியேன். அன்றிக்கே, நாவிலும்பல்லிலும் நீரற்று "என்செய்தாள்? என்பட்டாள்?" என்று கேட்கிறானே ; உக்தியிலும், க்ரியையிலும் கொள்ளக்கடவது.

அவன்படிநிஶ்சயிக்கவொண்ணாவிட்டாலும்நமக்கவனையொழியச் செல்லாதிறே (நீசென்று) நமக்கு முன்னமவனைப்போலே யிருக்க வொண்ணாதிறே.அவனுக்கு நம்மையொழியச்செல்லுமென்ன,நமக்கு மவனையொழியச்செல்லாதே. (நீசென்று) முறைகெடவாகிலும் நீ முற்படச்சென்று. அவன்தானே வரப்பெறவிருக்குமதாய்த்து முறை.

* மணிபடித்துக்கு அர்யஷ்வயங்காட்டி, த்விதீயார்த்தாநுபூஷணமாக ஸமுதாயார்த்த மருளிச்செய்கிறார் (அழகியவித்யாதி.) மூன்றினவர்த்தத்தில் - மணிகள்வருகைக்குஹேதுவைக் காட்டாநின்றுகொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார் (அன்றிக்கேயித்யாதி.) "பிணி" என்று - வ்யாபாரமும், உக்தியுமாகையாலே, வ்யாபாரபக்ஷத்தில் - மூன்றர்த்தமும் ; உக்திபக்ஷத்தில் - ஓரர்த்தமுமாக வருளிச்செய்கிறார் (என்னையித்யாதி.) "மணவாளன்" என்றதுக்கு-தன்மணவாளனென்று விவக்ஷித்து, மூன்றினவர்த்தமும் நாலாமர்த்தமும், நாயகாந்தரத்துக்குமணவாளனென்று இரண்டர்த்தமுமாகக் கண்டுகொள்வது. (பாவித்திருக்குமோ) என்றது - மாநஸக்ரியையென்றுகருத்து. ஶகுந்தலையென்கிற கண்வர்புத்ரியை துஷ்யந்தனென்கிற ராஜா வேட்டைக்குப்போனவிடத்திலே காந்தர்வவிவாஹம்பண்ணி ஒரு பிள்ளைபிறந்தவுடனே "திரும்பிவருகிறோம்" என்று தன்னூரேபோக, அநேகநாள்வாராதகமையாலே இந்தப்பெண்ணை அங்கேபோகவிட, அப்போது இவளைக்கண்டு அறியாதுகுமை பாவித்திருந்தானென்று கதைகண்டுகொள்வது. (ஶகுந்தலையை) என்றவாக்யத்துக்குமுன்னேயிருக்கிற (பணியென்று) என்றபடத்தை, (உக்தியிலும்) என்றவாக்யத்துக்கு அடியிலே கூட்டுவது.

மேலுக்கவதாரிகை(அவனித்யாதி.)விவரணம் (அவனுக்கித்யாதி.)

http://acharya.org

மூ.— நீர்வானம் மண்ணெரிகாலாய் நின்றநெடுமால் தன்
தாராய நறுந்துளவம் பெறுந்தகையேற்கருளானே
சீராரும்வளர்பொழில்சூழ் திருவாலிவயல் வாழும்
கூர்வாயசிறுகுருகே குறிப்பறிந்து கூறாயே. ௩.

ப - ரை.— மண்நீர்எரிகால் வானம்ஆய் - ப்ருதிவீ அப்பு தேஜஸ்ஸு வாயு ஆகாசமாகிய பஞ்சபூதங்களுமாகி, நின்ற-அவற்றுக்குக்கார்யயோக்யதையுண்டாம்படி அந்தர்யாமியாய்நின்ற, நெடுமால - ஸர்வேச்வரனானவன், தன்-தன்னுடைய, தாராய - மாலிகைபாகிய,நறும்துளபம்-செவ்வித்திருத்துழாயை, பெறுந்தகையேற்கு - பெறில்ஜீவிக்கும்ஸ்வபாவத்தையுடைய அடியேனுக்கு,அருளானே-தாரானே; சீராரும்-ஊர்வளப்பத்தைக்காட்டும்பெருமையிருந்த, வளர்பொழில் - வளரவளர முதலையன்றிக்கேயிருக்கும்சோலை, சூழ்-சுற்றுஞ்சூழ்ந்த, திருவாலி-திருவாலியென்னும்நகரின், வயல் - சழனியில், வாழும்-வாழுகிற, கூர்வாயசிறுகுருகே - கூரியவாயலகையுடைத்தான சிறுத்தபக்ஷியே, குறிப்புஅறிந்து-அவன் கருத்தையறிந்துகொண்டுவந்து, கூறாய் - நான்தரித்திருக்கும்படி அச்சொல்லைச் சொல்லவேணும் என்று, வண்டைத்தூதனுப்பின அநந்தரம் பக்ஷியைத்தூதுவிடுகிறார். (௩)

என்வடிவில் வைவர்ண்யத்தைச் சொல்லவேணும். ... ௨.

அங்குப்போனால் சொல்லுமதுதானேதென்னில் (என்பயலைநோயுரையாயே) "தடாகஸீந்நிஷ்ப்ரஹோத்பர்யம் ராஹுக்ரஸ்த இவாம்ஸுமாந்†" என்று-பெருமாளுடைய ஆற்றாமையை மஹாராஜர்க்கு[உம்] இளையபெருமாளறிவிக்க, அவ்வார்த்தை செவிப்பட்டு அழிந்தவழிந்தவளவுதோறு முடம்பு வெளுத்து வந்ததிறே; அப்படியே, என்னுடம்பில் வைவர்ண்யமு மவனுடம்பிலேகாணும்படிவார்த்தைசொல்லு. (பயலைநோயுரை) ✻ வாசாமகோசரமிறே இவளுடைய வைவர்ண்யந்தான். வாக்குக்கு அவிஷயமானவற்றுக்கும் பாசுரமிட்டுச்சொல்லவற்றுக்காணும்இவைதான்.(என்பயலைநோயுரையாயே)என்னுடம்படைய வைவர்ண்யம் பரந்திருக்கிறபடியைச சொல்லு. உன்னுடைய சொல் கலந்த விடமடைய வைவர்ண்யம் பரக்கும்படியாகச் சொல்லிப்போரு என்கிறாள். (என்பயலைநோயுரையாயே) ஸ்வதந்த்ரர்படி கொண்டு காரியமென் நமக்கு, நீசென்று இத்தனையுமறிவித்துப்போராய். ௨.

"உரையாய்" என்றது-வருகைக்குஹேதுவான உரையாகவேண்டுகையாலே,அதின் கருத்தைஸஷ்டமாகவுபபாதிக்கிறார் (தடாகஸீதித்யாதி.)வைவர்ண்யத்தில் ப்ரகாரவிசேஷம்சொல்லாமையால்ஹலித்தவர்யமருளிச்செய்கிறார்(வாசாமித்யாதி.)ஸஸ்டார்யம் (என்னித்யாதி.) ஜாம்பவதிபோல்வார்க்குப் பூப்பறித்துக்கொடுத்துக்கொண்டுஅவனிருந்தால்அவனுடம்பில் வைவர்ண்யமேறும்படி சொல்லுகையெங்ஙனே? அவர்கள் ஸந்நிதியாலே வைவர்ண்யமேறுமோவென்ன வருளிச்செய்கிறார் (உன்னித்யாதி.) துஷ்யந்தனைப்போலே உபேக்ஷித்தால் என்செய்வோமென்ன வருளிச்செய்கிறார் (ஸ்வதந்த்ரரித்யாதி.) ... ... ௨.

† "ம்ரஹம்ரஸ்த இவாம்ஸுமாந்" என்றுசில ஸ்ரீகோசங்கள்.

http://acharya.org

மூன்றாம்பாட்டு. (நிர்வாணமித்யாதி) ப்ருதிவ்யாதி பூதங்களைத் தனக்குப் ப்ரகாரமாகக்கொண்டு தான் ப்ரகாரியாய் நிற்கிற ஸர்வேஶ்வரன், தன் தாராய நறுந்துழாயாகிலும்

மூன்றாம்பாட்டு.—(நிர்வாணம் மண்ணெரிகாலாய்நின்றநெடுமால்) ப்ருதிவ்யாதி பூதபஞ்சகங்களையும் கார்யயோக்யமாம்படி ஒன்றோடொன்றைச்சேர்த்து, அவற்றுக்கொரு வஸ்துத்வமும் நாமமு முண்டாம்படி தானவற்றுக்குள்ளேபுக்குநின்று, பின்னை அவற்றைச்சொன்னசொல் தன்னளவிலேவந்து பர்யவஸிக்கும்படிநிற்கிற பெரும் பிச்சன். தன்னுடைமையைவிடமாட்டாமையாலே வேறுபடாதே கலந்துநிற்கிறவன். (நிர்வாணமித்யாதி) ஆசையில்லாத ஜடத்தையும் தானாசைப்பட்டுமேலாய்த்து. ப்ருதிவ்யாதி பூதபஞ்சகங்களையுமுண்டாக்கி, அவற்றுக்கு கார்யயோக்யதையுண்டாம்படி, நீரையும் சதுகையும் மண்ணையுங் கூட்டிக்குழைத்து கடஶராவாதி கார்யங்களாக நிர்மிக்குமாப்போலே அத்தோடே வேதகஸாமக்ரியைக்கூட்டி தேவாதி கார்யத்தையுமுண்டாக்கி, உண்டானவிவற்றினுடைய ஸத்தாஹேதுவாக தான் அந்தராத்மதயா அநுப்ரவேஶித்து, அவற்றைச்சொல்லும் சொல்லு தன்னையே சொல்லும்படி நிற்கும் நிலையைச் சொல்லுகிறது. நாட்டில் [illegible] பரமாத்ம பர்யந்தமாஹியாநம் பண்ணரியல்லதிறாது [தத்ஸ்ருஷ்ட்வா இத்யாதி] இவற்றை ஸ்ருஷ்டித்து, இவற்றினுள்ளே அநுப்ரவேஶித்து, அந்த அநுப்ரவேஶத்தாலே வித்தும் அவித்தும் தானென்று சொல்லலாம்படி நிற்கிறவனாய்த்து. (நெடுமால்) தன்பக்கல் ஆநுகூல்யலேஶமில்லாத ஜடத்தின் பக்கலிலும் தான் மிக்கவ்யாமோஹத்தைப்பண்ணியிருக்குமவன்.—(தன்தாராயநறுந்துழாயும் பெறுந்தகைமைபெற்றநளானேனோ) தன்பக்கல் ஆசையில்லாதாரையும் விடமாட்டாதேயிருக்கிறவனுக்கு நான் பிரிந்திருந்தாசைப்பட்டு நாடுகிறதோ குற்றம். தான் விஷயீகரிக்கில் உளேனாய், இல்லையாகில் இல்லையாம்படியிருக்கிற வெனக்கு.

மூன்றாம்பாட்டு.— (நீரித்யாதி.) வண்டானத்தை, *மென்மலர்ப் பள்ளியின் வாய்ப்பாலும், உந்மத்தகங்காய்போலேபிச்சேற்றவல்லபடையின்மயக்குக்களாலும், மதுநுகருங்கடாலுண்டான பாரவஶ்யத்தாலும், *ஊமையரோடு செகுடர்வார்த்தை போலேயாய்ப் போகையாலே, அவற்றைவிட்டு, கூர்வாயக்குருகைக் கூறச் சொல்லித் தூதுவிடுகிறாளென்று ஸங்கதி.

பிசகுத்தாலென்னென்ன வருளிச்செய்கிறார் (தனனித்யாதி.) ஆசை என்று- நீக்காய், முக்யதையில்லாத ஏனை ஊடு. நிர்வாணம் (ப்ருதிவ்யாதீத்யாதி.) சதுகு - கூளம். ஶராவம் - மடக்கு. ப்ரமாணங்காட்டுகைக்காக அடிக்கோலுகிறார் (நாட்டிலித்யாதி.) ப்ரமாணார்த்தம் (இவற்றையித்யாதி.)

அருளாநமக்கு ஹேதுவேதென்ன, "கூறாய" என்ற பதத்தைக்கடாக்ஷித்தருளிச்செய்கிறார் (தன்பக்கலித்யாதி;) இதுபோக்கி வேறுகுற்றம் காணேனென்று கருத்து. வேறு குற்றமில்லையோவென்ன (தானித்யாதி.)

http://acharya.org

நாம்பெறுமளவு மருளானே. (சீராருமித்யாதி) அழகார்ந்து வளர்ந்து வருகிற பொழிலாலே சூழப்பட்ட திருவாலிவயலிலே வாழுகிற, தன்மேதாளிவிட்ட செவ்விமாலைபெறில் ஜீவித்து, பெறுவிடில் முடியும்படியாயிருக்கிற வெனக்கு. (தன்தாராயநறுந்துளபம் பெறுந்தகையேற்கு)என்று-தம் ஸ்வரூபத்தைச் சொன்னபடி யென்தான்!.(அருளானே) ப்ரணயிநியார்த்தி பரிஹரிக்குமதுபோலல், நாட்டொப்பானவருளு மின்றிக்கே யொழியவேணுமோ !. (தன்தாராயவித்யாதி) தனக்கே அஸாதாரணமாய் தாரையுடைத்தாயிருந்துள்ள செவ்வித் திருத்துழாயைப்பெறில் உளேனாய், இல்லையாகில் இல்லையாம்படியிருக்கிற என்பக்கல் க்ருபைபண்ணானே. கந்தல்கழிந்தால், பின்னை திருத்துழாயோபாதி, கௌஸ்துபாத்தோபாதி ஸ்பர்ஹணீயமாயார்த்து வஸ்து ஸ்வபாவமிருப்பது. (அருளானே) ஸாமாந்யாக்ஷணம் தப்பநில்லாத வன் விசேஷரக்ஷணநிலே தப்பநிற்குமோ !. ஆசையில்லாத ஜகத்தையும் ரக்ஷிக்குமவன், தன்னைப்பெறில் உளேனாய் இல்லையாகில் இல்லையாம்படியிருக்கிற வென்விஷயத்தில் செகிழநிற்குமோ !. அவனுடையப்ரணயித்வத்துக்கு விஷயமாய்த்திலோமாகிலும அவனுடைய க்ருபைக்கு விஷயமாகாதொழிவதோமோ !.

(சீராருமித்யாதி) வாய்ந்தார்க்குக் கெட்டாரை யெடுக்கவேண்டாவோ. (சீராரும்வளர்பொழில்சூழ்) "ஊர்வளம் கிளர்சோலை"[உ௰] என்கிறபடியே -ஊரில் ஸம்ருத்தியடையச் சோலையே கோடிகொள்ளித்தரும்படியாயிருக்கை. (வளர்பொழில்) "வளரிளம்பொழில்" என்னுமாப்போலே – வளரவளர முதுமையின்றிக்கே இளகிப்பதித்திருக்கை. ஐச்வர்யத்தினுடைய ஸம்ருத்தியைத் தெரிவியாநின்றுகொண்டு வளர்ந்தபொழிலாலே சூழப்பட்ட திருவாலியிலே வாழுகிறசிறு தருகே. அங்குத்தைவர்த்தநந்தானே வாழ்ச்சியாயிருக்கை; கோயில்வாஸம் போலே.

கீழ்வாக்யவிவரணம் (தன்தோளிவித்யாதி. வ்யாக்யாதாவின் ஜிடாப(தன்தாராயவித்யாதி.)நாயிகையானவள்,வாராரேனென்றுதோ"அருளானே" னைனைக்கூடுமோவென வருளிச்செய்கிறார்(ப்ரணயிநியித்யாதி. வாக்யார்த்தம்(தனக்கேயித்யாதி.) துளவத்தைப்பெறுகைக்குயோக்யமான ஸ்வபாவத்தையுடையவளொன்றுபஸ்வதார்த்தமாய்க் கீழருளிச்செய்தது, துளவத்தினுடைய, பெறுந்தகையேற்கு - எம்பெருமான லஹிக்கும்படியான ஸ்வபாவம்போன்ற ஸ்வபாவத்தையுடைய வெனக்கு என்று பதார்த்தமாக்கி, தாத்பர்யாதா மருளிச்செய்கிறார் (கந்தலித்யாதி.) வஸ்து - ஆத்ம வஸ்து. "அருளானே" என்றது - பிரிநிலையேகாரமாய, அருளும் என்றுக்கி ஒரு தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாமாந்யேத்யாதி.) விவரணம் (ஆசையில்லாதவித்யாதி.) விசேஷரக்ஷணத்தில் தப்பநில்லானாகில் உன்னை யிப்பாடுபடுத்தவன் நான்போனபின்பு தப்பினாலோவென்ன வருளிச்செய்கிறார்(அவனுடையவித்யாதி;) ப்ரணயத்தாலே வாராவிடிலும் தயாளுவாகையாலே என்னார்த்தியைக்கேட்டுவரு மென்று கருத்து.

தாத்பர்யத்தையருளிச்செய்தது, பதார்த்தம் (ஐச்வர்யத்திண்டியாதி.)

மூ. — தானாகநினையானேல் தன்னினைந்து நைவேற்கோர்
மீனாயகொடிநெடுவேள் வலிசெய்ய மெலிவேனோ
தேன்வாயவரிவண்டே திருவாலிநகராளும்
ஆனாயற்கென்னுறுநோ யறியச்சென்றுரையாயே. ச.

ப - ரை.—தானாக - அவன்தானாகவே, நினையானேல் - தன்னுடைமையான வென்னை நினையானாகிலும், தன்னினைந்து - தரிக்கைக்குஹேதுவாகிய அவனையே நினைத்துக்கொண்டு, நைவேற்கு- கையுமெனனை, ஓர்மீனாயகொடிநெடுவேள் - அத்விதிய மகரத்வஜனுன மந்மதன், வலிசெய்ய - பீடிக்கும்படி, மெலிவேனோ - நான் இளைத்துப்போவேனோ ; தேன்வாய - இனியபேச்சையுடைய, வரிவண்டே-ரேகை [யு] சிறந்தவண்டே!, திருவாலிநகர் ஆளும்-திருவாலியென்னும் திவ்யதேசத்திலே வர்த்திக்கிற, ஆனாயற்கு-ஸ்ரீக்ருஷ்ணனுகத்திருவவதரித்த ஸர்வேச்வரனுக்கு, என் உறு நோய் - மெலிவுபோமளவன்றிக்கே என்பரீராந்தமான நோவை, சென்று - நீபோய், அறியஉரையாய் - அவனறியும்படி சொல்லவேணும் என்று பின்னுமவ்வண்டையே அநுவிக்கிருள். ... ... (ச)

கூர்வாயையுடைய சிறுகுருகே. (குறிப்பு) அவன்நினைவை யறிந்து சொல்லவேணும். ... ... ந.

(கூர்வாயசிறுகுருகே) கூரிய வாயலகையுடைய சிறுகுருகேயென்றுதல் ; அன்றிக்கே, அறுதிபபாடுடைத்தான வார்த்தைசொல்ல வல்லகுருகேயென்றுதல். ராஜபுத்ரர்களைக்கண்டருந்சி நாலுமூன்று[உம] யோஜனை ஓடிப்போன மஹாராஜர்வந்துகிட்டி, "ஏகம்ஜந்வம் ஸத்வம்புதூநோம" என்று நிற்கும்படிக்கீடாகவிறே வார்த்தைசொல்லிற்று.

(குறிப்பறிந்துகூறுமே) அவன்கருத்தறிந்து வந்து எனக்குச்சொல்லென்றுதல் ; நானுற்றமையாலே கண்ணுஞ்சுழலையிட்டுச்சொன்னவற்றையெல்லாம்அங்குச்சொல்லாதே,அவனறிக்கும்படி அளவறிந்து வார்த்தைசொல்லென்றுமாம். மிகச்சொல்லிலவனைக்கிடையாது, அவன்கருத்தையறிந்துவந்து சொல்லென்றதுக்குக் கருத்தென்னென்னில் ; நம்முடையமையறிவித்தால் "நமக்கந்தலைவேணும்" என்றுனகில் நம்மாற்றமை பாராதேயாகிலும் நாம்ஜீவித்துக்கிடக்க, வேண்டா என்றுனகில் நாம்முடிந்துபிழைக்கும்படி. ... ந

நாலாம்பாட்டு.— (தானுகநினையானேல்) "வேம்பு" என்பாரைப்போலே.

அறுதப்பாடுடைத்தான - திண்ணவையியாலுண்டான. ... ந.

நாலாம்பாட்டு.—(தானுகவித்யாதி.) கீழ்ப்பாட்டில் குருகைக்குறித்து "கூருய்" என்றவாறே வண்டானது வந்து முகங்காட்டி "நீயெங்களைத் தூதுவிட நாங்கள் மெய்மறந்திருந்தோமல்லோம், அவன் உன்படியறிந்துவைத்தும் இப்பாடுபடவிட்டு நினையாதிருந்தான், நாம் போனாலும் பற்கடித்திருந்தால் என்செய்வோமென்றிருந்தோமித்தனை" என்று இனிதாகச்சொல்லிக்கொண்டுவர, அத்தைப்பார்த்து வார்த்தை சொல்லுகிருளென்று ஸங்கதி.

தாத்பர்யமருளிச்செய்கிருர் (வேம்பித்யாதி;) "வேம்பின்புழு வேம்பன்றியுண்ணாது" என்றவிடத்தில்,அவன்குற்றத்தையிட்டு வேம்பென்று குறைசொன்னுப்போலே அவன் தன்னை நினையாதிருக்கை குற்றமென்று அவனுக்குக் குறைசொல்லுகிருளென்று கருத்து.

http://acharya.org

நாலாம்பாட்டு. (தாநுகவித்யாதி) நஞ்ஜீயருடைய நோவிலே பெற்றி அறியப்புகுந்து, "இங்குத்தைக்குவேண்டியிருக்கிறதென்?" என்று கேட்க; "* தூவிரியமலருழக்கிப்பாட்டுக் கேட்கவும், பெருமாளெழுந்தருளப் பின்னும் முன்னும் சுற்றிலேவந்து ஸேவிக்கவேண்டியிராநின்றேன்" என்றருளிச்செய்தருளினார்; அப்போதே பெருமாளுக்குச் சென்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் ஜீயர்க்கருளப் பாடிட்டு * தூவிரியமலருழக்கி கேளாநிற்க, "நீலமுயகொடிநெடுவேள்வலிசெய்யமெலிவேனோ" என்கிறவளவிலே வந்தவாறே, "காமஶரங்களாலே ஏவுண்பதற்கு முன்னே வாராவிட்டாலும் பட்டபுண் பரிஹரிக்கவாகிலும் வந்தாலாகாதே" என்றருளிச்செய்தார். (தாநுக வித்யாதி) தானும்படி செய்யானாகில், தானப்படி செய்யானாகிலென்றபடி. அப்படிசெய்யாதபோது யாது வர்ஷியாதே. (தன்னிநைந்தித்யாதி) தன்னைநினைந்துஶியில்லையாகிறவென்னையொருமகரத்வஜன் நலிய மெலியக்கடவேனோ.

உடைமையை அவனாக நினைக்குமது கிடையாதாகில், புறம்செய்யானாகில். அவனுக்கு ஆர்த்தரைநினையாமை ஸம்பாவிதமாகில்; தன்ஸத்தையுண்டாகைக்கிடாக நினையானாகிலென்னுமாம். (தன்னினைந்து நைவேற்கு) நாமவனைப்போலே யாகமாட்டோமே; நாமும் நினையாமைக்கொருநெஞ்சுபடைக்கப் பெற்றிலோம். பெறவு முமாய்த் தவிரவுமாயிருக்கும் விஷயமாகிலிறே அநுஸந்தித்தால் யாத திருக்கலாவது; இதரவிஸஜாதீயமாயிருக்கும் விஷயமானாலே அநுஸந்தித்தவநந்தரம் நோவுபடுமத்தனையிறே. (ஓர்நீலமுயகொடிநெடுவேள் வலிசெய்ய மெலிவேனோ) தன்னையாசைப்பட்டு நைகிறவென்னை மகரத்வஜனோ நலிவான். அவஶ்யம்நாங்கள் நோவுபடுகை தவிரோமாகில், "கருளக்கொடியொன்றுடையீர்" என்கிற தான் நோவுபடுத்த நோவுபட்டாலென்செய்யவேணும். ஜீயர்வார்த்தையை நினைப்பது.

ஸ்வாபதார்யம் (உடைமையையித்யாதி.) தானாகவே நினைக்கும் முறை, அது செய்யாமல் போனானாகிலென்று திருவுள்ளிச்செய்து. தானாகைடாகிலென்றும் தானாகைக்காகவென்றும் ஸ்வாபதார்யம் விவக்ஷித்து, தாத்பர்யமருளிச்செய்கிறாயார் (அவனுக்கித்யாதிவாக்யத்வயத்தாலே;) ஸத்தையுண்டாகைக்காக நினைக்கவேணுமது செய்யாமற்போனானாகிலென்றும், ஸத்தையுண்டாகைக்காக நினையாதேயிருந்தானாகிலென்றும், மூன்றாம் தாத்பர்யத்தை யிரண்டுவிதமாக யோஜித்துக்கொள்வது. நினையாதவனை நாம் நினைப்பானென்னென்ன (நாமித்யாதி.) மாட்டாமைக்கு ஹேதுவென்னென்ன (நாமுமித்யாதி.) ஒரு நெஞ்சு - பேர்சொல்லப்போகாத கல்நெஞ்சு. நினைத்தால் நைவானென்னென்ன வருளிச்செய்கிறார் (பெறவுமித்யாதி வாக்யத்வயத்தாலே.) விரஹிணிகளைமதனன்வலிசெய்யுமது லோகப்ரஸித்தமாயிருக்க, "மெலிவேனோ" என்று க்லேஶிக்கக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (தன்னையித்யாதி;) யத்வா "வேள்வலிசெய்ய" என்னவமைந்திருக்க, "ஓர்நீலமுய கொடி" என்றதுக்குக் கருத்தாகவுமாம். ஜீயர்வார்த்தை-பட்டர்வார்த்தை.

http://acharya.org

மூ.— வாளாயகண்பனிப்ப மென்முலைகள் பொன்னரும்ப
நாளாநாள் நின்னினைந்து நைவேற்கோ! மண்ணளந்த
தாளாளா! தண்குடந்தை நகராளா! வரையெடுத்த
தோளாளா! என்றனக்கோர் துணையாளனாகாயே. ரு.

ப - ரை. — மண் அளந்த - பூமியையளந்த, ஓ! தாளாளா - திருவடிகளையுடையவனே!, ஓ! தண்குடந்தை நகராளா - ஸ்ரமஹரமான திருக்குடந்தையில் கண்வளர்ந்தருள்பவனே. வரை எடுத்த - கோவர்த்தநத்தைக் குடையாவெடுத்துப்பிடித்த, ஓ! தோளாளா - திருத்தோள்களையுடையவனே!, வாளாய கண் பனிப்ப - வாள்போன்ற கண்களினின்றும் நீர் பெருகவும், மென்முலைகள் பொன் அரும்ப - ம்ருதுவான ஸ்தநங்களில் வைவர்ண்யம் தோன்றவும், நாள்நாளும் - ப்ரதிதிநமும், நின் நினைந்து - உன்குணசேஷ்டிதங்களையே நினைத்துக்கொண்டு, நைவேற்கு என்தனக்கு - வருந்துகின்ற எனக்கு, ஓர் துணையாளன் ஆகாய - ஒப்பற்ற ஸஹாயபூதனாக வேணும் என்று. பரவசாவஸ்தையாலே அவனோடு வார்த்தைசொல்லுகிறாள். (ரு)

(தேனிளவாய்) இனியபேச்சையுடைய அழகியவண்டே, திருவாலிநகராளனாயிற் சென்றுபோய் அவனறியும்படி சென்றுசொல்ல வேணுமே ... ... சு.

(இன்குரலாய் வண்டே) இனியபேச்சையுடையவண்டே. பிராட்டி. பரிபோபாவிதைக்கதிலே திருக்குழலைக்கொடுபோய்ப் பிணைக்கப்புக்க ஸமயத்திலே அவளுக்குதவி, "அவகாஹ்யார்ணவம் ஸ்வப்ஸ்யே" என்கிறஸமயத்திலே பிவருக்குவந்துதவி, இரண்டுதலையுமுண்டாம்படிக்கட்டாக வார்த்தைசொல்ல வற்றாயிருக்கை. அவனித்தலையில் வாக்கினைக்கொலுகிலும் உங்கள்பேச்சினினிமையிலே துவக்குண்டு வரும்படி வார்த்தைசொல்லவல்லிகோளிறே.

(திருவாலிநகராளனாயற்கு) திருவாய்ப்பாடியில் ஸம்பத்தோடே திருவாலியில் ஸம்பத்தையும் கையடைப்பாகுகிறதல், பின்னை அவனுக்கு சொர்த்தானை "ஸுமேயா!" என்ன அவஸரமுண்டோ. (என்னுமிபோய் மேலெயப்போமதல்லிக்கே பரீராதுமான நோவை (அறியச்சென்றுரையாயே) அறியாமைவாராதொழிந்தானத்தனை, நீபோய் அவனறியும்படி சொல்லு. அன்றிக்கே, (அறியச்சென்றுரை) உன்நடையில் தளர்த்தியிலே பித்தலைவிலாற்றாமையடைய வலையறிந்து, நாவிலும் பல்லிலும் நீர்ற்று உடம்பு வெளுக்கும்படி சென்று சொல்லென்றுமாம்.

அஞ்சாம்பாட்டு.— (வாளாயவித்யாதி) அத்தலையித்தலையாய்த் தன்னைப் பெறவேணுமென்று நாலுசைப்பட்டு நோவுபடாநிற்க தான் தன்னைக் கொண்டருமைப்படுத்துகிறானென்று சொல்லுங்கோளென்று தூதர்க்கு வார்த்தைசொல்லப்புக்கு, அது தான் போய், பாவநாப்ரகர்ஷத்தாலே அவன் முன்னே நின்றதாகக்கொண்டு அவன் றனக்கு வார்த்தைசொல்லிச் செல்லுகிறது — மேலிற்பாட்டுக்கள். ஸ்ரீராமாயணத்திற்படிபோலே யிருக்கிறதாய்த்திதுவும். தூதர்க்கு வார்த்தை சொல்லாநிற்கச்செய்தே, பாவநாப்ரகர்ஷத்தாலே அவனன்றன் ஸந்நிதியினைக்கொண்டு அவனுக்குவார்த்தைசொல்லுகிறாளிறே!. "க்ஷமஸே தம் மஹேப்பதே" என்னுமாப்போலே.

அவன் நினையாமைக்கு ஹேதுவைக்காட்டுகிறதாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவாய்ப்பாடியிலித்யாதி.) ... ... சு.

அஞ்சாம்பாட்டு.— வாளாயித்யாதி) கிழெல்லாம்தூதுவிட்டவள் இப்போது முன்னிலையாகச்சொல்லி நோவுபடுகைக்கெங்ஙனே யென்ன ; பேடுகோஸங்கதியருளிச் செய்கிறார் (அத்தலையித்யாதி.)

http://acharya.org

அஞ்சாம்பாட்டு. (வாளாயவித்யாதி) வாள்போன்ற கண்கள் துளிக்க, ம்ருதுவான முலைகள் பொன்பூக்க,

(வாளாயகண்பனிப்ப) அத்தலையித்தலையானபடி. எதிர்த்தலையிலே காணக்கடவ கண்ணநீரிறே இவள்கண்ணிலே காண்கிறது!. பிறரைத் தோற்பிக்கைக்கீடான பரிகரமுண்டாயிருக்கக்கிடீர் நானிப்படிபட்டது!. கையிலே ஆயுதமிருக்க முடிந்து கிடப்பாரைப்போலே. அவன் போகவொருப்பட்ட ஸமயத்திலே, "போகாதேகொள்" என்று கண்ணாலே விலங்கிட்டு அநுபவிக்கலாயிருக்க, லஜ்ஜையாலே கவிழ்ந்திருந்து "கெட்டேன்!" என்கிறாள். அப்போது அவனைக்கடாக்ஷித்துவிட்டேனாகில் அவன்றான் தூநுவிடவிருக்கலாய்த்தே!. (வாளாயகண்பனிப்ப) ஓராளுமொருநோக்கும்நேரான கண்கள் படுமெளிவரவே!. புரியாய் வைத்து உகிர்முறிந்தேன் என்கிறாள். திருத்தாயார் சொல்லுமாப்போலே சொன்னாளே தன்னைத்தானே; எல்லார்க்குமுள்ளது சொல்லலாயிருக்குமிறே. அவன்றான் "இதொருகண்ணழகே!" என்று[ம]ரு சொல்லக்கேட்டிருக்குமே!. அத்தலைக்குறுப்பான ஸ்வஸ்வரூபமும் ப்ராப்யாந்தர்கதமாயிருக்குமிறே. (மென்முலைகள் பொன்னரும்ப) முலைக்கு காடிந்யம் ஸ்வபாவமாயிருக்கச்செய்தேயும், மென்முலை என்கிறது – விரஹஸஹமல்லாதபடியாலே. விரஹஸஹமல்லாத முலைகள் பயலைபூக்க.

(வாளாயகண்பனிப்ப மென்முலைகள் பொன்னரும்ப) தன்னைக் கண்டுகொண்டிருக்க வமைந்திருக்கிறதுகாணும் இவள்தனக்கும். இவள்தனக்குமமையும், அவன்றனக்குமமையும். * ஸொவமேஷ ஹஸீ: இறே. [ஆஹ்லாதஶீதநேத்ராம்பு:] ஹர்ஷவஷ்மாதுஹவ ஜநிதஹர்ஷப்ரகர்ஷத்தாலே குளிர்ந்த கண்ணநீருந்தானுமாயிருக்கை. [புளகீக்ருத காத்ரவாந்] த்ரிஸரமும் பஞ்சஸரமுமிட்டாப்போலே. [பரமானந்தவிஷ்ட:]

வ்யாக்யாதாவினுடைய ஈடுபாடு (அத்தலையித்யாதிவாக்யத்வயம்.) தாத்பர்யம் (பிறரையித்யாதி. கண்ணான ஆயுதமாகிற வழியென்னென்ன வருளிச்செய்கிறார் (அவனித்யாதி.) ஹார்தபாவமருளிச்செய்கிறார் (அப்போதித்யாதி.) பக்ஷாந்தரமும் (ஓராளுமித்யாதி.) "குவளையங்கண்ணி" "பனிநெடுங்கண்ணீர்ததும்ப" என்று திருத்தாயார் சொன்னாப்போலே என்று வ்யாக்யாதா அருளிச்செய்கிறார் (திருத்தாயாரித்யாதி.) தாய்சொல்லிற்றைத் தானே சொல்லலாமோவென்ன வருளிச்செய்கிறார் (எல்லார்க்குமித்யாதி.) தன் கண்ணழகு தான் கண்டபடி யெங்ஙனேயென்ன (அவன்றானித்யாதி.) தான்சொல்லப்போமோ என்றதுக்குப்பரிஹாராந்தரம் (அத்தலைக்கித்யாதி.)

"பனிப்ப" என்றும் "அரும்ப" என்றும் சொன்னத்தால் ஃபலித்த அழகினெல்லைநிலத்தை யருளிச்செய்கிறார் (தன்னையித்யாதி.) ஹமவஷநுஹவபரருடைய வடிவு வைத்தகண் வாங்கவொண்ணாதிருக்குமென்கைக்கு ப்ரமாண மருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதி. ஆஹ்லாதஶீதநேத்ராம்பு: - நேத்ரங்களிரண்டு பார்ஶ்வத்திலும் விழுகையாலும் புளகீக்ருதகாத்ரவானானென்று விவக்ஷித்து, த்ருஷ்டாந்தமருளிச்செய்கிறார் (த்ரிஸரமுமித்யாதி.) முத்துத்தார்வடங்கள் குளிர்த்தியால் மயிர்கூச்சுண்டாகப் பண்ணுமென்று திருவுள்ளம்.

http://acharya.org

நாள்தோறு முன்னைநினைந்து நைகிறவெனக்கு.

உள்ளீடுமுண்டாயிருக்கை. [த்ரஷ்டவ்யஸ்ஸர்வதேஹிபி:] இப்படியிருப்பதொருவனுளனாகில், அவனைக்காண்கையாய்த்து ஶரீரபரிக்ரஹம் பண்ணினவத்தால் ப்ரயோஜநம். [ஸதா - த்ரஷ்டவ்ய:] இனி ஸதாதர்ஶநத்துக்கொரு தேஶவிஶேஷந்தேடிச் சோறுபொதிந்துகொண்டு அறுகாதப்பயணம் போகவேண்டா. அவனுக்குப்பொருளைவிற்பிரியவேண்டா, பிரிகிறதுதான் பொருளுக்காகவே. "இம்முத்தையும் பொன்னையுங்கொள்" என்று பரித்துக்காட்டினாப்போலே யாய்த்து கண்ணநீரும உடம்பில்வைவர்ண்யமுமிருக்கிறபடி ; "ஒண் முத்தும் பைம்பொன்னுமேந்தி" என்னக்கடவதிறே.

(நாளுநாளுமித்யாதி) வரவுதாழ்க்கைக்கு உன்னை யொருநாள் நினைத்து மற்றொருநாள் மற்றொன்றை நினைக்கிறேனோ. (நாளுநாளும்) ஒருநாள் நோவுபட்டு ஒருநாள்ஸுகித்திருக்கிறேனோ. (நின்னினைந்து நைவேற்கு) என்னையன்றோ நீயறியாதது, உம்மைநீரறியீரோ. "நம்மைப்பிரிந்தார்தரித்திருக்கமாட்டார்கள்" என்றிருக்கவேண்டாவோ. உன்னைக் கண்ணுறப்புறத்திலுங்கண்டறியாயோ. (நின்னினைந்து நைவேற்கு) அநுஸந்தியா மடிவேற்குமவளோநாள். "தேஹமே" என்கிற விது ஆற்றாமையிலே கிடக்கிறது.

(மண்ணளந்ததாளாளா) அபேக்ஷையில்லாதார் தலைமேலே வைத்த திருவடிகள் இப்பொன்பூத்தமுலைகளுக்கு அரிதானதே !.

வைவர்ண்யமுண்டாப்போலே கண்ணீராய், இதுக்குஹேதுவான ஹ்ருதயஶைதில்யமும் உள்ளுக்காரணமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (உள்ளீடித்யாதி.) வினைமேல் பிரிவென்னும், பொருள்மேல்பிரிவென்னும் சிலபிரிவுண்டு ; அதில், வினைமேல் பிரிவாவது - ப்ரணயிநியைவிட்டுப்போக வேணும்படி வேறொரு காரியத்தைக்குறித்துப்பிரிகை ; பொருள்மேல்பிரிவாவது - ப்ரணயிநியோட்டை போகத்துக்குறுப்பாக த்ரவ்யார்ஜநம்பண்ணப்போகை ; அவற்றில் வினைமேல் பிரிவில்லை என்னுமதனைக் கீழருளிச்செய்தாராய், பொருள்மேல் பிரிவும்வர ஸம்பாவனையில்லை யென்னுமதனை உபபாதிக்கைக்காக, இரண்டுமியுமான பிரிவு வரப்ரஸக்தியில்லையென்கிறார (அவனுக்கித்யாதி.) பொருள்வயில்-பொருள் வினை யென்று சொல்லப்படுமவையில.

"நாளுநாளும்" என்றதை "நினைந்து" என்றதோடுகூட்டி தாத்பர்யமருளிச்செய்து, "நைவேற்கு" என்றதோடுகூடி தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (ஒருநாளித்யாதி.) "நின" என்றதுக்குக்கருத்து (என்னையித்யாதி.) "நைவேற்கு" என்று-நைகிறவெமக்கு என்று†, எமக்கு என்கிற வஹுவசநத்தால் தோற்றுகிற கௌரவத்தை யருளிச்செய்கிறார் (உம்மையித்யாதி.) * யாவநாஜ்ஞாஹிகௌரவமன்றோ, நீ "துணையாளாகாயே" என்று ப்ரார்த்திக்கிறாயேயென்ன வருளிச்செய்கிறார் (தேஹீத்யாதி.)

"மண்" என்றபதம்- லக்ஷணயா மநுஷ்யரைச்சொல்லிற்றாய், உட்கருத்தை யருளிச்செய்கிறார (அபேக்ஷயித்யாதி.

† இந்தவாக்யம யோஜநீயம.

http://acharya.org

(ஓர்மண்ணளித்யாதி†) ஓரடியாலே பூமியையளந்த திருவடிகளையுடையவனே. (வரையெடுத்ததோளாளா) *குடந்தையெங்கோவலனிறே. * குன்றமெடுத்தாநிரைகாத்தவனிறே.

(ஓ!மண்ணளந்ததாளாளா ஆரபேக்ஷிக்கத்தான் நீ அவர்தலைகளிலே மேலும் திருவடிகளை வைத்தது !. ஆர்கண்ணில் கண்ணநீரும் ஆற்றாமையை வைவர்ணயமும் கண்டுதான் திருவடிகளைக்கொண்டுவந்து வைத்தது !. உன்னைப்பெறாதே விவர்ணமாயிருக்கிற இம்முலைமேலே திருவடிகளை வைத்தாலாகாதோ !.

(தண்குடந்தைநகராளா) அதுக்குப்பிற்பாடாருமிறுவாமைக்கு வந்திருக்கிற தன்னேற்றந்தான் பெறலாகாதோ !. (தண்குடந்தைநகராளா) "இன்னமெல்லைநடப்பித்துக்கொள்வாராரேனுமுண்டோ" என்று ஶ்ரமஹரமானதிருக்குடந்தையிலேவந்து சாய்ந்தபடி.

(வரையெடுத்ததோளாளா) அங்ஙன் "பிற்பாடர்" என்கிற பொதுவன்றிக்கே, விசேஷித்து என்பருவத்திற்பெண்களையுமிடையரையும் ரக்ஷித்தவனன்றோ!. (வரையெடுத்ததோளாளா)பசுக்களும் இடையரும் வர்ஷத்திலே தொலையப்புக,மலையையெடுத்துப் பரிஹரித்தாயாய்த்து. ஆஶ்ரிதர்க்குப்பணிசெய்த தழும்பாயாய்த்துத் திருமேனியடையக்கிடப்பது; "தழும்பிருந்த" இத்யாதி. "நம்மைச்சிலர் கட்டுண்ணையாவதென், நாம் சிலர்க்குக் கட்டுண்ணையாவதென். இதுவின்னே நாடாக[உம]கையாவதென்" என்று, அத்தை மறைக்கப்புக்கான் ; ஒருதழும்பாகிலன்றோ உன்னால் மறைக்கலாவது, உன்னுடம்படங்கலும் ஆஶ்ரிதர்க்காகக் காரியம்செய்ததால் வந்த தழும்பன்றோ என்கிறாள் [தழும்பிருந்த சார்ங்கநாண் தோய்ந்தவாமங்கை] அழகிய திருக்கையானது, *ஜ்யாகிணகர்கசமாய்க்கிடக்கும்; அழகிய திருக்கையானது. ஶ்ரீசார்ங்கத்தைப்பிடிக்கையால்வந்ததழும்பைச்சுமந்தது; திருவடிகளானவை, ஶகடாஸுரநிரஸநம்பண்ணி அத்தால்வந்த தழும்பைச் சுமந்தது ; இனி, *விங்கோதவண்ணர்விரல் செய்ததென்னென்றால் [பூங்கோதையாளித்யாதி] கிளர்த்தியையுடைத்தான ஓதம்போலே யிருந்துள்ள வடிவையுடையரானவருடைய திருவிரலானது, பிராட்டிகளுக்காகவிறே சிறுக்கனுக்கு விரோதியான ஹிரண்யனைபபிளந்து போகட்டது ; அப்படிப்பட்டவனுக்கூட, விளைவதறியாதே "இதென்னுகப் புகுகிறதோ" என்று அஞ்சும்படி ஹிரண்யன் மார்வைப்பிளந்து போகட்ட தழும்பிருந்த. உன்னையழித்து ஆஶ்ரிதர்க்காசப்பார்த்தநீ.

"ஓ!" என்றவிஷாதத்தினபடியை விவரிக்கிறார் (ஆர்த்யாதி.)

உட்கருத்தையருளிச்செய்த, கீழ்ப்படித்தோட்டை ஸமஹிவ்யாஹாரதாத்பர்யபூர்வகம் ஶவ்ஷார்யமருளிச்செய்கிறார் (இன்னமித்யாதி.)

வரையெடுத்தமை தோளாலே யாயிருக்க, "தோளாளா" என்று விசேஷிக்கையால், திருமேனியெல்லாம் ஆஶ்ரிதர்க்காகச் செய்தசெயலில் தழும்பேறினமை தோற்றுகையாலே விசேஷித்தாளென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதர்க்கித்யாதி.) எடுத்தபாசுரத்துக்குவ்யாக்யானம் பண்ணுவதாகக் கீழ்ப்பாட்டோடு ஸங்கதிகாட்டுகிறார் (நம்மையித்யாதி.)

† "ஓர்மண்ணளந்த" என்று நஞ்ஜீயர்படியில் பாடம்.

http://acharya.org

மூ.—நாராயதண்டுளவ வண்டுழுதவரைமார்பன்
போரானைகொம்பொசித்த புட்பாகனென்னம்மான்
தேராரும்நெடுவீதித்திருவாலிநகராரும்
காராயனென்னுடைய கனவளையுங்கவர்வானே. ௯.

ப - ரை.— வண்டு - வண்டுகளானவை, நாராய - மாலிகையாகிய, தண்துளபம் - திருத்துழாயிலுள்ள, தேனும் சுண்ணமும் வாஸனையுங் கொண்டு, உழுத - சேருக்கின, வரைமார்பன்-அகன்றதிருமார்பையுடையனாய், போர்ஆனை - யுத்தோந்முகமான குவலயாபீடத்தின், கொம்பொசித்த - தந்தத்தைமுறித்தவனாய், புள்பாகன - பெரியதிருவடியை வாஹநமாக உடையனாய், என்அம்மான் - எனக்கு ஸ்வாமியானவனாய், தேர்ஆரும் - ரதங்களையுடைத்தாய், நெடு - தனக்கும் தன்பரிகரத்துக்கும் மிகவும்தழுக்கருளப்போதுமான, வீதி - திருவீதியையுடைய, திருவாலிநகர்ஆரும்-திருவாலிநகரத்தில் நித்யவாஸம்பண்ணுகிறவனாய், காராயன் -ஸ்ரமஹாமன திருமேனியையுடைய ஸ்ரீக்ர்ஷ்ணனுமான ஸர்வேஶ்வரன், என்னுடைய-தன்னையே நினைத்திருக்கையுமுடையேனுடைய, கனவளையும் - கையில்இட்டபொன்வளைகளையும், கவர்வானே - அபஹரியாநிற்பனே! என்று தன்னிலே தான் நொந்து படுகிறாள். ... ... (௯)

(என்றனக்கித்யாதி) உன்னையன்றித் துணையில்லா வெனக்குத் துணையானாயே. ... ... ௫.

ஆறும்பாட்டு. (நாராயவித்யாதி) துளவத்தாரில் தாதும்சுண்ணமும் தேனுமே சேறாய் வண்டுகள்புக்கு உழக்கியுழுத வரைமார்வன்.

(என்றனக்கோர் துணையாளனாகாயே) அந்நொய்யமோவர்யநதிரியைப் பொகட்டு,என்னுடைமையிலே பாதியைச்சுமக்கவல்லையே !. (துணையாளனாகாயே) என்றது - ஆகவொறுமென்றபடி. ... ௫.

ஆறும்பாட்டு. — (நாராயவித்யாதி, வரைமார்பன்) தனக்கஸாதாரணமான திருத்துழாய்மாலையானது மடைவெள்ளமிட்டுச் சேறு யாய்த்தந் திருமார்விருப்பது. திருமார்வில்சாத்தின திருத்துழாய்மாலையில் தேனும் சுண்ணமும் பரிமளமும் புறப்பட்டுத் திருமார்வடங்கலும் வண்டலிட்டு வண்டுகளுழுது சேறுசெய்து கிடக்குமாய்த்து. இனி இவள் பொன்னரும்பின முலைகளைக் கொண்டுவந்து நடுகைக்கு நல்லவளவாய்த்து ; இளமுலைகளைக் கொண்டுபோய் நடுமத்தனை.

அந்நொய்ய - அந்தநொய்ப்பமான, தன்னோயைப்பார்த்தால் மலை ஸூக்ஷ்மமென்னலாமென்று கருத்து. பாதியென்றது - "துணை" என்றதைப்பற்ற. ... ௫.

ஆறும்பாட்டு.— (தாரித்யாதி.) கீழ்ப்பாட்டில் - "துணையாளனாகாயே" என்று முன்னிலையாகச் சொல்லாநிற்கச்செய்தேயும், அது உருவுவெளிப்பாடு மாத்ரமாகையாலே கைவளைகழலக்கண்டபடியாலே, முன்னிருந்தவன்கழற்றிக்கொண்டு மறைந்தானென்று தன்னிலே தான்நொந்து படுகிறாளென்று ஸங்கதி.

"தண்டுளவவண்டு" என்னவமைந்திருக்க, "நாராய" என்றத்தாலே - "மதுவிரிதுழாய்முடி" என்னுந்நிருபகமாயிருக்குமென்றருளிச்செய்கிறார் (தனக்கித்யாதி.) சேறுகைக்கு மண்வேண்டாவோவென்னவருளிச்செய்கிறார் (திருமார்விலித்யாதி.)

http://acharya.org

(போரானையித்யாதி) யுத்தோந்முகமான குவலயாபீடத்தின் கொம்பை முறித்த மருகவாஹநன்,என்ஸ்வாமி. (தேராருமித்யாதி)தேரும் பரிகாரமும்வரும்போது நெருக்குப்படாமல் வரலாம்படியான பெரிய திரு வீதியையுடைய திருவாலிநகரை ஆளும் பெரிய க்ருஷ்ணன்று என்னுடைய பொன்வளையும் கொள்வானோ. கனம் – பொன். ௬.

ஆசையில்லாதாரே வேணும்போலேகாணும் மார்வுக்கு ; எப்போது மொக்க அணைக்கலாம்படியாய்த்து அம்மார்விருப்பது.

(போரானைகொம்பொசித்த) யுத்தோந்முகமான குவலயாபீடத்தின் கொம்பை அநாயாஸேந முறித்தவன் வருமிடத்தில் வழியில் ப்ரதிபந்தகந்தானுண்டோ. (புட்பாகன்) பெரியதிருவடியை வாஹநமாகவுடையவன். விரோதிநிரஸந ஸ்வபாவனுமாய், தான் வரும்போதே தூரத்திலேகண்டு விடாய்தீரலாம்படியான பரிகரத்தை யுடையவன். (என்னம்மான்) ஶோளேந்த்ரஸிம்ஹனிலிருப்பைக் காட்டியாய்த்து இவளை அநந்யார்ஹையாக்கிற்று.

(தேராரும்நெடுவீதி) தனக்கும் தன் பரிகரத்துக்கும் இணைந்து வருகைக்குவேண்டும் பரப்புப்போருமாய்த்துத் திருவீதி. * தன்னேராயிரம் பிள்ளைகளோடே வரலாமாய்த்து. (காராயன்) ஶ்ரமஹரமான வடிவைக்காட்டி பசுலக்ஷம்குடியிற் பெண்கள் வளை கவர்ந்தவன்,என் கையில் வளைபெறுவிடில் உண்டதுருக்காட்டாறுயிராநின்றான். ஸமகாலத்தில் பிறவாதார் வளையும் கொள்ளவேணுமோ. இவனுக்கு ஒருராக வளைகொண்டதுவும் உண்டதுருக்காட்டுகிறதில்லைகாணும் இவள் கையில் வளை ஶேஷிக்கில் !. ... ... ௬.

இளமுலைநடுமத்தனையானால் நடலாகாதோ, “ வளை கவர்வானோ” என்று நோவுபட விடுவானென்னென்னவருளிச்செய்கிறார் (ஆசையித்யாதி; இதுவாடு—ம. ஆசையுடையனானாலாகாதோ, ஆசையில்லாதாரேவேணுமோ என்று த்வநி ; யத்வா, ஸம்ஶ்லேஷிக்கவேணு மென்னுமாசையில்லாதவண்டேயாகவேணுமோ என்றும் த்வநியாகவுமாம்.

“புட்பாகன்” என்றபதஸமபிவ்யாஹாரதாத்பர்யம் (ஶோளேந்த்ரேத்யாதி;) ஶ்ரீஶத்ருஞ்ஜயன் என்றாப்போலே, ஶோளேந்த்ரஸிம்ஹனென்று - நம்பெருமாளானைக்குத் திருநாமம், “ரஜோகமஹாதாயாதம்” என்ற-அயோத்யாஜநங்களை யீடுபடுத்தினாப்போலே, கோயில் பெருமாளும் அரங்கன் திருமுற்றத்தடியாரை யீடுபடுத்துவர்; அப்படியே இவளும் பெரியதிருவடிமேலிருப்பிலீடுபட்டாளென்றுகருத்து.

“ஆயன்” என்றபதத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் (தன்னேரித்யாதி.) “வளையும்” என்ற உகாரதாத்பர்யம் (ஸமகாலத்திலித்யாதி.) வ்யாக்யாதாவினீடுபாடு (இவனுக்கித்யாதி.) ... ... ௬.

ஏழாம்பாட்டு.—(சொண்டித்யாதி.)கீழ்ப்பாட்டிலே“கனவளையும் கவர்வானோ” என்று தன்னிலேநொந்தவாறே, கழற்றிக்கொண்டுபோனவளையைக் குலுக்கிக்கொண்டு முன்னேதோற்ற, அவனைப்பார்த்து, என் வளைக்கு நான் கடவளல்லேனோ என்று பறிக்கத்துடங்குகிறாளென்று ஸங்கதி.

http://acharya.org

மூ.—கொண்டரவத்திரையுலவுகுரைகடல்மேல்குலவரைபோல்
பண்டரவினணைக்கிடந்து பாரளந்தபண்பாளா
வண்டமரும் வளர்பொழில்சூழ்வயலாலிமைந்தா என்
கண்டுயில் நீகொண்டாய்க்கென்கனவளையுங்கடவேனோ. ௭.

ப - ரை.—பண்டு - மஹாபலிமுதலானவர்களால் இப்பூமிக்கு அநர்த்தமுண்டாவதற்கு முன்னே, அரவம்திரைஉலவு - கோஷத்தையும் அலைகளையுமுடைய, குரைகடல்மேல் - பரந்ததிருப்பாற்கடலில், அரவினணை-திருவநந்தாழ்வான்மேலே, குலவரைபோல்-ஓர்பெரியபர்வதம் சாய்ந்திருந்தாப்போல், கொண்டுகிடந்து-இத்தேசம் ஆச்ரிதரக்ஷணத்துக்கு ஏகாந்தஸ்தலமென்று திருவுள்ளத்திற்கொண்டு கண்வளர்ந்தருளி, பின்பு அம்மஹாபலியால் அநர்த்தம் விளைந்தவாறே, பாரளந்த பண்பாளா - பூமியை அளந்து அவனுண்டவுலகைமீட்டு இந்திரனுக்குக்கொடுத்த நீர்மையையுடையவனே, வண்டு அமரும் வளர்பொழில்சூழ் - வண்டுகள்படிந்து ஓங்கினமரச்சோலைசூழ்ந்த, வயல் - கழனியையுடைய, ஆலி-திருவாலியிலிருக்கிற, மைந்தா - யுவாவானவனே, என்கண்துயில் - என் தூக்கத்தை, நீகொண்டாய்க்கு-முற்றுமபஹரித்தவுனக்கு, என் கனவளையும்-என்கையிலுள்ளபொன்வளையும், கடவேனோ - இழக்கக்கடவேனோ! என்று அவன்விரும்பப் புக்கவாறே என்னதென்று ஒருதலை தானும்பற்றுகிறாள். ... ... (௭)

ஏழாம்பாட்டு. (கொண்டரவித்யாதி) ஆரவாரித்துக்கொண்டு திரைகள் ஸஞ்சரிக்கிற பரந்த கடல். குரை-பரப்பு. (குலவரையித்யாதி) பெரியவரைபோலேயிருக்கிற திருவநந்தாழ்வான்மேலே பண்டு கண்வளர்ந்து பூமியையளந்த ஸ்வபாவத்தையுடையவனே. (வண்டித்யாதி) வண்டுகளாலே மொய்த்து வளரப்பட்டபொழிலாலே சூழப்பட்ட வயலாலிமைந்தா!,

ஏழாம்பாட்டு.—(கொண்டு) ரக்ஷணத்துக்குப்பாங்காய் ஆர்த்தருடைய கூக்குரல் கேட்கும் தேசமிதுவென்று திருவுள்ளத்திலே கொண்டு. இவ்விடம் ஆச்ரிதரக்ஷணம் பண்ணுகைக்கு ஏகாந்தமான ஸ்தலமென்று திருவுள்ளத்திலே கொண்டு. ஆரவாரத்தையுடைத்தாய்-கோஷியாநிற்பதாய், திரைகளானவை ஸஞ்சரியாநிற்பதாய், பரப்பையுடைத்தான திருப்பாற்கடலிலே ஒருகுலகிரிசாய்ந்தாப்போலே யாய்த்துத் திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறபடி. குரையென்று - பரப்புக்குப்பேர். அக்கடல் பாழ்தீரும்படி ஒருகுலகிரிசாய்ந்தாப்போலே. (பண்டு) மஹாபலிபோல்வாரால் பூமிநோவுபடுவதற்கு முன்பாய்த்து அப்படுக்கையில் கண்ணுறங்குவது. (பாரளந்த பண்பாளா) படுக்கையை விட்டுவந்து இத்தையடைய அளந்து கொண்டானாய்த்து. ஆக, மஹாபலியாலே அபஹ்ருதமான பூமியைமீட்டு இந்த்ரனுக்குக்கொடுத்த நீர்மையையுடையவனே.

(வண்டமருமித்யாதி) அந்நீர்மைக்குப் பிற்பாடரானாருமிழவாமைக்காகவாய்த்துத் திருவாலியிலே வந்துநிற்கிறது. பரிமளம்படிந்தாப்போலேவண்டுகள்படிந்து மதுபானம்பண்ணாநின்றுள்ளஓங்கினபொழிலாலே சூழப்பட்டவயலையுடைத்தான திருவாலியிலே நிற்கிறவனே.

விவரணம் (இவ்விடமித்யாதி.) "அரவம்" என்றதினர்த்தம் (ஆரவாரத்தையென்றது.)

http://acharya.org

மூ.—குயிலாலும் வளர்பொழில்சூழ்தண்குடந்தைக்குடமாடி!
துயிலாதகண்ணிணையேன் நின்னினைந்து துயர்வேனோ;
முயலாலு மிளமதிக்கேவளையிழந்தேற்கிதுநடுவே
வயலாலிமணவாளா கொள்வாயோமணிநிறமே. ௮.

ப - ரை.—குயில ஆலும் - மதுவுண்டு களித்துக் குயில்கள் ஆலாநின்றுள்ள, வளர்பொழில் சூழ் - ஓங்கின சோலைசூழ்ந்த, தண்குடந்தை - குளிர்ந்த திருக்குடந்தையில்வர்த்தியாநிற்கிற, குடமாடி - குடக்கூத்தாடினவனே, துயிலாத - உறக்கங் கொள்ளாத, கண்ணிணையேன் - கண்ணிணையுடைய அடியேன், நின்னினைந்து - உன்னையே நினைத்துக்கொண்டு, துயர்வேனோ-துக்கிக்கக்கடவேனோ?; முயலாலும் இளமதிக்கே - தன்னுடம்பில் துள்ளுகிறமுயலைப்போக்கமாட்டாமலும் பருவம் நிரம்பாமலுமிருக்கும் சந்த்ரனுக்கே, வளையிழந்தேற்கு - வளைகளையிழந்தவடியேனுக்கு, வயலாலிமணவாளா - கழனிசூழ்ந்ததிருவாலியிலுள்ள ஸ்வாமியே, இதுநடுவே-இப்பாதகவர்க்கத்தின்நடுவே, நீயும்வந்து, மணிநிறமேகொள்வாயோ - அழகியநிறத்தையும் கைக்கொண்டு துன்பத்தைப்பண்ணுவாயோ! என்கிறாள். (௮)

என்கண்டுயிலைக் கொண்டவனுக்கு என்பொன்வளையும் கடவேனோ. எ.

திருப்பாற்கடலில் நின்றும் ஸ்ரீவாமநனாயவதரித்து ஸ்ரீமஹாபலியை யகப்படுத்திக்கொண்டாப்போலேயாய்த்து திருவாலியிலேவந்துநின்று தன்னெளவநத்தைக்காட்டி யிவரையகப்படுத்தினபடி. (என்கண்டுயில் நீகொண்டாய்க்கு) திருவாலியிலே உத்தேஶ்யவஸ்து ஸந்நிஹிதமாய்த்தென்றவாறே, கண்ணுறக்கம் குடிபோய்த்தாய்த்து. (என்னை வளையும்கடவேனோ) என்னுடம்பிலுள்ளது வேறுமாகில்கொள்ளுகிறாய், நான்பொன்னிட்டுக் கொண்ட வளையிலென்ன ப்ராப்தியுண்டு. அவனும் பொன்கொடுத்திறே கொண்டு போகிறது. இவனுக்கும் இவளுடம்பிலுள்ளது கொள்ளும்போது இவள் (க) மேலெழுத்திடவேண்டாகாணும். ஸ்வாபாவிகமானத்தோடு ஔபாதிகமானத்தோடு வாசியின்றிக்கே, என்னதென்னுமித்தனையோ கொள்ளுகைக்கு வேண்டுவது. அவனித்தை விரும்பப்புக்கவாறே, என்னது என்று ஒருதலை தானும் பற்றுகிறாள். ... ... எ.

உடம்பிலுள்ளது - நித்ரை. கடவனல்லேனென்று ஸாவதாரியும் விவக்ஷிதமென்றருளிச்செய்கிறார் (நானித்யாதி.) ஸ்த்ரீதநமான பொன்னிட்டுக்கொண்டவளையை அவன் கொள்ளக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (அவனுமித்யாதி.) பொன்கொடுத்து - வைவர்ண்யத்தைக்கொடுத்து. ஆகில், இவளிசைவு வேண்டாவோவென்ன (இவனுக்குமித்யாதி;) ப்ராப்தனுகையால் அவன் பொன்னிட்டே அவள் கைவளையைக்கொண்டானென்று கருத்து. அவனப்படி கைக்கொண்டால இவள் என்னது என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (அவனித்யாதி.) எ.

(க) மேலெழுத்திடுகை - ஸம்மதிக்கையென்றபடி. “மேலெழுந்தது வேண்டா காணும்” என்று சில வ்யாக்யாந ஸ்ரீகோஶங்களில்பாடம்; அநுக்கநுகுணமாக, “மேலெழுந்த வளையைக் கொள்ளவேண்டுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (இவனுக்குமித்யாதி வாக்யத்வயத்தாலே.) மேலெழுந்தது வேண்டாகாணுமென்றது-ஸாமாந்யமானதாகாது, விஶேஷ்யமானவளையாகவேணுமென்றபடி” என்று அரும்பதார்த்தம்.

http://acharya.org

எட்டாம்பாட்டு. (குயிலாலுமித்யாதி) குயில்களானவை சோலையில் மலங்களை ஸூஜித்து ஆலிக்கிற வளர்பொழிலாலே சூழப்பட்ட க்ராமமறாமான திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற குடக்கூத்தனே. (துயிலாதவித்யாதி) கண்ணுறக்கமற்று உன்னையாசைப்பட்டு ஈடுபாட்டக்கடவேனே.

எட்டாம்பாட்டு.— (குயிலாலுமித்யாதி) அவ்வூரில்குயில்கள் ஸங்கீர்த்தனம் பண்ணுநிற்குமாய்த்து. அவ்வூரில் குயில்களானவை மயூராபாஷ்யங்களைக் களித்தாலியாநிற்குமாய்த்து; இவ்வூரில் குயில்களொன்றாயிறே உருவிக்கிடக்கிறது. இடைப்பெண்களுடைய ஸர்வஸ்வம்படி மன்றிலே குடக்கூத்தாடி தன்னழகை ஸர்வஸ்வதானம்பண்ணினவன் பிற்பாடரிழவாமைக்காகத் திருக்குடந்தையிலே ஸாந்நித்யம் பண்ணினவாறே, கண்ணுறக்கம் குடிபோய்த்தாய்த்து. அவன் ப்ரத்யக்ஷமாகுறுனென்றவாறே உறக்கம்குடிபோய்த்தாய்த் திலுறக்க. உறங்காமைக்கு † இரண்டிலக்ஷ்மணர்களைப்போலேயாய்த்துக் கண்களிரண்டும். இளையபெருமாள்பிறந்த முஹூர்த்தத்திலேயாய்த்து இவள்கண்களும் பிறந்தது. "ஜஹௌ" என்று ஒருநாளாக விடவேண்டாவாய்த்து, ஆஹோராத்ரமுறங்காதபடி பண்ணவேணுமோ. இக்கண்ணுக்கிலக்காகாவிட்டால் *உட்கண்ணுக்கிலக்காகவேணுமோ. "நெஞ்சென்னுமுட்கண்" என்னக்கடவதிறே. அணைக்கவொட்டாவிட்டால் அகவாய் பெரியதிருநாளாய்ச் செல்லவேணுமோ. (துயர்வேறு) மறந்துபிழைத்தாலோ நாங்கள்.

எட்டாம்பாட்டு.— (குயிலித்யாதி.) இப்பாட்டில் "என்கணவளையும் கடவேனோ" என்று தாமெம்பெருமானைப்பற்றிமன்றுடாநிற்குமளவிலே வந்தரோதயமாக, அவனுடைய உருப்பெருமையாலேயே கைவளைகழன்றுபோம்,அவ்வளவிலும் அவளைத் தொடர்ந்துபோகாதே முன்னிலையாய்த் தோற்றிநின்றபடியைக்கண்டு நிறமிழக்கிறவளுமாய், அவளைப்பார்த்து நீநிறக்கேடாக்கிக்கொள்வாயோ என்று சொல்லுகிறுளென்று லையும்.

அவ்வூரில் - திருக்குடந்தையிலென்றபடி. ஹேதுபூர்வகம் விவரிக்கிறார் (அவ்வூரிலித்யாதி.) உட்கருத்து (இவ்வூரிலித்யாதி.) துயிலாதான் என்னவமைந்திருக்கவும், கண்ணிணைகள்துயிலாததென்று விசேஷித்து, அதுக்குஸங்கேஷ்டாதாத்பர்யமருளிச்செய்கிறார் (உறங்காமைக்கித்யாதி;) காண்கையிலாசை கண்களுக்கு ஸ்வாதந்த்ர்யேண பிறந்ததென்று கருத்து. இளையபெருமாள் பிறந்தமுஹூர்த்தத்திலே பிறந்தனவாகில், பிறந்தநாள்தொடங்கி உறங்காதவரன்றிக்கே காட்டுக்கெழுந்தருளினபோதன்றோ நித்ரையின்றிக்கே யிருந்ததென்ன; ஆம், இங்குவிசேஷமுண்டென்று விசேஷத்தையருளிச்செய்கிறார் (ஜஹாவித்யாதி.) "பிழைத்து" என்றபதத்துக்குத்தாத்பர்யம் (ஆஹோரேத்யாதிவாக்யவதுஷ்டயமும்.) பிழைத்தாலோ-பிழைத்தாலாகாதோவென்றபடி.

† "லக்ஷ்மணர்ப்போலேயாய்த்து" என்று சில ஸ்ரீகோசங்கள்.

http://acharya.org

மூ.—நிலையாளாநின்வணங்க † வேண்டாயேயாகிலு மென்
முலையாளவொருநாளுன்னகலத்தாலாளாயே
சிலையாளா மரமெய்ததிறலாளா திருமெய்ய
மலையாளா நீயாளவளையாளமாட்டோமே. கூ.

ப - ரை.—சிலைஆளா - ஸ்ரீகோதண்டக்கையனே,மரம்எய்ததிறல்ஆளா - மரா மரம் வேரோடுவிழக் கணைவிடவல்லவனே,திருமெய்யமலைஆளா- திருமெய்யத்தில் கண்வளருமவனே,நிலையாளாநின்வணங்க-நான்அநந்யப்ரயோஜனையா யுன்னை ஆஸ்ரயிக்க,வேண்டாயேஆயினும்-வேண்டேனென்றிருந்தாயேயாகிலும்,என்முலையாள- என்முலைகளாட்செய்யும்படி, ஒருநாள்-ஒருநாளாகிலும், உன்அகலத்தால் ஆளாய்- உன் அகன்றமார்பா லணைத்து என்னைநிர்வஹிக்கவேணும் ; நீஆள - நீபரிக்ரஹித்த பின், வளையாளமாட்டோமே - வளைகளைநிர்வஹிக்கஶக்திதேடமாட்டோமே. (கூ)

(முயலாலுமித்யாதி) முசலகவாயிருக்கிற இளம்பிறைக்கு வளையிழந்திருக்க மதிகேடனையிறே யிவள்வளையைவாங்கிற்று. (இதனடுவே) இவ்வ்யவஸாயகவர்மத்தின் நடுவே. (வயலாலிமணவாளா) .ஆலிங்மநகரியிலே நீவந்திருக்கிறது என்னுடைய அழகிய நிறத்தைக் கொள்கைக்கோ. ... ... அ.

(முயலாலுமித்யாதி) நீ கைதொடனாய் நலியவேண்டும்படியோ என் தஶையிருக்கிறபடி !. தன்கறைகழுவவும் மாட்டாதே தன்குறை பரிஹரிக்கவும்மாட்டாத ஶஷ்ரனுக்கு வளையிழந்தன்றோ நானிருக்கிறது. தன்னுடம்பிலே துள்ளுகிற முயலைப்போக்கவும் மாட்டாதே, பருவம்நிரம்பாதே யிருக்கிறவனுக்கு வளையிழந்தேற்கு. (இதுநடுவே யித்யாதி) விஹ்ருதியையிட்டு நலிகையன்றிக்கே, நீரும்தூசியேறப்புக்கிரோ ;—போரிலே த்வந்த்வயுத்தம்பண்ணநிற்கச்செய்தே நடுவே வந்து பொருவாரைப்போலே. விடுநகமும் சம்மட்டியுமிட்டு நலியா நிற்க"அதுபோராது" என்று உடையவன் தானே நலியுமாப்போலே, விஹ்ருதியையிட்டு நலிகைதவிர்ந்து நீதானே கைதொடனாய் நலியப் பார்த்தாயோ. (கொள்வாயோ மணிநிறமே) அவன் கூடவிருந்த போது, "இதொருநிறமே !" என்று வாய்புலத்தக்கேட்டிருக்குமே; அல்லது, தன்வடிவைத் தானே ஶ்லாகிக்கிறாளன்றே. ... அ.

"இளமதிக்கே" என்கிற அவதாரணதாத்பர்யமருளிச்செய்கிறார் (நீயித்யாதி.) கைதொடனாய் - ஸஹாயமாய். * மதிக்கு விஶேஷணமிட்டத்தால் ஶமித்தவர்த்த மருளிச்செய்கிறார் (தன்னித்யாதி.) வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (தன்னுடம்பிலே யித்யாதி.) முயலை - ஶஶத்தை. விஹ்ருதி என்றது-ஶஷ்ரனை. கீழ்வாக்யவிவரணம் (போரிலேயித்யாதி.) விடுநகம் - விரல்கிட்டி. ... ... அ.

† "வேண்டாயேயாயினும்" என்று சில ஸ்ரீகோஶங்கள்.

http://acharya.org

ஒன்பதாம்பாட்டு. (நிலையித்யாதி) ஆத்மாஹமாக உன்திருவடிக ளிலே கைங்கர்யம்பண்ணவாய்த்து இத்தை வகுத்தது; அது திருவு ள்ளத்தாலே வேண்டா என்றிருந்தாயாகிலும்.(என்முலையாளவித்யாதி) என்முலையானது ஆட்செய்ய,

ஒன்பதாம்பாட்டு.— (நிலையாளாவித்யாதி) ஸத்தையுள்ளதனையு மவன்றிருவடிகளிலே வணங்கி வர்த்திக்குமிதுவேயாய்த்து ஸ்வரூபத் தோடு சேர்ந்தசெயலாவது. (நின்னித்யாதி) அதப்படியேயானாலும், "இவனுமிப்பேற்றைப்பெறுவான்" என்று அவன் நினைக்கிலிறே அது ஸித்திப்பது. (நிலையாளா நின்வணங்க † வேண்டாயேயாகிலும்) கிடைக்கில் பெறவேண்டியிருப்பது இதுகாணும். கடக்கநின்று ஒரு ப்ரயோஜநங்களைக்கொண்டுபோகையன்றிக்கே, கிட்டநின்று அவன்றிருவடிகளிலே நித்யகைங்கர்யம்பண்ணவாய்த்து ஆசைப்படுவது. ப்ராஹ்மணர் பிச்சேறினாலும் ஓத்துச்சொல்லுமாப்போலே, தலைமகளான ஸமயத்திலும் சேஷத்வாநுரூப வ்ருத்தியையே யாசைப்படுகிறாளிறே. (நிலையாளாநின்வணங்க) என்றத்தாலே - ப்ராப்யநிஷ்கர்ஷம் பண்ணிற்று; (வேண்டாயேயாகிலும்) என்கையாலே – ப்ராபகநிஷ்கர்ஷம் பண்ணிற்று. அவன்வேண்டியிராதவன்று இப்பேறு கிடையாதிறே. இது நமக்கு உபேக்ஷாவிஷயம் – வேம்பென்றிருந்தாயேயாகிலும். (என்முலையாள) நான் ஸத்தைகொண்டு நிர்வஹித்தேனாம்படியாக.

ஒன்பதாம்பாட்டு.— (நிலையாளாவித்யாதி.) கீழ்ப்பாட்டில் - "கொள்வாயோ மணிநிறமே" என்னச்செய்தேயும், அவளிவளுக்கு முன்னிலையாய்த் தோற்றின மாத்ரமாகையாலே ஒருபடியேதோற்றிக்கொண்டு நிற்க, அது முன்னிலையாகத் தோற்றின மாத்ரமென்றறியாதே, அவன்தானே தன்னை வேண்டாதிருக்கிறானாகக் கொண்டு தான் திருமுலைத்தடங்கள் அலைக்கையிலே கணிசிக்க, செய்வதறியாதே அவனைக்கலவியிரக்கிறாளென்று ஸங்கதி.

நிலைநின்ற ஆளாய்க்கொண்டு நின்னைவணங்கி நித்யகைங்கர்யம்பண்ண உனக்குவேண்டா விட்டாலும் என்று ஸம்க்ஷார்த்தமாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஸத்தையித்யாதி.) கைங்கர்யத்தைவேண்டுமவர் தாமாயிருக்க, அவனை "வேண்டாயேயாகிலும்" என்கிறதென்னென்ன வருளிச்செய்கிறார் (அதுவித்யாதி.) "ஆகிலும்" என்றதுக்குத் தாத்பர்யம் (கிடைக்கிலித்யாதி;) நிலையாளாய் வணங்குகையே பரமபுருஷார்த்தம், அது கிடையாமையால் "அகலத்தால் - ஒருநாள் - ஆளாய்" என்கிறாளென்று கருத்து. விவரணம் (கடக்கவித்யாதி.)ஒருப்ரயோஜநமென்று- ஸ்வார்த்தமான காதாஹித்த ஸம்ஸ்லேஷமென்றபடி. நாயிகையாயிருக்குமிவளுக்கு ஸம்ஸ்லேஷத்தை ப்ரார்த்திக்கையே புருஷார்த்தமாயித்தனைபோக்கி, சேஷவ்ருத்தியையபேக்ஷிக்கக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (ப்ராஹ்மணரித்யாதி.) ப்ராஸங்கிகமாக ப்ரமேயஶிக்ஷைசெய்தருளி, வேண்டாயாகிலும் என்னாதே "வேண்டாயே" என்கிற ஏவகாரத்துக்குக் கருத்தருளிச்செய்கிறார் (இதுநமக்கித்யாதி.) வேம்பென்றது - தாத்பர்யாக்ஷரம். அதாவது - த்யாஜ்யமென்றபடி.

† "வேண்டாயேயாயினும்" என்று சில ஸ்ரீகோஶங்கள்.

http://acharya.org

உன்திருமார்விலே அவற்றை யடிமைகொள்ளாயாகில். (சிலையாளா) ஸ்ரீஶார்ங்கத்தையடக்கி யாளுகிறவனே. (மரமித்யாதி) மாமரம் ஏழையுமெய்த பெருமிடுக்கனே.

"கொங்கைகிளர்ந்து குமைத்து" என்று-க்ஷாமகாலத்தில் ப்ரஜைகள் "சோறு, சோறு" என்று அலைக்குமாப்போலே, இம்முலைகளுக்காற்ற மாட்டாதே நோவுபடுமது தவிர்ந்து என்னுடைய ஸ்த்ரீத்வங்கொண்டு நிர்வஹித்தேனும்படி. (என்முலையாள) மத்தகஜத்தைநக்கட்டி யாள்வாரைப்போலே என்முலையை நான் நிர்வஹிக்கைக்காக. நமக்கபேக்ஷையின்றிக்கே யிருக்கச்செய்தே உன்ப்ரயோஜநத்துக்காக நம்மை யிப்படிசெய்யச்சொன்னாலது செய்யப்போமோவென்ன (ஒருநாள்) நித்யமாய்வருமது தவிருகிறது; ஒருநாள் பிறருக்கன்றிக்கே [illegible] ஒலாகாதோ. (ஒருநாள்) பலநாள்வேணுமென்றிருக்கவேண்டா, ஒருநாளாகிலுமமையும். அவ்வொருநாள் என்நெஞ்சிலிசையாகில் செய்யப்போமோ வென்ன (உன்னகலத்தாலாளாயே) உன்நெஞ்சை நியுகந்தார்பக்கலிலேவைத்து உடம்பைக்கொண்டணையவமையும்.

நெஞ்சை நினைத்தார்க்குவைப்பது, வேறுமார்வாலெங்கிலும் [illegible] வது, இப்படிதான் செய்யவேண்டுகிறதென், வேண்டியிராதவிஷயத்திலே யொருநாள்தான் செய்யவேண்டுகிற தென்னென்ன (சிலையாளா) என் ஆர்த்தய்வனிகேளாமைக்காக."க்ஷத்ரியையர்யாரபதே" என்கிறபடியே – ஆர்த்தய்வனிகேளாமைக்கன்றே நீர்விற்பிடித்திருக்கிறது. நாம் விற்கொண்டெங்கே காரியங்கொள்ளக்கண்டு வினவுகிறதென்ன (மரமெய்ததிறலாளா) உன்னைவிஶ்வஸியாதார்க்கும் மநுவேந்திக்காரியம் செய்யுமவனன்றே; உன்னை ஆஶ்ரயித்த மஹாராஜர் ஆர்த்தி போக்குகைக்காக மராமரங்களையெய்து மறுமிசைவித்துக் கொடுத்திலையோ.

கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் (கொங்கையித்யாதி.) மேலுக்கவதாரிகை (நமக்கித்யாதி.)

(உபேக்ஷாவிஷயம்) என்றத்தைப்பற்ற - "ஒருநாள்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்து, (வேம்பு) என்ற தாத்பர்யாநுகுணமாக, "ஒருநாள்" என்றதுக்கு- உக்திப்ரத்யுக்திருபேண வருளிச்செய்கிறார் (வேண்டியித்யாதி.) வேண்டியிராத விஷயத்தில் - வேம்பான விஷயத்தில். ஒருநாள்தானென்றது - ஒருநாளாகிலுமென்றபடி.

ஒருநாளாகிலுமமையு மென்றது - உனக்கு வேம்பானாலும் வேப்பங்குடிநீர் போலே ஸ்வீகரிக்கலாமென்றபடி. இத்தால் - உனக்குக்கைப்பயம், எனக்கு இனித்தானத்தைச்செய்யவேணுமென்று ப்ரார்த்திக்கிறாளென்றதாய்த்து. பரார்த்தமாகவாகிலும் செய்யவேணும் என்னும் நினைவுவேண்டாவோ என்னும் ஶங்கையையநுவதித்து, "அகலத்தால்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவ்வொருநாளித்யாதி.)

அநுவாதபூர்வகம் மேலுக்கவதாரிகை (நெஞ்சையித்யாதி.) கீழ்ப்பண்ணின ப்ரஶ்நத்துக்குத்தரம் (ஆர்த்தய்வனிகேளாமைக்காகவென்றது.) இவ்வர்த்தம் இந்த படத்தில் ஷலிக்குமோ வென்ன வருளிச்செய்கிறார் (க்ஷத்ரியையித்யாதி.)

http://acharya.org

(திருமெய்யமலையாளா) திருமெய்யத்தில் நீசாய்ந்தருளிற்று எங்களுடைய ரக்ஷணார்த்தமாகவன்றோ. அம்மங்கியம்மாளுடைய வரமடிசையிலே, நஞ்ஜீயரறியவெழுந்தருளினவர், அவர்படுகிறக்லேசத்தைக்கண்டு, "இங்குத்தை ஆசார்யஸேவையும் ஸமவஸ்ரணங்களோடே போது போக்கினபடியுமெல்லாங்கிடக்க, அல்லாதாரைப்போலே இப்படிபடவேண்டுவதே!" என்ன; "'நீயாளவளையாளமாட்டோமே' என்றன்றோ—ஸமவத்பரிக்ரஹமானால் க்லேசப்பட்டே போமித்தனைகாணும்" என்றார்.

பின்னை நீரும் அவ்வவதாரத்திலே வந்துதவிற்றிலீரேயென்ன (திருமெய்யமலையாளா) அவ்விழவு தீர்க்கைக்காகவன்றோ திருமெய்யத்திலே வந்து சாய்ந்தருளிற்று. இருந்தபடியால் உன்பரிக்ரஹமாகையும் கையில்வளை தொங்குகையு மென்றொரு பொருளுண்டோ. இப்போது தன்னுற்றாமையாலே யொன்றைச்சொல்லுகிறாளத்தனைபோக்கி ஒருக்காலும் கையில்வளை தொங்குகைக்கு விரகில்லைகாணும். கிட்டினால் தானே ஹர்ஷத்தாலே பூரித்து நெரிந்திற்றுப்போம்; பிரிந்தானில் தானே கழன்றுபோம். உன்னுடையபரிக்ரஹமாய்எங்களுடைய ஸ்த்ரீத்வங்கொண்டு நோக்குகையென்றொருபொருளுண்டோ.

அம்மங்கியம்மாளுடைய வரமடிசையிலே நஞ்ஜீயரறியவெழுந்தருளினவர், அவர்படுகிற க்லேசங்களைக்கண்டு, "இங்குத்தை ஆசார்யஸேவைகளும் ஸமவஸ்ரணங்களைக்கொண்டு போதுபோக்கினபடிகளுமெல்லாம் கிடக்க அல்லாதாரைப்போலே யிப்படி படவேண்டுவதே!" என்ன; "'நீயாள வளையாளமாட்டோமே' என்றன்றோ—ஸமவத்பரிக்ரஹமானால் க்லேசப்பட்டேபோ மித்தனைகாணும்" என்றார்.

"நீயாள" இத்யாதிக்குக்கருத்து (இருந்தபடியாலித்யாதி.) இருந்தபடியாலென்றது—நீ மெய்யமலையாளனாயவைத்தும் என்மலையாளனொருநாளுமாளாதேயிருந்தபடியாலென்றபடி. நீயென்னையாளவும் நானவனையாளவும் இருவரும் மாட்டோமே யென்று ஸம்ஹாரியமாகையால், அவனிவளையாளமாட்டினால்அத்தால்இவள்இவ்வளையை ஆளவல்லளோவென்ன; வ்யாக்யாதாபரிஹரிக்கிறார் (இப்போதித்யாதி;) ஆற்றாமையால் சொல்லும்பாசுரமத்தனையென்றுகருத்து. நான்திருமெய்யமலையாளனாய்உன்போல்வார்க்குவந்திருக்கிறேனென்றறிந்துவைத்து, "உனைகலத்தாலாளாயே" என்று நான்மற்றுச்சொல்லுகை உன்ஸ்த்ரீத்வத்துக்குச் சேருமோவென்னும் ஸங்கைக்குப் பரிஹாரமாக, "நீயாளமாட்டோம்" என்கிறாளென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னுடைய வித்யாதி;) நீயாளுகையாலே நாங்களவனையாண்டிருக்க மாட்டோமென்று ஸம்ஹாரியம். இத்தால் - ஸ்ரணாயிகவிஷயமாகையால் ஆறியிருக்கமாட்டோமென்கை.

"வளையாளமாட்டோமே" என்கிற அவதாரணத்துக்கு - ஸமவத்பரிக்ரஹமானார்க்கு துக்கமேமேலோக்கிக்குமென்று கருத்தாய், அதுக்கு ஸம்வாதம்காட்டுகிறார் (அம்மங்கியித்யாதி.) இப்படி படவேண்டுவதே என்றது - ஆசார்யஸேவை, ஸமவஸ்ரணாநுபவம், இவையே காலக்ஷேபமாகவிருக்கிற உமக்கு, அதுக்கவகாசமில்லாதபடி ஸம்ஸாரிகளைப்போலே நோவுபடவேண்டிற்றேயென்கை.

http://acharya.org

மூ.—மையிலங்கு கருங்குவளை மருங்கலரும் வயலாலி
நெய்யிலங்குசுடராழிப்படையானை நெடுமாலைக்
கையிலங்கு வேற்கலியன் கண்டுரைத்த தமிழ்மாலை
ஐயிரண்டுமிவைவல்லார்க் கருவினைகளடையாவே ௧௦.

ப - ரை.—கையிலங்குவேல்கலியன் - ப்ரகாசிக்கிறவேலைக்கையிலேயுடைய ஆழ்வார், மையிலங்குகருங்குவளை - அஞ்சனம்போல விளங்கும் கறுத்தகுவளைமலர்கள், மருங்கு - பார்ச்வத்திலே, அலரும் - விகஸியாநின்றுள்ள, வயல் - கழனி சூழ்ந்த, ஆலி-திருவாலியிலேயிருக்கிற, நெய் - கூர்மையுடைத்தாய், இலங்கு - விளங்காநின்ற, சுடர் - புகரையுடைய, ஆழிப்படையானைநெடுமாலை - திருவாழியைக் கையிலேந்திய ஸர்வேச்வரனை, கண்டு - எதிரில் கண்டு, உரைத்த-அருளிச்செய்த, தமிழ்மாலைஐயிரண்டும் இவைவல்லார்க்கு - தமிழ்த்தொடையாகும் இவற்றை நன்றாக அறிய வல்லவர்களுக்கு, அருவினைகள் - துஷ்கர்மங்கள், அடையாவே-சேரவேமாட்டா என்று நிகமிக்கிறார். ... ... (௧௦)

புறப்பட்டபின்பு, நஞ்சீயர், பிள்ளையைப்பார்த்து, "முடிகிற விவ்வளவிலு மிவ்வார்த்தைசொல்லுகிறது - விச்வாஸத்தின் கனமான ஹாவவங்யத்திலூற்றமிறே" என்றருளிச்செய்தார்.

ஆக, இப்பாட்டால் - ப்ராப்ய நிஷ்கர்ஷமும், ருசியுடையாரானபடியும், ஸரண்யனானவனுக்கு ரக்ஷகத்வம் கண்ணழிவற்றபடியும், இத்தலையிலபேக்ஷைகுறைவற்றிருக்கிறபடியும், இவையெல்லாவற்றையும் சொல்லுகிறது. (நிலையாளா) என்கையாலே-ப்ராப்யமென்னுமிடம் சொல்லிற்று; (மரமெய்த) என்கையாலே-ரக்ஷகத்வம் கண்ணழிவற்றபடியும், இத்தலையிலபேக்ஷை குறைவற்றிருக்கிறபடியும், இவையெல்லாவற்றையும் சொல்லுகிறது. ... ... சு.

புறப்பட்டபின்பு, நஞ்சீயர், பிள்ளையைப்பார்த்து, "முடிகிற விவ்வளவிலேயுமிவ்வார்த்தைசொல்லுகிறது - விச்வாஸத்தின் கனமான ஹாவவங்யத்திலூற்றமிறே" என்றருளிச்செய்தார்.

ஆக, இப்பாட்டால் - ப்ராப்யநிஷ்கர்ஷமும், ருசியுடையார்படியையும், ஸரண்யன்படியையும், அவனுக்கு ரக்ஷகத்வம் கண்ணழிவற்றிருக்கிறபடியையும், இத்தலையில் அபேக்ஷைகுறைவற்றிருக்கிறபடியையும், இவையெல்லாவற்றையும் சொல்லுகிறது (நிலையாளா) என்கையாலே - நித்யகைங்கர்யம் பெறுகையே ப்ராப்யமென்னுமிடம் சொல்லுகிறது; (வேண்டாயேயாகிலும்) என்கையாலே - உபாயஸாவத்யமவன்பக்கலிலேயென்னுமிடம் சொல்லிற்று; (என்றுநிலையாளவொருநாள்) என்கையாலே - ருசியுடையார்படி சொல்லிற்று; (நிலையாளா) என்கையாலே-ஸரண்யனைசொல்லிற்று; (மரமெய்த) என்கையாலே-ரக்ஷகத்வம் கண்ணழிவற்றிருக்கிறபடியையும், இத்தலையிலபேக்ஷை குறைவற்றிருக்கிறபடியையும்,இவையெல்லாவற்றையும்சொல்லுகிறது.

"க்லேசப்பட்டேபோமித்தனை" என்னப்போமோவென்ன; ஹாவபங்யத்திலுறைப்பாலே தங்கள்சொன்னதொன்று கருத்தை வெளியிட்டபடியையுங் காட்டுகிறார் (புறப்பட்டவித்யாதி.) ... ... க.

http://acharya.org

பத்தாம்பாட்டு. (மையிலங்கித்யாதி) மைபோலே விளங்காநின்ற கருங்குவளையானது பர்யந்தத்திலே அலருகிற வயலையுடைய திருவாலி. (நெய்யித்யாதி) நெய் - கூர்மை. கூர்மையையுடைத்தாய் விளங்காநின்ற புகரையுடைய திருவாழியைக் கையிலேயுடைய ஸர்வேச்வரனை.

பத்தாம்பாட்டு.—(மையிலங்கித்யாதி) இதுவாய்த்து பயிரேறாதே தரிசான நிலமிருக்கும்படி. ஊரில் தரிசுகிடக்கும் நிலமிருக்கும்படியிதுவாய்த்து. மையானது மிகவும் விளங்காநின்றுள்ள கறுத்தகுவளைப்பூக்களலர்ந்து கிடக்குமாய்த்து பர்யந்தங்களையுடைய. நாள்செல்ல நாள் செல்லக்குறைந்துவருகையன்றிக்கே நிறமுஜ்ஜ்வலமாகாநின்றுள்ள கருங்குவளைகளானவை அலருகிற பர்யந்தங்களையுடைத்தான வயலையுடைய திருவாலி. (நெய்யிலங்கித்யாதி புறம்பு அவையும் உள்ளில் அவனுடைய நிறமுமாய் முன்னடிதோற்றுதாய்த்து கையில் திருவாழியன்றாகில். (நெய்யிலங்கித்யாதி) வாறு இலிருட்சிக்கும், குவளைப்பூவால்வந்த விருட்சிக்கும், கையில் திருவாழியால்வந்த வொளியல்லவாகில் முன்னடி தோற்றுதாகாதும். (நெடுமாலை) தூதுவிடவும் வார்த்தைசொல்லவும் மாட்டாதே நிற்கிறான்போலேகாணும். தூதுவிடமாட்டாதபடியாய்த்து அத்தலைப்பட்டுக்கிடக்கிறது. இத்தலை "ஸர்வஸமாஸாமதஜீவிஷ்யே" என்றால், "நஜீவேயம்" என்னுமித்தனையிறே அத்தலை.

பத்தாம்பாட்டு.— (மையித்யாதி.) உட்கருத்தை முந்துறவருளிச்செய்கிறார் (இதவித்யாதி.) செங்கமலங்களுண்டாயிருக்கலாமே, இதுவே என்று சொல்லுகைக்கு நிமித்தமென்னென்னவருளிச்செய்கிறார் ஊரிலித்யாதி; தேசவிப்ரக்ருஷ்டமான பரமபதமன்றிக்கே, காலவிப்ரக்ருஷ்டங்களான விபவங்களுமன்றிக்கே, கரணவிப்ரக்ருஷ்டமான அந்தர்யாமியுமன்றிக்கே, தாமிருந்த திருவாலியிலேயிருந்தவளைக்குறித்துக் தூதுவிடுகையும், அவன் முன்னிலையாகத் தோற்றினதுகக்கொண்டு தன் உடைமையை யறிவிக்கைபுமாம்படி ஜ்ஞாநவிபாககார்யமான அஜ்ஞாநம் விளைந்தமைக்கு த்ருஷ்டாந்தமாக, குவளைகளின ஸம்ருத்தியைச்சொல்லுகிறாரென்று கருத்து. ஒருபடிக்கையில் பிரியப்பிறந்தாப்போலே இவர்க்கு இத்திருமொழியிலுறைவும்; அத்தையிட்டுக்கொண்டு வ்யாக்யாதாக்கள் பண்டுகிறாரென்று கொள்ளுவது. "ஊர்" என்கையாலே - ஆழ்வார்தாமும் அப்படியிருக்கிறாரென்று ஸூசிதமாகிறது; இங்ஙனன்றாகில் இரண்டுவாக்யமும் புநருக்தமாமிறே. இவ்வாழ்வாருடைய ஜ்ஞாநகார்யமான அஜ்ஞாநத்தின் உமாவதிக்குப்போரும்படி குவளைக்குள்ள நிறத்தின் மிகுதியைச்சொன்னத்தை நியாமகமாகக்காட்டுகிறார் (மையானதித்யாதி.) "குவளை" என்றபோதே கருமைதோற்றுமே, இங்ஙனிருக்கச்செய்தேயும், "கரும்" என்றும் "மையிலங்கு" என்றும் விசேஷணத்வயமிடுகையாலே தம்முடைய உமைக்கு த்ருஷ்டாந்தமாகச் சொன்னாரென்னுமிடம் ஸூசிதமிறே யென்று திருவுள்ளம். வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (நாளித்யாதி. இப்போது * சுடராழியையிட்டு விசேஷிக்கைக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (புறம்பித்யாதி.) இத்தால் - விச்லேஷித்தாராக வெண்ணியிருக்கிற தம்படியாலும் அவனும் வ்யாமோஹாதிசயத்தாலே "*மயர்வறமதிநலம்பெற்றவர் இந்நாள் விச்லேஷித்துப் படுகிறபாடுகாண்கையாலே நான்றானும் விச்லேஷித்தேனாகவேணும்" என்றுகலங்கித் தூதுவிடவும் மாட்டாதே உருவுவெளிப்பாட்டால் வாய்விடவும்மாட்டாதே யிருக்கிறநிலையிலே, நெஞ்சறியுமவனை திருவாழியாழ்வான் இருவருக்கும் வெளிச்சிறப்பைக் கொடுத்தானென்றநுஸந்திக்கிறாரென்று திருவுள்ளம். கீழ்வாக்யத்தைவிவரிக்கிறார் (வடிவித்யாதி.)

http://acharya.org

(கையிலங்கித்யாதி) கையிலே விளங்காநின்ற வேலையுடைய ஆழ்வார் ஸர்வேஶ்வரனைக்கண்டுசொன்ன தமிழ்மாலைபத்தும் வல்லவர்களுக்கு அருவினைகள் சேரா. ... ... **௧0.**

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

(கையிலங்கு)ஹட்டர்,"ஸர்வேஶ்வரன் திருமங்கையாழ்வார்க்குப் பக்கக் குதிரையேறிப்போமாகாதே!, அவன்கையில்திருவாழிஅழகுக்குடலாக வொப்பித்திருக்குமத்தனை, இவர்கையில் வேல் ஶத்ருநிரஸநத்தாலே கறைகழுவ அவஸரமின்றிக்கேயிருக்குமாய்த்து." அவன் ஶேஷித்வ ஸூசகமாகத் திருவாழியைப்பிடித்தாப்போலேயாய்த்து இவர் ஶேஷத்வஸூசகமாகத் திருவேலைப்பிடித்தபடி. (கண்டுரைத்த) ஷூதர்க்கு வார்த்தை சொன்னபடிகேட்டு அவன் முன்னேவந்து நிற்கக்கண்டு சொன்ன. (அருவினைகளடையாவே) அவனைப்பிரிந்து நோவுபட்டுத் தூதுவிடுகைக்கு ஹேதுவான பாபங்கள் கிட்டாது. ஸர்வேஶ்வரனைப் பிரிந்து தூதுவிடப்புக்கு அதுதானுங்கூட மாட்டாதேபடும் வ்யஸநம்படவேண்டா இப்பத்தையுமப்யஸித்தார்க்கு. தூதுவிடுவானவன்றாய்த்து. ... ... ௧0.

அடிவரவு.— தூவிரிய பிணி நீர் தான் வாள் தாராய
கொண்டு குயில் நிலை மையிலங்கு கள்வன்.

திருமங்கையாழ்வார் திருவடிகளேஶரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

இவ்வாழ்வார் திருவாலியம்மானை விஶ்லேஷித்தாராகச்சொண்டு நோவுபங்கிறவேளையிலே திருவாழியாழ்வான் செய்பூட்டிய புசர்படைத்துத் திருவுள்ளத்தைக் குடிசொள்ள, இவர் அவ்வழகில் கண்வைத்தா அவனுள்ளத்தையுங்கண்டு ஈஜதார்யூராய், "இச்சேர்த்திக் கென்வருகிறதோ" என்று கையில் வாள்பற்றியிருக்கிறரென்று விவக்ஷித்து, "செய்யிலங்கு" என்று விஶேஷணமிடாமையாலே ஹலித்தகறையைச் சொல்லுகையாலே இப்படிசொல்லலாமென்று ஸம்வாதம் காட்டுகிறர் (ஹட்டரித்யாதி, இருக்குமாய்த்து என்னுமளவும்.) ஶத்ருநிரஸநத்துக்குடலாக வேலைப்பிடித்தாரென்றருளிச்செய்தது, சேவகனுக்கு வேல்நிரூபகமென்று ஸஹ்ருதயராகும் தாத்பர்யாஷரமருளிச்செய்கிறர் (அவனித்யாதி.) பாட்டுக்களெல்லாம் கண்டு சொன்னதுகளன்றேயென்ன வருளிச்செய்கிறர் (தூதர்க்கித்யாதி.) ... ... ௪0.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

மூன்றும்பத்து - ஆறுந்திருமொழி ஸம்பூர்ணம்.

ஆக, திருமொழி - உசு - க்கு, பாட்டு - உகூ0.

http://acharya.org

"திருமெய்யமலையாளா நீயாளவளையாளமாட்டோம்" என்று அவனையின்றாக; அவனும், "இப்படி நம்மையின்று தாம்படி நோவுபட விட்டோமாகாதே" என்று லஜ்ஜித்து, "என்முலையாள வொருநாளுன்னகலத்தாலாளாயே" என்று இவளாசைப்பட்டபடியே வந்து தன் மார்விலே இவளையாரவணைத்து, இவளுடனேகலந்து, "ஒருநாள்" என்றிவள்சொன்ன ஆற்றாமையைத் திருவுள்ளம்பற்றி, "நிலையாளா நின் வணங்கவேண்டாயேயாகிலும்" என்றதுவும் திருவுள்ளத்திலேகிடந்து, இனி யிவளைவிடப்போகவொண்ணாது என்று இவளையுங்கொண்டு ஒருவரறியாதபடி அர்த்தராத்ரத்திலே புறப்பட்டுப்போக, திருத்தாயார்

தூதுவிட்டு ஆற்றாக்குறைச்சொன்ன பாசுரம் நெஞ்சிலே யூற்றிருந்து அத்தைஸஹித்து, பாவநாப்ரகர்ஷத்தாலே அவன்றான் முன் நின்றுகைக்கொண்டு அவனுக்கு வார்த்தைசொல்லும்படி பிறந்த தசாவிசேஷம் அவன் திருவுள்ளத்திலேபட்டு, அதுபொறுக்கமாட்டாதவனாகையாலே தானேவந்து முகங்காட்டி, இவளைக்கூடக்கொண்டு போக; அதிவாஹிகரைவரக்காட்டிக்கொண்டுபோம் சிலரை, பெரிய திருவடியை வரக்காட்டிக்கொண்டுபோம் சிலரை, "நயாமி" என்று தானே கொடுபோம் சிலரை; அப்படியே, தானேவந்து அத்தவாளத்தலையாலே மறைத்துக் கொண்டுபோக; அந்தரங்கமாகக்காத்துக்கொடு கிடந்த திருத்தாயாருணர்ந்து படுக்கையிலிவளைக் காணாமையாலே, போனவள்படிகளையும், தனக்கவளையொழியச் செல்லாமையையும், எதிர்த்தலையிப்படி படவேண்டும்படியிருக்கிற விவளுடைய வைலக்ஷண்யத்தையும், தன்னிழவையும் சொல்லிக்கூப்பிடுகிறாளாய்ச் செல்லுகிறது.

கள்வன்கொல் ப்ரவேசம்.— கீழ்த்திருமொழியில் பாவநாப்ரகர்ஷத்தாலே "என்முலையாள - உன்னகலத்தாலாளாயே" என்று ப்ரார்த்திக்கச்செய்தேயும் அவன் செய்யாமலிருக்கையால், அவனை "ஆளமாட்டோமே" என்றுகிடந்த இப்பெண்பிள்ளை, இத்திருமொழியில் பின்தொடர்ந்து போனாளாகக்கொண்டு திருத்தாயார் சொல்லுகைக்கு ஸங்கதி யென்னென்ன; வ்ருத்தவர்த்திஷ்யமாண கதாமுகேந வருளிச்செய்கிறார் (தூதுவிட்டித்யாதி.) இத்தால்-மாநஸாநுபவத்தில் ஒரு வைசத்யத்தாலே அவன் வந்தானாகவும், தன்மகளும் வயலாலிமணவாளனும் ஒருபடுக்கையில் சேர்ந்தார்களாகவும், தான் கிட்டக் காத்துக்கொண்டிருந்தாளாகவும், இங்ஙனிருக்க தான் கண்ணுறங்க, அப்போது "நிலையாளா நின்வணங்கவேண்டாயேயாகிலும்" என்று இவள்சொன்ன இழவுதிருவுள்ளத்திற்பட்டு அதுதீர இப்பெண்பிள்ளையைக்கொண்டு புறப்பட, படுக்கையிற்காணாமல் தானும்புறப்பட்டு, கண்டுகொண்டிருக்கவே கொண்டுநடந்தான் என்றுஒருதசைபிறந்து அநுபவிக்கிறாளென்றதாய்த்து. (முகங்காட்டி) என்றவநந்தரம், ஸம்ச்லேஷித்து என்றுசேஷம். தானேவந்து கொடுபோனபடியைத் த்ருஷ்டாந்தகதாபூர்வகம் விவரிக்கிறார் (ஆதிவாஹிகரையித்யாதி.) "கள்வன்" என்றதைப்பற்ற (அத்தவாளத்தலையாலேயித்யாதி.) அத்தவாளத்தலை - தலைமுன்றானை.

http://acharya.org

உணர்ந்து படுக்கையைப்பார்த்து, படுக்கையிற்காணாதபடியாலே,"இவளைக்கொண்டிவன்போனான்,எவ்வழியேபோய் எங்கேபுகுகிறார்களோ,

அவனிவளைக்கொடுபோகையாவதென், – ஸ்வாபதேசத்திலோடுகிறதென்னென்னில்; மாநஸாநுபவமாயிருக்கச்செய்தே பாஹ்யஸம்ஶ்லேஷம்போலே யிருக்கப்பண்ணிக்கொடுத்ததொரு வைஶத்யத்தைச்சொன்னபடியிறே. [ஸ்திதேமநஸி] * நின்றவாநில்லாநெஞ்சும் ஓரிடத்திலே நிற்கப்பெற்று, உபயாத்மகமான ஶரீரமுமங்கேயிங்கேஶிதிலமாகாதே ஒருபடிப்பட்டு, தாதுக்களுமொன்று அடங்கி ஒன்றா நிமிருகையன்றிக்கே ஸாம்யாவஸ்தையையடைந்து, இப்படி ஶரீரத்திலே யொருலாகவம்பிறந்து ஸத்த்வமுத்ரிக்தமான ஸமயத்திலே, ஆரேனுமொருவனாகவுமாம், தான் ஸம்ஸாரியாய் நின்ற நிலையையும்,இத்தைக்கழித்துக்கொள்ளுகைக் கீடாயிருப்பதொரு கைம்முதல் தன்பக்கலின்றிக்கேயிருக்கிறபடியையும், அவனைப்பற்றியே கழிக்கவேண்டும்படியிருக்கிறபடியையும்,இதில்நின்றும் கரையேற்றுகைக்கீடான ஶக்தியும் ப்ராப்தியுமவன்பக்கலிலே யுண்டாயிருக்கிறபடியையு மநுஸந்தித்து அவன்பக்கலிலே பரந்யாஸத்தைப்பண்ணுவது. பின்னை பேற்றுக்கு இவ்வளவமையுமோவென்னில்; ஶரீரத்தைப்பற்றி வருமவற்றுக்கு ஆத்மாஸுகதுःகாநுபவம் பண்ணுமாப்போலே, இவற்றுக்கு வருமவை தன்னதாம்படி விஶ்வஶரீரனுமாய், இவன்றன்னையொருக்காலநுஸந்தித்தால் பின்பிவனைப்போலே மறக்கைக்கடியான ஜந்மநிபந்தநமான கலக்கமின்றிக்கே யிருக்குமவனுமாகையாலே அவ்வளவமையும். இப்படி ஒருநாளநுஸந்தித்தவன் ப்ரக்ருதிவஶ்யனாய் பின்பு தன் தேஹயாத்ரையிலே அந்யபரனாய்த்திரிந்து பின்பு ஸ்மரிக்கைக்குங்கூட யோக்யதையில்லாதபடி * காஷ்டபாஷாண ஸந்நிபனாய்க்கிடக்குமன்று, இவனைப்போலே ஒருக்கால் ஸ்மரித்தால் பின்பு விஸ்மரிக்குமவ னன்றிக்கேயிருக்கிற நான் ஸ்மரித்தபடியே யிருப்பன்.

"இவளைக்கொடுபோகையாவதென்" என்றத்தை விவரிக்கிறார் (ஸ்வாபதேஶத்திலித்யாதி.) த்ருஷ்டாந்தமாகக் கீழ்ச்சொன்ன ஶ்லோகத்துக்கு வ்யாக்யாநம் (ஸ்தித இத்யாதி.) மநஸ்ஸ்வாஸ்த்யாதிகளைச் சொன்னவித்தால்ஸித்த அர்த்தத்தையருளிச்செய்கிறார் (இப்படிஶரீரத்திலேயித்யாதி.) "ஸ்திதேமநஸி" என்று இப்போது சொல்லுகையால்-முன்பு விஷயப்ரவணமாயிருந்தமை தோற்றுகையாலே, அத்தைப்பற்றிவரும்ஸ்மரணவிஶேஷத்தையும், "ஶரீரே-ஸுஸ்வஸ்தே" என்கையால்தோற்றின பூர்வத்திலஸ்வஸ்தையால்ஸித்தகர்மயோகயோக்யதையைப்பற்றிவரும்ஸ்ம்ருதியையும், "மாம்" என்றபதத்தில் விவக்ஷிதமான உபாயபாவத்தைப்பற்றிவரும்நினைவையும், * அஜபதத்திலும் * விஶ்வரூபபதத்திலும் அர்த்தமான ஶக்தி ப்ராப்திகளைப பற்றிவரு மநுஸந்தாநத்தையும் - "ஸ்மர்த்தா" என்றபதத்துக்கு அர்த்தமாகத்திருவுள்ளம்பற்றி, அத்தால் பிறந்த நைர்பர்யாநுஸந்தாநத்தளவு மர்த்தமாகவருளிச்செய்கிறார் (பின்னையித்யாதி,அமையுமென்னுமளவும்.) "தம்" என்றத்தால் ஸக்ருத்தாக ஒருநாள் ஸ்மரித்து மறந்திருந்தவனென்று அர்த்தமருளிச்செய்கிறார் (இப்படியொருநாளித்யாதி.)

http://acharya.org

மூ.—கள்வன்கொல்யானறியேன் கரியானொருகாளைவந்து
வள்ளிமருங்குலென்றன் மடமானினைப்போதவென்று
வெள்ளிவளைக்கைபற்றப் பெற்றதாயரைவிட்டகன்று
அள்ளலம்பூங்கழனி யணியாலிபுகுவர்கொலோ. க.

ப - ரை.—கள்வன்கொல் - கள்ளனோ உடையவனோ, யான் அறியேன்-நானறியமாட்டேன், கரியான் ஒருகாளை வந்து - கறுத்தவனாயொருயௌவநபுருஷன் வந்து, வள்ளிமருங்குல் - நுண்ணிடையையுடைய, என்தன் மடமானினை-நல்ல யுவதியான என்பெண்ணை, போத என்று - வாவாவென்று த்வரைபண்ணி, வெள்ளிவளைக்கைபற்ற-வெள்ளிவளைகளணிந்த கையைப்பிடிக்க, உடனே அவள், பெற்ற தாயரை-பெற்றதாயான என்னை, இட்டு அகன்று-தனியேயிட்டகவிட்டுப்போய், ஒன்றுசேர்ந்த இருவரும், அள்ளல் அம்பூங்கழனி-அழகிய பூக்கள்நிறைந்த நீர்நிலங்களையுடைய, அணி ஆலி-பூஷித்த ஆபரணமான திருவாலியிலே, புகுவர்கொலோ - புகுவார்களோ! என்னவோ! என்று தாயார்தசையைப் பிட்டுக்கொண்டு அருளிச்செய்கிறார்.

அடியேனுக்கு ஒருவார்த்தை யறிவியாதேபோனாள், நான்றான்முடிகூடப்பெற்றிலேன், இருவருமிருவர்க்கு மூமத்தங்காயாய்த்து, என் செய்கிறார்களோ, வழியிலே யென்பிறகிறதோ!'' என்று திருத்தாயார் வயிறடிக்கிறாள். ... ...

[மத்தம்] ஸ்மரிக்கைக்கு யோக்யதையில்லாதவன்று ஸ்மரித்திலே யென்று கைவிடுத்தல் உபாயாயனையோ அவன்பற்றிற்று. [அஹம் ஸ்மராமி] ஐஶ்வர்யகாமனுக்கும், ஆத்மப்ராப்திகாமனுக்கும், பக்திகாமனுக்கும ¶, அந்திமஸ்ம்ருதியுண்டு; இவன் முதலிலேதுடங்கி ஸர்வபரந்யாஸம் பண்ணினவனாகையாலே இவனுக்காக நான்நினைப்பன். [நயாமி பரமாம் கதிம்] இப்படிநினைத்து நானே கைதொடனாய் வந்து கொண்டுபோவன். ஶ்லோகத்வயமென்று, எம்பெருமானுடைய ஸர்வஸ்வமிறே யிவை. ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே வர்த்தித்த வைஷ்ணவன அந்திமஸமயத்தில்பட்ட க்லேஶத்தைக்கண்டு பெரியநம்பிக்கும் எம்பெருமானார்க்கும் பிறந்த ஸம்வாதத்தை† நினைப்பது. ''மத்பக்தம்'' என்கிறவிடமும் பக்திமானையே சொல்லிற்றானாலோ, ப்ரபந்நனைச் சொல்லிற்றென்கைக்கு நியாமகாரென்ன ; அவனுக்கு அந்திமஸம்ஸ்ம்ருதி விதிக்கிற பராஸ்த்ரம். ... ...

"மத்" என்கையாலே தேவதாந்தரங்களை வ்யாவர்த்திக்கிறானென றருளிச்செய்கிறார் (ஸ்மரிக்கைக்கேத்யாதி.) அந்திமஸம்ஸ்ம்ருதிதானு மிவனுக்கு வேண்டா, இவன் பரந்யாஸம் பண்ணுகையாலே நானே அந்தஸ்ம்ருதிதன்னையுமேறிட்டுக் கொள்ளுவனென்கிறானென றருளிச்செய்கிறார் (ஐஶ்வர்யேத்யாதி.) பக்திகாமனென்றது - பக்திஸாத்ய பகவத்ப்ராப்திகாமனென்றபடி. நயாமி எனறதே, "நயாமி" என்கையாலே ஃலித்தஸஹாயராவத்தை யருளிச்செய்கிறார் (இப்படி நினைத்தித்யாதி.)(என்று) என்றவநந்தரம், போராய் என்றபேக்ஷம். ...

¶ "பக்தமமனுக்கும" என றுசில ஸ்ரீகோஶங்களில் காணப்படுகிறதாயினும், பாங்தபாடம்அரும்பதத்துக்குச்சேரும். †"ஸம்மோஹத்தை" என்றும்காண்கிறது.

http://acharya.org

முதற்பாட்டு. (கள்வன்கொலித்யாதி) கள்ளனோ அறிகிறிலேன். கறுத்த நிறத்தையுடையான்

முதற்பாட்டு.— (கள்வன்கொல்) "ஹோரேண" என்று இவனுடைய ஆத்மாபஹாரத்தோபாதியாயிருக்கிறதாய்த்து. உடையவன் தன்னுடைமை கொண்டுபோனதும் என்னதென்றுபோந்த வாஸநையாலே. (கொல்) உடையவன் உடைமைகொண்டுபோனானாகையாலும், காணக்கொடுபோகையாலும், கள்வன் என்னப்போகிறதில்லை ; ஆகிலும், கள்வன் என்னலுமாயிராநின்றது மமகாரத்தினுற்றத்தாலே. (யானறியேன்) காத்துக்கிடக்கிற தானறியாளாகில் கொண்டுபோனவனைப்போலேகாணும் கேட்பது.

அறியாயாகிலும் அறிந்த அம்சத்தைச் சொல்லலாகாதோவென்ன (கரியானித்யாதி) பிள்ளையமுதனார், "கூடுகிடக்க வாளையுருவிக்கொடுபோவாரைப்போலே, தாயாரனைத்துக்கொடுகிடக்கக் கொண்டுபோனான்" என்று நிர்வஹித்தார் ; அத்தைபட்டர்கேட்டருளி, "அத்தனை பணிப்படவேண்டாகாண், சிலகள்ளர்விளக்குக்களையும்பிடித்து 'பிள்ளை, பிள்ளை' என்கிறவளவிலேகொண்டுபோமாப்போலே கொண்டுபோனான் காண்" என்றருளிச்செய்தார்.

முதற்பாட்டு.— வயலாலிமணவாளன வந்துகலந்து கைக்கொண்டுபோனானாகில், அவனை "கள்வன்" என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (ஹோரேணேத்யாதி.) "என்றன் மடமானினை" என்று திருத்தாயார் பண்ணின மமகாரத்தையருளிச்செய்கிறார் (என்னதென்றித்யாதி.) ஆனால் "கொல்" என்று ஸம்சயிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (உடையவனித்யாதி.) "யானறியேன்" என்கைக்கு இனி அறியத்தக்காருண்டோ, இது ஆரைக்கேட்கிறாளென்றருளிச்செய்கிறார் (காத்தித்யாதி.) "யானறியேன்" என்கையால் - அறிந்தாரைக்கேட்கை தோற்றுமென்றுதிருவுள்ளம். இனி அவனைத்தானே கேட்கிறாளாகவேணுமென்று ரஸோக்தி.

இப்படி அவனையே கேட்கிறாளாய்க்கொண்டு இவள் புறப்பட, அசலகத்து நங்கைவந்து ப்ரஸ்நம்பண்ணுகிறாளாக, மேல் "இட்டகன்று" என்றுமளவுக் கவதாரிகை யருளிச்செய்கிறார் (அறியாயாகிலுமித்யாதி.) கரியான் காணக்கொடுபோகச்செய்தே இவள் கொடுபோகவொட்டுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (பிள்ளையமுதனாரித்யாதி.) கூடு - கத்தியுறை. அனைத்துக்கொடுகிடக்க வென்றது- பெண்ணிடத்தில் மமதையாலே கொடுபோக வொட்டாமல் கட்டிக்கொண்டிருக்க வென்றபடி. யத்வா, பிள்ளையமுதனார்க்கு, பெண்ணும் தானுமாய்ப்படுக்கையிலே கிடக்க காணாதபடிவந்து அவன்கொடுபோனானென்று கருத்தாகவுமாம். இப்பக்ஷத்தில், "கரியான்" இத்யாதிகளும் "கைபற்ற" என்றதும - திருவாலிமணவாளன் மேல் பித்தேறினவள் தன்னைவிட்டுப்போகையாலே அவனே வந்தானாகவேணுமென்று ஊஹித்துச் சொல்லுகிறாளென்று நிர்வஹித்துக்கொள்வது. "இப்படியருமைப்படவேணுமோ, பர்யதோஹாரனாய் தானே கொண்டு நடந்தானென்னலாம்" என்னும் பட்டர்நிர்வாஹத்தையருளிச்செய்கிறார் (அத்தையித்யாதி.) பணிப்படவேண்டா - காணாமல்கொண்டுபோனானென்று சொல்லி இத்திருமொழியில் படிகளுக்குப் பொருள்கட்டி அருமைப்படவேண்டாவென்கை. பிள்ளைபிள்ளையென்கிறவளவிலே-பிள்ளைபிள்ளைஎன்றுகூப்பிட்டுக்கொண்டுபின்தொடரச்செய்தேயென்றபடி.

http://acharya.org

ஒரு காளைவந்து.வள்ளியென்றும் மருங்குலென்றும் பர்யாயம்.(வள்ளி யித்யாதி) வல்லிக்கொடிபோன்ற இடையையும்

(ஒரு) வாய்புகுநீரிலே புக்காரைப்போலே, நிறத்தைச்சொல்லாநிற்கச் செய்தேயும் இன்னானென்று நிர்யரிக்கமாட்டாதே, "கஸ்விஷஸ்தி"[ரு என்னுமித்தனையாய்த்து. (காளை)போனவிடம் அவன்குற்றமன்றென்கிறாள்; அவன்பருவத்தின்குற்றம். இவள்போனவிடம்பழி யென்று குற்றமாகச்சொல்லுகிற விவள்தனக்கொரு ப்ராப்தியின்றிக்கேயிருக்கச்செய்தே, அப்பருவத்தைச்சொல்லும்படியிறே அது இவள்தன்னையும் துவக்கினபடி. போன என்மகள்தானும் "இதுபழி" என்று நினையாமையில்லை; அநர்ஹம் பார்த்து மீளவொண்ணாதபடியான பருவத்திற்குற்ற மென்கிறாள். வைரூப்யத்தைவிளைத்து விட்டார்கள் என்று முறைப்படச்சென்றவளிறே "தருனெள" என்றாள் ;† பின்பு சொன்னது பூர்வவாஸனையே அநுவர்த்தித்தபடியாலே. அன்றாகில் தான் பட்டத்தை முறைப்படுகிறநுக்கு இதுஎங்கே உபயோகியாய்ச் சொல்லுகிறாள். நடுவுபிறந்தவற்றையும் ஸம்ஹோமத்தில் நடுவுபிறந்த விமர்ஷத்தோபாதியாக நினைத்திருந்தாள். (வந்து) நிறமும் பருவமுமிவையாலுல் ஸர்ப்பயாகத்தில் ஸர்ப்பங்கள்போலே தானிருந்தவிடத்திலே பெண்பிறந்தாரடையச்சென்று விழவேண்டும்படியிருக்க, வரவுமத்தலையிலேயானால் இவள் போகாதிருப்பளோ. ஆரேனுமாகவுமாம், ஹமவல்லாஹமுண்டாகில் அத்தலையில் வரவல்லதில்லை.

(வள்ளியித்யாதி) அவனைக்கொடுவந்த விஶ்வாமித்ரனைச்சொல்லுகிறது. இவனுடைய அழகாய்த்து அவனையழைப்பித்தது. அவனுக்கு அநேகத்தைச்சொல்லிவைத்து இவனுக்கோரழகைச் சொல்ல அமைந்திருக்கிறதிறே; "மாயனுக்கு" என்று துடங்கி அவனுக்கு அநேகத்தைச்சொல்லி, இவனை "கொங்கலரேலக்குழலி" என்னுமாப்போலே.

மாமியாரான தான் பருவத்தைச் சொல்லக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (இவள்போனவிடமித்யாதி.) மகள்தான் தன்னையும் விட்டுப்போகை பழியென்றறியாளோவென்ன (போனவித்யாதி.) அநர்ஹமுண்டானாலும் விடவேண்டாதபடியாயிருக்குமோ பருவமென்ன வருளிச்செய்கிறார் (வைரூப்யத்தையித்யாதி.) "தருனெள" என்றவள் பின்புதன்வைரூப்பத்தைச் சொல்லிமுறைப்படுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (பின்பித்யாதி.) கொண்டாடினாளென்கைக்கு ஜ்ஞாபகமென்னென்ன வருளிச்செய்கிறார் (அன்றாகிலித்யாதி.) ஆனாலும்நாவிகாமேடித்தைமறந்துஇங்ஙன்சொல்லக் கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (நடுவித்யாதி.) "வந்து" என்கையாலே-ஸ்வாபதேஶத்தில் பரமதஸ்வீகாரமேயுஷ்தேஶயமென்றுதோற்றமென்கிறார்(ஆரேனுமித்யாதி.)வல்லிஎன்றது-"வள்ளி"என்றுகிடக்கிறதாய், அதுபோலேயிருக்கிறஇடையைவர்ணிக்கைக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார்(அவனையித்யாதி.) அழகுஅழைப்பித்ததென்கைக்குஙியாகமமென்னென்ன வருளிச்செய்கிறார்(அவனுக்கித்யாதி.)

---

† "பின்பும் பூர்வவாஸனையே" என்று சில ஸ்ரீகோஶங்கள்.

http://acharya.org

மடப்பத்தையுமுடையளாய், மான்போன்ற விழியையுடைய என் பெண்பிள்ளையை, போகஎன்று. (வெள்ளிவளைக்கைப்பிடித்யாதி) வெள்ளி வளையிட்ட கையைப்பிடிக்கப்பெற்ற தாயரைவிட்டுப்போய்.

(என்றன்மடமானினை) என்மகளாவது, முக்மையாவது — தன்று ஸௌகுமார்யத்தையாதல், ஸ்த்ரீத்வத்தையாதல், போகிற வழியி லருமையாதல், இவையொன்றையும் நினைக்கமாட்டாத முக்மையிறே. (என்றன்) அவன்வந்து கொடுபோகப்புக்கவாறே, "என்மகள்" என்று தானுமொருதலைபற்றுகிருள். (போகவென்று) "உக்தமர்யமிமதுர" என்றுரைத்து. சர்வஜ்ஞாவந்து "போக, போக" என்று தாய்த்து. ஸர்வேச்வரனைப்பிடிக்கைக்கு இவன்பண்ணும் கர்மஜ்ஞாநம்போலே, அவன்றனிவிடப் பெறுகைக்கு பண்ணின வாயநாநுஷ்டாநமிருக் கிறபடி. (வெள்ளிவளைக்கைபற்ற) உக்தியிலேநுவைக்கன்றி ஸ்தவ்யய யாய்நின்றுள்; அவ்வளவிலேவந்து கையைப்பிடித்தான்; "மமா ணிக்ஷீதஷ்பாணிர்வால்யே வாலேநபீவிதா" என்கிறபடியே - பிடித்த பிடியிலே "அங்கண்ணனுண்ட வென்றுநயிர்க்கோகிறு" என்னும்படி யாய்த்துப் பிடித்தது. முன்பு நெடுங்காலம் தாய்பக்கல் பண்ணின வா ஸனை முதலடியிலேவந்து கழியும்படியாய்த்து பற்றினபடி. ‡ இடை ச்சிகள் பொன்னையும் மாணிக்கத்தையுமழியமாறி வெள்ளிவளையாய்க் கிடுவது.

பற்றினபடிவிதூற்றமெய்வளவு போமிமென்னில் (பெற்ற தாயரை) தான்வளர்த்துக்கொண்ட தாயோ நினைக்கபோது பொகட்டுப்போகை க்கு. (இட்டு) பொகட்டுப்போகாநின்றாலும், பொகட்டேனென்னும் அநுதாபமும் நெஞ்சிலே கிடக்கவுமாமிறே. சிலஅவேதுகங்களை பொகட்டுப்போமாப்போலே பொகட்டு. (அகன்று) தான் விட்டாளும் நமக்குத்தொடர்ந்து சென்று பற்றவொண்ணும்படி ஸாதூரியம்போய்.

(முக்மையாவது) என்றவநுஸம், "போக" என்கைக்குமேஹது எனவுமுமாம். காளையானவன்கருதியும்படியான பருவத்தால ஸௌகுமார்யத்தையும், "மடம்"என்றபதத்தால் ஸ்த்ரீத்வத்தையும், "அள்ளலம்பூங்கழனி"என்றபதத் தையும் கடாக்ஷித்து முக்மையைவிவரிக்கிருர் (சன்னித்யாதி.) பிள்ளையுறங்கா நிர்வாஹத்தில் முற்கினவேயாத்தையப்பறவருளிச்செய்கிருர் (அவன்வந்தித்யாதி.) "உக்தமர்யமிமதுர" என்று - தன்கீழ்ஸ்த்ரீயைத் தானே ஸங்கோசமறக்கைவிடுத் தாப்போலே, தன்கீழ்ப்பெண்பிள்ளையைத்தான் "போக" என்றுவிடுத்தாளென்கை.

கீழ்த் தான் ஸாபராநுஷ்டாநம் பண்ணியிருக்க, கையைப்பற்றவானென்னெ ன்ன (உக்தியிலேயித்யாதி.) கையைப்பிடித்தானாகிலும் தாய்க்கஞ்சிவிடவிட்டுக்கொ ளளவொண்ணுதோவென்ன (மமாணிக்ஷீதஇத்யாதி;) இளம்பருவத்தில் பிடித்த பிடியிலே அளவுபடப்பிடிக்கப்பட்ட தில்லையாய்த்து."கை" எனகையாலே - ஸம்ப லேஷரஸமறாவிக்குமளவும்பற்றினபற்றவிட்டாளில்லையென்றுதோற்றுகையால், அப்படி இவளையுமுண்டு கோதாக்கினனென்கிறு னென்று திருவுள்ளம்.

(போகைக்கு) என்றவநுஸம், க்லேஷணேப்போலேஎன்று பேஷம். "அக ன்று" என்று மேலிருக்கச்செய்தே, "இட்டு" என்றதுக்குக்கருத்து (பொக ட்டித்யாதி.)

‡ "ஐச்வர்யமில்லையோ, 'வெள்ளி' என்கிற தென்னென்ன யருளிச்செயகிருர் (இடைச்சிகளித்யாதி)" என்று அரும்பதாநுஸம்.

http://acharya.org

மூ.—பண்டிவனாயன்நங்காய் படிறன்புகுந்தென்மகள்தன்
தொண்டையஞ்செங்கனிவாய் நுகர்ந்தானையுகந்தவன்பின்
கெண்டையொண்கண்மிளிரக் கிளிபோல்மிழற்றிநடந்து
வண்டமர்கானல்மல்கும் வயலாலிபுகுவர்கொலோ. ௨.

ப - ரை.— நங்காய் - அசலகத்துப்பெண்ணே, இவன் - இந்தயுவாவானவன், பண்டு - முன்னெல்லாம், ஆயன் படிறன்-திருவாய்ப்பாடியில்பெண்களைத்திருடும் இடையக்கள்ளனாயிருந்தான்; இப்போது, புகுந்து - அகத்தில் ப்ரத்யக்ஷமாக ப்ரவேசித்து, என்மகள்தன் - பருவம் நிறைந்த என்பெண்ணினுடைய, தொண்டை அம் செங்கனிவாய் நுகர்ந்தானை -கொவ்வைக்கனிபோற்சிவந்த அதராம்ருத ஸம்ர்தபாநம் பண்ணின அவனை, உகந்து - என்பெண்ணானவள் விரும்பிக்கொண்டு, கெண்டை ஒண் கண்மிளிர - கெண்டைபோலே அழகிய திருக்கண்கள் அபூர்வதர்சநத்தாலே அகன்மிளிர்ந்திட, கிளிபோல்மிழற்றி - கிளிபோலே மெல்லிய வார்த்தைகள்பேசிக்கொண்டு, அவன்பின்நடந்து - அவனுடையபின்னேயே நடந்துபோய், சேர்ந்துகொண்ட அவ்விருவரும், வண்டு அமர் - வண்டுகள்நிறைந்த, கானல் மல்கும்வயல்-கடற்கரைச்சோலைகளும் கழனிகளையுமுடைய, ஆலி - திருவாலியிலே, புகுவர்கொலோ - புகுவார்களோ, என்னவோ, இந்தக் கேம் நிர்த்திருவென்று சொல்லும் தாய்மார்த்தை ப்ரகாசிப்பிக்கின்றார். ... ... (௨)

(அன்னவசிந்யாதி) அநச்சேருய் அழகிய பொழில்களையுடைத்தான தழனிகளையுடைய அழகிய திருவாலியிலே புகுவர்களோ? லங்காபுரி ப்ராந்த்தியிலே புகுவர்களோ. ... ... க.

(அன்னவசிந்யாதி) இன்று செல்லக்கழிந்தால் பின்னைமாறியிருமடி புகின்றவிடத்திலே யாம்படியான தேசமாய்த்து. "பாருருவும் மேவ பங்கஜா" என்னும்படியாலே அது தானவருக்கு ஆவாஸகமாயிற்று. (அன்னவசி வளராத்தந்திருவாலியைத்திருவாலி.(புகுவர்கொலோ) ¶ இருவரும்கூடப்புகுவராய்த்து ; - மாயாம்சத்தைத்தப்பித் தந்தார் என்னாமல், அத்தைத்தப்பிப்பதாக அவன்பின்னேபோவாரும். லங்காத்வாரத்திலே சென்று நிற்கலாகாதோ † என்று நிலைமைகேட்டுத்தேசியாரநீயிலே பகலே புக்கார்களாகவல்லர்களோ. இருவருமொருவர்க் கொருவர் அழகுங்காலாய்த்து. ... ... க.

"அன்னல்" என்று - சேருய், அதிலேயிருக்கிற அழகிய பூக்களுடைய கழனியென்று புஷ்பஸம்ருத்தியைத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவ்வாதிந்யாதி.) இவ்வாறென்று - திருமங்கையென்றபடி. தன்பெண்பிள்ளையின் ஸௌகுமார்யத்தை யறிந்து அவளுக்குத்தக்கபடி மடிப்புடவை யிவ்வாலிலிருந்து வைத்தானாகக் கொண்டு அவ்வாலில் பூவிலே அடியிடுகைக்குத் தாயானவள் க்லேசிக்கிற தென்னென்ன வருளிச்செய்கிறார் (பாதேத்யாதி.) ¶ ... ... க.

இரண்டாம்பாட்டு.— (பண்டித்யாதி.) கீழ்ப்பாட்டில் - தன்ஸௌந்தர்யாதிகளைக்காட்டி வார்த்தைசொல்லிக் கையைப்பிடித்தானுகையாலே என்னை யிட்டுப்போனுளென்றாள் ; அப்படியன்றிக்கே, அவன் புருஷார்த்தவ்யாபாரங்களாகிற அம்மானைப்பொடிபோட தானே நடந்தாள் கடாயென்று அசலகத்து நங்கையோடு சொல்லுகிறாளென்று ஸங்கதி.

¶ "ஸமாயமென்னென்ன வருளிச்செய்கிறார் (இருவருமித்யாதி.) மூம்யதை- ஒருவாக்கொருவர்வைலக்ஷண்யத்திலேயீடுபட்டு அறிவழிந்திருக்கை. (போவாரும்) ஆயிரோயிருப்பது என்றபூரிப்பது" என்று அரும்பதாஷம். † "சென்று நிற்கலா காதோ" என்றும் காண்கிறது.

http://acharya.org

இரண்டாம்பாட்டு. (பண்டித்யாதி) பண்டிவன்க்ருஷ்ணனாய்த் திருவாய்ப்பாடியில் பெண்களையும் வெண்ணெய்களையும் களவுகண்டு திரிந்தவன். (படிறன்) கள்ளன். இன்று புகுந்து என்மகளுடைய தொண்டைபோலே சிவந்து அழகியகனிபோலே யினிதாய வாயை[நு நுகர்ந்து ஸம்ஜித்தவனையுகந்து. (அவன்பினித்யாதி) அவன்பின்னே, கெண்டைபோலே அழகியகண்ணனது மிளிரக் கிளிபோலே பேசி நடந்து.

இரண்டாம்பாட்டு.— (பண்டிவனாயன்நங்காய்) பண்டிவன் சக்ரவர்த்தித் திருமகனென்னுமாப்போலே இப்போதை அவஸ்தையை. வெண்ணெய்களவுகாணப்புக்கு அக்களவு தலைக்கட்டமாட்டாத இளிம்பன் கிடீர் என்மகளையிப்படி செய்தான்!. அங்ஙனன்றிக்கே, பண்டிவன் *காடுவாழ்சாதி, இப்போது நாகரிகனானான்.—(படிறன்புகுந்து) பண்டு, காணாமல் களவுகாணுமித்தனை ; இப்போது, பரிபவதோஹரானான். (என்மகளித்யாதி) ஸௌந்தர்யாதிகளால் தோற்பிக்கையன்றிக்கே ப்ரணயரிஸைரையில் வைஷம்யத்தாலே தோற்பிப்பதே !. (அவன்பின்) *பேதைநின்னைப்பிரியேனினி யென்றகன்றவன்பின்பு. தோற்கும்படி சில வ்யாபாரங்களைப்பண்ணினானத்தனையல்லது, "போரு" என்றழைத்திலன். வாமம்ஜீதமான (க) அம்மான்பொடியையிட்டுக் கொண்டுபோன படி. (கெண்டையொண்கண்மிளிர) அபூர்வதர்சநங்களாலே கண்ட பதார்த்தங்களை "இவையென்ன, வினவு" என்று கண்ணாலே கேட்கை. (கிளிபோல்மிழற்றி) கண்ணால்கேட்டுக்கேளாதவற்றை வாயாலே கேட்டு. (நடந்து) அவனுக்கு முன்னேக்கிப்போகவொண்ணாதபடி அவன் பின்னே நடந்து.

இவளிப்போது பெண்பிள்ளையைக்கொண்டு நடந்த ஆதரன், பண்டு இடையன் கிடாய் என்று ஸம்ஸ்தார்யமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (பண்டித்யாதி.) பண்டு ஆயனானவன் இப்போதை அவஸ்தையில சக்ரவர்த்தித்திருமகனைப்போலே ஆதாரனானென்கை. முன்புத்தையில் ஆதார்யத்தையும் இப்போதையில் ஆதார்யத்தையும் காட்டுகிறார் (வெண்ணெயித்யாதி.) இவன் திருவாலிதிருநகரியில் வஸிக்கும், இவன் பண்டு ஆயன், காடுறைகிடாயென்று ஸம்ஸ்தார்யம் விவக்ஷித்து, தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (அங்ஙனன்றிக்கேயித்யாதி.) படிறன் - பரிபவதோஹரனென்றாய், ஷட்டீ நிர்வாஹத்தில் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பண்டுகாணாமலித்யாதி.) ப்ரணயஸீமையில் - ப்ரணயமரியாதையில். கீழே "இவன்" என்று சொல்லி வைத்து, இப்போது "அவன்" என்றுசொன்னதுக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (பேதையித்யாதி.) போரு என்று - வாஎன்று. பின்னை என்செயதானென்ன (வாமித்யாதி.) வினவென்று-சொல்லென்றபடி. இவள் முன்னடந்தாளாகில் *உன்மத்த ப்ரவ்ருத்திக்கு ஸ்ரீராமப்ராப்திபோலே ஒருபடி திருவாலியிற் புகலாயிருக்கும் ; இவள் பின்னடக்கையாலே புதுமையில் ஸம்சயிக்கவேண்டிற்று என்னும் ஹாவம் ஸ்வாரிக்கத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனுக்கித்யாதி.)

(க) அம்மான்பொடி -வசீகரணஸாதநமான மூலிகாசூர்ணம், அதாவது-கள்ளர் பாலர்களைவசீகரிக்கைக்காகஅவர்கள்மேலேஅம்மான்என்றுசொல்லிஒருபொடிவிசேஷத்தைத்தூவினால்அந்தபாலர்கள், கள்ளர்பின்னே "அம்மான், அம்மான்" என்றுசொல்லிக்கொண்டு போவர்கள்; அந்தப்பொடியென்றபடி. அப்படியே, ஆச்சர்யமாகவசீகரிக்கும் ஸௌந்தர்யாதிகளைச்சொல்லுகிறது.

http://acharya.org

மூ.— அஞ்சுவன்வெஞ்சொல் நங்கா யரக்கர்குலப்பாவைதன்னை
வெஞ்சின மூக்கரிந்தவிறலோன்திறம்கேட்கில்மெய்யே
பஞ்சியமெல்லடியெம்பணைத்தோளி பரக்கழிந்து
வஞ்சியந்தண்பணை சூழ் வயலாலிபுகுவர்கொலோ. ௫.

ப - ரை.— வெஞ்சொல் - வீண்கொடுமைசொல்லுகிற, நங்காய் - அசலகத்துப்பெண்ணே, அரக்கர்குலப்பாவைதன்னை - ராக்ஷஸகுலத்துக்கெல்லாமொருபெண்ணாய்க்கொண்டாடப்பட்ட சூர்ப்பநகையினது, வெஞ்சினமூக்கு - கூரியமூக்கினை, அரிந்த - அறுத்தழகழித்த, விறலோன் - மிடுக்கையுடைய அந்தயுவாவினது, திறம்-ப்ரகாரத்தை, கேட்கில - இப்போதுகேட்டால், மெய்யே அஞ்சுவன்-போனகாலமுத்திலது நிகழ்காலம்போலே தோற்றிப்பயப்படுவேன்; அப்படியிருக்க, பஞ்சிய மெல்லடி-செம்பஞ்சூட்டிய ம்ருதுவான பாதங்களையும், எம்பணைத்தோளி-மூங்கில்போன்றபுஜங்களையுமுடைய எம்பெண்ணானவள், பரக்கு அழிந்து - அடக்கமின்றி, அவனோடுசேர்ந்துகொள்ள, அவ்விருவரும், வஞ்சி-கொடிக்கூட்டங்களாலும், அம்-அழகிய, தண்பணை-குளிர்ந்தமூங்கிற்புதர்களாலும், சூழ்-சூழப்பட்ட, வயல்-கழனியையுடைய, ஆலி-திருவாலியிலே, புகுவர்கொலோ-புகுவாரோ, என்னவோ. (௫)

(வண்டமரித்யாதி) வண்டுகள்மொய்க்கிற நெய்தல்நிலத்தில் கழிமிக்க வயலாலி புகுவர்கொலோ. ... ... ௨.

மூன்றும்பாட்டு. (அஞ்சுவனித்யாதி) இப்பாட்டை பட்டரருளிச்செய்து, "ஒருஸ்த்ரீயை விரூபையாக்கினவன் திறங்கேட்கிலஞ்சுவனென்கையால் இத்தலைக்கு ஸஹாநியாய்த்தோற்றுகின்றது, இத்தை

(வண்டித்யாதி) "நவபுராவர்த்தநே" என்றுபுக்கதிர்யக்குக்களுங்கூடயிளாதுவூரிலே புகுவர்கொலோ. தனக்காசைப்படவேண்டாஎன்கிருள்.

மூன்றும்பாட்டு.—(அஞ்சுவனித்யாதி) (அரக்கர்குலப்பாவைதுடங்கி, மெய்யே — அஞ்சுவன்) பட்டர் இப்பாட்டை யருளிச்செய்து, "ஒரு ஸ்த்ரீயை விரூபையாக்கினவனுடைய திறம்கேட்கில் அஞ்சுவன் என்கையால் — இத்தலைக்கு ஸஹாநியாய்த் தோற்றுகின்றது,

"கானல்" என்று-காடாய், காடுபோலேயிருக்கிற தோப்புக்களின் ஸம்ருத்தியைச்சொல்லி, அத்தை "வண்டமர்" என்று விசேஷித்ததுக்கு ப்ரக்ஷதோபயோகம் காட்டுகிறார் (நவேத்யாதி.) ... ... ௨.

மூன்றும்பாட்டு.— (அஞ்சுவனித்யாதி.) கீழ்ப்பாட்டிலே "அவன்பின் கெண்டையொண்கண்மிளிரக் கிளிபோல்மிழற்றி" என்கையாலே - "அக்ரதஃப்ரயயௌ ராம: ஸீதாமத்யே ஸுமத்யமா" என்று கூடப்போனபோது வழியில்கண்டவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு நடந்தாப்போலே போனபடிதோன்றுகையால், அநந்தரம் அவ்விடத்திலே சூர்பணகைவந்தது இருவர்க்கும் பிரிவுவருகைக்கு மூலமானபடியை நினைத்து, திருத்தாயாரஞ்சுகிருளென்று ஸங்கதி.

அந்வயம்காட்டுகிறார் (அரக்கரித்யாதி.) தன்னை யாசைப்பட்டுவந்த ஸ்த்ரீயை மூக்கரிந்தாப்போலே இவளையும்செய்து விடுகிருனோ என்றஞ்சுகிருளென்ருல் கீழ்ச்சொன்ன ப்ரணயித்வத்துக்கு ஸஹாநிவாராதோ, இது ப்ரகரணத்தோடுசேருமபடியெவ்வென்னும் சங்கையை ஸமவாதமுவத்தாலே யருளிச்செய்கிருர் (பட்டரித்யாதி.) இத்தலைக்கு - ஸமவஷ்விஷயத்துக்கு.

http://acharya.org

ஆழ்வாரருளிச்செய்துவைத்தார், இதெங்ஙனே சேரும்படி?'' என்று ஆச்சானைக்கேட்க; "எம்பெருமானார்தாமே யருளிச்செய்துவைத்தார்'' என்ன; "அருளிச்செய்தபடி யெங்ஙனே?'' என்றுகேட்க; "முன்பொருபுணர்ந்துடன்போக்கிலே பிறந்த ப்ரமாதத்தைக்கேட்டு, அத்தைநினைத்து இப்போது பயப்படுகிறாள்'' என்றருளிச்செய்தார். (மெய்யே – அஞ்சுவன்) பூதகாலத்திலது வர்த்தமானகாலம்போலே தோற்றி பயப்படுகிறாள். (அரக்கரித்யாதி) ராக்ஷஸகுலத்துக்கொரு பெண்ணைக்கொண்டாடப்பட்டவளை, "சீதைக்குநேராவன்'' என்று சினத்துவந்தவளை * செவியொடு மூக்கவளரிந்த மிடுக்கன் ப்ரகாரத்தைக்கேட்கில். (பஞ்சியவித்யாதி) பஞ்சொத்தமெல்லிய அடியையுடையவளாய், மூங்கில்போன்ற தோளையுடைய என்பெண்பிள்ளை அடக்கமின்றி. பரக்கு-அடக்கம், அழிந்தென்றபடி.

இது ஆழ்வாரருளிச்செய்யக்கூடாது, இதெங்ஙனே சேரும்படி?'' என்று ஆச்சானைக்கேட்க; "துடிப்பிருக்கக் கைவேகவேணுமோ, எம்பெருமானார்தாமே யருளிச்செய்து வைத்தாரிறே'' என்ன; "அருளிச்செய்தபடியெங்ஙனே?'' என்றுகேட்க; "முன்பொரு புணர்ந்துடன்போக்கிலேபிறந்த ப்ரமாதத்தைக்கேட்டு அத்தைநினைத்து இப்போது பயப்படுகிறாள்''என்றருளிச்செய்தார். (மெய்யே-அஞ்சுவன்) அது பூதகாலத்திலே, இது வர்த்தமானகாலத்திலே என்று தோற்றுகிறதில்லை; ஏககாலத்திற்போலே பயமாகாநின்றது.—(பஞ்சியமெல்லடி) இதுபடுக்கையிலிருக்கிலும் † பயப்படவேண்டும்படி பஞ்சு—வொளரடியுடையவள். (எம்பணைத்தோளி) சுற்றுடைமை, பசுமை, ஒழுங்கு, இவையெல்லாவற்றாலும் மூங்கில்போன்றிருந்துள்ள தோளையுடையவள். (பரக்கழிந்து) பழியஞ்சாதே. பரக்கழிவு – மிகவும் கழிவென்றுமாம்.

உடன்போக்கிலே பிறந்தப்ரமாதமாவது - சக்ரவர்த்திதிருமகனோடே பிராட்டியும் கூடப்போகிறபோது சூர்ப்பணகைவந்ததேயாய், அவள்வாலே ப்ரமாதத்தை விளைத்தாப்போலே, இவர்களுடையபோக்கிலுமென்ன ப்ரமாதம்வருமோ என்று பயப்படுகிறாளென்று எம்பெருமானார் நிர்வாஹம்; அத்தை யருளிச்செய்கிறார் (முன்பித்யாதி.) புணர்ந்து - திருவயோத்யையிலே "ஸமாஷ்வாதுஸாதத்ராஹம்'' என்கிறபடியே ஸம்ச்லேஷித்து. அரக்கருடையகுலத்துக்கு கொலவிமுலைப்பாவைபோலே கொண்டாடப்படுமவளான சூர்ப்பணகைதன்னை அவனுடைய வெவ்விய சினமடியாக மூக்கரிந்திட்டமிடுக்கையுடையவன் விஷயத்தைக்கேட்டால் மெய்யேயஞ்சுவன், இதுவெஞ்சொல்கிடாய் நங்காய் என்றுவாக்யார்யமாகக்கொள்வது.

"பஞ்சிய'' என்று விசேஷித் திருக்கவும், "மெல்'' என்றதுக்குக்கருத்தருளிச்செய்கிறார் (இதித்யாதி.) (இதுபடுக்கையில்) என்று சிலஸ்ரீகோசங்களில் பாடமுண்டு; (இதுகையில்) என்று சிலவற்றிலுமுண்டு; இப்போது, இது-இவ்வடி, கையிலிருக்கிலும் - மடியிலிருக்கிலும் என்றர்த்தம்கொள்வது. "பரக்கு -'' பழியாய், அத்தால்வரும் பயமழிந்து என்று ஸங்க்ஷார்த்தமாயருளிச்செய்கிறார் (பழியஞ்சாதேயென்று.) பர - மிகவும், கழிந்து என்று பிரித்தருளிச்செய்கிறார் (மிகவுமித்யாதி.)

---

† அரும்பதத்துக்கநுகுணமாக "இதுகையிலிருக்கிலும்'' என்றுசிலஸ்ரீகோசங்கள்.

http://acharya.org

மூ.—ஏதவன்தொல்பிறப்பிளையவன் வளையூதி மன்னர்
தூதுவனாயவனூர்சொல்லுவீர்கள் சொல்லீரறியேன்
மாதவன்றன்றுணையாநடந்தாள் தடஞ்சூழ்புறவில்
போதுவண்டாடுசெம்மல் புனலாலிபுகுவர்கொலோ. ௪.

ப - ரை.—அவன - அந்தயுவாவின், தொல்பிறப்பு - பூர்வஜந்மமானது, ஏது அறியேன்-க்ஷத்ரியஜந்மமோ, இடையர்ஜந்மமோ, ஏதென்று நானறியமாட்டேன்; ஆகிலும், இளையவன் - பாலிசன், வளையூதி - சங்கநாதத்தால் தானிற்குமிடத்தை வெளியிடுமவன், மன்னர் - ராஜாக்களுக்கு, தூதுவனாயவன் - கழுத்திலே ஓலைகட்டிக்கொடு தூதுபோனவனுமான அவனுடைய, ஊர்-ஜந்மத்தை, சொல்லுவீர்கள்-[மு]ஈதென்றறிந்து சொல்லவல்லவர்களே, சொல்லீர்-உண்மையாக இதுவென்று சொல்லுங்கள்; ... மாதவன்-ஸ்ரீ பதிஎன்கிற நாமமேகொண்டு, தன் துணையாநடந்தாள்-அவன் தனக்குஸஹாயமாமபடி நடந்துபோனாள், போன அவ்விருவரும, வண்டு - வண்டுகளானவை, தடஞ்சூழ் - தடாகங்களாற்சூழப்பட்ட, புறவில் - ... அலர்ந்த, செம்மல்போது - பெரியபூக்களிலே, ஆடு-மதுபானத்தினால் ... புனலாலி - நீர்வளம் நிறைந்த திருவாலியில், புகுவர்கொலோ - ... என்னவோ. ... ... (௪)

(...) ... அழகிய பணைகளாலும் சூழப்பட்ட ... திருவாலி ... . ௩.

நாலாம்பாட்டு. (ஏதவனித்யாதி) க்ஷத்ரியஜந்மமோ, கோபஜந்மமோ; அவன் ... ; "பற்றார்நடுங்க முன் பாஞ்சசன்னியத்தை வாய்வைத்த" என்றபடியே-திருப்பவளத்திலே சங்கை வைத்து ... மவன். எதிரிகள், இவனூதப்பறந்துபோவர்கள். (மன்னரித்யாதி) ராஜாக்களுக்குக் கழுத்திலேயோலைகட்டித் தூதுபோமவன்.

(...) தனக்கு உபமாநமுள்ள தேஶத்தேறப்புகுமோ. ௩.

நாலாம்பாட்டு.—(ஏது அவன் தொல்பிறப்பு) க்ஷத்ரியஜந்மமோ, இடையர்ஜந்மமோ, அறியேன். (இளையவன்) பாலிசன். (வளையூதி) தான் நின்றவிடத்தை வெளியிடுமவன். (மன்னர் தூதுவனாயவனூர்) உகவாதாரிருக்குமிடத்தே வெறுங்கையே செல்லுமவனுடையவூர்.

உபமாநமென்றது - ... கொம்பும், மூங்கிலுமென்றபடி. ... ௩.

நாலாம்பாட்டு.—(ஏதவனித்யாதி.) நங்கையானவள், "நீயேனஞ்சுகிறாய், அவன் ... குலத்தில் பிறந்த ஆண்பிள்ளையன்றோ, விரோதிகளைக் கிழங்கெடுக்கவல்லன் காணாய்" என்ன; அதுக்குத்தரமாக, அவன் பிடிக்கனுமை சக்ரவர்த்தித்திருமகனோ இடையனோ எனக்குத்தெரிகிறதில்லை, நீங்கள் எவனைச்சந்திர அவன் க்ஷத்ரியன் என்றுசொன்னால் சொல்லுங்கோள், எனக்குநிர்ணயிக்கப்போகிறதில்லை யென்கிறாளென்று ஸங்கதி.

"அவனதொல்பிறப்பு - ஏது" என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி, தாத்பர்யமருளிச்செய்கிறார் (க்ஷத்ரியேத்யாதி.) நீயறிந்தபடிதானேதென்ன; சொல்லுகிறதாகத்திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (பாலிசனென்று;) வினைவதறியாதே யொன்றைச்செய்யுமவனென்கை. இதெங்கேகண்டாயென்ன; சொல்லுகிறாளாகத்திருவுள்ளம்பற்றி, ஸ்ரீருக்மிணிப்பிராட்டிக்காக, அந்தபுரச்சோலையிலே ஶிஶுபாலாதிகளறியும்படி சங்கூதவில்லையோ என்னும் பாவத்தையருளிச்செய்கிறார் (தானித்யாதி.) * அதிர்குரல்முரசங்களன்றே, விரோதிகள்மண்ணுண்ணார்களோவென்ன; ஆயுயங்களைப்பொகட்டுத்தூதுபோனவனன்றோ என்கிறாளென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (உகவாதாரித்யாதி.)

http://acharya.org

(ஊரித்யாதி) அவனூரின்னதூரென்று சொல்லவல்லிகோளே, நானறிகிலேன். (மாதவனித்யாதி) அம்பிதுணையாக ஆறிழிந்து, அவனைத் துணையாகப்பற்றிப்போனாள். (தடமித்யாதி) தடாகங்களாலேசூழப்பட்ட பர்யந்தங்களிலே பெரியபூக்களிலே வண்டுகள்மதுபாநம்பண்ணும் புனலாலி. செம்மல் – பெருமையும், அழகும், பூவும். ... ௪.

(அவனூர்சொல்லுவீர்கள் சொல்லீரறியேன்) க்ஷத்ரியஜந்மத்திலே பிறந்தான் என்றுசைப்படுவார், இடையனாய்ப்பிறந்தான் என்றுசைப்படுவாராய், ஆசைப்படாநின்றிகோள்; எனக்கிரண்டும் தோற்றுகிறதில்லை.—(மாதவனித்யாதி) ஆழங்காலே மிதப்பென்று வ்யவஸாயம்பண்ணினாள். அளவுடையவர்களகப்பட்ட விஷயமென்றால், தனக்கு நிலமன்றென்று மீளவறியாதேபோனாள்.—(தடஞ்சூழித்யாதி) அவ்வூரில் பூக்களலர்ந்தபோது தேன்வெள்ளத்தாலே வண்டுகளுக்கு இழிந்துபாநம்பண்ணப்போகாது. கழியவலர்ந்து மதுவெள்ளம் அரையாறுபட்டாலாய்த்து வண்டுகளுக்கு பாநம்பண்ணலாவது. கழியவலர்ந்த பூக்கள் தேடி வண்டுகள் மதுபாநம்பண்ணும் திருவாலியிலே புகுவர்கொலோ. போது - புதுப்பூ. அப்போதலர்ந்தபூ. செம்மல் – பெருமையும், பழமையும், பூவும். ... ... ௪.

வெறுங்கையோடுபோகிலும், "அஞ்சனகுஞ்சிபிடித்தடித்தபிரான்" என்கிறபடியே முடிக்கவல்ல குடியிற்பிறந்தவன்கிடாய் யாதவகுலத்திற் பிறந்தானென்ன; நீங்கள்வேண்டினபடி சொல்லுங்கோள், எனக்கச்சந்திருக்கைக்குடலல்ல வென்கிறாளென் றருளிச்செய்கிறார் (க்ஷத்ரியேத்யாதி.) "ஊர்" என்றது - குடியாய், ஜந்மத்தைச்சொல்லுகிறது. இரண்டும் தோற்றுகிறதில்லையென்றது - இடையனானும் க்ஷத்ரியனானும் நிர்ணயமாயிருக்கைக்குடலாகத் தோற்றுகிறதில்லையென்கை.

க்ஷத்ரியனானு லென்னையம் திராதென்ன (மாதவனித்யாதி.) சொல்லுகிறாளாக உட்கருத்து (ஆழங்காலித்யாதி;) பிராட்டி வாஹுபலத்தை விச்வஸித்துப் போயிருக்கச்செய்தேயும் அதுதானே மூச்சரிகைச்சுடலாய்ப் பிரிவுவிளைத்ததே; அவள் "ஸீதோ ஹவ" என்னவல்லவள், "ஹஸ்மீ ஹவ" என்னவும் வல்லளிவள். "மடமான்" என்னும் ஹாவத்தையுமுட்கொண்டு கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் (அளவித்யாதி.) ... ... ௪.

அஞ்சாம்பாட்டு.— (தாயெனையித்யாதி.) நீ "மாதவன்றன் துணையாநடந்தாள்" என்று வயிறுபிடிக்கிறதென், இப்படிப்பட்டவுன்னைவிட்டு அவன்பின்போகைக்கு ஹேது வென்னென்ன; அவன்ஸௌந்தர்யத்தையேபார்த்து ப்ரணயித்வத்தைநச்சி நடந்தாள்காணென்கிறாரென்று ஸங்கதி.

http://acharya.org

மூ.—தாயெனையென்றிரங்காள் தடந்தோளிதனக்கமைந்த
மாயனைமாதவனைமதித்தென்னையகன்றவிவள் †
வேயனதோள்விசிறிப்பெடையன்னமெனநடந்து
போயினபூங்கொடியாள் புனலாலிபுகுவர்கொலோ. ரு.

ப - ரை.—தடம்தோளி - பெரியதோள்களையுடைய இவள், எனை-மணம்வருந்தும்என்னை, தாய்என்றுஇரங்காள் - பெற்றதாயென்றும் க்ருபைபண்ணிப்பாராள்; தனக்கு அமைந்த-தன்ஸௌந்தர்யாதிகுணங்களுக்குத்தகுந்த ரூபலாவண்யாதிகளையுடையவனாகிய, மாயனை மாதவனை-ஆச்சர்யபூதனான ஸ்ரீயப்பதியையே, மதித்து-தஞ்சமாகநினைத்து, என்னை அகன்று - என்னைத்தனியேவிட்டுநீங்கி,வேய்அனதோள் விசிறி - மூங்கில்போன்ற தோளை வீசிக்கொண்டு, பெடைஅன்னம் என - அன்னப்பெடைபோல், அவன்பின்நடந்து போயின - அவன்பின்னேயே நடந்துபோன, பூங்கொடியாள்-அழகிய கொடிபோலுமிடையையுடைய என்பெண்ணும், அவனும், புனல்ஆலி-நீர்வளமிகுந்ததிருவாலியிலே, புகுவர்கொலோ-புகுவாரோ, என்னவோ.

அஞ்சாம்பாட்டு. (தாயெனையித்யாதி) என்னைத்தாயென்று க்ருபைபண்ணிற்றிலள். (தடந்தோளியித்யாதி) மிக்கஸௌந்தர்யதாப்ரகர்ஷத்தையுடைய தோளழகையுடையவள், தனக்குச்சேர்ந்த அழகையுடைய ஆச்சர்யபூதனைத்தஞ்சமாக நினைத்து, என்னைவிட்டு, அவன்பின்னே. (வேயனவித்யாதி) வேய்போன்றதோளைவீசி, அன்னப்பெடைபோல் நடந்துபோன அழகிய கொடிபோன்ற இடையை[உம்]யுடையவள். ... ... ரு.

அஞ்சாம்பாட்டு.— (தாயெனையென்றிரங்காள்) தாய்வயிறெரியும் என்றிரங்குகிறிலள். (தடந்தோளிதனக்கமைந்தமாயனை) அவனுடைய ஸர்வாங்கஸௌந்தர்யமும், இவளுடைய தோளழகொன்றுக்கும்போருமத்தனை. (மாதவனைமதித்தென்னையகன்றவிவள்) ப்ரணயஸிரையில் ஸ்ரோத்ரியனென்னுமித்தை யொன்றையும் நினைத்து என்னைக் கைவிட்டவிவள்.— (வேயனதோள்விசிறி) மூங்கில் போன்றிருக்குமுள்ள தோள்வீசி. (பெடையன்னமெனநடந்து) வெறும்அன்னமென்னில் ஆணுமென்று, (பெடையன்னம்) என்றாள். (போயினவித்யாதி)இருவருங்கூடஜலக்ரீடைபண்ணிவர்த்திக்கலாம் தேசத்திலே புகுவர்கொலோ. ... ... ரு.

"அகன்றவிவள்" என்றும "அகன்றவன்பின்" என்றும் பாடவ்யமுண்டு; அதிலே, முந்தினபாடானுஸரணமாக வருளிச்செய்கிறார் (ப்ரணயேத்யாதி.) மற்றைபாடம் - வ்யாக்யானாதரஸித்யம்.

(ஆணும்) என்றது - ஆண்நாறும் என்றாய், பும்ஸ்த்வகந்தமுண்டாமென்று ஸப்தார்த்தம். ... ... ரு.

ஆறாம்பாட்டு.— (என்னித்யாதி.) "தாயெனையென்றிரங்காள்" என்றத்தை விவரிக்கிறதிப்பாட்டென்று ஸங்கதி.

† "அகன்றவன்பின்" என்றுபாடாந்தரம்.

http://acharya.org

மூ.—என் துணையென்றெடுத்தேற் கிறையேனு மிரங்கிற்றிலள்
தன் துணையாயவென்றன் தனிமைக்கு மிரங்கிற்றிலள்
வன் துணைவானவர்க்காய் வரஞ்செற்றரங்கத்துறையும்
இன் துணைவனொடும்போ யெழிலாலிபுகுவர்கொலோ. ௫.

ப - ரை.— என் துணை என்று - எனக்குத்துணை என்று, எடுத்தேற்கு - பெற்றெடுத்த வெனக்காக, இறையேனும் - கொஞ்ச மாகிலும், இரங்கிற்றிலள்-இரக்கங்கொண்டிலள்; தன் துணை ஆய - தனக்குத்துணையான, என்தன் தனிமைக்கும் - நான்தனியே இருப்பதற்காகவும், இரங்கிற்றிலள் - இரக்கங்கொண்டிலள்; இப்படிப்பட்டவென்பெண், வானவர்க்கு - தேவதைகளுக்கு, வன் துணையாய்-வலிய[ம] துணையாகப்போய், வரம்செற்று-இலங்கையிலுள்ள ராக்ஷஸர்களின் வரபலத்தை அடக்கி, தேவகார்யம்முடித்து, அரங்கத்து உறையும் - நமக்கு நற்றுணையாகக் கோயிலிலே நித்யவாஸம்பண்ணுகிற, இன் துணைவனொடும்போய் - இஷ்டமான ஸஹாயபூதனோடுங்கூடப்போய், சேர்ந்துகொண்ட அவ்விருவரும், எழில் ஆலி - அழகிய திருவாலியிலே, புகுவர்கொலோ - புகுவாரோ, என்னவோ. ... (௫)

ஆறும்பாட்டு. (என்துணையித்யாதி) எனக்குத்துணையென்று பெற்றெடுத்தவெனக்கு அல்பமும் இரங்கிற்றிலள்; தனக்குத்துணையான என்னுடைய தனிமையை நினைத்தும் இரங்கிற்றிலள். (வன் துணையித்யாதி) தேவர்களுக்கு வலியதுணையாய், அவர்கள் விரோதியை அழகாகச்செற்று. (அரங்கமித்யாதி) நமக்கு நற்றுணையாகக்கோயிலிலே நித்யவாஸம்பண்ணுகிறவனுடனே போய், அழகியதிருவாலி புகுவார்களோ, எங்கேனும்போவார்களோ. ... ... ௫.

ஆறும்பாட்டு.—(என் துணையித்யாதி) எனக்குத்தஞ்சமான துணையென்றுகொண்டாடி வளர்த்தேன் என்றொருசற்று மிரங்கிற்றிலள்.—(தன் துணையித்யாதி) ஸ்நேஹமில்லையாகிலும், நோவுபட்டாரை[ப்] பார்த்து "ஐயோ!" என்று இரங்குவர்களிறே; அதுவும் செய்திலள்.— (வன் துணைவானவர்க்காய்) தேவர்களுக்காகத் தன்னைப்பேணாதே அம்புக்கிலக்காக்குகை – வன் துணையாவது. (வரம்செற்று) தேவர்கள் கொடுத்த வரங்களையுமழித்து. தங்கள் தலையாலுள்ளவையெல்லா மழித்தாலாகாதே அவன் துணையாவது. (அரங்கத்துறையுமித்யாதி) நிரதிசயஸௌந்தர்யனுமாய் ஸுலபனுமாய் ரக்ஷகனுமானவனோடேகூட. ராவணவதம்பண்ணி மீண்டெழுந்தருளுகிறபோது திருவயோத்யையை கோடித்தாப்போலே, திருவாலியும் கோடிக்கப்பண்ணிப் புகுகிறார்களிறே.

பெண்பிள்ளையானவள் தன்ஸ்நேஹத்தாலே இவளெனக்குத் துணையென்றும் எடுத்துவளர்த்தாளென்றும் இரங்காமல் போனாளென்றும் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எனக்கித்யாதி.) தனக்கு ஸ்நேஹமில்லாவிட்டாலும் தன்னையே துணையாக வெண்ணியிருக்கிற என்னுடைய தனிமைக்காகிலு மிரங்காமல்போனாளென்னும் பாவத்தையருளிச்செய்கிறார் (ஸ்நேஹமித்யாதி.)

ஸ்வாபதேசம் யிவங்கும்படி தாத்பர்யமருளிச்செய்கிறார் (தங்களித்யாதி.) "இன்" என்றதினர்த்தம் (நிரதிசயேத்யாதி.) "அரங்கத்து" என்றத்தால் ஸௌலப்யம் (ஸுலபனுமாயென்றது.) "எழில்" என்றதுக்கு பாவம் (ராவணேத்யாதி.) ௫.

http://acharya.org

மூ.—அன்னையுமத்தனுமென் றடியோமுக்கிரங்கிற்றிலள்
பின்னைதன்காதலன்றன் பெருந்தோள்நலம்பேணினளால்
மின்னையும்வஞ்சியையும்வென்றிலங்கு மிடையாள்நடந்து
புன்னையுமன்னமுஞ்சூழ்புனலாலி புகுவர்கொலோ. ௭.

ப - ரை.— அன்னையும் - தாயும், அத்தனும் - தமப்பனும், என்றடியோமுக்கு- என்று தேஹஸம்பந்தத்தை யேறிட்டுத் தன்னிடத்தில் விசேஷப்ரீதிபண்ணின எங்களுக்காக, இரங்கிற்றிலள் - இரக்கங்கொண்டிலள்; பின்னைதன் - நப்பின்னைப்பிராட்டிக்கு, காதலன்தன் - நாயகனுடைய, பெருந்தோள் நலம் - மஹாபுஜாலிங்கநஸுகத்தை, பேணினள் - விரும்பினவளாய், மின்னையும் வஞ்சியையும் - மின்னலையும் வஞ்சிக்கொம்பையும், வென்று-தோற்பித்து, இலங்கும் - விளங்காநின்றுள்ள, இடையாள் - மத்யதேசத்தையுடையஎன்மகள், நடந்து - நடந்துபோய், சேர்ந்துகொண்ட அவ்விருவரும், புன்னையும் - புன்னைப்பொழிலும், அன்னமும் - ஹம்ஸக்கூட்டங்களும், சூழ் - சூழ்ந்த, புனல் ஆலி - நீர்வளமுள்ள திருவாலியிலே, புகுவர்கொலோ - புகுவாரோ, என்னவோ. ... ... (௭)

எழாம்பாட்டு. (அன்னையுமித்யாதி) தான்போகிறாள், எங்களைப் பழியிட்டுப்போகிறாள். அடியோங்களைத்தாய் தமப்பனென்று பேரிட்டுப் போகட்டுப் போகிறாள் இரங்காதே. (பின்னையித்யாதி) நப்பின்னைப்பிராட்டிக்குப் பித்தனாயிருக்கிற க்ருஷ்ணன் பெரியதோளழகை யாசைப்பட்டு. பேணுதல்-ஆசைப்படுதல். (மின்னையுமித்யாதி) மின்னையும்[உம] வஞ்சிக்கொம்பையும் தோற்பித்து விளங்காநின்றுள்ள இடையையுடையவள் போய். (புன்னையுமித்யாதி) புன்னைப்பொழிலும் அன்னப்புனலும் சூழ்ந்த திருவாலி. ... ... ௭.

எழாம்பாட்டு.— (அன்னையுமித்யாதி) போகநினைத்தால் பழியிட்டுப்போகவேணுமோ. அடியோமானவெங்களை தாயும் தமப்பனுமென்று பேரிட்டு இரங்கிற்றிலள். நியாம்யரை நியாமகரென்று பேரிட்டுப்போகவேணுமோ.— (பின்னையித்யாதி) இங்கே யிருவரைக்கைவிட்டால் அங்கே யிருவரைப் பற்றவேணுமிறே. நம்மைவிடுகைக்கடி - அங்கநானவ்யவிஷயத்திலுடைய பெருமையாகாதே !.— (மின்னையுமித்யாதி) மின்னையும் வஞ்சிக்கொம்பையும் தோற்பிக்குமிடையையுடையவள் நடந்து. (புன்னையித்யாதி) ஸமஹோமஸ்யாநங்களும் தன்னினங்களுமுள்ளவூரிலே புகுவர்கொலோ. ... ... ௭.

ஏழாம்பாட்டு.— (அன்னையுமித்யாதி.) கீழிரண்டுபாட்டிலும் - தாயென்றிரங்காமல் போனாளென்றுசொல்ல, "பிதாமாதாம்" என்று-விட்டுப்பற்றவேண்டும் விஷயமாகையாலே உங்களைவிட்டுப்போனாள், இதுக்கு நீ கரையவேணுமோ? என்று நங்கைக்குக்கருத்தாக; நானவ்வன் நினைத்திருக்குமவளோ, வயிற்றிற்பிறந்தாரையும் பெண்ணென்று எண்ணுவதுண்டோ, நாங்கள் பரதந்த்ரரன்றோ என்கிறாளென்று ஸங்கதி.

உட்கருத்து (போகவித்யாதி.) ஸௌஹார்த்தம் (அடியோமித்யாதி.) பேரிடுகை - பழியென்கை. மேல்வாக்யவிவரணம் (நியாம்யரையித்யாதி.) நப்பின்னைப்பிராட்டிக்குப் பித்தனாயிருக்கிற க்ருஷ்ணன் பெரியதோளழகை, பேணினள் - ஆசைப்பட்டாளென்று ஸௌஹார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (இங்கேயித்யாதி.) ஆல் - அசை. "பெருந்தோள்" என்று விசேஷித்ததுக்கு ஹாவம் (நம்மையித்யாதி.)

http://acharya.org

மூ.—முற்றிலும்பைங்கிளியும் பந்தூசலும்பேசுகின்ற
சிற்றில்மென்பூவையும்விட்டகன்றசெழுங்கோதைதன்னைப்
பெற்றிலேன்முற்றிழையைப் பிறப்பிலிபின்னேநடந்து
மற்றெல்லாம்கைதொழப்போய்வயலாலிபுகுவர்கொலோ.

ப - ரை.— முற்றிலும் - முச்சிலையும், பைங்கிளியும் - பச்சைக்கிளியையும், பந்தும் - கந்துகத்தையும், ஊசலும் - ஊஞ்சலையும், சிற்றில் - சிறு கூட்டிலிருந்து, பேசுகின்ற - பேசுகிற, மென்பூவையும்-மிருதுஸ்வபாவையான நாகணவாய்ப்பக்ஷியையும், விட்டு அகன்ற - விட்டுநீங்கிப் புறம்போன, செழுங்கோதைதன்னை முற்றிழையை - அழகியமாலைபோன்ற வென்பெண்ணை, பெற்றிலேன் - நான் கண்ணாற் காணப்பெற்றிலேன்; அவள், மற்றெல்லாம்கைதொழ - ஸ்வவ்யத்ரிக்தரெல்லாம் கண்டு ஸேவிக்கும்படி, பிறப்பிலிபின்னே-ஹேயப்ரதிபடன்பின்னே, நடந்துபோய்-நடந்துசென்று, ஒன்றுசேர்ந்த அவ்விருவரும், வயலாலி - ஸஸ்யஸம்ருத்தியையுடைய திருவாலியிலே, புகுவர்கொலோ - புகுவாரோ, என்னவோ. ... (அ)

எட்டாம்பாட்டு. (முற்றிலுமித்யாதி) முற்றில், துதை, பந்து,[மிரு ஊசல், இவற்றையும், சிறுகூட்டிலே யிருந்து பேசுகிற அழகிய கிளியையும்,பூவையையும்விட்டகன்றஅழகியமாலைபோன்றஎன்பெண்பிள்ளையை. (பெற்றிலேனித்யாதி) பிறப்பிலியாய் தான்தோன்றியானவன் பின்னே நடந்துபோகிறபோது, பின்பு கடைப்பணிக்கூட்டமும்

எட்டாம்பாட்டு.—(முற்றிலித்யாதி) சிறுகூட்டிலே நின்று பேசாநின்ற மிதுஸ்வபாவமான பூவையையும் விட்டகன்ற. (செழுங்கோதைதன்னை) லீலோபகரணங்களை விட்டு அவனைப்பற்றினபின்பு உடம்பிலே பிறந்த பௌஷ்கல்யம். (பெற்றிலேன்முற்றிழையை) முன்னே போகவிட்டு, கடைப்பணியும் கொக்குவாய்க்கூட்டமும் கண்டு பின்னே போகப்பெற்றிலேன்.—(பிறப்பிலிபின்னேநடந்து) "உனக்கிது மஹாஹாநிகாண்" என்று சொல்லி மீட்கைக்குமொருபிறப்புடையனன்றிக்கே யிருக்கிறவன் பின்னே நடந்து. (மற்றெல்லாம்கைதொழப்போய்)

எட்டாம்பாட்டு.— (முற்றிலித்யாதி.) நீயிப்போது விட்டுப்போனபின்பு "அடியோமுக்கு" என்று சொல்லுமதித்தனைபோக்கு, அவள் நாயகனைவேண்டிப்போகவொருப்பட்டபோது "படிகடந்து புறப்படுகை குலமர்யாதைக்குப் போராது காண்" என்று தகையவில்லையோ, ஆகையால் சொல்லாதே நடந்தாளென்ன; ஆகில் என்னைப்போலே நியாமகரோடுவெடிதங்களன்றோ லீலோபகரணங்கள், அவற்றையும் விட்டுப்போனாளென்கிறாளென்று ஸங்கதி.

முற்றிலும் - முச்சிலையும், பைங்கிளியும் - பச்சைக்கிளியையும், பந்தையும், ஊசலும் - உஞ்சலையுமென்றர்த்தம் கண்டுகொள்வதென்று விவக்ஷித்து, "பேசுகின்ற" இத்யாதிக்கர்த்தமருளிச்செய்கிறார் (சிறுகூட்டிலேயித்யாதி.) செழுங்கோதை-அழகிய மாலைபோன்ற பெண்பிள்ளையென்று ஸம்ஷார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (லீலேத்யாதி.) இழைமுற்றுமுடையவளைப் பெற்றிலேனென்றால், பெற்றவளான தான் அங்ஙன் சொல்லவொண்ணாதென்று (பின்னேபோக) என்று கூட்டியருளிச்செய்கிறார் (முன்னேயித்யாதி.)

http://acharya.org

மூ.—காவியங்கண்ணியெண்ணில்கடிமாமலர்ப்பாவையொப்பாள்
பாவியேன் பெற்றமையால் பணைத்தோளிபரக்கழிந்து
தூவிசேரன்ன மன்னநடையாள் நெடுமாலொடும் போய்
வாவியந்தண்பணைசூழ் வயலாலிபுகுவர்கொலோ. கூ.

ப - ரை.— காவியம்கண்ணி - காவிபோலே அழகியகண்ணையுடையவளாய், எண்ணில் - விசாரிக்கப்புகில், கடிமலர் - பரிமளம்மிக்க தாமரைப்பூவில்வஸிக்கிற, மலர்ப்பாவையொப்பாள் - பெரியபிராட்டியாரை ஒப்பவளாய், தூவிசேர் - இறகையுடைய, அன்னம் - அன்னப்பெடையோடு, அன்னநடையாள் - ஸத்ருசமானநடையையுடையவளாய், பணைத்தோளி - மூங்கில்போன்ற திருத்தோள்களையுடையவளாகிய என்பெண், பாவியேன் - பாபிஷ்டையான நான், பெற்றமையால்- பெற்றதோஷத்தினாலே, பரக்குஅழிந்த-அடக்கம்சிறிதுமில்லாமல், நெடுமாலொடும்- தீர்க்கவ்யாமோஹமுடையவனோடு, போய் - தனியேபோய், ஒன்றுசேர்ந்த இருவரும், வாவி - தடாகங்களும், அம்தண்பணை - குளிர்ந்த அழகிய நீர்நிலங்களும், சூழ் - சுற்றும்சூழ்ந்த, வயல் - ஸஸ்யஸம்ருத்தியையுடைய, ஆலி - திருவாலியிலே, புகுவர்கொலோ - புகுவாரோ, என்னவோ. ... ... (கூ)

பிறகுவாலியுங்கண்டு பின்னேபோகப்பெற்றிலேன். ... அ.

ஒன்பதாம்பாட்டு. (காவியித்யாதி) கருங்குவளைபோன்ற கடைக்கண்ணையுடையவள். இவளுமொரு அவிதேக்ஷணை. (எண்ணில்) ஆராயில். ஒப்பு ஆராயில், அலர்மேல்மங்கையையொக்கும்.

தாயான குற்றத்தாலே யெனக்கொருத்திக்குமிறே தொழவொண்ணாதது, அல்லாதார்க்கெல்லாம் தொழுது பின்னே போகலாமிறே. (வயலாலிபுகுவர்கொலோ) தன்னைக்காண்பார்க்குக் காட்சி கொடுக்கவிடமுள்ள தேசத்திலே புகுமோ. அங்ஙனன்றிக்கே, எல்லாஹோமங்களுமுண்டாம்படியான தேசமென்னவுமாம். ... ... அ.

ஒன்பதாம்பாட்டு.—(காவியித்யாதி) ஈஶ்வரனிற்காட்டில் பிராட்டி *அஸிதேக்ஷணை என்னுமேற்றத்தையுடையளானுப்போலே, பிராட்டியிலேற்றமுமிவளுக்கு (காவியங்கண்ணி) என்று. இருவரையும் சேர அநுபவிக்கிற கண்ணிறே யிவளுடைய கண்கள்.

ஏழ்ப்பாட்டில் "அடியோமுக்கு" என்றவள் இங்கே தாயாகை - தோழி கூடாமைக் குடலென்றும், மற்றெல்லாரும் தொழப்போயினளென்கிறாள். இதுக்குக்கருத்து - ஸ்வரூபஜ்ஞாநத்தாலே ஸமவஷ்விஷயத்தில் கைவைத்தவளென்று எனக்கும் தொழலாயிருந்தாலும், வழிநடையாகையாலே நாட்டார்க்காகத் தாயான முறையிலே நிற்கவேண்டிற்றே! என்று சொல்லுகிறாளென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (தாயானவித்யாதி.) ... ... அ.

ஒன்பதாம்பாட்டு.— (காவியித்யாதி.) "இப்படி பெற்றாரையும் உற்றாரையும் விட்டு லீலோபகரணங்களையும் காற்கடைக்கொண்டு "உன்மகளைப்போலே போருவாருண்டோ" என்று நங்கைபழியிட ; அதுக்கு, பிறந்தகத்தையும் திருவயோத்யையில் லீலோபகரணங்களையும் விட்டு "யஸ்த்வயாஸஹஸஸ்வர்க:" என்று போனவளைப்போலே போனாள், என்செய்கேன், பரக்கழிந்தாளென்கிறாளென்று ஸங்கதி.

காவியிற்காட்டிலும் கருநெய்தலிற்காட்டிலு மழகியகண்ணுடையவளென்று ஸப்ஷ்டார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஈஶ்வரனித்யாதி.)

http://acharya.org

மூ.—தாய்மனம் நின்றிரங்கத் தனியே நெடுமால்துணையாப்
போயின பூங்கொடியாள் புனலாலிபுகுவரென்று
காய்சினவேற்கலிய னொலிசெய் தமிழ்மாலைபத்தும்
மேவியநெஞ்சுடையார் ‡ தஞ்சமாவது விண்ணுலகே. ௧0.

ப-ரை.— தாய் - தாயானவள், நின்றுமனம் இரங்க - வயிறெரிந்திரங்கா நிற்க, நெடுமால் - தன்னிலுங்காட்டில் வ்யாமோஹத்தால் கலங்கியிருக்கிறவனை, துணையா - ஸஹாயமாகக்கொண்டு, தனியேபோயின - ஸஜாதீயரில் ஒருவரும் துணையின்றிப்போன, பூங்கொடியாள் - அழகியகொடியையொத்த இடையையுடைய என்மகளும், அவனும், ஆகியஇருவரும், புனல் ஆலி-நீர்வளமிகுந்த திருவாலியிலே, புகுவரென்று - புகுவரோ என்னவோ என்று, காய்சினம் - ப்ரதிபக்ஷத்தின் மேல் மிக்ககோபத்தையும், வேல் - அவற்றை நிரஸிக்கத்தக்கவேலையுமுடைய, கலியன் - ஆழ்வார், ஒலிசெய் - அருளிச்செய்த, தமிழ்மாலைபத்தும் - தமிழ்த்தொடைபத்தையும், மேவிய நெஞ்சுஉடையார் - ஸஹ்ருதயமாகஅப்யஸிக்கவல்லவர்க்கு, விண்ணுலகே - பரமபதமே, தஞ்சமாவது - ஸத்யமானஸ்தாநம ஆம் என்று நிகமிக்கிறார். ... ... (௪0)

(பாவியேன்பெற்றமையால்)அப்பூவை அவள்நினையாதாப்போலே,என்னையுமிவள்நினையாதேபோனாள். (பணைத்தோளியித்யாதி)வேய்போன்ற தோளழகையுடையவள், அடக்கமற்று. (தூவியித்யாதி) நுட்டுச்சேர்ந்திருந்துள்ள அன்னம் போன்ற நடையையுடையவள்,நெடுமாலுடனே போய். (வாவியித்யாதி) வாவிகளையும் குளிர்ந்தபழனங்களையும் சூழவுடைய வயலாலிபுகுவர்கொலோ. ... ... ௬.

(பாவியேனித்யாதி) என்வயிற்றிற்பிறக்கையிறே யிவளுக்குத் தனியே போகவேண்டிற்று.(தூவிசேரித்யாதி)நடையாலே பிச்சேற்றவல்லவள். (நெடுமாலொடும்போய்) நடைக்குப்பிச்சேறி வ்யாமோஹிக்குமவன். (வாவியித்யாதி) ஸ்நாநஸநிக்ரியைபண்ணி விளையாடலாம் தேசத்திலே புகுவர்கொலோ. ... ... ௭.

பிராட்டி,தாஸதாஸீஜநங்களைக் கொடுத்தனுப்பவும்,இளையபெருமாள் குறைப்பட்டுக் கொண்டுவரவுமிறேதொடர்ந்துபோனாள்;உன்பெண்ணைப்போலேஒருவரோடும்சொல்லாதே தனியேநடந்தாளோவென்ன(பாவியேனித்யாதி.)சொல்லுகிறாளென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்வயிற்றிலித்யாதி.) போனாளாகில், நீ "வயலாலி புகுவர்கொலோ" என்று புலம்புவானென்னென்ன (தூவிசேரித்யாதி.) சொல்லுகிறாளென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (நடையாலேயித்யாதி.) இத்தால்-அவன் புரிந்துபார்த்து இவள் நடையில் பித்தேறிமுன்னடிதோற்றாதேயிருக்கையால்"இனி திருவாலியில் சேர்த்துவிடுவாரில்லை !" என்று புலம்புகிறேனென்றபடி. ஸ்நாநஸநிக்ரியை பண்ணியென்றது - புஷ்பங்களைக்கொண்டு ஒன்றுக்கொன்றெறிந்து ஜலக்ரீடைபண்ணியென்கை. ... ... ௫.

‡ "நெஞ்சுடையார்க்கு" என்றும் சிலஸ்ரீகோசங்கள்.

http://acharya.org

பத்தாம்பாட்டு. (தாய்மனமித்யாதி) பெற்ற தாய் வயிறெரிந்து நெஞ்சுதளர, தனியே – ஸஜாதீயரிலொருவர் துணையின்றி, விஜாதீயனானவன் துணையாகப்புறப்பட்டுப்போன அழகிய கொடியானவள் புனலாலியிலே புகுவர்கொலோ என்று. (காய்சினமித்யாதி) ப்ரதிபக்ஷத்தின் மேலே மிக்க சினத்தையும் வேலையுமுடைய ஆழ்வாரருளிச்செய்த இப்பத்துப்பாட்டையும் பொருந்தின நெஞ்சையுடையவர்கள் ஆளுவது விண்ணுலகு; இது நிஶ்சிதம். .. .. ௧0.

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

பத்தாம்பாட்டு.—(தாய்மனமித்யாதி) தாயார்வயிறெரிந்திரங்காநிற்க தன்னிழுங்காட்டில் வ்யாமோஹத்தாலே கலங்கியிருக்கிறவன் துணையாகப்போன விலக்ஷணையான பெண்பிள்ளை, ஜலஸம்ருத்தியையுடைத்தான திருவாலியிலே புகுமென்று, பிராட்டிபேச்சாலே யானையன்றிக்கே திருத்தாயார் பேச்சாம்படி, ஹமவத்விஷயத்திலே ப்ரவணராய் ப்ரதிபக்ஷத்திலே சினத்தையுடையராய் அத்தைத்துணிக்கவல்ல வேலையுடையரான திருமங்கையாழ்வாரருளிச்செய்த. (பத்தும் மேவியநெஞ்சுடையார்க்குத் தஞ்சமாவது விண்ணுலகே) இப்பத்தும் ஸாத்ம்யமாகக் கற்கவல்லார்க்கு பரமபதம் நிஶ்சிதம். தாயார் தனிவழியே போனாளென்று ஸயப்படப்போகவேண்டா, ஆதிவாஹிககணத்தோடே தாமே வழிகாட்டிக்கொடுபோம். ... ... ௧0.

அடிவரவு.— கள்வன் பண்டு அஞ்சுவன் ஏதலன் தாய்
என்னுடை அன்னை முற்றில் காவி தாய்மனம் நந்தா.

திருமங்கையாழ்வார் திருவடிகளேஶரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

நிகமம்.— (தாய்மனமித்யாதி.) "நெடு" என்றதினர்த்தம் (தன்னிழுமித்யாதி.) ஆத்தால் - இவன் துணையாகமாட்டானென்று கருத்து. "பூ" என்று-அழகாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (விலக்ஷணையானவென்று.) "புகுவர்" என்ற பஹுவசநம்-பூஜ்யோக்தியென்று விவக்ஷித்து, (புகும்) என்கிறார். காயாநின்றுள்ள சினத்தையுடையாரென்று ஶப்தார்த்தமாய், அதுக்குவிஷயம் ப்ரதிபக்ஷமாகையாலே யருளிச்செய்கிறார் (ப்ரதிபக்ஷத்திலேயென்று.) "விண்ணுலகு" என்று - விண்ணிலுள்ளார்க்கு நிர்வாஹகனென்றாய், தஞ்சமாவது - பரமபதத்தைக்கொடுப்பனென்று விவக்ஷித்து, பலிதார்த்தமருளிச்செய்கிறார் (இப்பத்துமித்யாதி.) தஞ்சமாம் ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் (தாயாரித்யாதி வாக்யத்வயத்தாலே.) தானே - எம்பெருமானே. ... ... ௧0.

ஜீயர் திருவடிகளேஶரணம்.

http://acharya.org

மூன்றாம்பத்து - எட்டாந்திருமொழி - நந்தாவிளக்கு. ப்ரவேஶம்.

ஸமவஸ்துவிஷயத்திற்பிறந்த ப்ராவண்யாதிஶயத்தை பார்ஶ்வஸ்தர் பேச்சாலே யநுபவித்தார் ; அதாகிறது - மாதாபிதாக்களுக்காகாதே வயலாலிமணவாளனுக்கேயாயிருக்கிறவிருப்பைத்திருத்தாயார்பேச்சாலே யநுபவித்தாராய் நின்றது-கீழ் ; இப்படி திருவாலியிலே புக்கு[நு அநுபவித்தவிடத்திலும் ஆராமையாலே தமக்குப்பிறந்த ப்ராவண்யம் உகந்தவிஷயத்தைக் கண்ணாலேகண்டு ஸ்வர்மாதிகளையபேக்ஷிக்குமாப்போலே அநுபவிக்கையிலேமூட்ட, அப்போதேபெருமையாலே திருவுள்ளம்பதற, பதறினதிருவுள்ளத்தைக்கொண்டாடி, அத்தைப்பெறுந்தனையு மிங்கேயநுபவிக்கைக்காகவன்றோ உகந்தருளினநிலங்களிலே அவன்நிற்கிறதுஎன்று ஸர்வர்க்[illegible]ர்வாபேக்ஷிதங்களையும் செய்கைக்காகத் திருமணிமாடக்கோயி[illegible] யெழுந்தருளி நின்றான், அங்கே நீயும்சென்று அநுபவியென்று திருவுள்ளத்தைக் குறித்தருளிச் செய்கிறார். ... ... *

ஸமவஸ்துவிஷயத்தில் தமக்குப்பிறந்த ப்ராவண்யாதிஶயத்தை பார்ஶ்வஸ்தர் பேச்சாலே யநுபவித்தார்; அதாகிறது - மாதாபிதாக்களுக்காகாதே வயலாலிமணவாளனுக்கே யாயிருக்கிற விருப்பைத் திருத்தாயார்பேச்சாலே யநுபவித்தாராய் நின்றார் - கீழ்; இப்படி திருவாலியில் புக்கநுபவித்த விடத்திலும் ஆராமையாலே தமக்குப்பிறந்த ப்ராவண்யம், உகந்தவிஷயத்தைக்கண்ணாலே கண்டு ஸ்பர்ஶாதிகளை[உம் அபேக்ஷிக்குமாப்போலே அநுபவிக்கையிலே மூட்ட, அப்போதே பெருமையாலே திருவுள்ளம்பதற, திருவுள்ளத்தைக் கொண்டாடி, "அப்பேறு பெறுந்தனையுமிங்கே யநுபவிக்கைக்காகவன்றோ உகந்தருளினநிலங்கள்" என்று ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுக்குத் தந்தாமபிமதங்க ளபேக்ஷிக்கலாய், அவ்வோகாலங்களிலிழந்தாரொல்லார்க்கும் எல்லா இழவுகளும் தீர்க்கைக்காகத் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், அங்கேசென்றநுபவி என்று திருவுள்ளத்தை அநுஶாஸிக்கிறார். ... ... *

அவதாரிகை. முதற்பாட்டு.— (நந்தாவிளக்கே) ப்ரஹ்மாதிகள் "எங்களபிமதங்கள் செய்யவேணும்" என்று ப்ரார்த்திக்கிற திருமணிமாடக்கோயிலிலே நெஞ்சே! நீயும் சென்றநுபவி யென்கிறார்.

நந்தாவிளக்கின் ப்ரவேஶம்.— திருவாலியி லெம்பெருமானை அநுபவித்தும் த்ருப்திபிறவாமையாலே திருமணிமாடக்கோயிலிலே யநுபவிக்கிறாரென்னும் ஸங்கதியை வ்யக்தவர்த்திஷ்யமாண கதாமுவேநவருளிச்செய்கிறார் (ஸமவஹித்யாதி.) அநுபவிக்கையிலே-தழுவிமுழுசிப் பரிமாறுகையிலே. அநுஶாஸிக்கிறார் - [கூடு விழிக்கிறார். ... ... *

முதற்பாட்டு.— (நந்தாவித்யாதி.) பாட்டுக்கெல்லாம் தொகுத்தபாவம் (ப்ரஹ்மாதிகளித்யாதி.)

http://acharya.org

மூ.— நந்தாவிளக்கேயளத்தற்கரியாய்
நரநாரணனே கருமாமுகில்போ
லெந்தாயெமக்கே யருளாயெனநின்
றிமையோர்பரவுமிடம் ;- எத்திசையும்
சுந்தாரமங்கேனிசைபாட மாடே
களிவண்டுமிழற்ற நிழல் துதைந்து
மந்தாரநின்று மணமல்கு † நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. க.

ப - ரை.— நந்தாவிளக்கே - நித்யமாய் ஸ்வயம்ப்ரகாசமான ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாகவுடையவனே, அளத்தற்கு அரியாய்-பரிச்சேதிக்க அஸக்யனானவனே, நரநாரணனே-நரநாராயணனவதாரமெடுத்தவனே, கருமாமுகில்போல்எந்தாய்-கறுத்த மஹாமேகம்போன்றதிருமேனியையுடைய என்ஸ்வாமி, எமக்கே-அநுகூலராய்அநந்யரானவர்களான எங்களுக்கே, அருளாய்- ப்ரஸாதத்தைப்பண்ணி யருளவேணுமென்று, இமையோர் - தேவதைகள், நின்று - ஸ்வர்க்கத்தினின்றும் பூமியில்வந்து நின்று, பரவும் இடம் - ஸ்தோத்ராதிகளைப்பண்ணி ஆச்ரயிக்கிற ஸ்தானமாய்; அம் தேன் - அழகிய வண்டுகள், எத்திசையும் - ஸர்வதிக்குக்களிலும், சுந்தாரம் இசைபாட - செவ்வையாக காந்தாரராகம்பாடவும், களிவண்டு - மதுபானமத்தப்ரமரங்கள், மாடே - பக்கத்திலே, மிழற்ற - மிழற்றிக்கொண்டிருக்கவும், நிழல் துதைந்து - அவ்வண்டுகளுக்கு நிழலைக்கொடுத்து, மந்தாரம் நின்று மணம்மல்கும் - மந்தாரவ்ருக்ஷங்கள் எல்லாக் காலத்திலும் மலர்ந்து நின்று பரிமளம் ஸம்ருத்தமாக்காநிற்கிற, நாங்கூர்-திருநாங்கூரிலேயுள்ள, மணிமாடக்கோயில் - திருமணிமாடக்கோயிலை, என்மனனே- என்மநஸ்ஸே, வணங்கு - ஆச்ரயி என்று தன்மநஸ்ஸை ப்ரேரேபிக்கிறார். (க)

முதற்பாட்டு. (நந்தாவிளக்கே) விச்சேதியாத விளக்கு. அவியாத விளக்கு. ப்ரஹ்மாதிகளாயிருக்கையன்றிக்கே - விளக்காகிறது. நித்யமாய் ஸ்வயம்ப்ரகாசமான ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாகவுடையவனென்றபடி. (அளத்தற்கரியாய்) ஸ்வரூபகுணவிபூதிகளால் அபரிச்சேத்யனானவனே. (நந்தாவிளக்கே அளத்தற்கரியாய்) "ஆழ்வார் 'ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம' என்கிறார்காணும்" என்று ஆழ்வான் பணிக்கும்.

வ்யா.— (நந்தாவிளக்கே) விச்சேதியாத விளக்கு. ப்ரஹ்மாப்ரஹ்மாண்களாயிருக்கையன்றிக்கே - விளக்காகிறது. நித்யமாய் ஸ்வயம்ப்ரகாசமான ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாகவுடையவனென்றபடி.— (அளத்தற்கரியாய்) விபுத்வத்தாலும் மற்றுமுண்டான குணவிபூத்யாதிகளாலும் அபரிச்சேத்யனானவனே. "'ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம' என்கிறார்காண்" என்று ஆழ்வான் பணிக்கும்.

(விளக்காகிறது) என்றவநந்தரம், ஆகையால் என்றத்யாஹாரம். (ஜ்ஞாநத்தை) என்றவநந்தரம், குணமாகவும்ஸ்வரூபமாகவும் என்றுகூட்டுவது. அளத்தற்கு-அளக்கைக்கு-பரிச்சேதிக்கைக்கு, அரியாய்-அருமைப்படும்படியிருக்கிறவனே என்றாய், அர்த்தமருளிச்செய்கிறார் (விபுத்வேத்யாதி.) ஆதிஶப்தத்தாலே - விக்ரஹவைஶிஷ்ட்யத்தைச் சொல்லுகிறது. ஸத்யம்-ஸ்வரூபதோகுணதஸ்ஸ்வகாரூபம் என்றாய், "நந்தா" என்றதின்அர்த்தம். ஜ்ஞாநம் - ஸ்வயம்ப்ரகாசம் ; இதுவும், ஸ்வரூபதோகுணதஸ்ஸ்வயம் ப்ரகாசம் என்றாய், விளக்கு என்றபதார்த்தம். "அநந்தம்" என்றத்தாலும் - ஸ்வரூபதோகுணதோரூபாதிசர்வபரிச்சேதராஹித்யமாய், "அளத்தற்கரியாய்" என்றதினர்த்தமென்று விவக்ஷித்து, ஸம்வாதம்காட்டுகிறார் (ஸத்யமித்யாதி.)

† "மணமல்கும்" என்று பாடாந்தரம்.

(நரநாரணனே) நரநாராயணரூபத்தாலே வெளிப்பட்டுஸர்வாசார்யனாகத் திருமந்த்ரத்தை வெளியிட்டவனே. (கருமாமுகிலித்யாதி) காளமேகம் போன்ற வடிவழகையுடைய என்ஸ்வாமீ!, எங்களுக்கருளாய் என்று நின்று ப்ரஹ்மேசாநாதிகள் ஸ்தோத்ரம்பண்ணுமிடம். (எத்திசையுமித்யாதி) பார்த்தபார்த்தவிடமெல்லாம் அழகிய வண்டுகளானவை கந்தாரமென்கிற பண்ணையிசையுடனேபாட. (மாடே) பக்கத்தே. (களிவண்டித்யாதி) மதுபானம்பண்ணிக்களித்த வண்டுகளானவை மிழற்ற. மிழற்றல் - நிரம்பாமென்சொல். (நிழல்துதைந்து) நிழலாக நெருங்கி நின்று. (மந்தாரநின்றுமணமல்கும்) மந்தாரம் - கல்பகத்திலே ஒருஜாதி. ... ... ச.

இப்படியிருக்கிறவன்றான் நரநாராயணனாய் ப்ராதுர்பாவத்தாலே தன்னை வெளியிட்டபடி.— (கருமாமுகில்போலெங்காய்) அப்போதை அநுரூபமான வடிவு. அன்றிக்கே, மீச்சசொன்ன ஸ்வபாவங்களிற்காட்டில் ஆகர்ஷகமாய் மேகம்போலே ச்ரமஹரமான வடிவைக்காட்டி எங்களை அநந்யார்ஹமாக்கினவனே.— (எமக்கேயருளாயித்யாதி) "தேவாநாம்தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்" என்கிற ஸர்வஸாமாந்யத்தைப் பார்த்து அஸுரர்களுக்கருள்செய்கை தவிர்ந்து அநுகூலராய் * அநந்யசரணரான எங்களுக்கே ப்ரஸாதத்தைப்பண்ணியருளவேணுமென்று தேவர்கள்வந்து ஸ்தோத்ராதிகளைப்பண்ணி யாச்ரயிக்கிற ஸ்தானம்.

(எத்திசையுமித்யாதி) பார்த்த பார்த்த விடமெங்கும், கந்தாரமென்கிறபண்ணை, அந்தேதுண்டு - ஸர்வாங்கஸுந்தரமான வடிவையுடைத்தாய் தேனென்று பேரையுடைத்தான வண்டுகளானவை மதுபானம்பண்ணியிசைசொல்ல. (மாடேயித்யாதி அதினுடைய பர்யந்தத்திலே, ஸம்ச்லேஷத்தாலே ஜீவிக்குமாய்க்களிக்கிற வண்டுகளானவை, மிழற்ற - நிரம்பா மென்சொல்லாலே ஆளத்திவைக்க. (நிழல்துதைந்து) அவற்றுக்கு ச்ரமஹரமாம்படி நிழலைச்செறியப்பண்ணி; பாடுவார்க்குக் காவணமிட்டுக்கொடுப்பாரைப்போலே. மந்தாரமென்று - கல்பகவ்ருக்ஷத்திலே யொருவிசேஷம். எல்லாக்காலமும் நின்று மணத்தை மிகவுமுண்டாக்காநின்றுள்ள. (மணம்நல்கும) என்னவுமாம் - பாடுவார்க்குப் பரிசில் கொடுப்பாரைப்போலே ஸுகந்த த்ரவ்யங்களைக் கொடாநின்றது. இப்படிப்பட்ட திருநாங்கூரில் திருமணிமாடக்கோயிலை யாச்ரயியென்கிறார். ... ... க.

கீழ்ப்பதங்களாலே பரத்வம் ஸித்தித்ததாய, இத்தால் ஆச்ரயணீயனாயோக்யனான ஸௌலப்யம் சொல்லிற்றென்கிறார் (இப்படியித்யாதி.) நரநாரணனாயிருக்கும் போதையில் வடிவாகக் கீழருளிச்செய்தது, மணிமாடக்கோயிலெம்பெருமான் வடிவாக ஆர்யாஞரம் (அன்றிக்கேயித்யாதி.)

(பண்ணை - இசைசொல்ல) என்றந்வயம். காவணம் - பந்தல். ... ச.

http://acharya.org

மூ.— முதலைத்தனிமா முரண்தீர வன்று
முதுநீர்த்தடத்துச் செங்கண்வேழமுய்ய
விதலைத்தலைச்சென்றதற்கேயுதவி
வினைதீர்த்தவம்மானிடம்; — விண்ணணவும்
பதலைக்கபோதத் தொளிமாடநெற்றிப்
பவளக்கொழுங்கால பைங்காற்புறவம்
மதலைத்தலைமென்பெடை கூடு நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. ௨.

ப. ரை.— அன்று - அக்காலத்திலே, முதுநீர - பழையநீரையுடைய, தடத்து - தடாகத்திலே, யானையின்காலைக்கவ்வின, தனிமாமுதலை - ஒப்பற்றபெரியமுதலையினது, முரண்தீர - கரைகாணவொண்ணாத பிடிக்குறும்படியாகவும், செங்கண் வேழம் - சீற்றத்தால் சிவந்த கண்களையுடைய அவ்வானை, உய்ய - உஜ்ஜீவிக்கும்படியாகவும், விதலைத்தலைச் சென்று - நடுக்கத்தையடைந்த, அதற்கே உதவி - அந்த யானைக்குபகரித்து, வினைதீர்த்த - அதின் வ்யஸநத்தைத்தீர்த்தவன், அம்மான் - ஸர்வேச்வரனுடைய, இடம் - ஸ்தாநமாய்; விண் அணவும் - ஸ்வர்க்கத்திலே சென்ற, பதலை - கும்ப (?)களையும், கபோதம் - கபோதவொழுங்குகளையும், ஒளி - காந்தியையுமுடைத்தான, மாடநெற்றி - ஸௌதாக்ரங்களிலே, பவளக்கொழுங்கால - பவளம்போற்சிவந்து கொழுவிதான காலையுடைத்தாய், பைங்காற்புறவம் - பசுமைநிறத்தையுமுடைய புறவானது, மதலைத்தலை - பிள்ளைத்தூணின் தலையிலே, மென்பெடை - மென்மையிலும் பெருத மிருதுவான தன்பேடையோடே, கூடும் - கூடிக்கலந்திருக்கிற, நாங்கூர் - திருநாங்கூரிலேயுள்ள, மணிமாடக்கோயில் - திருமணிமாடக்கோயிலை, என்மனனே - என்மநஸ்ஸே, வணங்கு - நீபோய் நமஸ்கரி. ... ... (௨)

இரண்டாம்பாட்டு. (முதலைத்தனிமாவித்யாதி) அத்விதீயமான வலத்தையுடைய பெரிய முதலையின் பிடிக்குப்போக. (அன்று) அகப்பட்டவன்று. (முதுநீரித்யாதி) பெரியநீரையுடைய தடாகத்திலே அழுந்துகிற சிவந்தகண்ணையுடைய ஆனை உய்ய,

இரண்டாம்பாட்டு.— (முதலையித்யாதி) ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆபத்துப்போக்கினவன் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளிறான், நெஞ்சே! உன்து:க்கமெல்லாம்கெட அங்கே சென்றுறவியென்கிறார்.

வ்யா.— (முதலையித்யாதி) முதலையினுடைய, உபமாநரஹிதமாய் கரைகாணவொண்ணாத பிடிக்குறும்படிக்கிடாக. (முதுநீர்த்தடத்து) பழைதானநீரையுடைத்தென்று ப்ரஸித்தமிறே. (செங்கண் வேழமுய்ய) பிடிக்கையுடைத்தாயிருக்கச்செய்தே, தன்நிலமல்லாமையாலே அம்பிடிக்குக்கொண்டு வ்யாபரிக்கவொண்ணாதபடியால் வந்த சீற்றத்தாலே சிவந்தகண்ணையுடைத்தான ஆனை உய்யும்படி. செங்கணென்று-செயலறுதியாலே சிவந்தகண்ணையுடைய ஆனையென்றுமாம்.

இரண்டாமபாட்டு.— (முதலையித்யாதி.) ஸங்க்ரஹிஸஞ்ஜிவிப்பிக்கிறார் (ஸ்ரீகஜேந்த்ரேத்யாதி.) "ஸ்ரஹ்மாதிகளான ப்ரயோஜநாந்தரபரராச்ரயிக்குமளவன்றிக்கே" என்று வாக்யாதியில் கூட்டுவது.

(செயலறுதியாலே) என்றவத்தாம், வந்தது:க்கத்தாலே என்று கூட்டுவது.

http://acharya.org

அது தடிக்கை அழுந்தி நடுங்குகிறவளவிலே சென்று அதின் நடுக்கத்தைப்போக்கி முதலையின் வினையைத்தீர்த்த அம்மானிடம். விதலை-நடுக்கம். "இரண்டும்போயிரண்டின்வீடு" என்கிறபடியே-முதலை ஶாபமோக்ஷமும் கஜேந்த்ரன் ஸாக்ஷாந்மோக்ஷமுமிறே பெற்றது. (விண்ணணித்யாதி) ஸ்வர்கத்திலேசென்று கிட்டுகிற. பதலை – கும்பநிரையையும் கபோதவொழுங்குகளையுமுடைத்தாய், நவரத்நகசிதமாய் ஒளிவிடுகிற புலிமுகவாசலையுடைய. நெற்றி - முகவாசல். (பவளக்கொழுங்கால பைங்கால்புறவம்) பவளம்போற்சிவந்து அழகிதான காலையும் பசுமையுமுடைத்தான புறவானது, பிள்ளைத்தூண் தலையிலே, மென்பெடை கூடும்நாங்கூரில். ... ... ௨.

(சென்று) கைகழிந்ததென்று மீளாதே ஆபத்திலேபுகவி. (விதலைத்தலை) விதனப்படுகிறவளவிலே. (வினைதீர்த்தவம்மானிடம்) அதினுடைய வ்யஸநத்தைப்போக்கின ஸர்வேச்வரனுடைய ஸ்தாநம். வினைதீர்க்கையாகிறது-அது நினைத்தபடியே திருவடிகளிலே பூவைப்பணிமாறலாம்படி. சென்று முகங்காட்டுகை.

(விண்ணணவுமித்யாதி) ஸ்வர்கத்திலேசென்ற ஒக்கத்தையுடைத்தாய், கும்பநிரைகளையும் கபோதவொழுங்குகளையுமுடைத்தாய், பொன்னாலும் ரத்நங்களாலும் சமைக்கையாலே ஒளியையுடைத்தான மாடத்தினுடைய, நெற்றியுண்டு – புலிமுகங்களில். பதலையென்று – கும்பநிரை. (பவளக்கொழுங்காலபைங்கால்புறவம்) பவளம்போலே சிவந்து கொழுவிதான காலையுடைத்தாய் பசுமையையுடைத்தான புறவானது. (மதலைத்தலை) பிள்ளைத்தூணின் தலையிலே. (மென்பெடைகூடும்) ஸம்ச்லேஷிக்கவும்பெறுத மிருதுவான பேடையோடே கூடக் கலந்து வர்த்திக்கிற திருநாங்கூரிலே. ... ... ௨.

அவதாரிகை. மூன்றாம்பாட்டு.—ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு விரோதியான முதலையைப்போக்க அத்தாலே ப்ரீதையானபிராட்டி வைரவயத்திற்போலேயணைக்க, அவளோட்டை ஸம்ச்லேஷத்தைப் பெற்ற எம்பெருமான் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், நெஞ்சே! அங்கேசென்றநுபவியென்கிறார்.

விதனப்படுகிற - வ்யஸநப்படுகிற.

கும்பநிரை - மாடங்களின்மேலில் மகுடாகாரங்களான கும்பபங்க்தி. (புலிமுகங்களில்) என்றதற்கு, (புறவானது) என்றத்தோடு அந்வயம். பிள்ளைத்தூண்-தூண்மேலே நிற்கிற சிறுதூண். ... ... ௨.

மூன்றாம்பாட்டு.—(சொலவித்யாதி. இப்பாட்டில் ஸ்ரீகஜேந்த்ரரக்ஷண[வ்ருத்தையநுஸந்தித்துக்கொண்டு, அத்தால் திருமுகம் பெற்றானென்னும் ஸங்கதியைக்காட்டுகிறார் (ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கித்யாதி.)

http://acharya.org

௩.—கொலைப்புண்டலைக்குன்ற மொன்றுய்யவன்று
கொடுமாமுதலைக் கிடர்செய்து கொங்கா
ரிலைப்புண்டரீகத் தவளின்பமன்போ
டணைந்திட்டவம்மானிடம் ;— ஆளரியா
லலைப்புண்டயானைமருப்புமகிலு
மணிமுத்தும்வெண்சாமரையோடு பொன்னி
மலைப்பண்டமண்டத்திரையுந்து நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. ௩.

ப - ரை.— அன்று - அக்காலத்தில ; கொலை-கொலைதொழிலையும், புண்[ய
தலை - பாகன்கொட்டியால் குத்துண்டபுண்தலையையமுடைய, குன்றம் ஒன்று -
ஒர் பெருமலைபோலும் கஜேந்த்ராழ்வான், உய்ய - உஜ்ஜீவிக்கும்படியாக, அதின்
காலைக்கவ்வின, கொடுமா முதலைக்கு - க்ரௌர்யத்தையும் மிக்கபலத்தையுமுடைத்
தான முதலைக்கு, இடர்செய்து - துக்கத்தைப்பண்ணி, பின்னுமிவ்வாறே ஆச்ரித
ரக்ஷணம் பண்ணிக்கொண்டு, கொங்கு இலை ஆர் - தேனும் இலைகளும் மிக்கிருந்
துள்ள, புண்டரீகத்தவள் - தாமரைப்பூவிலிருக்கும் பெரியபிராட்டியாருடைய,
இன்பம் - ஸம்ச்லேஷஸுகத்தை, அன்போடு அணைந்திட்ட - ஸ்நேஹாதிக்யத்தோ
டநுபவித்துக்கொண்டிருக்கிற, அம்மான் - ஸர்வஸ்வாமியானவனது, இடம்-
வாஸஸ்தானமாய் ; பொன்னி - காவேரியானது, ஆள் அரியால் - பௌருஷமுள்ள ஸிம்
ஹங்களாலே, அலைப்புண்ட - ஸம்ஹரிக்கப்பட்ட, யானை-யானைகளினுடைய,[உய
மருப்பும் - தந்தங்களையும், அகிலும் - அகருவ்ருக்ஷங்களையும், அணிமுத்தும்-அழகிய
முத்துக்களையும், வெண்சாமரையோடு - வெளுத்த சாமரங்களையும், மலைப்பண்ட
மண்ட - பர்வதங்களில மற்றுமுண்டான வஸ்துக்களையுமடைய, திரை உந்து -
அலைகளாலே தள்ளிக்கொண்டுவந்து கொடுக்கிற, நாங்கூர்—. ... (௩)

மூன்றாம்பாட்டு. (கொலைப்புண்) கொலைத்தொழிலையும் புண்ணை
யுடைய தலையையுமுடைய, குன்றுபோன்ற ஆனை உய்ய, அன்று
கொடிதான பெரியமுதலைக்கிடர்செய்து.

வ்யா.—(கொலைப்புண்தலைக்குன்றமொன்று) கொலை - கொலைத்
தொழிலையும், புண்பொருந்தலையையுமுடைய, குன்றம்போலேயிருக்கிற,
ஆனையுண்டு—ஸ்ரீமதேஜேந்த்ராழ்வான். துறோட்டியிட்டுக்கொத்துகையாலே
புண்ணுறுமென்னுதல் ; காட்டானையாகையாலே ஆனைகளோடேபொருது
புண்ணுறுமிருக்கல் ; ஜாதிப்பண்புகையாலே சொல்லிற்றாகவுமாம்.
(உய்ய) அதிடர்பட்டவன்று அது உஜ்ஜீவிக்கும்படியாக. (கொடுமா
முதலைக்கிடர்செய்து) க்ரௌர்யத்தையும்மிக்கபலத்தையுமுடைத்தான
முதலைக்கு துக்கத்தைப்பண்ணி. (கொங்காரித்யாதி) ப்ரஜைகளி[௩ு
னுடையதுக்கத்தைப்போக்கித்தாய்பாடேமுகம்பெறுவாளைப்போலே.

துறோட்டி - அங்குசம். ஸத்த்வஸ்யரான ஸ்ரீமதேஜேந்த்ராழ்வானுக்கு புண்தலை
உண்டோவென்ன வருளிச்செய்கிறார் (ஜாதிப்பண்பித்யாதி.) "அன்று - உய்ய'
என்று அநவயம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (அதித்யாதி.)

http://acharya.org

(கொங்காரித்யாதி) அழகியஇலையையும் பரிமளத்தையுமுடைய தாமரையாளுடன் ஸ்நேஹத்துடனே இன்பமுண்டாகக் கலந்த அம்மானிடம். கொங்கென்று-தேனுக்கும்பேர். (ஆளரி) அரியென்றும் ஆளரியென்றும் - ஸிம்ஹத்துக்குப்பேர். ஸிம்ஹத்தாலே கொலையுண்ட ஆனைக்கோடும், அகிலும், யானைமஸ்தகத்திலுதிர்ந்த அழகிய முத்தும், வெண்சாமரங்களும், இவற்றைத் திரட்டிக்கொண்டுவந்து, பொன்னியானது, பர்வதங்களில் பொன்துடக்கமான மலைப்பண்டங்களைக் கொண்டுவந்து, அண்ட - சேர, திரைகொடுவந்து தள்ளுகிற நாங்கூர். ... ... ௩.

(கொங்கார்) கொங்கென்று - தேனுதல், பரிமளமாதல். தேனாலே மிக்கிருப்பதாய். (இலைப்புண்டரீகத்து) ஶ்ரமஹரமான இலையையுடைத்தான தாமரைப்பூவை யிருப்பிடமாகவுடைய. (அவளின்பாரித்யாதி) பெரியபிராட்டியாரோடே ஸம்ஶ்லேஷ ஸந்தோஷத்தை, தன்னுடைய ப்ரேமமுண்டு - ஸ்நேஹம், அத்தோடேகூட அநுபவித்த ஸர்வேஶ்வரனுடைய ஸ்தானம்.

(ஆளரியித்யாதி) ஆண்பிள்ளைத்தனத்தையுடைத்தான ஸிம்ஹங்களானவை ஆனைகளைப்பிடித்து அலைத்திட்டுவைக்கும். அலைக்கை - கொல்லுகை. அவ்வளவிலே ஆறுநீர் வந்து கொம்புகளைப் பறித்துக் கொண்டுபோய்த்தது. (அகிலுமணிமுத்தும்) அதின்மஸ்தகத்தில் நின்று முதிர்ந்த அழகிய முத்துக்களும் வெண்சாமரைகளையுங்கொண்டு. (பொன்னிரித்யாதி) காவேரியானது, சொல்லிச்சொல்லாத மலைச்சரக்குக்களையும் கொண்டுவந்து, கொள்ளைச்சரக்குக் கொடுப்பாரைப் போலே திரைக்கைகளாலே கொண்டுவந்து கொடாநின்றதாய்த்து; அப்படிப்பட்ட திருநாங்கூர். ... ... ௩.

அவதாரிகை. நாலாம்பாட்டு.— (சிறையித்யாதி) மாலி ஸுமாலி துடக்கமான ராக்ஷஸரையுடைய பண்டு லங்கையிலேவென்ற ஸர்வேஶ்வரன் திருமணிமாடக்கோயிலிலே வந்து நின்றருளினான், நெஞ்சே! அங்கேசென்றநுபவியென்கிறார்.

"அண்ட" என்றதுக்கு - சேரஎன்று அர்த்தம்திருவுள்ளம்பற்றி, அத்தால் - எல்லாமென்றாய், அத்தையருளிச்செய்கிறார் (சொல்லியித்யாதி.) ... ௩.

நாலாம்பாட்டு.— (சிறையித்யாதி.) ஒருநீர்ப்புமுவை வென்றவளவன்றிக்கே, ப்ரபலரான மாலிமுதலானுரை வென்றான்கிடாயென்று, வீரவாசிபறியுமவராகையாலே அத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதியைஸூசிப்பிக்கிறார் (மாலியித்யாதி.)

http://acharya.org

மூ.— சிறையாருவணப்புள்ளொன்றேறியன்று
திசைநான்கும் நான்கு மிரியச்செருவில்
கறையார்நெடுவேலரக்கர்மடியக்
கடல்சூழிலங்கைகடந்தானிடந்தான்
முறையால்வளர்க்கின்ற முத்தீயர்
நால்வேதரைவேள்வியாறங்கரேழிசையோர்
மறையோர்வணங்கப்புகழெய்து நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. ௪.

ப - ரை.— அன்று-கொம்மைமிருந்தகாலத்திலே, சிறை-சமஸாதநமான[ர] சிறகுகள், ஆர் - நிறைவற்றிருந்துள்ள, ஒன்று - ஒப்பற்ற, உவணப்புள்-கருடனென்னும் பெரியதிருவடியின்மேலே, ஏறி - ஏறிக்கொண்டெழுந்தருளி, செருவில்-யுத்தத்திலெதிர்த்த, கறை ஆர்நெடுவேல் - கறைகழுவவொண்ணாதபடியாய் நெடிதான வேலையுடைய, அரக்கர்-ராக்ஷஸர்கள், திசைநான்கும்நான்கும்-எட்டுத்திக்குக்களிலும், இரியமடிய - ஓடி மடியும்படி, கடல்சூழ் - கடலாகிய அகழாற் சூழப்பட்ட, இலங்கை - லங்கையென்னும் நகரை, கடந்தான் - ஜயித்தவனுடைய எம்பெருமானுடைய, இடம் - ஸ்தாநமாய்; முறையால்-வேதோக்த க்ரமத்தாலே, வளர்க்கின்ற—, முத்தீயர் - மூன்றுஅக்நியையுடையராய், நால்வேதர்-அப்படியேநாலு வேதங்களையுமதிகரிப்பாராய், ஐவேள்வி ஆறு அங்கர்-பஞ்சமஹாயஜ்ஞஷடங்கங்களையுடையராய், ஏழிசையோர் - ஸப்தஸ்வரங்களையுமுள்ளபடியே அறிந்திருப்பவருமான, மறையோர் - விலக்ஷணரான ப்ராஹ்மணர்கள், வணங்க - ப்ரணாமபூர்வகமாக ஆச்ரயிப்பதினால், புகழ் எய்தும்-மிக்க புகழ்பெற்றிருக்கிற, நாங்கூர்—. (௪)

நாலாம்பாட்டு. (சிறையாரித்யாதி) சிறையென்று - சிறகு. சிறையார்ந்திருக்கிற உவணமாகிற புள்ளையூர்ந்து. உவணமென்று-பருந்துஜாதிக்குப்பேர். புள்ளென்று - பக்ஷிஸாமாந்யத்துக்குப்பேர். (உவணமித்யாதி) அதனைமேற்கொண்டு அன்றுதிக்குக்களெட்டும் சிதற, யுத்தத்திலே. (கறையாரித்யாதி) கறைகழுவாத நெடியவேலையுடைய ராக்ஷஸர் முடிய,

வ்யா.— (சிறையாருவணப்புள்) சிறையென்று - சிறகு. ஸமஸாதநமான சிறகு குறைவற்றிருந்துள்ள. (உவணப்புள்) உவணமாகிற புள். உவணமென்று - பெரியதிருவடிக்குப்பேர். புள்ளென்று - பருந்துஜாதிக்குப்பேர்† (ஒன்றேறி) அத்விதீயமான புள்ளையேறி. (திசை நான்கும் நான்குமிரிய) எட்டுதிக்குக்களும் இரியும்படியாக. (செருவில்) யுய்யத்திலே. (கறையாரித்யாதி) கறைகழுவவொண்ணாதபடியாய் நெடிதானவேலையுடைய ராக்ஷஸஜாதி மடிய. ஒளித்துப்போவாரும், முடிவாருமாகை.

எட்டுதிக்குக்களும் - எட்டுதிக்குக்களிலும். இரியும்படி - சிதறும்படி. "இரியும்படி" என்றதால் ஸஹிதார்யமருளிச்செய்கிறார் (ஒளித்தித்யாதி.)

† "புள்ளென்று - ஜாதிக்குப்பேர்" என்று சில ஸ்ரீகோஸங்கள்.

http://acharya.org

மூ.— இழையாடுகொங்கைத் தலைநஞ்சமுண்டிட்
டிளங்கன்றுகொண்டு விளங்காயெறிந்து
தழைவாடவன்தாள்குருந்த மொசித்துத் தடந்
தாமரைப்பொய்கை புக்கானிடந்தான்;—
குழையாடவல்லிக் குலமாடமாடே
குயில்கூவநீடு கொடிமாடமல்கு
மழையாடுசோலை மயிலாலுநாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. (ரு).

ப - லை.— இழை - ஆபரணங்கள், ஆடு-ஆடாநின்ற, கொங்கைதலை-பூதனையின் ஸ்தநாக்ரத்திலுள்ள, நஞ்சம்-விஷத்தை, உண்மட்டு - உண்டு, விளங்காய்-விளங்காயாய் நின்ற அஸுரன்மேலே, இளம்கன்று கொண்டு எறிந்து - சிறுகன்றாய் வந்த அஸுரனைத்தூக்கி அவ்விருவருமிரும்படிமோத, வன்தாள் - வலிய தாளையுடைய, குருந்தம்-குருந்தமரத்தை, தழைவாட - அதன் தழைகளெல்லாம் வாடியுலரும்படி, ஒசித்து - முறித்து, பின், தடம் - பெரிதான, தாமரைப்பொய்கை-பத்மஸரஸ்ஸிலே, புக்கான் - போய் அங்கு க்ரீடைபண்ணும் [illegible] பண்ணின கண்ணனுடைய, இடம்-ஸ்தாநமாய்; குழை - [illegible], ஆட - மந்தமாருதத்தாலசைந்தாடுவதினால், வல்லிக்குலம் - [illegible] படர்ந்த புஷ்பக்கொடிக்கூட்டங்கள், ஆட-ஆடவும், மாடே - [illegible], குயில் - கோகிலங்கள், கூவ-கூவவும், மழை ஆடு - மேகங்கள் ஸஞ்சரிக்கிற, சோலை - சோலையிலே, மயில் ஆலும் - மயில்கள் நர்த்தம் பண்ணப்பெற்றதுமாய், நீடு - [illegible], கொடி-த்வஜங்கள் நாட்டப்பட்ட, மாடம்-ஸௌதங்கள், மல்கும்-நெருங்கியிருக்கப்பெற்றதுமான, நாங்கூர்—. ... ... (ரு)

கடல்சூழ்ந்தலங்கையில்ராக்ஷஸரைக்கொன்றவனிடம். (முறையாலித்யாதி) த்ரேதாக்நிகளையும் ஶாஸ்த்ரவோதிதமானபடியே வளர்க்கின்றவர்களாய். நாலுவேதத்தையும் பஞ்சாக்நிகளையும் [illegible] வேதோதிதமானபடியே வல்ல மறையோர் வணங்கப் புகழ்சேரும் திருநாங்கூரில் மணிமாடக்கோயில் வணங்கென்மனமே. ... அ.

(கடல்சூழ்ந்த்யாதி) கடலாலே சூழப்பட்டிருப்பதாய், புற்றுக்கள் பாம்பபுறுதேயிருக்குமாப்போலே ராக்ஷஸர்கள்சேரும்படியான லங்கையைக்கடந்தான். மாலி, ஸுமாலி, மால்யவான்முடக்காமதையை, பெரிய திருவடிமேலே யெழுந்தருளி நிரஸித்ததாகச்சொல்லக்கடவதிறே. (கடந்தானிடந்தான்) அவ்வூரைஜயித்தவன் வாஸஸ்தாநம்.

(முறையாலித்யாதி) ப்ராப்தமானபடியேயென்னுதல்; வேதோக்தமான க்ரமத்தாலே வளர்க்கின்ற அக்நித்ரயங்களையுமுடையராய், நால்வேதர் - அப்படியேநாலுவேதத்தை உச்சரித்திருப்பாராய், பஞ்ச மஹாயஜ்ஞாநுஷ்டாநங்களில் வைகல்யமின்றிக்கே அங்கங்களாலும் கைவந்திருப்பாருமாய், ஸப்தஸ்வரங்களையு முள்ளபடியேயறிந்திருக்கும் ப்ராஹ்மணர். (வணங்கவித்யாதி) இப்படிப்பட்ட விலக்ஷணராநுயியாநின்றார்களென்கிற புகழையுடைத்தான திருநாங்கூர். ச.

"முறையால்" என்றது - மேலெல்லாமநுஷங்கிக்கிறதென்று திருவுள்ளம்பற்றி (அப்படியேயென்றது.) ... ... ச.

http://acharya.org

அஞ்சாம்பாட்டு. (இழையாடித்யாதி) பெற்ற தாய்போலே ஒப்பித்துவந்த பூதனையுடைய ஆபரணமசைந்த முலைத்தலையில் நஞ்சை யமுதுசெய்து, இளங்கன்றைக்குணிலாகக்கொண்டு விளவாய்நின்ற அஸுரனையெறிந்து விழவிட்டு, தழைத்துநின்ற வலிதான தாளையுடைய குருந்தை முறித்து, பெரியதாமரைப்பொய்கையிலே.

அவதாரிகை. அஞ்சாம்பாட்டு.— ப்ரதிகூலவர்கத்தைப்போக்கி இடைப்பெண்களோடே ஸம்ச்லேஷித்தவன் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், நெஞ்சே! அத்தேசத்தை யாச்ரயியென்கிறார்.

வ்யா.—(இழையாடித்யாதி) இழையென்று – ஆபரணம். ஆபரணங்களாடாநின்றுள்ள கொங்கைத்தலைநஞ்சையுண்டு. பூதனை பேய்வடிவைமாற்றி யசோதைப்பிராட்டிவடிவாக வொப்பித்துவர, அந்த ஆபரணங்களாலே அலங்க்ருதமான முலையில்நஞ்சை யுண்டானாய்த்து. (இளங்கன்றித்யாதி) கன்றாய்நின்ற அஸுரனைக்கொண்டு விளாவாய்நின்ற அஸுரனையெறிந்து, இருவரையும் தங்களிலே முடியும்படி பண்ணி. (தழைத்தித்யாதி) அஸுராவேசத்தாலே உயிருடைத்தாயிருந்த மரமானது இவன்கிட்டச்சென்றவாறே தழைவாடிற்றாய்த்து. வலிய தாளையுடைத்தான குருந்தைமுறித்து. (தடந்தாமரையித்யாதி) தனக்கும் பெண்களுக்கும் ஜலக்ரீடைபண்ணுகைக்கு யோக்யமான இடத்தைக் காளியன்புக்கு தூஷித்துக்கிடக்க, அங்கேபோய்ப் புக்கானாய்த்து; பெண்கள் நீராடப்புக்க விடத்தையுமுடைத்தாய் தாமரையையுமுடைய பொய்கையிலே புக்கு அவர்கள் துகிலை வாங்கினபடியாகவுமாம்; அவன் வர்த்திக்கிற தேசம்.

(தழையித்யாதி) தழைகளானவையும் பூங்கொடிகளும் மந்தமாருதத்தாலே அசைந்துவர. (மாடே குயில்கூவ) பர்யந்தங்களிற் சோலையில் புஷ்பங்களினுடைய பரிமளத்தை ஆக்ராணம்பண்ணி, முக்தர் ஸாமகானம்பண்ணுமாபோலே குயில்கள் கூவாநின்றனவாய்த்து. (நீடுகொடிமாடமல்கு) நெடியகொடிகளையுடைத்தான மாடங்களாலே நெருங்கியிருப்பதாய்.

அஞ்சாம்பாட்டு.— (இழையித்யாதி.) பரத்வப்ரகாசகமான பெரியதிருவடி மேலேறி மாலிமுதலானாரை வென்றவிடத்திலும் பிள்ளைச்சேவகத்தில் திருவுள்ளம் குடிபோயநுபவிக்கிறானென்று ஸங்கதி திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (ப்ரதிகூலேத்யாதி.) பெண்களோடேயென்றது-"தாமரைப்பொய்கைபுக்கான்" என்றதைப்பற்ற.

"தழைவாட" என்று விசேஷித்ததுக்கு பாவம் (அஸுரேத்யாதி.) விரோதிநிரஸநப்ரகரணாநுகுணமாக காளியன்பொய்கையாக விவக்ஷித்து, அப்போது "தாமரை" என்று விசேஷிப்பானென்னென்னவருளிச்செய்கிறார் (தனக்குமித்யாதி;) ஸ்நாநாஸநக்ரியைக்கநுகுணமாக விசேஷித்தாரென்று கருத்து. அர்த்தாந்தரம் (பெண்களித்யாதி.)

http://acharya.org

மூ.—பண்ணேர்மொழியாய்ச்சியரஞ்ச வஞ்சப்
பருவாய்க்கழுதுக் கிரங்கா தவள்தன்
உண்ணாமுலை மற்றவளாவியோடுமுடனே
சுவைத்தானிடம் ;-ஓங்குபைந்தாள்
கண்ணார்கரும்பின் கழைதின்றுவைகிக்
கழுநீரில்மூழ்கிச் செழுநீர்த்தடத்து
மண்ணேந்திளமேதிகள் வைகுநாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. ௬.

ப - ரை.— பண்நேர் - கானத்தோடொத்த, மொழி-பேச்சையுடைய, ஆய்ச்சியர் - இடைச்சிகள், அஞ்ச - பயப்படும்படி, தாயுருக்கொண்டுவந்த, வஞ்சம்-வஞ்சனையையும், பருவாய் - பெருத்தவாயையுமுடைய, கழுதுக்கு - பூதனையினிடத்தில், இரங்காது-தான்நோவுபடாமல், அவள்தன்-அப்பூதனையினது, உண்ணா-விஷம்தடவியிருப்பதால் அயலாராலுண்ணமுடியாத, முலை - முலைப்பாலை, அவள்ஆவியோடும் - அவளுயிருடனேகூட, உடனேசுவைத்தான் - ஏககாலத்திலே அமுதுசெய்த ஸ்ரீக்ர்ஷ்ணனுடைய, இடம் - ஸ்தானமாய் ; இளமேதிகள் - எருமைநாகுகள், ஓங்கு - உயர்த்தியையும், பைந்தாள் - பசிய தாளையும், கண்ஆர் - குறுகினகணுக்களையுமுடைய, கரும்பின் - இக்ஷுதண்டங்களின், கழைதின்று - தலையாடியைத்தின்று, வைகி-சிலகாலம் அவ்விடத்திலேயேகிடந்து, பின் அவ்வெம்மையாற்றுதைக்காக, கழுநீரில - செங்கழுநீர்ப்பணையில், மூழ்கி-புக்குமுழுகி, உகந்தாம்.[உய செழுநீர்த்தடத்து-அழகிய நீரையுடைய தடாகத்திலே, போய்முழுகி, மண்ணேந்தவைகும் - சேற்றுமண்கொண்டு கரையேறுதேங்கிடக்கிற, நாங்கூர்—. (௬)

(குழையித்யாதி) மேகங்கள் ஸஞ்சரிக்கிற சோலையையும், அவ்விடத்தில் மேகதர்ஸநத்தாலே யாடுகிறமயிலையுமுடைய நாங்கூர். ... ௫.

ஆறாம்பாட்டு. (பண்ணேரித்யாதி) பண்ணொத்தபேச்சையுடைய ஆய்ச்சியரஞ்சும்படி,

---

(மழையாடுசோலை மயிலாலுநாங்கூர்) உயர்ந்தசோலையின் தலையிலே மேகங்கள்ஸஞ்சரிக்க அவற்றைக்கண்டு வர்ஷாவாகக்கொண்டு சோலையில் வர்த்திக்கிற மயில்களானவை ஆடத்தொடங்கும் ; இப்படிப்பட்ட திருநாங்கூரில். ... ... ௫.

அவதாரிகை. ஆறாம்பாட்டு.— பூதனையை அப்போதே ப்ராணன் போம்படி முலையுண்ட ஸர்வேஸ்வரன் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், நெஞ்சே ! அங்கே சென்றநுபவியென்கிறார்.

வ்யா.— (பண்ணேர்மொழியாய்ச்சியரஞ்ச) பண்ணோடொத்த மொழியையுடைய இடைச்சிகளஞ்சும்படி.

வர்ஷாவாக - வர்ஷஹேதுக்களாக. ... ... ௫.

ஆறாம்பாட்டு.—(பண்ணேரித்யாதி.) பிள்ளைச்சேவகங்களில்வைத்துக்கொண்டு கேவலம் பால்யத்திற்செய்த சேவகமாகையாலே பூதநாநிரஸநம் பின்னாட்டிற்றென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (பூதனையையித்யாதி.)

http://acharya.org

வஞ்சத்தையும் பெரியவாயையுமுடைய பேய்க்கு ஈடுகொடாதே, அவள் தன்னுடைய, ஒருவருமுண்ணாத விஷத்தைப்பொதிந்தமுலைப்பாலையும் அதுக்குவேறானப்ராணனையுங்கூட வுண்டவனிடம். (ஓங்கித்யாதி) ஓங்கிவளர்ந்து பரந்த அடியையும் பலகண்களையுமுடைய, கரும்பின் கழையுண்டு-குருத்து, அத்தைத்தின்று, அதிலேதங்கி, அவ்வுஷ்ணமாறச் செங்கழுநீரோடையிலேமுழுகி, அதினின்றும்போந்து, பெரிய நீரையுடைய தடாகத்திலே விடாயெல்லாங்கெட்டுக் கரையிலேயேறிக் கரைபொருது, கோடுகளில் மண்ணையும் யரித்துக்கொண்டு இளவெருமைகள் தங்குகிற நாங்கூர். ... ... சா.

(வஞ்சமித்யாதி) வஞ்சநத்தையுடையளாய், பயாவஹமாம்படி ஜாத்யுசிதமான பெரியவாயையுடையளான, கழுதுண்டு - பேய், அதுக்கிரங்காதே. இரங்குகையாவது-நோவுபடுகையாய், அதின்கையில் தான் நோவுபடாதே. (அவள்தனுண்ணாமுலை) விஷமாகையாலே வேறுசிலருண்டாரில்லையிறே; அப்படிப்பட்ட முலை. (மற்றவளாவியோடு முடனே சுவைத்தானிடம்) விஷத்தை வாங்குகையன்றிக்கே, அதுக்காச்ரயமான ப்ராணனையுங்கூட ஒருக்காலே அமுதுசெய்தவன் வர்த்திக்கிற தேசம்.

(ஓங்குபைந்தாளித்யாதி) உயர்த்தியையுடைத்தாய் பசுமையையுமுடைத்தாய் தாளையுமுடைத்தாய் கண்குறுகின கரும்பினுடைய, கழையுண்டு - தலையாடி, அத்தைத்தின்று, தன்னளவல்லாதபடி மிகத்தின்கையாலே ஸஹிக்கமாட்டாமை அவ்விடந்தன்னிலே இடம்வலங்கொண்டு விடாயாறி, பின்னைப்போய் அந்த உஷ்ணமாறும்படி செங்கழுநீர்ப்பணையிலே புக்குமுழுகி. (செழுநீரித்யாதி) அழகிய நீரையுடைத்தாயிருக்கிற தடாகத்திலே புக்குமுழுகி, * கோட்டுமண்கொண்டு, அத்தைச்சுமந்து மிளருமாய்த்து மஹாவராஹம் கிளர்ந்தாப்போலே. (வைகுநாங்கூர்) பின்னை அடித்து ஏறவிடவும் போகாதபடி அவ்விடந்தன்னிலேகிடக்குமாய்த்து; அப்படிப்பட்ட திருநாங்கூரில்.—இவ்விடத்தை பிள்ளைவிழுப்பரையரும்ஆப்பானுங்கூட அநுஸந்தித்து, "இரண்டிடத்திலே 'வைகி' என்றுண்டாயிருந்தது, இது செய்யும்படியென் ?" என்று பட்டரைக்கேட்க ; "ஸௌகுமார்யத்தாலே யிரண்டிடத்திலும்கிடந்தது" என்றருளிச்செய்தார். ... சா.

"பகு" என்றதின் அர்த்தம் (பெரியவென்றது.) "மற்று" என்றத்தாலே - வைலக்ஷண்யம் தோற்றுகையாலே, அத்லைதப்பற்றவருளிச்செய்கிறார் (அதுக்காச்ரயமானவென்று.)

ஆர்தல் - மிகுதியாய், அதின் அர்த்தம் (குறுகினவென்றது.) தலையாடி - கொழுந்தாடை. "வைகி" என்றதுக்குத்தாத்பர்யம் (தன்னளவித்யாதி.) பணையிலே-நீர்நிலத்திலே. (மிளருமாய்த்து) என்றவநுஸந்தாநம், இளமேதிகள்-எருமைநாகுகள் என்று கூட்டுவது.

இதுசெய்யும்படி யென்னென்றது - இரண்டிடத்திலும்கிடந்து காலத்தைப் போக்கிற்றென்றத்தால் ப்ரயோஜநமென்னென்ன வென்றபடி. ... கூ.

http://acharya.org

மூ.— தளைக்கட்டவிழ்தாமரைவைகுபொய்கை
தடம்புக்கடங்காவிடங்காலரவம்
இளைக்கத்திளைத் திட்டதனுச்சிதன்மே
லடிவைத்தவம்மானிடம் ;-மாமதியம்
திளைக்கும் கொடிமாளிகைசூழ்தெருவில்
செழுமுத்து வெண்ணெற்கெனச்சென்று முன்றில்
வளைக்கைநுளைப்பாவையர் மாறுநாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. ௭.

ப - ரை.— தளைத்தாமரை - மொட்டுத்தாமரையும், கட்டவிழ்தாமரை - அல ர்ந்ததாமரையும், வைகு - தங்குகிற, பொய்கைத்தடம் - ஸரஸ்ஸிலே, புக்கு - ப்ர வேசித்து, அதனுள்ளேயிருந்த, அடங்கா - அடங்காத கொழுப்பையுடைய, விடங்கால் - விஷத்தைச்சக்குகின்ற, அரவம் - காளியன், இளைக்க - இளைத்துப் போம்படி, திளைத்திட்டு - வ்யாபரித்து, அதன் உச்சிதன்மேல - அதன் சிரஸ்ஸிலே, அடிவைத்த - திருவடிகளையிட்டுக்கொண்டு நர்த்தனம் பண்ணின, அம்மான - ஸர்வேச்வர னுடைய, இடம் - ஸ்தானமாய் ; வளைக்கை - வளையலணிந்த கைகளையுடைய, நுளை ப்பாவையர் - நுளைச்சிகள், மாமதியம் - சந்திரனானவன், திளைக்கும் - தாவடிப்போய் பெருதேவிளையாடுகிற, கொடி - கொடிகளையுடைய, மாளிகைசூழ் - மாளிகைகளாலே சூழப்பட்ட, தெருவில் - வீதிகளிலே, செழுமுத்து - பெருமுத்துக்களை, வெண்ணெ ற்கு - வெளுத்தநெல்லுக்கு, என - தருகிறோமென்று, கூவிக்கொண்டேபோக, ஒரு வருங்கேளாமையாலே, முன்றில் - ஒவ்வொருவர் வீட்டுவாசல்தோறும், சென்று மாறும் - தாமேவலியப்போய்மாற்றித்திரிகிற, நாங்கூர்—. ... (எ)

ஏழாம்பாட்டு. (தளைக்கட்டவிழ்த்யாதி) மொட்டித்த தாமரை யும் கட்டவிழுகிற தாமரையும் தங்குகிற பொய்கைக்கரையிலே

அவதாரிகை. ஏழாம்பாட்டு.— காளியனுல்வந்த ஆபத்தைப்போ க்கின எம்பெருமான் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், நெஞ்சே! அங்கே சென்றநுபவி என்கிறார்.

வ்யா.— (தளைக்கட்டவிழ்தாமரைவைகு பொய்கைத்தடம்புக்கு) தளைத்தாமரையும் கட்டவிழ்தாமரையும்;-மொட்டுத்தாமரையும் அல ர்ந்த தாமரையும், தங்குகிற பொய்கைக்கரையிலே புக்கென்னுதல்;

ஏழாம்பாட்டு.—(தளையித்யாதி.) கீழ்ச்சொன்ன பூதநாஸ்தநவிஷம் அமிர்தமெ ன்னும்படி ஸஹஜமூலமாக விஷத்தைக் கக்குகிற காளியன்தடத்திலே "அஹியா தாப்ரஹர்த்தாஷ" என்கிறபடியே தானேபோய் நிரஸித்த செயலாகையாலே இவ்வபதாநத்திலே நெஞ்சுசென்று அநுஸந்திக்கிறுரென்னும் ஸங்கதியை ஹ்ருதீக ரித்துக்கொண்டு, தாத்பர்யமருளிச்செய்கிறுர் (காளியனுலித்யாதி.)

கீழ்ச்சொன்னவிரண்டையும் க்ரமேண விவரியாநின்றுகொண்டு, "தடம்" என்று - கரையாக வருளிச்செய்கிறுர் (தளையித்யாதி.) "புக்கு" என்ற பதத்தின் ஸ்வாரஸ்யத்தைப் பற்ற, "தடம்" என்றதுக்கு - இடம் என்ருய், அத்தால

http://acharya.org

சென்று. தடம் - கரை. ஒருவர்க்கு மடங்காதே விஷத்தை உமிழுகிற காளியனிலைக்க, அதின்தலையிலே பாய்ந்து நின்று ந்ருத்தம் பண்ணினவனிடம். (மாமதியமித்யாதி) பெரிய வந்த்ரனானவன் மாடங்களில் ஸௌம்யதையாலும் அலங்காரத்தாலும் ஸஹவாஸாஜ்ஞையாலே ஸஞ்சரிக்கிறவன், அத்தைமறந்து துவக்குண்டு இங்கே விளையாடுமாய்த்து. கொடிமுடிந்து வழியிலிட்டால் அவனாலும் போகவொண்ணாதே. (தெருவிதியாதி) திருவீதியிலே அழகிய முத்துக்களை யெடுத்துக்கொண்டு வந்து கழியருடைய பெண்கள் சென்று முற்றங்களிலே புக்கு முத்து நெல்லுக்கு மாறும் நாங்கூர். ... ... ௭.

பொய்கையினுள்ளே புக்கென்னுதல். (அடங்காவிடங்காலரவம்) அடங்காதேகிளர்ந்தெழாநிற்பதாய், விஷத்தைக் காலாநின்றுள்ள, அரவமென்று-காளியன், அதுஇளைக்கும்படி வ்யாபரித்து அத்தோடேவிளையாடி, "அடிச்சியோம் தலைமிசைநீயணியாய்" என்று ப்ரார்த்திக்கும்படியான திருவடிகளை அதின்தலையிலேபாய்த்துவைத்தது. (அம்மானிடம்) இப்படி ஸர்வரக்ஷணங்களையும் பண்ணும் ஸர்வேஶ்வரன் வர்த்திக்கிறதேஶம்.

(மாமதியமித்யாதி) வந்த்ரனானவன் ஜகத்ரக்ஷணத்துக்காக ஸஞ்சரிக்கிறவன் கொடிகளிலே துவக்குண்டு, போகப்பெறாதே அவற்றோடேவிளையாடுமாய்த்து; இப்படியேயிருக்கிற கொடிகளையுடைத்தான மாளிகைகளாலே சூழப்பட்ட தெருவில். (செழுமுத்து வெண்ணெற்கென) "போகநின்ற செல்வமையும், அழகியமுத்து" என்றுநின்றார்கள். (வெண்ணெற்கென) செந்நெல்வேண்டா, வெண்ணெல்லமையும் என்றுநின்றார்கள். (சென்று) வந்துகொள்வாரில்லாமையாலே; கொண்டுசென்று விற்குமித்தனையாய்த்து. முன்றில்[உருகளிலே - வாசல்களிலே. (விளாக்கைநுளைப்பாவையர்மாறும்) இடைச்சிகள் ஒப்பித்துத்தயிர்கடையுமாப்போலே, நுளைச்சிகளும் ஒப்பித்தாய்த்து முத்துவிற்கப்போவது; இப்படி அலங்க்ருதைகளான நுளைச்சிகள் முத்துவிற்கைக்கு ஸஞ்சரிக்கிற திருநாங்கூரிலே. ௭.

மெலித்தது-ஸப்தம்யர்த்தமாய், அத்தையருளிச்செய்கிறார் (பொய்கையித்யாதி.) காலாநின்றுள்ள - கக்காநின்றுள்ள. "திளைத்திட்டு" என்றதினர்த்தம்(விளையாடியென்றது.) மித்த்ரனென்றதே, "அடிவைத்த" என்றத்தால் தோன்றின ஈடுபாட்டையருளிச்செய்கிறார் (அடிச்சியோமித்யாதி.) அதிப்ரதிகூலன் தலையிலும் திருவடிகளை வைக்கைக்குஹேது அம்மானாகை என்று விவக்ஷித் தருளிச்செய்கிறார் (இப்படியித்யாதி.)

வெண்ணெல்லமையு மென்றது - அஶ்லாக்யமான நெல்லமையு மென்கை.

http://acharya.org

அ.— துளையார்கருமென்குழலாய்ச்சியர்தம்
துகில் வாரியும் சிற்றில் சிதைத்தும் முற்றா
விளையார்விளையாட்டொடு காதல்வெள்ளம்
விளைவித்தவம்மானிடம் ;–வேல்நெடுங்கண்
முளைவாளெயிற்று மடவார்பயிற்று
மொழிகேட்டிருந்து முதிராதவின்சொல்
வளைவாயகிள்ளை மறைபாடுநாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. அ.

ப-ரை.—துளைஆர்கருமென்குழல-துளைமிக்கிருந்த கறுத்தம்ருதுவான கூந்தலையுடைய, ஆய்ச்சியர்தம்-கோபஸ்த்ரீகளின், துகில்வாரியும்-வஸ்த்ரங்களை அபஹரித்தும், சிற்றில் சிதைத்தும்-அவர்கள் சிற்றில்களைச் காலாலே பழித்தும், முற்றாவிளையார் விளையாட்டொடு - மிக்கயௌவநம் வாராத பாலிகரோடுண்டான பாலக்ரீடையோடே, காதல்வெள்ளம்- ப்ரேமஸாகரத்தை, விளைவித்த-பிறப்பித்தும் இனையும் இவை போலும் பலவிசித்ரகார்யங்களைச்செய்த, அம்மான்-ஸர்வேஸ்வரனது, இடம்-ஸ்தாநமாய் ; வேல் - வேல்போலே கூர்மையுடைத்தாய், நெடுங்கண - நெடிதான கண்களையும், முளை - முளைக்கிறவளவாய், வாள் - காந்தியையுடைத்தான, எயிற-தந்தபங்க்தியையுமுடைய, மடவார் - வைதிகஸ்த்ரீகள், பயிற்ற-அப்யஸிப்பிக்க, மொழி - வேதபதங்களை, கேட்டிஇருந்த - கேட்டுக்கொண்டிருந்து, பின்அவர்கள் அப்பால் அகன்றவாறே, முதிராத இன்சொல்-கடினமாகாத இனியசொல்லையும, வளைவாய - வளைந்தவாயையுமுடைய, கிள்ளை-கிளிகள், மறைபாடும் - வேதபாராயணம் பண்ணுகிற, நாங்கூர்—. ... ... (அ)

எட்டாம்பாட்டு. (துளையித்யாதி) துளையாநிற்கிற கருமென்குழலாய்ச்சியர்

அவதாரிகை. எட்டாம்பாட்டு.— திருவாய்ப்பாடியிற் பெண்களோடே நிரவதிகஸம்ஶ்லேஷத்தைப் பண்ணின க்ருஷ்ணன் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், நெஞ்சே ! அங்கே சென்றநுபவியென்கிறார்.

வ்யா.— (துளையார்கருமென்குழலாய்ச்சியர்தம்) துளையாரென்று-துளைமிக்கிருக்கை. அதாவது-சுருண்டு கறுத்து ம்ருதுவான [கூடி] குழலையுடையராய், கரையிலே பரியட்டங்களை யிட்டுவைத்து முழுகியேறும் பருவமாயிருந்துள்ள இடைப்பெண்களுடைய.

எட்டாம்பாட்டு.—(துளையாரித்யாதி.) அஞ்சாம்பாட்டில் ப்ரஸ்துதமான"தடந்தாமரைப்பொய்கைபுக்கான்" என்றதுக்கு இரண்டு தாத்பர்யத்தாலே யருளிச்செய்தாராகையாலே முந்தினதாத்பர்யத்தைக் கீழ்ப்பாட்டி லருளிச்செய்தார் ; இரண்டாம்தாத்பர்யத்தை யிப்பாட்டிலே வெளியிடுகிறாரென்றுதல்; அன்றிக்கே, கீழ்ப்பாட்டில் பொய்கைபுக்கது ப்ரஸ்துதமாகையாலே ஸ்மஜீதமான வஸ்த்ராபஹரணத்தை யநுஸந்திக்கிறாரென்றுதல் ஸங்கதிதிருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (திருவாய்ப்பாடியிலித்யாதி.)

http://acharya.org

துகில் வாரியுமென்றபடி. இப்பொருள் சால அழகிது. துகில் வாரியு மென்கிற ப்ரகரணத்துக்குப் போரச்சேரும். துளை யென்பது - தலைக்கோலம். தலைக்கோலத்தை யுடைத்தாய், கருகி ம்ருதுவான குழலையுடைய ஆய்ச்சியர். அன்றியே, துளை-மூங்கிலாய், துளையான தோளும். கரு.மென்குழலாய்ச்சியரென்றுமாம். (ஆய்ச்சியரித்யாதி) இடைப்பெண்கள் பரியட்டங்களை விட்டுவைத்துக் குளிக்கப்புக, அவற்றை வாரிக்கொண்டு குருந்திலே யேறியும், அவர்கள் சிற்றிலிழைத்து விளையாட அத்தையழித்தும், மிகவும் சிறுப்பெண்களுடனே விளையாடி அவர்களுக்குத் தன் பக்கலிலே ஆசைவெள்ளத்தை விளைவித்த அம்மானிடம். (வேலித்யாதி) வேல்போன்ற கூர்மையையும் புகரையும் ஒழுகுநீட்சியையுமுடைய கண்ணையும், முளைக்கிறவளவாய் ஒளியையுடைய த்ஸபங்க்தியை யுடையருமாய், மடப்பத்தையுடைய பெண்கள் அந்யோந்யம் பேசுகிறபேச்சைக் கிளிகள்பேசுகிறதோஎன்றுகேட்டிருந்து, வளைந்தவாயையுடையகிளியானது பண்டு தனக்கு வாஸிதமான மறையைப்பாடும் நாங்கூர். அ.

துளையாநிற்கிறவென்றுமாம். (துகில்வாரியும்சிற்றில்சிதைத்தும்) அவர்கள் கரையிலேயிட்டுவைத்தபரியட்டங்களை, "மஸிமையிலீகூறைதாராய்" என்னும்படி வாரிக்கொடுபோய்க்குருந்திலே யேறியும், "இமைசெய்யும் சிரீதராஎங்கள் சிற்றில் வந்துசிதையேல்" என்னும்படி சிற்றில்சிதைத்தும். (முற்றுவிளையார்விளையாட்டொடு) விளையாட்டுக்கு அவ்வருகு காரியங்கொள்ள வொண்ணாதபடியான பருவத்தையுடையவர்கள். யௌவநம் (க) ஊசாடாதபருவம்; அவர்களோடேயுண்டான விளையாட்டோடேகூட. (காதலித்யாதி) அவர்களுக்கு ப்ரேமஸாகரத்தை விளைத்த ஸர்வேஶ்வரனுடைய வாஸஸ்தாநம்.

(வேல்நெடுங்கணித்யாதி) வேல்போலே கூர்மையையுடைத்தாய் நெடிதான கண்களையுமுடையராய் முளைக்கிறவளவாய் ஒளியையுடைத்தான த்ஸபங்க்திகளையுமுடையரான ஸ்த்ரீகளானவர்கள். (பயிற்றும்மொழிகேட்டிருந்தும்) அவர்கள் "முத்தமிழர்" என்றுப்போலே சிலவார்த்தைகள் சொல்லிக்கற்பிப்பர்களே, அவற்றைக்கேட்டிருந்தேயும்; அவைகிடக்கச்செய்தே. (முதிராதவித்யாதி) முற்றுதேயிருக்கையாலே ம்ருதுவாய் இனிதான சொல்லையுடைத்தாய் வளைந்த வாயையுமுடைத்தான கிளியானது. (மறைபாடும்) தனக்கு வாஸிதமான வேதத்தைப் பாடாநிற்கும். அவ்வூரிலுள்ளார் வேதபாராயணம் பண்ணிப்போருகையாலே அதுவேயிறே யிவற்றுக்குவாஸிதமாயிருப்பது; ஆகையாலே இவர்கள் சொல்லுகிறதுகிடக்க அவற்றைச்சொல்லாநின்றனவென்னுதல். அன்றிக்கே, இவர்கள்தாங்கள் உபாத்யாயருடைய பெண்களாகையாலே வேதபதங்களை அப்யஸிப்பிக்க, அவற்றைச்சொல்லாநின்றன வென்னுதல். (முதிராதவின்சொல்) கற்பிக்கிறவர்கள் பேசுப்போலே யன்றிறே இவற்றினுடையபேச்சு; இப்படியிருக்கிற திருநாங்கூர். ... ... அ.

துளையாநிற்கிற - ஜலத்திலே துளையாநிற்கிறவர்களான வென்றபடி. அ.

(க) ஊசாடுதல் - ஊடாடுதல். நடமாடுதல்.

மூ.— விடையோடவென்றாய்ச்சிமென்றோள்நயந்த
விகிர்தா விளங்குசுடராழியென்னும்
படையோடுசங்கொன்றுடையாயெனநின்
றிமையோர்பரவுமிடம்;-பைந்தடத்துப்
பெடையோடுசெங்காலவன்னம் துகைப்பத்
தொகைப்புண்டரீகத்திடைச்செங்கழுநீர்
மடையோடநின்றுமதுவிம்முநாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. ௯.

ப-ரை.— விடை - ஸம்ச்லேஷத்துக்குபாதகமானஸப்தரிஷபங்களும், ஓட-ஓடிநசிக்கும்படி, வென்று - அவற்றைஜயித்த, ஆய்ச்சி-நப்பின்னைப்பிராட்டியின, மென்தோள் - ம்ருதுபுஜாலிங்கநத்தை, நயந்த - விரும்பின, விகிர்தா - வ்யாவ்ருத்தமான செயல்களையுடையவனே, விளங்கு - விளங்காநின்றுள்ள, சுடர் - புகழையுடைய, ஆழியென்னும்படையோடு-திருவாழியாகிற ஆயுதத்தோடேகூட, சங்கொன்றுடையாய் - அத்விதீயமாயிருக்கும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுடையவனே, என நின்று-என்று சொல்லாநின்றுகொண்டு, இமையோர்-ப்ரஹ்மாதிதேவர்கள், பரவும்-இடைவிடாதேஸ்தோத்ரம்பண்ணுகிற, இடம் - ஸ்தாநமாய் ; பெடையோடு-பெட்டையோடுகூடின, செங்கால - சிவந்தகாலையுடைய, அன்னம்-அன்னமானது, மதுபாநத்தால்முன்னடி தோற்றுமையாலே, பைந்தடத்து-அழகியதடாகத்திலேயுள்ள, தொகைப்புண்டரீகம் - திரண்டதாமரைப்பூக்களை, துகைப்ப-துகைக்க, அத்தாலே, இடை - அத்தாமரைகளின்நடுவேயுள்ள, செங்கழுநீர்- செங்கழுநீர்ப்பூக்களானவை, மடைஓட -மடைகள்நிரம்பியோடும்படி, நின்று மதுவிம்மும்-மதுவெள்ளமிடாநின்றுள்ள, நாங்கூர்—. ... ... (௯)

ஒன்பதாம்பாட்டு. (விடையித்யாதி) நப்பின்னைப் பிராட்டியுடன் ஸம்ச்லேஷிக்கைக்கு விரோதியாய்நின்ற ரிஷபங்களையும் கொன்று, அவளுடனே ஸம்ச்லேஷித்து வ்யாவ்ருத்தமான செயல்களைச் செய்தவனே

அவதாரிகை. ஒன்பதாம்பாட்டு.— நப்பின்னைப்பிராட்டிக்காக எருதேழடர்த்தசெயலையும் திவ்யாயுதங்களோட்டைச் சேர்த்தியழகையும் சொல்லி தேவர்களேத்தத்திருமணிமாடக்கோயிலிலேநின்றருளினான், நெஞ்சே ! அங்கேசென்றநுபவியென்கிறார்.

வ்யா.— (விடையோட) நப்பின்னைப்பிராட்டியோட்டை ஸம்ச்லேஷத்துக்குப்ரதிபந்தகமான ரிஷபங்கள் ஓடும்படி வென்று. (ஆய்ச்சிமென்தோள்நயந்த விகிர்தா) அவளுடைய ம்ருதுவான தோளை விரும்பின வ்யாவ்ருத்தமான செயல்களையுடையவனே.

ஒன்பதாம்பாட்டு.—(விடையித்யாதி.) பலகாலும் க்ருஷ்ணாவதாரத்தோடு ஐக்யம் சொல்லாநின்றீர், மணிமாடக்கோயிலிலிருக்குமவன் க்ருஷ்ணனோவென்ன ; ப்ரஹ்மாதிகள் அங்ஙனேத்துகிறார்கள் கேளாயென்கிறாரென்று ஸங்கதியட்கொண்டருளிச்செய்கிறார் (நப்பின்னையித்யாதி.)

ஓடும்படி - தோற்கும்படி.

http://acharya.org

மூ.—வண்டார்பொழில்சூழ்ந்தழகாய நாங்கூர்
மணிமாடக்கோயில் நெடுமாலுக் கென்றும்
தொண்டாயதொல்சீர் வயல்மங்கையர்கோன்
கலியனொலிசெய் தமிழ்மாலைவல்லார்
கண்டார்வணங்கக்களியானைமீதே
கடல்சூழுலகுக்கொருகாவலராய்
விண்டோய் நெடுவெண்குடைநீழலின்கீழ்
விரிநீருலகாண்டு விரும்புவரே. ௧௦.

ப-ரை.— வண்டு ஆர்-வண்டுகள்மிக்கிருக்கிற, பொழில்சூழ்ந்த - சோலைகளாலே சூழப்பட்ட, அழகாய-அழகாயிருக்கும், நாங்கூர்-திருநாங்கூரில், மணிமாடக்கோயில்-திருமணிமாடக்கோயிலிலே நித்யவாஸம்பண்ணுகிற, நெடுமாலுக்கு-ஸர்வேச்வரனுக்கு, என்றும் தொண்டாயதொல்சீர் - நித்யகைங்கர்யத்தில் அதிகரிக்கையாகிற நிரவதிகஸம்பத்தையுடையராய், வயல்மங்கையர்கோன்-கழனிசூழ்ந்த திருமங்கைக்கு நாதரான, கலியன் - ஆழ்வார், ஒலிசெய் - அருளிச்செய்த, தமிழ்மாலைவல்லார் - தமிழ்த்தொடையிதையும் ஸஹ்ருதயமாக அப்யஸிக்கவல்லவர்கள்; கண்டார்வணங்க - கண்டவரெல்லாம் தங்கள் காலிலேவிழுந்து ஸேவிக்கும்படி, களியானைமீதே - மதத்தையுடைத்தான யானைமேலேறி, நகரிவலம்வந்து, பின், கடல்சூழுலகுக்கு ஒருகாவலராய் - சதுஸ்ஸாகரபர்யந்தையான பூமிக்குத்தாங்களே அத்விதீயராஜாக்களாய், விண்தோய - அப்ரங்கஷமான, நெடுவெண்குடை நீழலின்கீழ் - ஸ்வேதாதபத்ரச்சாயையின் கீழ் இருந்து, விரிநீருலகாண்டு - ஆவரணஜலவேஷ்டிதமான பூமண்டலத்தையாண்டுகொண்டு, விரும்புவர் - நிரவதிகப்ரீதியுக்தர்களாயிருப்பார்கள். ... ... (௧௦)

விளங்காநின்றுள்ள சுடரையுடையதாகிற ஆயுதத்தோடே ஸ்ரீபாஞ்சஜந்யத்தைக் கையிலேயுடையவனேயென்று நித்யஸூரிகள்வந்து ஸ்தோத்ரம்பண்ணுமிடம். (பைந்தடமித்யாதி) பையென்று - அழகும், குளிர்த்தியும், பரப்பும். அழகாய்க் குளிர்ந்து பரந்ததடாகத்திலே சிவந்த காலையுடைய அன்னப்பேடையும் தானுமாய்ப்புக்குத்துகைக்க, துகைப்புண்ட தாமரைகளில் நின்றும் செங்கழுநீரானது, செய்களில் மடைகள் விட்டு வெள்ளமிடும்படி மதுச்சொரியும் நாங்கூர். ... ௯.

(விளங்கித்யாதி) திருநிறத்துக்குப் பகைத்தொடையாக விளங்காநின்றுள்ள சுடரையுடைய திருவாழியாகிற ஆயுதத்தோடேகூடின அத்விதீயமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுடையவனே. (எனநின்று) இப்படி சொல்லாநின்றுகொண்டு. (இமையோர்பரவுமிடம்) ப்ரஹ்மாதிதேவர்கள் விடாதே ஸ்தோத்ரம்பண்ணுகிறவிடம்.

(பைந்தடமித்யாதி) அழகிய பொய்கைகளிலே மதுபாநம்பண்ணி இழிந்த சிவந்த காலையுடைய அன்னமானது, பேடையோடேகூட இழிகையாலே மதுபாநத்தாலே முன்னடி தோற்றாமையாலே ஆச்ரயத்தைப் பேணிப் பரிமாற வழிநிறனவில்லை; அத்தாலே துகைக்கப்பட்ட. (தொகையித்யாதி) திரண்ட தாமரைப்பூவின் நடுவே செங்கழுநீரின் மதுவெள்ளமானது மடையாலே போகாநிற்கச் செய்தேயும், அதினுடைய மிகுதியாலே உள்ளே நின்று விம்மாநிற்குமாய்த்து. திரண்டபுண்டரீகங்களின் நடுவே அன்னங்கள் துகைக்க, நடுவுநிற்கிற செங்கழுநீரானது மதுவெள்ளமிடாநிற்கும்; இப்படியிருக்கிற திருநாங்கூரிலே. ... ௯.

பகைத்தொடையாக - பரபாகமாக. ஆச்ரயத்தை-கமலத்தை. "தொகை-" ஸமூஹமாய், அதிசயம் (திரண்டவென்றது.) விம்மாநிற்கும் - தேங்காநிற்கும். ௯.

http://acharya.org

பத்தாம்பாட்டு. (வண்டாரித்யாதி) வண்டுகள்மொய்த்த பொழிலாலே சூழப்பட்ட நாங்கூர் மணிமாடக்கோயில் நெடுமாலுக்கு என்றும் தொண்டுபட்ட பெரியசீரையுடைய திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகரான ஆழ்வாரருளிச்செய்த தமிழ்மாலையை அப்யஸிக்க வல்லார். (கண்டார்வணங்கவித்யாதி) கண்டார் கண்டவிடத்திலே வணங்கும்படி, மதயானைமேலே, கடல்சூழ்ந்த பூமிக்கு அத்விதீயநிர்வாஹகராய், ஆகாசத்திலேசெல்ல ஓங்கின வெண்கொற்றக்குடைநிழலிலே. (விரிநீரித்யாதி) கடல்சூழ்ந்த பூமியிடத்திலுள்ளார் கொண்டாடப்படுவர். ஆண்டென்பது-அவ்விடமென்றபடி. விரிநீருலகத்திடத்தாரென்றபடி. கடல்சூழுலகுக்கொரு காவலராயென்று - கடல்சூழுலகு முன்பே சொல்லுகையாலே, விரிநீருலகென்று அதுதன்னையே சொல்லில் புநருக்தமாம்.

" ஐஶ்வர்யத்தைபுருஷார்த்தமாகச் சொல்லுவானென்?" என்று பட்டரைநஞ்ஜீயர்கேட்க; " ஈஶ்வரனேயாகிலும் ஒருக்கால் பிறந்து

அவதாரிகை. பத்தாம்பாட்டு.— இத்திருமொழி கற்றார்க்கு பலம் சொல்லுகிறது.

வ்யா.—(வண்டார்பொழில்சூழ்ந்து) சோலையென்று பேர்மாத்ரமாய், மதுபாநம்பண்ணஇழிந்த வண்டுடையாய்க் கிடக்குமாய்த்து. (அழகாயவித்யாதி) தர்ஶநீயமான திருநாங்கூரில் திருமணிமாடக்கோயிலிலே நித்யவாஸம்பண்ணுகிற ஸர்வேஶ்வரனுக்கு. (என்றும் தொண்டாய கோலிர்) நித்யகைங்கர்யத்திலே அதிகரிக்கையாலே வந்த நிரவதிகஸம்பத்தை யுடையராய். (வயல்மங்கையர்கோன்) நல்லவயலையுடைய திருமங்கைக்கு ராஜாவான ஆழ்வார். (ஒலிசெய் தமிழ்மாலை வல்லார்) ஒலியையுடைத்தாக அருளிச்செய்த தமிழ்த்தொடையாகிறஇத்திருமொழியைக் கற்றவர்கள். (கண்டார்வணங்க) அநுகூல ப்ரதிகூலோதாஸீநரென்று வாசியின்றிக்கே, லோகமாகத் தங்கள்காலிலே வந்து விழும்படி மத்தகஜத்தின்மேலேயேறி. (கடல்சூழுலகுக்கொருகாவலராய்) க்ஷத்ரியஜந்மத்திலேபிறந்து ❊ வஸுதாஸாகரபர்யந்தையான பூமிக்குத்தாங்களே நிர்வாஹகராய். (விண்டோயித்யாதி) ஆகாசத்திலேசென்று கிட்டும்படியான முத்துக்குடையின் கீழே கடல்சூழ்ந்த பூமியையாண்டு, விரும்பப்படுவர்; நிரவதிக ப்ரீதியுக்தராவர்கள்.

"ஐஶ்வர்யத்தை புருஷார்த்தமாகச் சொல்லுவானென்?" என்று பட்டரைக்கேட்க; "'ஈஶ்வரனேயாகிலும் ஒருக்கால் பிறந்துஅபி

கிமமம்.— (வண்டாரித்யாதி.) "விரும்புவர்" என்றதுக்கு - எல்லாராலும் விரும்பப்படுவரென்றர்த்த மருளிச்செய்து, விருப்பத்தையுடையவரென்றர்த்தாந்தரமருளிச்செய்கிறார் (நிரவதிகேத்யாதி.)

http://acharya.org

அபிஷேகம் பண்ணவமையும் ஶாமவதஶேஷமாக்கலாமாகில் என்று காணும் ஆழ்வார்திருவுள்ளமிருப்பது" என்றருளிச்செய்தார். ௧௦.

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஷேகம்பண்ணவமையும் ஶாமவதஶேஷ மாக்கலாமாகில்' என்று[ு] காணும்திருமங்கையாழ்வாரிருப்பது" என்றருளிச்செய்தருளினார். ௧௦.

அடிவரவு.— நந்தா முதலை கொலை சிறை இழை
பண் தலை துலை விடை வண்டார் சலம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளேஶரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

(இருப்பது, என்றவதாரம். இனி தம்முடைய ப்ரபந்தம் கற்றவர்க்கு ஶாமவத ஸாங்கர்யபரியோமான மங்களாஶிஷ்யம்வேண்டாவென்றிருப்பரோ என்று இவ்வளவு ஆரித்துக்கொள்வது. ... ... ௧௦.

ஜீயர் திருவடிகளேஶரணம்.

மூன்றாம்பத்து - ஒன்பதாந்திருமொழி - சலங்கொண்ட. ப்ரவேஶம்.

அபிமதவிஷயத்தை யநுபவிக்குமிடத்தில் அவயவங்கள்தோறும் விரும்பி அநுபவிக்குமாப்போலே அங்குள்ளதெல்லா முத்தேஶ்யமாய், ஆபத்ஸகனாய், ஸர்வரக்ஷகனான ஸர்வேஶ்வரன், ரக்ஷணத்துக்கு ஏகாந்தங்களான தேஶமென்று விரும்பிவர்த்திக்கிறதேஶமாகையாலே, அங்குண்டான திர்யக்குக்களுங்கூட, முக்தர்ஸம்ஸாரநுபவம் பண்ணிக்களிக்குமாப்போலே களித்துவர்த்திக்கிற தேஶம்; ஆனபின்பு நியமத்தேஶத்தைப்ராபி யென்று திருவுள்ளத்தைக்குறித் தருளிச்செய்கிறார். ... ... *

அபிமதவிஷயத்தை யநுபவிக்குமிடத்தில் அவயவங்கள்தோறும் விரும்பியநுபவிக்குமாப்போலே, அங்குள்ளதெல்லாமுத்தேஶ்யமாய், ஆபத்ஸகனாய் ஸர்வஜநத்துக்கும் ரக்ஷகனாயிருக்கிற ஸர்வேஶ்வரன் "ரக்ஷணத்துக்கு ஏகாந்தமான தேஶம்" என்று விரும்பி வர்த்திக்கிற தேஶமாகையாலே, அங்குண்டான திர்யக்குக்களுமகப்பட, முக்தர் ஸாமஸ்யநுபவத்தாலே களிக்குமாப்போலே களித்துவர்த்திக்கும் தேஶமானபின்பு நியமத்தேஶத்தைப்ராபி என்று திருவுள்ளத்தைக்குறித் தருளிச்செய்கிறார். ... ... *

---

* சலங்கொண்டவினப்ரவேஶம்.— திருநாங்கூரில் திருமணிமாடக்கோயிலை யநுபவித்த ஆழ்வார் அங்குள்ள மற்றைத்திருப்பதிகளையுமநுபவிக்கிறார் இனிப் பத்துத்திருமொழியாலேயென்று திருவுள்ளம்பற்றி, அவையெல்லாவற்றுக்கும் ஸங்கதியருளிச்செய்கிறார் (அபிமதேத்யாதி.) அங்குள்ளதெல்லாம் - திருநாங்கூர் திருப்பதிகளெல்லாம். (உத்தேஶ்யமாய்) என்றவதாரம், தோற்றி என்று ஶேஷம். இத்திருமொழியில் ப்ரமேயத்தையருளிச்செய்கிறார் (ஆபத்ஸகனாயித்யாதி.) *

http://acharya.org

மூ.—சலங்கொண்ட விரணியன தகல்மார்வங்கீண்டு
தடங்கடலைக்கடைந்தமுதங்கொண்டுகந்தகாளை
நலங்கொண்டகருமுகில்போல் திருமேனியம்மான்
நாடோறும் மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
சலங்கொண்டு மலர்சொரியும் மல்லிகையொண்செருந்தி
செண்பகங்கள் மணநாறும் வண்பொழிலினூடே
வலங்கொண்டுகயலோடி விளையாடு நாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. க.

ப - ரை.— சலம்கொண்ட- மத்ஸரித்துக்கொண்டுதிரிகிற, இரணியனது -[ம ஹிரண்யனுடைய, அகலமார்வம் - விசாலவக்ஷஸ்தலத்தை, கீண்டு - அநாயாஸேந கிழித்துப்பொகட்டும்,தடம்கடலை - பெரியதிருப்பாற்கடலை, கடைந்து - மதித்து, அமுதம் - அதில்பிறந்த அம்ருதத்தை, கொண்டு - தேவதைகளுக்குப் பகிர்ந்திட்டுக் கொடுத்தும், இன்னுமிவ்வாறே ஆச்ரிதரக்ஷணம் பண்ணிக்கொண்டு, உகந்த - ஸந்தோஷயுக்தராயிருந்த, காளை - யுவாவாய், நலங்கொண்ட கருமுகில்போல்-அழகிய நீலமேகம்போன்ற, திருமேனிஅம்மான் - திவ்யதேஹத்தையுடையனான ஸர்வேச்வரன், நாடோறும் - ப்ரதிதினமும், மகிழ்ந்து - ஸந்தோஷித்துக்கொண்டு, இனிது - ஆச்ரிதருக்கினிதாம்படி, மருவியுறைகோயில் - அநந்யப்ரயோஜநராய் நித்யவாஸம்பண்ணுகிற தேசமாய்; கயல் - நீரைவிட்டால் தரிக்கமாட்டாத கயல் மத்ஸ்யங்கள், ஓடி - தனக்குவாஸஸ்தாநமான நீரைவிட்டுஓடி, சலங்கொண்டு மலர்சொரியும்- இசலிஇசலி மலரைச்சொரிகிற, மல்லிகைஒண்செருந்திசெண்பகங்கள் - அழகியமல்லிகைகளும் செருந்திகளும் சம்பகங்களும், மணம்நாறும்-வாஸனையைப்பரப்பவிடுகிற,வண்பொழிலினூடே - வளமிருந்தசோலையிலே, வலங்கொண்டுவிளையாடும் - அப்புஷ்பவாஸநாக்ராணபலத்தாலே துள்ளி விளையாடுகிற, நாங்கூர்—. ... ... (ச)

முதற்பாட்டு. (சலங்கொண்டவித்யாதி) ஸ்ரீப்ரஹ்லாதன்பக்கலிலே சீற்றத்தையுடைய ஹிரண்யனுடைய அகன்றமார்வைப்பிளந்து, பெரிய கடலைக்கடைந்து அம்ருதத்தை

முதற்பாட்டு.— (சலங்கொண்ட) சீற்றத்தையிட்டாய்த்து வருத்தது. சீற்றத்தையுடையனாயிருக்கிற ஹிரண்யனுடைய, வரபலத்தாலே திண்ணியதாய் அகன்றமார்வை, தன்னுடைய சீற்றத்தைக் காட்டி வெதுப்பிப் பதஞ்செய்யப்பண்ணி பின்னை அநாயாஸேந கிழித்து,ஒருவரால்பரிச்சேதிக்கவொண்ணாதகடலை ஸஹாய்ப்ரபதார்யங்களைப்போலே பரிச்சேதித்துக்கடைந்து,அதில் நல்லுயிரான அம்ருதத்தை

முதற்பாட்டு.— (சலமித்யாதி.) "சலங்கொண்ட" என்று அவனைவிசேஷித்ததுக்குத்தாத்பர்யமருளிச்செய்கிறார் (சீற்றத்தையிட்டித்யாதி.) வாக்யார்த்தம் (சீற்றத்தையுடையனாயித்யாதி.) "அது" என்றதினர்த்தம் (வரபலத்தாலேயித்யாதி.) பிளந்தனென்னாதே, "கீண்டு" என்று - அநாயாஸம் தோற்றச் சொன்னதுக்கு பாவம் (சீற்றத்தைக்காட்டியித்யாதி.) தடம் - விஸ்தாரமென்றருளிச்செய்கிறார் (ஒருவராலித்யாதி.)

http://acharya.org

தேவர்களுக்குக்கொடுத்துகந்தகாளை. (நலங்கொண்டவித்யாதி) அழகையுடைத்தான காளமேகம்போன்ற திருமேனியையுடைய ஸர்வேஶ்வரன், நாள்தோறும் ஆநந்தித்துஇனிதாகப்பொருந்தி நித்யவாஸம் பண்ணுகிறகோயில். (சலங்கொண்டித்யாதி)ஒன்றுக்கொன்று இசலி இசலிச் சொரிகிற மல்லிகை, அழகியசெருந்தி, செண்பகங்கள், இவை நறுநாற்றம் கமழுமழகியசோலையுள்ளே, அச்சோலையில் மடுவெள்ளத்திலே புக்கு அத்தாலே வலமுடைய கயல்களானவை விளையாடும் நாங்கூர். ... ... க.

வாங்கி, "நம்மை ஆஶ்ரயித்ததேவஜாதிகார்யம் தலைக்கட்டப்பெற்றோமிறே!" என்று அதுபெற்றால் அவர்களுக்கு வருமுகப்பைத் தானுடையனாய், அவ்வம்ருதத்தைஸ்வீகரித்தார்க்குக்கழியக்கடவ ஜராதிகளைத்தானுடையனாயிருக்கிறவன். (நலங்கொண்டவித்யாதி) அவ்வம்ருதத்தைநாய்க்கிடாய் என்னும்படியான வடிவையுடையவன். "யஹ்மஜ்யோதி" என்கிறபடியே உபயாத்மகமான வடிவையுடையமேகம் திருமேனிக்கொப்பாகப்போராமையாலே வ்யாவ்ருத்தமான வழகையுடைத்தாய், ப்ரமஹாரமாயிருப்பதொரு மேகம்போலே திருமேனியையுடையனாய், அத்தாலே "இவனேஸர்வேஶ்வரன்" என்று தோற்றும்படியிருக்கிறவன். ப்ரமாதங்கள் புகுந்தபோதாக ஹிரண்யனை நிரஸிக்கவும் கடல்கடையவுமொண்ணாது என்று ஏற்கவேவந்து, பெரியஹர்ஷத்தோடே நித்யவாஸம் பண்ணுகையாலே ஆஶ்ரிதர்க்கு இனிதானதேஶம்.

(சலங்கொண்டித்யாதி) அதுக்குஹேது விருக்கிறபடி. "ஸங்வர்த்தவாஸ்ப்ரீகா:" என்கிறபடியே - இசலியிசலி மலரைச்சொரிகிற மல்லிகை, அழகிய செருந்தி, அப்படிப்பட்ட செண்பகம், இவை[உருபரிமளங்களைப் புறப்படவிட. (வண்பொழிலித்யாதி) நீரிலேகிடந்தால் மிடுக்கையுடைத்தாய்க் கரையிலே யேறினால் அதின்றிக்கே யிருக்கக்கடவ மத்ஸ்யங்களானவை, அந்நீர்தானுமுத்தும்படி அதிற்காட்டிலும் நிலமதுதானே நன்றாயிருக்கையாலே அச்சோலையில் மணத்தைநுகர்ந்தாராம்பண்ணி அத்தாலே மிடுக்குடைத்தாய், முக்தர் ஸமவஸ்தானத்தைப் பண்ணி "அஹமந்நமஹமந்நம்" என்று களிக்குமாப்போலே கயல்களானவை அங்கேயிங்கேதுள்ளி விளையாடாநின்றுள்ள திருநாங்கூர். ... ... க.

"காலை" என்று இப்போது சொல்லுகைக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவ்வம்ருதத்தைஸ்வீகரித்தார்க்கித்யாதி.) ஸமஹிவ்யாஹாரதாத்பர்யம் (அவ்வம்ருதத்தைநாய்க்கிடாயித்யாதி.) "நாடோறும்மகிழ்ந்து - மருவியுறை - இனிது-கோயில்" என்றதவயம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (பெரியவித்யாதி.)

அதுக்கு - எம்பெருமான் பெரியஹர்ஷத்தோடேவர்த்திக்கைக்கு. கயல்கள் பொழிலில்விளையாடக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (நீரிலேயித்யாதி.) க.

http://acharya.org

மூ.—திண்ணியதோரரியுருவாய்த் திசையனைத்தும்நடுங்கத்
தேவரொடுதானவர்கள் திசைப்பவிரணியனை
நண்ணியவன்மார்வகலத் துகிர்மடுத்தநாதன்
நாடோறும்மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
எண்ணில்மிகுபெருஞ்செல்வத் தெழில்விளங்குமறையும்
ஏழிசையும்கேள்விகளு மியன்றபெருங்குணத்தோர்
மண்ணில்மிகுமறையவர்கள் மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௨.

ப - ரை.— திசையனைத்தும் - திக்கிலுள்ளவர்கள், நடுங்க - பயப்படவும், தேவரொடுதானவர்கள் - தேவதாநவாதிகள், திசைப்ப-கலங்கவும், திண்ணியதோர் அரிஉருவாய் - த்ர்டமாய் அத்விதீயமான ந்ர்ஸிம்ஹரூபியாய், இரணியனை - ஹிரண்யாஸுரனை, நண்ணி - கிட்டி, அவன் - அவ்வஸுரனது, மார்வகலத்து - விசால வக்ஷஸ்தலத்தில், உகிர்மடுத்த - நகங்களை ஊன்றிக்கிழித்த, நாதன்-ஸ்வாமி, நாடோறும்மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில்—; எண்ணில்மிகுபெருஞ்செல்வத்து - கணநாதீதமஹத்ஸம்பத்தையுடைத்தாய், எழில்விளங்கு - அழகுவிளங்காநின்றுள்ள, மறையும் - வேதங்களும், ஏழிசையும் - ஸப்தஸ்வரங்களும், கேள்விகளும்-அங்கங்கள்முதலானவற்றால்வரும்கேள்விகளும், இயன்ற - நிறைந்த, பெருங்குணத்தோர்-ஆத்மகுணஸம்பந்நராய், மண்ணில்மிகு - பூஸுரருக்குள்சிறந்தவரான, மறையவர்கள் - ப்ராஹ்மணர்கள், மலிவெய்தும் - நெருங்கிவர்த்திக்கிற, நாங்கூர்—. (௨)

இரண்டாம்பாட்டு. (திண்ணியவித்யாதி) ஹிரண்யனைத்தன்னி பிற்காவியாதபடி திண்மையுடையதொரு ஸிம்ஹமாய், திக்குக்களிலுள்ளாரெல்லாரும் நடுங்க, தேவர்தாநவர்கள் கலங்க, ஹிரண்யனைக் கிட்டி அகன்றமார்விலே உகிரைநட்டுப்பிளந்த ஸர்வேஶ்வரன் நாள்தோறும் அழகழிந்து ஸ்நேஹித்துப்பொருந்தி வர்த்திக்கிறதேஶம். (எண்ணிலித்யாதி) எண்ணிறந்த ஐஶ்வர்யமும், நிர்தோஷத்வத்தால் வந்த அழகுவிளங்காநின்ற வேதமும், ஸப்தஸ்வரங்களும்,

இரண்டாம்பாட்டு.— (திண்ணியதோரரியுருவாய்) ஹிரண்யனுடைய சீற்றமென்றால் பிற்காவியாதபடியான நரஸிம்ஹமாய், திக்குக்களெல்லாமஞ்ச, அநுகூலப்ரதிகூலவிபாகமின்றியே எல்லாருமொக்கக் கலங்க. (இரணியனைநண்ணி) எரிகிற பெருநெருப்பிலே சென்று கிட்டுவாரைப்போலே க்ரூரனான பையலைத்தீண்டி. (அவன்மார்வகலத்துகிர்மடுத்த) போக்குத்தேடி இடங்காணமையாலே சுழித்துவருகிற ருதிரவெள்ளத்துக் கொருவழிகண்டு விட்டாப்போலே, அவனுடைய பரந்தமார்பிலே திருவுகிரையூன்றி அவனையழியச்செய்து,[கூடு தன்னுடைய ஈஶ்வரத்வத்தை நிலைநிறுத்தினவன் நித்யவாஸம்பண்ணுகிறதேஶம்.

(எண்ணில்மிகுவித்யாதி) எண்ணிறந்திருப்பதாய் நிர்தோஷத்வாதிகளால் வந்த திரயிகஸம்பத்தையுடைத்தாய், அவ்வழியாலே அழகு விளங்காநின்றுள்ள வேதமும், ஸப்தஸ்வரங்களும்,

இரண்டாம்பாட்டு.— (திண்ணியதோரித்யாதி.) கீழ்ப்பாட்டில் ப்ரஸ்துதமான ஹிரண்யநிரஸநத்தை ஸப்ரகாரமாகவநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

http://acharya.org

மூ.—அண்டமுமிவ்வுலகடலு மவனிகளுமெல்லாம்
அமுதுசெய்ததிருவயிற்ற னரன்கொண்டுதிரியும்
முண்டமதுநிறைத் தவன்கண் சாபமதுநீக்கும்
முதல்வனவன் மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
எண்டிசையும் பெருஞ்செந்நெ லிளந்தெங்குகதலி
யிலைக்கொடியொண் குலைக்கமுகோடிசலிவளம்சொரிய
வண்டுபலவிசைபாட மயிலாலுநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௩.

ப - ரை.— அண்டமும் - அண்டங்களையும், இவ்வுலகடலும் - ஸ்தாவர்தஸாசரங்களையும், அவனிகளுமெல்லாம் - ஸப்தத்வீபபூமிகளெல்லாவற்றையும், அமுது செய்த - கபளீகரித்த, திருவயிற்றன் - திருஉதரமுடையவனும், அரன் - பாபத்தாலுபஹதனான ருத்ரன், கொண்டு - பரிக்ரஹித்துக்கொண்டு, திரியும் - திரிகிற, முண்டமது நிறைத்து - தலையோட்டைநிறைத்து, அவன்கண் சாபமதுநீக்கும் - அவனையொருநாளும் விடாதேயிருக்கிறபாபத்தைப்போக்கியருளிய, முதல்வனவன் - ஸர்வநியந்தாவானஸ்வாமி, மகிழ்ந்தினிது மருவியுறைகோயில் —; எண்டிசையும் - பார்த்தபார்த்தவிடமெங்கும், பெருஞ்செந்நெல் - பெரியசெந்நெற்களும், இளந்தெங்கு - இளமையையுடைத்தான நாரிகேளங்களும், கதலி - வாழைகளும், இலைக்கொடி - வெற்றிலைக்கொடிகளும், ஒண்குலைக்கமுகோடு - அழகிதாகக்காய்த்த கமுகமரங்களோடே, இசலி - ஸ்பர்த்தித்துக்கொண்டு, வளம்சொரிய - ஸம்ருத்தியைச்சுரக்க, இவற்றிலேபுக்குமதுபானம்பண்ணி, வண்டு - வண்டுகள், பலஇசைபாட - அநேகராகங்களைப்பாடாநிற்க, அவற்றைக்கேட்டு, மயில்ஆலும் - மயூரங்கள் நர்த்தநம்பண்ணுகிற, நாங்கூர் —. ... ... (௩)

இவற்றிலே ச்ரவணத்தால்வந்த ஆத்மகுணங்களையுமுடையராய். (மண்ணிலிந்த்யாதி) ஸூமியில் வித்வான்களில் மிக்க வேதத்தையுடைய ப்ராஹ்மணர் மிக்க தேசம். ... ... ௨.

அங்கங்களும், மற்றுமுள்ளவற்றால்வரும்கேள்விகளும், இவற்றைவாஸனைபண்ணி அதனால் வந்த ஆத்மகுணங்களால் மிக்கிருப்பாராய். (மண்ணில்) "ஸூமியிலிதுக்கிவனேகடவான், இதுக்கிவனே கடவான்" என்னும்படி சமைந்த ப்ராஹ்மணர் நெருங்கிவர்த்திக்கிற தேசம். ... ... ௨.

"ஏழிலை" என்றது - ஆறங்கங்களுக்கும் மீமாம்ஸாதிகளுக்குமுபலக்ஷணமென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (அங்கங்களும்மற்றுமென்று.) "கேள்வி -" ச்ரவணமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (உள்ளவற்றாலித்யாதி.) வாஸனைபண்ணியென்றது - மநநத்தை; இது, "இயன்ற" எனறதினர்த்தம். ௨.

மூன்றாம்பாட்டு.— (அண்டமித்யாதி.) ஓராச்ரிதனைப்ரஹ்லாதனுக்குதவினவளவன்றிக்கே, ஸகலலோகங்களையும் வயிற்றிலேவைத்து தன்னாலேதானேயிடர்பட்ட ருத்ரனுக்குமுதவினானென்று ஸௌலப்யத்தையருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

http://acharya.org

மூன்றாம்பாட்டு. (அண்டமித்யாதி) அண்டமும், அலைமோதுகிற கடலும், பூமிகளும், இவற்றையெல்லாமமுதுசெய்த திருவயிற்றன். (அரனித்யாதி) ஹரன் கையிலே கொண்டுதிரிகிற தலையோட்டைநிறைத்து அவனிடத்து சாபத்தைப்போக்கின ஸர்வேஶ்வரன், மகிழ்ந்து ஸ்நேஹித்து நித்யவாஸம்பண்ணுகிற கோயில். (எண்டிசையுமித்யாதி) எட்டுதிக்கும், பெரியசெந்நெலையும் இளந்தெங்குகளையும் வாழைகளையும் வெற்றிலைக்கால்களையும் அழகிய தாறுகளையுடைய கமுகுகளையுமுடைத்தாய், இவைதான் ஒன்றுக்கொன்று இசலி நன்மைகளைச்சொரிய, வண்டுகள் பல இசைகளைப்பாட, மயில்கள் ஆர்த்து ஆடும் நாங்கூர். ... ... ௩.

நாலாம்பாட்டு. (கலையித்யாதி) மேகலைவிளங்காநின்ற அகன்ற அல்குலையுடைய சூர்ப்பணகையை

மூன்றாம்பாட்டு.— (அண்டமித்யாதி) அண்டமும், இந்நிலோகத்தைச் சூழப்போந்து அலையெறிகிற கடலும், பூமிகளையுமெல்லாம் அமுதுசெய்த திருவயிற்றையுடையவன். (அரனித்யாதி) சாபத்தாலே உபஹதனாயிருக்கிற ருத்ரன் கொண்டுதிரிகிற தலையோட்டை நிறைத்து, அவனை யொருநாளும்விடாதேயிருக்கிற சாபத்தைப்போக்கி, இப்படி ஸர்வநியந்தாவானவன் வர்த்திக்கிறகோயில்.

(எண்டிசையித்யாதி) பார்த்த பார்த்தவிடமெங்கும், பெரிய செந்நெல், மூக்தர் பஞ்சவிம்ஶதிவார்ஷிகராயிருக்குமாப்போலே இளதாயிருக்கிற தெங்கு, வாழை, வெற்றிலைக்கொடி, அழகிதாகக் காய்த்த கமுகுகளோடேகூடி, ஒன்றுக்கொன்று இசலி ஸம்ருத்தியைச் சுரக்க, இவற்றிலே புக்கு மதுபானம்பண்ணி, உள்ளுப்புக்க த்ரவ்யம் இருந்தவிடத்திலிருக்கவொட்டாமையாலே வண்டுகளானவை பல இசைகளையும்பாட, அவற்றைக்கேட்டு மயில்களானவை ஆடாநின்றுள்ள. ௩.

நாலாம்பாட்டு.— (கலையித்யாதி) விளங்காநின்றுள்ள பரியட்டத்தையுடைத்தான அகன்ற நிதம்ப ப்ரதேஶத்தையுடையளாய்க்கொண்டுதோற்றின, ராக்ஷஸஜாதியாகக்கொண்டாடும்படியிருக்கிறபெண்ணை.

“அண்டமும்” என்றது - ஆகாஶமென்றுய், உபரிதநலோகங்களையெல்லாம சொல்லுகிறது. ... ... ௩.

நாலாம்பாட்டு.—(கலையித்யாதி.)நாட்டார்படித்தைப்போக்கினவனவன்றிக்கே, * நித்யாநபாயிநியான பிராட்டிக்கு உதவினவனென்றநுஸந்தித்து, அந்தப்பிராட்டிபிரிவுவருகைக்கடியான சூர்ப்பணகையின் மூக்கறுத்ததோள்வலியை யிப்பாட்டிற்சொல்லி, மேலிற்பாட்டிலே பிராட்டிக்குதவினமையையருளிச்செய்கிறுரென்று ஸங்கதி.

http://acharya.org

மூ.—கலையிலங்குமகலல்கு லரக்கர்குலக்கொடியைக்
காதொடுமூக்குடனரியக் கதறியவளோடித்
தலையிலங்கைவைத்து மலையிலங்கைபுகச்செய்த
தடந்தோளன்மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
சிலையிலங்குமணிமாடத்துச்சிமிசைச்சூலம்
செழுங்கொண்டலகடிரியச சொரிந்தசெழுமுத்தம்
மலையிலங்குமாளிகைமேல் மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௪.

ப - ரை.— இலங்குமகலை - விளங்காநின்றுள்ள பரியட்டத்தையும், அகல்
அல்குல - அகன்ற நிதம்பப்ரதேசத்தையுமுடையளாய்க்கொண்டுதோற்றின, அரக்
கர்குலம் - ராக்ஷஸகுலத்திற்பிறந்த, கொடியை - கொடிபோலுமிடையையுடைய
சூர்ப்பநகையினுடைய, காதொடுமூக்கு - கர்ணநாஸிகைகளை, உடன் அரிய - ஏககா
லத்திலே அறுக்க, அவள் - அச்சூர்ப்பநகையானவள், கதறி-கோவெனக்கூப்பிட்டு,
தலையில - தனதலைமேலே, அம்கைவைத்தோடி - அழகியகையைவைத்துக்கொண்டு
ஓடோடி, மலை - மலையின்மேல இருக்கிற, இலங்கைபுகச்செய்த - லங்கையிலேபுகு
மபடிபண்ணின, தடம்தோளன - மஹாபாஹுவான சக்ரவர்த்திதிருமகன், மகி
ழ்ந்தினிது மருவியுறைகோயில—; சிலையிலங்கு - ஒளிவிளங்குகிற, மணிமாடத்து
உச்சிமிசை - மணிமாடசிகரத்தினமேலே இருக்கும், சூலம் - சூலங்கள், செழுங்
கொண்டல - ஸமுத்ரத்திறபுக்கு உதகங்களையும் முத்துக்களையுமடைய வாரிக்கொ
ண்டு தொட்டாரமேலே தோஷமாமபடி மெள்ளமெள்ள நகழ்ந்துவருகிற மேகங்க
ளினுடைய, அகடு இரிய - கீழ்வயிற்றைப்பேதிக்க, உடனே, சொரிந்த-ஸ்ரவித்த, செழு
முத்தம-அழகியமுத்துக்களானவை, மாளிகைமேல - மாளிகைகளின்மீது, மலையில
ங்குமலிவெய்தும - ஒருமலைமேலே மலைசெய்துவைத்தாப்போற குவிந்துகிடக்கிற,
நாங்கூர்—. ... ... (௪)

மூக்கையும செவியையுமறுத்துவிட, அவள்தலையிலே கையைவைத்து
க் கூப்பிட்டுக்கொண்டோடி மலைமேலேயான லங்கையிலேபுகும்படி
செய்தபெரியதோளையுடைய அசசக்ரவர்த்தித்திருமகன் மகிழ்ந்துவிரு
ம்பிவாத்திக்கிறதேசம்.

தனக்கொரு பரியட்டமும் பெண்மையுமுடையளாய் வந்து தோ
ற்றினளாயத்து. (காதித்யாதி) அவளைறிட்டுக்கொண்டு வந்தவடிவை
ப்போககித் தானும்படிபண்ணிவிட்டானாய்த்தது. (கதறியித்யாதி) அந
நேரம் அவளும கூப்பிட்டுககொடு தலையிலே கையைவைத்து மலையின்
மேலேயான லஙகையிலே புகும்படிபண்ணின தோள்வலியையுடை
யவன் நித்யவாஸம்பண்ணுகிற கோயில்.

ராக்ஷஸியையிவரிப்படி வர்ணிக்கைக்கு ப்ரக்ருதோபயோகமென்னென்ன
வருளிச்செய்கிறார(தனக்கித்யாதி;)எறிட்டுக்கொண்டுவந்தவடிவையென்றது-அலங்
கரித்துக்கொண்டு ஆஹிரூபயத்தோடேவந்தவடிவையென்றபடி. தானும்படி-விரூபை
யாம்படி. ராக்ஷஸிகளுக்கு வைரூப்யம்ஸஹஜமென்று திருவுள்ளம். இத்தால் -
கள்ளவேஷத்தைக்காதலித்துக் காட்டிவிட்டானென்றதாய்த்து. அக்கையென்றது-
"அங்கை" என்றுமெலலொற்றாகக்கிடக்கிறதாய், சூர்ப்பணகியென்று பேர்பெ
ம்படி கோரமானகையென்றுதல், அம என்று - அழகாய், விபரீதலக்ஷணயாகோ
ரமானகைஎன்றுதல் ஸ்வாரஸ்யம் கண்டுகொள்வதென்று திருவுள்ளம்பற்றியருளி
ச்செய்கிறார் (தலையிலேகையைவைத்தென்று.)

http://acharya.org

மூ.—மின்னனையநுண்மருங்குல் மெல்லியற்காவிலங்கை
வேந்தன்முடியொருபதும் தோளிருபதும்போயுதிரத்
தன்னிகரிற்சிலைவளைத்தன்றிலங்கைபொடிசெய்த
தடந்தோளன்மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
செங்கெலொடுசெங்கமலம் சேல்கயல்கள்வாளை
செங்கழுநீரொடுமிடைந்து கழனிதிகழ்ந்தெங்கும்
மன்னுபுகழ்வேதியர்கள் மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ரு.

ப-ரை.—அன்று-அக்காலத்திலே;மின் அனைய-கொடி மின்னலையொத்த,நுண்மருங்குல் - சிற்றிடையையும்,மெல்லியற்கா-மிருதுஸ்வபாவத்தையுமுடையளான பிராட்டிக்காக,இலங்கைவேந்தன-லங்காதிபனான ராவணனுடைய,முடியொருபதும்-கிரீடமிலகும் பத்துத்தலைகளும், தோளிருபதும்-இருபதுகைகளும்,போயுதிர-ருதமலங்களாயுதிர்ந்துபோம்படி, தன்னிகரில்சிலைவளைத்து-ஒப்பற ஓங்கிய தன் கோதண்டத்தைவளைத்து, இலங்கை - லங்காநகரத்தை, பொடிசெய்த - பொடியாக்கின, தடம்தோளன் - மஹாபாஹுவான சக்ரவர்த்தித் திருமகன், மகிழ்ந்தினிதமருவியுறைகோயில்—,செங்கெலொடு-செந்நெற்களும், செங்கமலம் - செந்தாமரைப்பூக்களும், சேல்கயலகள்வாளை -சேல்மீன் கயல்மீன் வாளைமீன்களும், ஆகியஇவைகள், செங்கழுநீரொடு- செங்கழுநீர்ப்பூக்களுடனே, மிடைந்து-சேர்ந்துகொண்டு, கழனி யெங்கும் - கழனிகளிலெல்லாம், திகழ்ந்து - ப்ரகாசிக்கவும், மன்னுபுகழ் - நித்யநிர்தோஷமானகீர்த்தியையுடைய, வேதியர்கள் - ப்ராஹ்மணர்கள், மலிவெய்தும்-வீதியெங்கும்நெருங்கி வர்த்திக்கும்படியாகவுமிருக்கிற, நாங்கூர்—. (ரு)

(சிலையிலங்கித்யாதி) மலைபோலே விளங்காநின்றுள்ள மணிமயமான மாடங்களின்மேல் நின்ற சூலங்களானவை, அழகிய கொண்டலானவை கடலிலேபுக்கு நீரையும் முத்தையும் முகந்துகொண்டு கனத்தாலே நகழ்ந்து நகழ்ந்து வருகிறவற்றினுடைய கீழ்வயிற்றைப்போலே. அவை கோணிகை வாய்விட்டாப்போலே சொரிந்த நல்ல முத்துக்களானவை. (மலையிலங்கித்யாதி) மாளிகைகளின்மேலே. மலைமேலே மலை செய்துவைத்தாப்போலேயாய்த்துக் குவித்துக்கிடப்பது. ... சு.

(சிலையித்யாதி) சிலையென்று - வில்லுக்கு பர்யாயசப்தமாய், வில்லென்று - ஒளியாய், ஒளிவிளங்காநின்றுள்ள மணிமயமான மாடங்களி னுச்சியின்மேலேயுண்டான சூலமும். இதாய்த்து அவ்வூரில் ஸம்ஹங்களுடைய விருக்கும்படி. மேவங்களானவை கடலிலேபோய்ப் புக்கு முத்தையுடைய வாரிக்கொண்டு (க) நகழ்ந்து நகழ்ந்து நடக்க மாட்டாதேவரும் ; மாளிகைகளில் சூலங்களானவை இவற்றினுடைய கீழ்வயிற்றைப்போழும் ; முன்பே தொட்டார்மேலே தோஷமாயிருக்கிறவவை முத்தைச்சொரியும்.(மலையிலங்குமாளிகைமேல்மலிவெய்தும்) அப்போது ஒருமலைமேலே மலைசெய்துவைத்தாப்போலேயாய்த்துக் குவித்துக்கிடப்பது. ... ... சு.

சூலமும் - ஸம்ஹாலங்காரமான பொற்குடங்களின் நுனியும். பேழும்-பொதுக்கும் ; பீறமென்றபடி. ... ... சு.

(க) நகழ்தல் - நகர்தல் - ஊர்தல்.

http://acharya.org

அஞ்சாம்பாட்டு. (மின்னித்யாதி) மின்னொத்த இடையையும் மார்தவத்தையுமுடைய ஸ்ரீஜநகராஜன்திருமகளுக்காக, லங்கேஶ்வரனை ராவணன் தலைபத்தும் தோளிருபதும் அற்றுவிழ. (தன்னிகரித்யாதி) தனக்கொப்பில்லாத ஸ்ரீஶார்ங்கத்தைவளைத்து லங்கையைப் பொடியாக்கின பெரியதோள்களையுடைய சக்ரவர்த்தித்திருமகன் விரும்பி வர்த்திக்கிற தேஶம். (செங்நெலித்யாதி) செங்நெலுடனே, செங்தாமரை, சேலும், வாளையும், செங்கழுநீரோடே நெருங்க, கழனி, இவற்றாலே விளங்கும். (மன்னுபுகழித்யாதி) நித்யநிர்தோஷமான புகழையுடையவேதத்துக்கு வ்யாஸபதம்செலுத்தும் ப்ராஹ்மணர் மிக்க தேஶம். ... ... ௫.

ஆறும்பாட்டு. (பெண்மையித்யாதி) மிக்க ஸ்த்ரீத்வத்தையுடையளாய்வந்த பெரியபேயினுடைய வுயிரானது மாளவுண்டு, பெரிய பேய்ப்பெண்ணை

அஞ்சாம்பாட்டு.— (மின்னனையவித்யாதி) மின்போலேயிருக்கிற நேரியஇடையையுடையளாய் மிதிலாஸ்வஹாவையாயிருக்கிற பிராட்டிக்காக, லங்கைக்கு நிர்வாஹகனாயிருக்கிற ராவணனுடைய பத்துத்தலையும்இருபது தோளும் போயுதிரும்படியாக, தனக்கு ஒப்புண்டாகிலும் உபமாநாந்தமாயிருக்கிற வில்லைவளைத்து அன்று லங்கையைப் பொடிபடுத்தின தோள்வலிமிகையையுடையவன். பிராட்டிக்குப்பண்ணின வ்யாபாரத்தை ஆஸ்ரிதரெல்லார்க்கு மொக்கப் பண்ணிற்றாக அவன் ப்ரீதியோடே வர்த்திக்கிற தேஶமாகையாலே, கண்டார்க்கெல்லாமினிதாமபடியிருக்கும்தேஶம்.

(செங்நெலித்யாதி) இதுவாய்த்து கழனியானப்ரதேஶமடையவிருக்கும்படி. செங்நெலோடேகூட, தாமரை, சேல், கயல்கள்,வாளை, செங்கழுநீரோடு மிடைந்து விளங்காநிற்குமாய்த்து வயலடங்க. (மன்னுபுகழித்யாதி) இதுவாய்த்து ஸ்தலமான ப்ரதேஶமிருக்கும்படி. நித்யமான புகழையுடையராயிருக்கிற ப்ராஹ்மணர்மிக்கிருக்கிற. இதுவாய்த்து ஊரும் பிடாகையுமிருக்கும்படி. ... ... ௫.

ஆறும்பாட்டு.— (பெண்மையித்யாதி) * நாரீணாமுத்தமையான யஶோதைப்பிராட்டிவடிவைக்கொண்டு வந்தபூதனையை,

---

அஞ்சாம்பாட்டு.— (மின்னித்யாதி.) மிடைந்து - நெருங்கி. பிடாகையும் - வயலும். ... . ௫.

ஆறும்பாட்டு.— (பெண்மையித்யாதி.) கீழே-நரஸிம்ஹாவதாரமும், அநந்தரம், ராமாவதாரமுமாக வநுஸந்தித்தார் ; அநந்தராவதாரமாய் ஆழ்வார்களையெல்லாமீடுபடுத்தும் க்ருஷ்ணாவதாரத்தை மேல் மூன்றுபாட்டாலுமநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

http://acharya.org

மூ.—பெண்மைமிகுவடிவுகொடு வந்தவளைப் பெரிய
பேயினது வுருவுகொடுமாளவுயிருண்டு
திண்மைமிகுமருதொடு நற்சகடமிறுத்தருளும்
தேவனவன் மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
உண்மைமிகுமறையொடு நற்கலைகள் நிறைபொறைகள்
உதவுகொடையென்றிவற்றினொழிவில்லாப்பெரிய
வண்மைமிகுமறையவர்கள் மலிவெய்துநாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௬.

ப-ரை.—பெண்மைமிகுவடிவுகொடு-உத்தமஸ்த்ரீஶரீரத்தைத்தரித்துக்கொண்டு, வந்தவளை-வஞ்சிக்கவந்தபூதனையானவள், பெரியபேயினது உருவுகொடு-தன்நிஜமானவிக்ர்தரூபவம்கொண்டு, மாள-மாயும்படி, உயிர்உண்டு-அவள்ப்ராணனை ஸ்வீகரிததும், திண்மைமிகு-அஸுராவேஶத்தால்மிக்கதிண்மையையுடைய, மருதொடு-மருதமரத்தையும், நற்சகடம் - துடங்கினகார்யத்தைமுடிக்கவல்லஶக்தியையுடைய சகடத்தையும், இறுத்து - முறித்தும், அருளும் - இன்னுமிப்படியே துஷ்டநிக்ரஹம்பண்ணியருளிய, தேவனவன - நந்தநந்தனனான ஸ்ரீக்ர்ஷ்ணன், மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில— ; உண்மைமிகுமறையொடு - யதார்த்தவாதிகளான வேதங்களும், நற்கலைகள் அவற்றின்நல்ல அங்கங்களும், நிறை - இவற்றின்வாஸநையால்வந்தகுணபூர்த்தியும், பொறைகள் - க்ஷமைமுதலானவைகளும், உதவுகொடை என்றிவற்றின் - உபகர்த்தி ஔதார்யமென்கிறவிவற்றினுடைய, ஒழிவில்லாப்பெரிய வண்மை - ஓபாதேயமிக்கிருந்துள்ளவளங்களும், மிகு - நிறைந்த, மறையவர்கள்-ப்ராஹ்மணர்கள், மலிவெய்தும் - நெருங்கிவர்த்திக்கிற, நாங்கூர்—. (௬)

மிகுத்த தாயுருக்கொண்டு வந்தவளைப் பிள்ளையுருவைகொண்டு அவளுயிரை மாளவுண்டு.(திண்மையித்யாதி) நிலையுடையமருதுகளுடனே நல்ல ஶகடத்தையும் முறித்தருளும் க்ர்ஷ்ணன மிகவும் விரும்பிவர்த்திக்கிறதேஶம்.

பெரியபேயின்வடிவையுடையளாய்க்கொண்டுமுடிந்துபிணமாய்க்கிடக்கும்படியாகஅவளைமுடித்து, அஸுராவேஶத்தாலே மிக்கதிண்மையையுடைய மருது, துடங்கினகார்யத்தைமுடிக்கலைக்கட்டவல்லஶக்தியையுடையஶகடம், இவற்றையிறுத்தருளி, “ விரோதிபோகப்பெற்றோமிறே!” என்று அத்தாலே தீப்தனான ஸர்வேஶ்வரன் விரும்பிவர்த்திக்கிறதேஶம்.

சகடத்துக்கு நன்மையேதென்ன ; நல்லபாம்புஎன்னுமாப்போலேக்ரௌர்யாதிஶயத்தைச்சொல்லுமென்றருளிச்செய்கிறார் (துடங்கினவித்யாதி.) “அவன்”என்றத்தால் தோற்றின வேதாந்தப்ரஸித்தியைபற்றவருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரனென்று.)

http://acharya.org

மூ.— விளங்கனியையிளங்கன்று கொண்டுதிரவெறிந்து
வேல்நெடுங்கணாய்ச்சியர்கள்வைத்ததயிர்வெண்ணெய்
உளங்குளிரவமுதுசெய் திவ்வுலகுண்டகாளை
யுகந்தினிது நாடோறும் மருவியுறைகோயில்
இளம்படிநற்கமுகுகுலைத்தெங்கு கொடிச்செந்நெல்
ஈன்கரும்புகண்வளரக் கால்தடவும்புனலால்
வளங்கொண்டபெருஞ்செல்வம் வளருமணிநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. எ.

ப - ரை.—இளங்கன்றுகொண்டு-வத்ஸாஸுரனைத்தூக்கி, விளங்கனியையுதிர எறிந்து- விளாவாயநின்ற வஸுரனுதிர்ந்துஉயிர்மாயும்படிவீசி, வேல்-வேல்போல, நெடுங்கண் - நீண்டகண்களையுடைய, ஆய்ச்சியர்கள் - கோபஸ்த்ரீகள், வைத்த - தங்களுக்குத்திரசேமித்துவைத்த, தயிர்வெண்ணெய்-ததிநவநீதாதிகளை, உளம்குளிர-தநதிருவுளங்குளிரும்படி, அமுதுசெய்து - உண்டு, பின்னும், இவ்வுலகுண்ட - இந்தலோகத்தையடையவமுதுசெய்த, காளை - நவயௌவநன், உகந்தினிது நாடோறு மருவியுறைகோயில—; இளம்படிநலகமுகு - இளமையைஸ்வபாவமாகவுடைய நல்லகமுகுமரங்களும், குலைத்தெங்கு-குலையையுடைத்தான தென்னமரங்களும், கொடி - வெற்றிலைகொடிகளும், செந்நெல - செந்நெற்களும், ஈன்கரும்பு- இனிய கரும்புகளும், ஆகிய இவைகள், கண் வளர -நிர்ந்நிரோவ்ருத்தியடையும்படி, கால்தடவும - கால்தடவாநின்ற, புனலால்வளங்கொண்ட பெருஞ்செல்வம் - ஜலஸம்ருத்தியாலுண்டாகிய நிரவதிகஸாம்ராஜ்யங்கள், வளரும - வர்த்தியடையாநின்றுள்ள, அணிநாங்கூர்—. ... ... (எ)

(உண்மைபித்யாதி) யதாஸ்ருதவாதியான வேதங்களுடனே, அவற்றினுடைய நன்றான அங்கங்கள், இவற்றில் வாஸநையாலேவந்த ஆத்மகுணங்கள், க்ஷமை, அர்த்திகளர்த்தித்தபோதேகொடுக்கும் ஔதார்யம், இப்படியால்அழகும் ஔதார்யமும் மிக்க வ்ராஹ்மணர் மிக்க நாங்கூர்.

(உண்மைபித்யாதி) யதாஸ்ருதவாதியான வேதங்களோடேகூட, அவற்றினுடைய நன்றான அங்கங்கள், இவற்றிலுண்டானவாஸநையாலேவாக்கடவ ஆத்மகுணங்களையுடைய அடக்கம், க்ஷமை, அர்த்திகளர்த்தித்தபோதே அபேக்ஷிதங்களைக் கொடுக்கையாகிற ஔதார்யம், என்றுப்போலே சொல்லுகிறவிவற்றாலொழிவின்றிக்கேயிருக்கிற உதாரரானவர்களால் மிக்கிருக்கிற. வண்மை - ஆத்மஸமர்ப்பணம். சு.

"நிறை" என்றதினர்த்தம்(அடக்கமென்றது.) உதவுகொடை - உதவும்படியான கொடையென்றர்த்தமருளிச்செய்கிறார் (அர்த்திகளித்யாதி.) இதிலே ஔதார்யத்தைச் சொல்லி, மீளவும், உதாரரான என்றால புநருக்தமன்றோவென்ன வருளிச்செய்கிறார் (வண்மையித்யாதி.) ... ...

http://acharya.org

ஏழாம்பாட்டு. (விளங்கனியித்யாதி) விளவாய்ப்பழுத்து நின்ற அஸுரனை, கன்றாய்த்துள்ளிவந்த அஸுரனையிட்டு உதிரவெறிந்து, வேல்போலே நெடியகண்ணையுடைய ஆய்ச்சியர்வைத்த தயிரையும் வெண்ணெயையும் வயிறுகுளிர அமுதுசெய்து, இந்த லோகத்தையு மமுதுசெய்த தலைவன். காளையென்று - தலைவனுக்குப்பேர். உகந்து இனிதாக நாள்தோறும் பொருந்திவர்த்திக்கிற தேசம். இளமையை ஸ்வபாவமாகவுடைய நல்ல கமுகு, குலைகளையுடைய தெங்கு, வெற்றிலைக்கொடி, செங்நெல், இனியகரும்பு நாள்தோறும் ஒருகண்வைத்து வளர, புனல், கால்நடவும்-அடியிலேதடவிவரும்; இப்படியால்வந்த நன்மையையுடைய பெரிய ஐஶ்வர்யம் வளரும் அழகியநாங்கூர். எ.

ஏழாம்பாட்டு.— (விளங்கனியித்யாதி) வத்ஸாஸுரனைக்கொண்டு விளாவாய் நிற்கிற அஸுரன்மேலே உகிரும்படியெறிந்து, வேல்போலே பரந்த கண்ணையுடையராயிருக்கிற இடைச்சிகள் சேமித்துவைத்த தயிரையும் வெண்ணெயையும், ஆஶ்ரிதஸ்பர்ஶமுள்ளதொரு த்ரவ்யமாகையாலே திருவுள்ளமானது குளிரும்படியாக அமுதுசெய்து, அநந்தரம், இந்தலோகத்தையடையத் திருவயிற்றிலேவைத்து, ராஜ்யாவர்மத்தினுடைய ரக்ஷணத்தைப்பண்ணுகையாலே இளகிப்பதித்திருக்கிறவன்.

(இளம்படி.) இளமையைஸ்வபாவமாகவுடைத்தாயிருக்கிறகமுகு, குலையையுடைத்தாயிருக்கிற தெங்கு, வெற்றிலைக்கொடி, செங்நெல், இனியகரும்பானது கண்வளரும்படியாகப் புனலானது கால்நடவாநிற்குமாய்த்து. கரும்பானது நாள்தோறும் ஒருகண்ணேறிவரும்படி கால்நடவுமாய்த்துப் புனலானது. நிரவதிக ஸம்பத்தானது மாறாதே செல்லுகிற. ... ... எ.

ஏழாம்பாட்டு.— (விளங்கனியித்யாதி.) "வேல" என்றத்தால - நெடுமைதாயமாயிருக்க, நெடுமையைச்சொன்னது லக்ஷணயா ஸ்வபுலயவாசியென்று (பரந்த) என்கிறார். தயிரும்வெண்ணெயுமமுது செய்தால உள்ளம்குளிருகை அர்யஸித்யமாயிருக்க, விஶேஷித்ததுகருஹாவம் (ஆஶ்ரிதேத்யாதி.)

இன்கரும்பு என்றது நீட்டிக்கிடக்கிறதாய, ஆயுமருளிச்செய்கிறார் (இனியகரும்பென்று.) கால்நடவாநிற்குமென்றது - ஊாடுா; ஸ்வஹாவார்யும் - கால்வழிகளாலே பரம்பாநிற்குமென்று. "கண்வளரும்" என்றதுக்கும் ஊாட்வார்யும் ஸ்பஷ்டமென்று திருவுள்ளம்பற்றி, ஸ்வஹாவார்யத்தையருளிச்செய்கிறார் (கரும்பானதித்யாதி.) அணிநாங்கூராகைக்குஹேது கீழ்ச்சொன்னதெல்லாமென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (நிரவதிகேத்யாதி.) ... ... எ,

http://acharya.org

மூ.— ஆருதசினத்தின் மிகுநரகனுரமழித்த
அடலாழித்தடக்கைய னலர்மகட்குமரற்கும்
கூறுகக்கொடுத்தருளும் திருவுடம்ப னிமையோர்
குலமுதல்வன் மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
மாறுதமலர்க்கமலம் செங்கழுநீர்ததும்பி
மதுவெள்ளமொழுக வயலுழவர்மடையடைப்ப
மாறுதபெருஞ்செல்வம் வளருமணிநாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமடநெஞ்சே. அ.

ப - ரை.— ஆறுத - ஒருக்காலாறக்கடவதன்றிக்கேயிருக்கிற, சினத்தின் - கோபத்தையுடையனாய், மிகு - மிகைத்துவாராநின்றுள்ள, நரகன் - நரகாஸுரனது, உரம் - மிடுக்கை, அழிக்க—, அடலாழி - யுத்தோந்முகமானதிருவாழியை, தடக்கையன் - தன்பெருங்கையிலேயுடையனாய், அலர்மகட்கும் - பெரியபிராட்டியாருக்கும், அரற்கும் - ருத்ரனுக்கும், கூறு ஆக - என்னதென்றுகூறிட்டநுபவிக்கலாம்படி, கொடுத்தருளும்திருவுடம்பன் - தன் திருமேனியைக்கொடுத்துக்கொண்டிருக்கிறஶீலத்தையுடையவனாய், இமையோர்குலமுதல்வன் - நித்யஸூரிகள்திரளுக்கு நிர்வாஹகனான ஸர்வேஶ்வரன், மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில்—, மாறுதமலர்க்கமலம் - இடைவிடாதமலரையுடையதாமரை, செங்கழுநீர் - செங்கழுநீர்முதலியபூக்கள், ஆகிய இவைகளினின்றும், ததும்பிமதுவெள்ளமொழுக - நெருங்கிப்புறப்பட்ட தேன்வெள்ளமெங்குந்தலைதெரியாதபடியாய்வருகிறபடியால், உழவர் - கர்ஷகர், வயல்மடையடைப்பமாறுத - தங்கள்தங்கள்கழனிமடைகளை அடைக்க அடைக்கவுமாறுதே வளர்ந்துகொண்டுவருகிற, பெருஞ்செல்வம்வளரும் - மிக்கநீர்ச்செல்வம்நிறைந்த, அணிநாங்கூர்—. ... ... (அ)

எட்டாம்பாட்டு. (ஆறுதவித்யாதி) ஆறுதசிற்றத்தையும் மிக்க பலத்தையுமுடைய நரகாஸுரனைக்கொன்ற மிடுக்கையுடைய திருவாழியைப் பெரியகையிலேயுடையவன். (அலர்மகளித்யாதி) பெரியபிராட்டியார்க்கும் ருத்ரனுக்கும் கூறுகக்கொடுத்தருளும் திருவுடம்பன். (இமையோரித்யாதி) நித்யஸூரிகள்திரளுக்கு யாரகாதிகளெல்லாம் தானேயானவன், ப்ரீதி ப்ரகர்ஷத்துடனே நித்யவாஸம்பண்ணுகிறகோயில்.

எட்டாம்பாட்டு.—(ஆறுதவித்யாதி)ஒருக்காலாறக்கடவதன்றிக்கேயிருக்கிற சினத்தையுடையனாய் மிகைத்து வாராநின்றுள்ள நரகனுடைய மிடுக்கையழித்த யுத்தோந்முகமான திருவாழியைக் கையிலேயுடையவன், பெரியபிராட்டியார்க்கும் ருத்ரனுக்கும் என்னதென்று கூறிட்டநுபவிக்கலாம்படி திருமேனியைக் கொடுத்துக்கொண்டிருக்கிற ஶீலத்தையுடையவன், நித்யஸூரிகள் திரளுக்கு நாயகனானவன்.

எட்டாம்பாட்டு.— ஆறுதவித்யாதி.) "உரம்" என்றதினர்த்தம் (மிடுக்கையென்றது.) "அலர்மகட்கு" என்றத்தாலே - மஹத்வமும், "அரர்க்கு" என்றபூஜ்யோக்தியாலே - அவனுடைய ஸ்வோத்கர்ஷாபிமானமும், "கூறுக" என்கையாலே- மந்தஸம்ஶ்லேஷமும் தோற்றுகையாலே யருளிச்செய்கிறார் (ஶீலத்தையுடையவனென்று.)

http://acharya.org

மூ.—வங்கமலி தடங்கடலுள் வானவர்களோடு
மாமுனிவர்பலர் கூடிமாமலர்கடூவி
எங்கள் தனிநாயகனே யெமக்கருளாயென்னும்
ஈசனவன் மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
செங்கயலும் வாளைகளும் செந்நெலிடைக்குதிப்பச்
சேலுகளும் செழும்பணைசூழ்வீதிதொறு மிடைந்து
மங்குல் மதியகடுரிஞ்சு மணிமாடநாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௯.

ப - ரை.— வங்கம்மலி - மரக்கலங்களாற்குறைவற்றிருக்கிற, தடங்கடலுள் - பெரியதிருப்பாற்கடலிலே, வானவர்களோடு மாமுனிவர்பலர்கூடி - தேவர்களோடேஸநகாதிகளுங்கூடிக்கொண்டுவந்து, முன்பு, மாமலர்கள் தூவி - புஷ்பாத்யுபகரணங்களைத்தூவி, பின்பு, எங்கள் தனிநாயகனே - எங்களுக்குநாதனான ஸர்வேஶ்வரனே, நீர், எமக்கு அருளாய் - எங்கள்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணும், என்னும் - என்று ப்ரார்த்திக்கும்படியிருக்கிற, ஈசனவன் - ஸ்வாமி, மகிழ்ந்தினிதுமருவியுறை கோயில்— ; செங்கயலும் - செவ்வியகயல்மத்ஸ்யங்களும், வாளைகளும் - வாளைமத்ஸ்யங்களும், குளிர்த்தியைப்பற்ற, செந்நெலிடை - செந்நெற்பயிர்களினிடையே, குதிப்ப - தாவ, சேலுகளும் - அப்பயிரினிடையேயிருந்தசேல்மத்ஸ்யங்களும் பகையின்றிக் கூடவேகளித்து வர்த்திக்கிற, செழும்பணைசூழ் - மருதநிலம் சூழ்ந்திருப்பதாய், வீதிதொறும் - தெருக்கள்தோறும், மிடைந்து மங்குல்மதி - ஆகாஶத்திலே ஸஞ்சரிக்கிற சந்த்ரனுடைய, அகடுரிஞ்சும் - கீழ்வயிறுதேயும்படியாயுயர்ந்த, மணிமாடம் - மணிமயமான மாடங்களையுடையதாயிருக்கிற, நாங்கூர்—. ... (௯)

மாறாதபடி தாமரைப்பூவும் செங்கழுநீர்ப்பூவும் மதுததும்பிவெள்ளமிட்டப்பெருக, வயல்கள் பயிர்செய்கிற உழவர் வயல்களில் மடைகளைத் தேன்வெள்ளம்புகப்பயிரழியாதபடி மடைகளைச்செம்ம. இப்படி மாறாத பெருஞ்செல்வம்மிக்கு வருகிற நாங்கூர். ... ... ௮.

(மாறாதவித்யாதி) மாறாதமலரையுடைத்தானதாமரை, செங்கழுநீர், இவற்றால்மிக்கு மதுவெள்ளமிட்டுப்பாய, வயலிலுண்டான கர்ஷகரானவர்கள் பயிரழிய வெள்ளம்போமளவானவாறே மடைகளையடைப்பர்கள். (மாறாதபெருஞ்செல்வம்வளரும்) "அங்கேயுடைந்தது, இங்கேயுடைந்தது கிடாய்" என்று "ஸஹ்யப்பெருக்குக் கிடாய்" என்று கூப்பிடுகிற ஆரவாரமேயாய்க்கிடக்குமாய்த்து. ௮.

"ததும்பி" என்றதினர்த்தம் (மிக்குஎன்றது.) கீழ்ச்சொன்னதுக்கநுகுணமாக செல்வத்தைவிஶேஷிக்கிறார் (அங்கேயித்யாதி.) ... ... ௮.

ஒன்பதாம்பாட்டு.— (வங்கமித்யாதி.) கீழ்ப்பாட்டில் ஸௌஶீல்யத்தையநுஸந்தித்தவுடனே அவனுடையபரத்வம் திருவுள்ளத்திலூற்றிருந்து அத்தையருளிச்செய்கிறாரென்றுதல், கீழ் க்ருஷ்ணாவதாரம் ப்ரஸ்துதமாகையால் "நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்யஹ்யாகதோமதுராம்புரீம்" என்கிறபடியே - அதுக்கடியான திருப்பாற்கடலானையநுஸந்திக்கிறாரென்கிறாரென்றுதல் ஸங்கதி.

http://acharya.org

ஒன்பதாம்பாட்டு. (வங்கமித்யாதி) மரக்கலங்கள் மிக்க பெரிய கடலிலே, ப்ரஹ்மேசாநாதிகளுடனே ஸநகாதிகளுங்கூடித் தாமரைப் பூக்களைப்பணிமாறி. மாமலர் - தாமரை. (எங்கள்தனிநாயகனே யெமக்கருளாயென்னும்) எங்களுக்கு அத்விதீயனான நிர்வாஹகனே! [நு] எங்களைரக்ஷியாய் என்னும் ஸர்வேஶ்வரன் மகிழ்ந்து இனிதாக வர்த்திக்கிற தேஶம். (செங்கயலுமித்யாதி) அழகியகயல்களும் வாளைகளும் செந்நெற்சோலைகளில் குளிர்த்தியைப்பற்ற நடுவே குதிப்ப, சேல்களானவைகளித்து உகளிக்கும் பெரியமருதநிலம்சூழ். (வீதிதொறுமித்யாதி) ராத்ரியிலே ஸஞ்சரிக்கிற சந்த்ரன் கீழ்வயிறு தேயும்படி ஓங்கின மாடங்களாலே நேர்போகமாட்டாமல் வீதிகள்தோறும் வழிதேடித் திரியும். அன்றிக்கே, வீதிகளெல்லாம் மங்குல்மதி அகடுரிஞ்சும் மணிமாடமென்றுமாம். ... ... ௯.

பத்தாம்பாட்டு. (சங்கித்யாதி) ஶங்கசக்ராதி திவ்யாயுதங்களை தரிக்கும் புண்டரீகாக்ஷனான ஸர்வேஶ்வரன்றான் நித்யவாஸம் பண்ணுகிறகோயில்.

ஒன்பதாம்பாட்டு.— (வங்கமித்யாதி) மரக்கலங்களால் குறைவற்றிருக்கிற பெரியதிருப்பாற்கடலிலே. மலைக்குச்சிறப்பாக ஆனையையிட்டுச்சொல்லுமாப்போலே, கடலுக்குச்சிறப்பாக மரக்கலங்களையிட்டுச்சொல்லக்கடவது. தேவர்களோடே ஸநகாதிகளுங்கூட புஷ்பாத்யுபகரணங்களைத்தூவி, "எங்களுக்குநாயகனான ஸர்வேஶ்வரனே, எங்கள்பக்கலிலே க்ருபையைப்பண்ணியருளவேணும்" என்னும் ஸர்வேஶ்வரன் ப்ரீதிபூர்வகமாக நித்யவாஸம்பண்ணுகிறதேஶம்.

(செங்கயலித்யாதி) அழகிய கயலும் வாளைகளும் குளிர்த்தியைப் பற்றச்செந்நெலிடையிலேதாவ, சேல்களானவை களித்து வர்த்தியாநின்றுள்ள மருதநிலம் சூழ்ந்திருக்குமாய்த்து. தெருவுகள்தோறும் ஆகாஶத்திலே ஸஞ்சரிக்கிற சந்த்ரனுடைய கீழ்வயிறு தேயும்படியான மணிமயமான மாடங்களையுடைய. ... ... ௯.

பத்தாம்பாட்டு.— (சங்கித்யாதி) ஆஶ்ரிதார்த்தமாக ஸ்ரீபஞ்சாயுதங்களையும் தரித்துக்கொண்டிருக்கிற புண்டரீகாக்ஷனான ஸர்வேஶ்வரன் நித்யவாஸம்பண்ணுகிறதேஶம்.

வங்கங்களைச்சொன்னதுக்கு ப்ரஸ்தாபப்ரயோஜனமென்னென்ன வருளிச்செய்கிறார் (மலைக்கித்யாதி.) கவிஸமயமாயாலே சொன்னாரென்று கருத்து.

(தெருவுகள்தோறும்) என்றவநுஸாரம், மிடைந்திருக்கிற-நெருங்கியிருக்கிற என்று கூட்டியநுஸந்திப்பது. "மங்குல்" என்றதினர்த்தம் (ஆகாஶத்திலேயென்றது.) ௯.

பத்தாம்பாட்டு.— (சங்கித்யாதி.) சங்கும், மலிவுடைய - மிடுக்கின்மிகுதியுடைய, தண்டும், சக்கரமும், முதலென்றதாலே - மற்றை வாளும் வில்லுமான வற்றைக்கொண்டு கண்முன்னே பூர்வர்திருப்போலே தரித்துக்கொண்டிருக்கிற தாமரைபோன்ற நெடியகண்ணுடைய பிரான்றானென்று வாக்யார்த்தமுட்கொண்டு

மூ.— சங்குமலிதண்டுமுதல் சக்கரமுனேந்தும்
தாமரைக்கண்ணெடியபிரான்றானமரும்கோயில்
வங்கமலிகடலுலகில் மலிவெய்து நாங்கூர்
வைகுந்த விண்ணகர்மேல் வண்டறையும்பொழில்சூழ்
மங்கையர்தம்தலைவன் மருவலர்தமுடல்துணிய
வாள்வீசும்பரகாலன் கலிகன்றிசொன்ன
சங்கமலிதமிழ்மாலை பத்திவைவல்லார்கள்
தரணியொடுவிசும்பாளும் தன்மைபெறுவாரே. ௧0.

ப - ரை.— சங்கு - சங்கமும், மலி - திருடமான, தண்டு - கதையும், சக்கரம் - சக்கரமும், முதல் - இவைமுதலான சட்கபாராங்கங்களும், ஆகிய இவற்றை, முன் - கண்முன்னே, ஏந்தும் - தரித்துக்கொண்டிருக்கிற, நெடிய - நீண்ட, தாமரைக்கண் - தாமரைபோன்றதிருக்கண்களையுடைய, பிரான் - மஹோபகாரகரான ஸர்வேச்வரன், அமரும்கோயில் - நித்யவாஸம்பண்ணும் திவ்யதேசமாய், வங்கம் - மரக்கலங்கள், மலி - நிறைந்த, கடல் - கடல்சூழ்ந்த, உலகில் - பூமியில், மலிவெய்து - ஸம்ருத்தமிக்கிருக்கிற, நாங்கூர் - திருநாங்கூரில், வைகுந்தவிண்ணகர்மேல் - வைகுந்தவிண்ணகர் விஷயமாக; வண்டு - வண்டுகள், அறையும் - சப்திக்கின்றுள்ள, பொழில் - பொழிலாலே, சூழ் - சூழப்பட்ட, மங்கையர்தம் - திருமங்கையிலுள்ளார்க்கு, தலைவன் - ப்ரதானராய், மருவலர்தம் உடல் - சத்ருக்கள் சரீரங்கள், துணிய - சிந்நம் பிந்நமாம்படி, வாள் வீசும் - கட்கத்தைவீசுகிற, பரகாலன் - சத்ருமர்த்தநராய், கலிகன்றி - கலிவைரியான ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்ததாய், சங்கம் மலி - கவிஸங்கம் கொண்டாடத்தக்க, தமிழ்மாலை - த்ராவிடப்ரபந்தஸந்தர்ப்பத்தையுடைத்தான, இவைபத்து - இப்பத்துப்பாட்டுக்களையும், வல்லார்கள் - அப்யஸிக்கவல்லவர்கள், தரணியொடு - பூமியையும், விசும்பு - பரமாகாசத்தையும், ஆளும் - ஆளும்படியான, தன்மை - அந்தபத்தை, பெறுவார் - உடையராகப்பெறுவர்கள். (௧0)

(வங்கமித்யாதி) கடல்சூழ்ந்தபூமியிலே [illegible] மரக்கலத்தையுடைத்தான கடல்சூழ்ந்த பூமியில் ஸம்ருத்தியை விருத்தியிருக்கிற திருநாங்கூரிலே வைகுந்தவிண்ணகர் விஷயமாக. (வண்டித்யாதி) வண்டுபாடும் பொழில்சூழ் திருமங்கையிலுள்ளார்க்கு [illegible] ஹகர். (மருவலரித்யாதி) சத்ருக்களுடல் துணியும்படி வாள்வீசும் பரகாலன்கலிகன்றிசொன்ன. (சங்கமித்யாதி) சங்கத்தார் [illegible] கொண்டாடும்படியான தமிழ்மாலையிப்பத்தையும் அப்யஸிக்கவல்லவர்கள்,

கவிபாடிற்று. கவிபாடினவர் - மதோபாநமத்தமான வண்டுகள் ஒலியாநின்றுள்ள பொழிலாலேசூழப்பட்ட திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநரான[ஈடு] ஆழ்வார், சத்ருக்களுடல் துணியும்படியாக வாள்வீசுகிற, பரகாலன் - ஆழ்வார் அருளிச்செய்த, சங்கப்புலவர்கள் திரளவிருந்து தமிழ்கொண்டாடப்புக்கால் இத்தையேகொண்டாடவேண்டும்படியான தமிழ்த்தொடை பத்தையும் வல்லவர்கள்,

தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஸ்ரீதேத்யாதி.) சங்கப்புலவரென்றது - கவிஸமுதாயத்தையுடைத்தான சங்கப்பலகையில் வீற்றிருப்பார்களென்றபடி. ... ௧0.

ஜீயர்திருவடிகளேசரணம்.

உஜ்ஜ்வலவிபூதியையுமாளும்படியான வைபவத்தைப்பெறுவர். ௧௦.

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

உபயவிபூதியும் தாங்களிட்டவழக்காம்படியான ஸ்வபாவத்தை யுடையராகப்பெறுவர். ... ... ௧௦.

அடிவரவு.— சலம் திண்ணிய அண்டம் கலை மின் பெண்மை விளங்கனி ஆறு வங்கம் சங்கு திரு.

திருமங்கையாழ்வார்திருவடிகளேஶரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

மூன்றாம்பத்து - பத்தாந்திருமொழி - திருமடந்தை. ப்ரவேஶம்.

ஆஶ்ரிதவிரோதிநிரஸநஶீலனாய், ஆஶ்ரிதருடைய ஸர்வாபராத ஸஹனாய், ஶ்ரிய:பதியாய், ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய், ஸர்வ ஶக்தியான ஸர்வேஶ்வரன், பிராட்டிமாருடனே, ஆஶ்ரிதார்த்தமாக அரி மேயவிண்ணகரிலே யெழுந்தருளியிருக்கிற ஶீலகுணப்ராசுர்யத்தை யநுஸந்தித்து, "இவனுமொருவனே! இதுவுமொருகுணமே!" என்று நித்யஸூரிகளீடுபட்டு ஸ்தோத்ரம்பண்ணுகிற ஸர்வேஶ்வர னெழுந்தருளியிருக்கிற அரிமேயவிண்ணகரிலே நீசென்றாஶ்ரயி யென்று திருவுள்ளத்தைக்குறித் தருளிச்செய்கிறார். ... ❋

ஆஶ்ரிதவிரோதிநிரஸநஶீலனாய்.ஆஶ்ரிதர்க்குஆபத்துக்களிலே தவும் ஸ்வபாவனுமான ஸர்வேஶ்வரன், தான் ஶரண்யனாமிடத்தில் புருஷகாரமாம் பிராட்டிமாரோடேகூடவந்து நிற்கிறபடியை யநுஸந் தித்து,நித்யஸூரிகள்" இதொருஶீலகுணப்ராசுர்யமிருந்தபடியென்!" என்று இதிலேயீடுபட்டு ஆஶ்ரயிக்கும்படியாக அரிமேயவிண்ணக ரிலே நித்யவாஸம்பண்ணுநின்றான், ஆனபின்பு நீயுமங்கேசென்று அவ னையாஶ்ரயித்து உன்னுடைய குறைகளெல்லாவற்றையும் தீர்த்துக் கொள்ளப்பாராயென்று திருவுள்ளத்தைக்குறித்தருளிச்செய்கிறார். ❋

திருமடந்தைப்ரவேஶம்.— ஶ்ரீவைகுந்தவிண்ணகரில் நரஸிம்ஹராமக்ருஷ்ணா வதாரசேஷ்டிதங்கள் முதலானவற்றை யநுஸந்தித்தஆழ்வார், அடுத்த அரிமேய விண்ணகரிலிருக்குமவனையுமநுபவிக்கவேணுமென்னுமாசையால்அவ்வபதாநங்களை மாறிமாறிப்பேசாநின்றுகொண்டு அநுபவிக்கிறாரென்னும் ஸங்கதியை யுட்கொண்டு, திருமொழியில் ப்ரமேயத்தை உபந்யஸிக்கிறார் (ஆஶ்ரிதவிரோதிநிரஸ னேத்யாதி.) இத்திருமொழியில் நரகாஸுரப்ரப்ருதிகளை நிரஸித்தபடிகளைப் பற்ற (விரோதிநிரஸநஶீலனாயென்றது.) "கடலைக்கடைந்தமுதமளிக்கும்" "உண்ட பிரான்" என்றும், "சிறுகுறளாய்" என்றும் சொன்ன அபதாநங்களைப்பற்றவருளி ச்செய்கிறார் (ஆபத்துக்களிலேவந்துதவும் ஸ்வபாவனுமானவென்று.) முதற்பாட் டைப்பற்றவருளிச்செய்கிறார் (தானித்யாதி.) ... ...

http://acharya.org

மூ.—திருமடந்தைமண்மடந்தை யிருபாலுந்திகழத்
தீவினைகள்போயகல வடியவர்கட்கென்றும்
அருள்நடந்திவ்வேழுலகத்தவர் பணிய வானோர்
அமர்ந்தேத்தவிருந்தவிடம் பெரும்புகழ்வேதியர்வாழ்
தருமிடங்கண்மலர்கள்மிகு கைதைகள் செங்கழுநீர்
தாமரைகள் தடங்கடொறு மிடங்கடொறுந்திகழ
அருவிடங்கள் பொழில்தழுவியெழில் திகழுநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. க.

ப - ரை.— திருமடந்தை - பெரியபிராட்டியாரும், மண்மடந்தை - ஸ்ரீபூமிப் பிராட்டியும், இருபாலும் - இரண்டுபார்ச்வங்களிலும், திகழ - ப்ரகாசிக்க, அடியவர்கட்கு - ஆச்ரிதர்களுக்கு, என்றும் - எப்போதும், அருள்நடந்து - க்ருபைபண்ணி, அத்தாலே, தீவினைகள்-கொடியபாபங்கள், போய் அகல-விட்டோடும்படி, இவ் வேழ் உலகத்தவர் - இந்தஸப்தலோகங்களிலுள்ளாரும், பணிய-ஆச்ரயிக்கவும்,வானோர்-நித்யஸூரிகள், அமர்ந்து - இஸ்ஸம்ஸாரவிபூதியில்சால்பொருந்தி, ஏத்த - ஸ்தோத்ரம்பண்ணவும், இருந்த - நித்யவாஸம்பண்ணுகிற, இடம் - திவ்யதேசமாய்; பெரும்புகழ் - மஹாப்ரஸித்தரான, வேதியர் - ப்ராஹ்மணர், வாழ்தரும் - வர்த்திக்கிற, இடங்கள்-இடங்களையுடைத்தாய், மலர்கள்மிகு - புஷ்பஸம்ருத்தியையுடைய, கைதைகள்-தாழைகளும், செங்கழுநீர்-ரக்தோத்பலங்களும்,தாமரைகள்-தாமரைகளும்,தடங்கள்தொறும்-தடாகங்கள்தோறும்,இடங்கள்தொறும்-பார்த்த பார்த்தவிடமெல்லாம், திகழ-விளங்கவும், பொழில்-சோலையானது, அருவிடங்கள்-ஆகாசாவகாசமுடைய, தழுவி - இடைமடைத்துக்கொண்டு ஓங்கி, எழில்தழும்-அழகுவிளங்காநின்றுள்ள, நாங்கூர்-திருநாங்கூரில், அரிமேயவிண்ணகரம் - அரிமேயவிண்ணகரில் எம்பெருமானை, மடநெஞ்சே - எனக்குஹிதையமான நெஞ்சே, வணங்கு-ஆச்ரயி என்று தந்திருவுள்ளத்தைக்குறித்தருளிச்செய்கிறார். (க)

முதற்பாட்டு. (திருமடந்தையித்யாதி) புருஷகாரபூதையான பெரியபிராட்டியாரும்ஸ்ரீபூமிப்பிராட்டியாரும் எழுந்தருளியிருந்து விளங்க, தீவினைகளானவை விட்டகல,

---

முதற்பாட்டு.— (திருமடந்தைமண்மடந்தையிருபாலுந்திகழ) "நகஸ்சிந்நாபராத்யதி" என்று-குற்றத்தைப்பொறுப்பிக்கும்பிராட்டியும், "முதலிலேகுற்றந்தன்னைக்காண்கிறதென், பின்னைப்பொறுப்பிக்கிறதென்" என்று, குற்றங்கண்டு பொறுக்கையுங்கூட மிகையாம்படியிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டியும், இரண்டிடத்திலும்விளங்க. குற்றத்தைப்பொறுப்பிக்கைக்குப் பிராட்டி; குற்றங்கண்டு கைவிடவொண்ணாதவிடத்தில், "குற்றம்கணக்கிடுகிற விதுக்குஸலமென்" என்றிருக்கும் ஸ்ரீபூமிப்பிராட்டி. (தீவினைகள்போயகல) இப்படிப்பட்டபிராட்டிமாருடைய நித்யஸந்நிதியாலே, ஸர்வேஸ்வரனுக்கு ஆச்ரிதவிஷயத்து "க்ஷிபாமி" என்கைக்கு விஷயமற்றிருக்குமாய்த்து.

முதற்பாட்டு.—(திருவித்யாதி.) "தீவினைகள் போயகல" என்றபதத்தைக் கடாக்ஷித்து, பிராட்டிமாரிருவரையும் சொன்னதுக்கு உட்கருத்தையருளிச்செய்கிறார் (நகஸ்சிதித்யாதி.) இவர்களுக்கிவை ஸ்வாபாவிகங்களோவென்ன (குற்றத்தையித்யாதி)·

http://acharya.org

ஆஸ்ரிதர்க்கு, என்று மருள்நடந்து-நாடோறுமருள்பண்ணி. (இவ்வே முலகித்யாதி) இந்தஸப்தத்வீபவதியான லோகத்திலுள்ளா ராஸ்ரயிக்க. நித்யஸூரிகள் விடாதேநின்று ஸ்தோத்ரம்பண்ண விருந்தவிடம். (பெரும்புகழித்யாதி) மிக்கபுகழையுடைய ப்ராஹ்மணர் வாழுகிறரு விடம். வாழ்தருமிடங்கள்' (மலரித்யாதி) பூக்கள்மிக்க தாழைகள், செங்கழுநீர், தாமரைகள், தடங்கள்தோறும் பார்த்தபார்த்தவிட மெல்லாம் மிக. (அருவிடம்) ஆகாஶம். ஸூக்ஷ்மதையாலே, அரு விடமென்று-ஆகாஶத்தைச்சொல்லுகிறது. ஆகாஶாவகாஶமெல்லாம் பொழில்வளர்ந்து இப்படிப்பட்ட அழகுவிளங்காநின்றுள்ள நாங்கூர். க.

பொறுப்பிக்குமவனும் பொறைக்கு உவாத்தானவனும் எப்போது மொக்க அருகேயிருக்கையாலே ஆஸ்ரிதர்பக்கல் எப்போது மவ னருளேநடந்து, அத்தாலே கொடிய அபராதங்கள் † "இவ்வோ விடங்கள் நமக்கிருப்பிடமல்ல" என்றுவிட்டோட, "இப்படியிருக்கிற விவனல்லது லோகத்திலேவேறு ஆஶ்ரயணீயரில்லை" என்று ஏழுருவு வகைப்பட்டலோகங்களிலுள்ளாருமடைய ஆஶ்ரயிக்க, தேவர்களுங்கூட க்கால்பொருந்தவரிதாம்படியான இஸ்ஸம்ஸாரவிபூதியிலே அஸ்ப் ஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகள்பொருந்தி ஆஶ்ரயிக்கும்படி யாக விருக்கிறவிடம்.

(பெரும்புகழித்யாதி) இவனை யநுஸந்திக்கையே யாத்ரையாம்படி சமைகையாலே மிக்கபுகழையுடைய ப்ராஹ்மணர் வர்த்திக்கிறவிடங் களையுடைத்தாய், மலர்கள் மிகு கைதைகள் துடக்கமானவற்றையுடைத் தாயிருக்கிற திருநாங்கூரென்னுதல்; வாழ்தருமிடங்களிலேயுண்டாய் அவர்களுக்குமுப்பாயிருக்கிற மலர்கள் மிகு கைதைகள் துடக்கமான வற்றையுடைத்தாயிருக்கிற வென்னுதல். பூக்கள் மிக்கிருந்துள்ள தா ழைகள், செங்கழுநீர், தாமரைகள், இவை, பரந்தபொய்கைகள்தோ றும் அவகாஶங்கள்தோறும் விளங்க. இங்கிடமில்லாமையாலே சோலை யானது ஆகாஶத்திற்பரப்பையடைய இடமடைத்துக்கொண்டோங்கி அழகு விளங்காநின்றுள்ள. அருவிடமென்று - ஸூக்ஷ்மதையைப்பற்ற ஆகாஶத்தைச்சொல்லுகிறது. ... ... க.

"திருமடந்தை மண்மடந்தை யிருபாலுந்திகழ - அடியவர்கட்கு என்று மருள் நடந்து - தீவினைகள்போயகல-இவ்வேழுலகு" இத்யாதியாலே அந்வயம்திருவுள்ள ம்பற்றி, தத்நுகுணமாக வாக்யார்த்த மருளிச்செய்கிறார் (பொறுப்பிக்குமித்யாதி.)

அவர்களுக்குமுப்பாய் - அவர்கள் பண்ணும் ஸமாராதநங்களுக்குமுப்பாய். "தழுவி" என்றதினர்த்தம் (பரப்பையித்யாதி.) ஸூக்ஷ்மபதி என்று தோற்றுகை யாலே மூர்த்தமான ஆகாஶத்தை "அரு" என்று அமூர்த்தமாகச்சொல்லக்கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (அருவிடமென்றித்யாதி.) ... ... ௪.

---

† "அபராதங்கள்" என்கிறவிடத்தில் "பாபங்கள்" என்று சில ஸ்ரீகோஶங் களிற காண்கிறது.

http://acharya.org

மூ.— வென்றிமிகுநரகனுரமது வழியவிசிறும்
விறலாழித்தடக்கையன் விண்ணவர்கட்கன்று
குன்றுகொடு குரைகடலைக்கடைந்தமுதமளிக்கும்
குருமணியென்னாரமுதம் குலவியுறைகோயில்
என்றுமிகு பெருஞ்செல்வத்தெழில்விளங்குமறையோர்
ஏழிசையும் கேள்விகளுமியன்றபெருங்குணத்தோர்
அன்றுலகம் படைத்தவனேயனையவர்கள் நாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௨.

ப - ரை.— வென்றிமிகு-ஜயம்மிக்க, நரகன்-நரகாஸுரனுடைய, உரம்-பலம், அழிய - நசிக்கும்படி, விசிறும் - வீசாநின்றுள்ள, விறல் - மிடுக்கையுடைய, ஆழி- திருவாழியை, தடம் - பெரிய, கையன்-திருக்கையிலேயுடையனாய், அன்று - கடல் கடைந்து அம்ர்தம்வாங்கித் தரவேணுமென்று தேவஜாதி அர்த்தித்தவன்று, விண்ணவர்கட்கு - இந்த்ராதி தேவர்களுக்காக, குன்று கொடு - மந்தரபர்வதத்தை நட்டு, குரைகடலை - கோஷிக்கிற ஸாகரத்தை, கடைந்து - மதநம்பண்ணி, அமுதம் - அம்ர்தத்தை, அளிக்கும் - அவர்களுக்கு க்ருபைபண்ணின, குருமணி - ச்லாக்யமான மணிபோன்ற,என் ஆர் அமுதம்-என்னுடைய அத்ர்ப்தாம்ர்தமானவன், குலவி உறை - விரும்பிவர்த்திக்கிற, கோயில் - திவ்யஸ்தாநமாய்; என்றும் - ப்ரதிதிநமும், மிகு-மிகுந்துவருகிற,பெருஞ்செல்வத்து-நிரவதிகஸம்பத்தையுடையராய், எழில்விளங்கும்-அழகுவிளங்காநிற்பாராய், மறையோர்-வேதசாகைக்கு ஸாரகஸ்டிருப்பாராய்,ஏழிசையும்-ஸப்தஸ்வரங்களும்,கேள்விகளும்-மற்றுமுண்டான அங்கோபாங்கங்களும், இயன்ற-அதிசரித்த, பெருங்குணத்தோர்-மஹாகுணப்ரசுரராய், அன்று—, உலகம் படைத்தவனே அனையவர்கள் - ஜகத்ஸ்ர்ஷ்டிபண்ணின ப்ரஹ்மாவைப் போலே ஸாபாநுக்ரஹஸமர்த்தரான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற,நாங்கூர்—. (௨)

இரண்டாம்பாட்டு. (வென்றியித்யாதி) புக்கபோரில் வென்றி மிகும்படிபொரும் நரகனுடையவலமழியவீசும்மிடுக்கையுடையதிரு வாழியைப் பெரியகையிலேயுடையவன். (விண்ணவரித்யாதி) இந்த்ராதிகளுக்காக மந்தரபர்வதத்தைக் கடலில்நடுநெருசிலே நட்டு அது கதறக்கடைந்து அவர்களுக்கு அம்ர்தத்தைக்கொடுத்தருளும்.

இரண்டாம்பாட்டு.—(வென்றியித்யாதி)புக்கபுக்க துறைதோறும் வெற்றிகொள்ளக்கடவனாய் இந்த்ராதிகள் குடியிருப்பழித்துத்திரிகிற நரகாஸுரனுடைய மிடுக்கழியும்படியாக வீசாநின்றுள்ள மிடுக்கை யுடைய திருவாழியைத்திருக்கையிலேயுடையவன்.நரகாஸுரனைநிரஸி த்து தேவஜாதிக்குக்குடியிருப்புப் பண்ணிக்கொடுத்துவிட்ட வளவன் றிக்கே, அவர்கள் "எங்களுக்குக் கடல் கடைந்து அம்ர்தத்தைவாங்கி த்தரவேணும்" என்ன ; அவர்களுக்காக மந்தரத்தைநட்டு, கோஷ த்தையுடைத்தாயிருக்கிற கடலைக்கடைந்து, அவர்களுக்கு அம்ர்தத் தைக் கொடுத்தவன்.

இரண்டாம்பாட்டு.— (வென்றியித்யாதி.) முதற்பாட்டிற்சொன்ன தீவினைகள் போயகலப் பண்ணுகைக்குறுப்பான விரோதிநிரஸநசீலதையையும், ஏழுலகத்த வர் பணிகைக்கு உபயுக்தமான உதவிகளையும் மேற்பாட்டுக்களிலே யருளிச்செய்ய க்கோலி, அதில், கீழ்த்திருமொழியில் "ஆருதசினத்தில்" என்கிறபாட்டிலும் முதற் பாட்டிலும் ப்ரஸ்துதமான நரகநிரஸநத்தையும் அம்ர்தமதநத்தையுமருளிச்செய் கிறரிப்பாட்டிலென்று ஸங்கதி.

"உரமது" என்றவிடத்தில் உத்கர்ஷத்தையருளிச்செய்கிறார் (இந்த்ராதிகளி த்யாதி.)

http://acharya.org

மூ.— உம்பருமிவ்வேழுலகுமேழ்கடலுமெல்லாம்
உண்டபிரா னண்டர்கள்முன்கண்டுமகிழ்வெய்த
கும்பமிகுமதயானைமருப்பொசித்துக் கஞ்சன்
குஞ்சிபிடித்தடித்தபிரான்கோயில் மருங்கெங்கும்
பைம்பொனொடு வெண்முத்தம் பலபுன்னைகாட்டப்
பலங்கனிகள் தேன்காட்டப் படவரவேரல்குல்
அம்பனையகண் மடவார்மகிழ்வெய்துநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௩.

ப - ரை.— உம்பரும் - தேவர்களும், இவ்வேழுலகும் - இந்தஸப்தலோகங்களும், ஏழ்கடலும் - ஸப்தஸமுத்ரங்களும், ப்ரளயத்தில் நோவுபடப்புக அவை நசியாதபடி, எல்லாம் - இவையெல்லாவற்றையும், உண்ட - அமுதுசெய்த, பிரான் - உபகாரகனாய், க்ர்ஷ்ணனாய் அவதரித்து, அண்டர்கள் - இடையர்கள், கண்டு மகிழ்வெய்த - கண்டு உகக்கும்படி, முன் - அவர்கள்முன்னே, கும்பமிகு - குடம்போன்ற பெரிய மஸ்தகத்தையுடைய, மதயானை - மதமுதிதமான குவலயாபீடத்தினை, மருப்பு - கொம்பை, ஒசித்து - முறித்து, கஞ்சன் - கம்ஸனுடைய, குஞ்சி பிடித்து - மயிரைப்பிடித்து, அடித்த - தலைகீழாகத்தள்ளி முதுக்லேஅறைந்து அவனை முடியச்செய்த, பிரான் - உபகாரகனுடைய, கோயில் - ஸ்தாநமாய்; மருங்கு எங்கும் - பக்கமெல்லாம், பலபுன்னை - பலவானபுன்னைகள், மொட்டும் பூவுமாய் பூத்து நின்று, பைம்பொனொடு - அழகியபொன்னையும், வெள்முத்தம் - வெளுத்தமுத்துக்களையும் கூட்டிஞப்போல், காட்ட - காணப்பட, பலங்கனிகள் - பலாப்பழங்கள், தேன்காட்ட - மதுசொரிந்துகாட்ட, படம் - படத்தையுடைய, அரவு ஏர் - ஸர்ப்பம்போலும் அழகிய, அல்குல் - நிதம்பத்தையும், அம்பு அனைய - சரங்கள் போலும், கண் - கண்களையுமுடைய, மடவார் - ஸ்த்ரீகள், அவற்றைக்கண்டு, மகிழ்வெய்தும் - ஸந்தோஷிக்கிற, நாங்கூர்—. ... ... (௩)

குருமணி—ச்ரேஷ்டமான மணியென்றபடி. என்னாரமுதம் ... ... வர்த்திக்கிற கோயில். (என்றுமிகுவித்யாஷ்) நாள்செல்ல நாள்செல்ல மிக்கு வாராநின்ற ஐச்வர்யத்தையும் அழகு விளங்காநின்ற மறையும் ஸப்தஸ்வரங்களும் இவற்றில் ச்ரவணத்தாலேசேர்ந்த ஆத்மகுணங்களை பேதராய். (அன்றுலகமித்யாஷ்) ப்ரஹ்மாவைப்போலே ஸாபாநும் ரஹஸ்யமர்யாதரான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற. ... ... ௨.

(குருமணி) அவர்கள் "நீவேண்டா, எங்களுக்கு உப்புச்சாறமையும்" என்ன; பெருமையையுடைய தன்படியொன்றும் பாராதே, தன்தோள் நோவும்படி கடலைநெருக்கிக்கடைந்து அவர்களுக்கு அம்ருதத்தை உபகரித்தவன். (என்னாரமுதம்) அவர்களம்ருதம்போலன்றிக்கேதம்முடைய அம்ருதமிருக்கிறபடி. கொண்டாடிக்கொண்டுவர்த்திக்கிறதேசம்.

(என்றுமித்யாதி) நாள்செல்ல நாள்செல்ல மிக்குவாராநின்றுள்ள த்ரவ்யஸம்பத்தையுடையராய், அத்தாலே அழகுவிளங்காநிற்பாராய், வேதத்தைக்கரைகண்டிருப்பாராய், ஸப்தஸ்வரங்களையும் மற்றுமுண்டான அங்கங்களையும் "இவர்களில் மேற்பட அதிகரித்தாரில்லை" என்னும்படி அதிலுண்டான வாஸனையாலே ஆத்மகுணப்ரசுரருமாய், தனித்தனியே ஜகத்ஸ்ருஷ்டிக்ஷமருமானவர்கள் வர்த்திக்கிற திருநாங்கூரில். ... ... ௨.

ச்ரேஷ்டமானமணி - ச்லாக்யமான மணியென்றாய், அர்த்தமருளிச்செய்கிறார் (அவர்களித்யாதி.) "குலவி" என்றதுக்கர்த்தம் (கொண்டாடிக்கொண்டென்றது.) (௨)

http://acharya.org

மூன்றாம்பாட்டு. (உம்பருமித்யாதி) தேவஜாதியும் ஸகலலோகங்களும் ஸப்தஸமுத்ரங்களும் ப்ரளயத்திலே நசியாதபடி அமுதுசெய்த உபகாரகன். அண்டர் - இடையர், கண்டுகக்க, க்ருஷ்ணனாய்வந்தவதரித்து, குடம்போன்ற பெரியமஸ்தகத்தையுடைய மதமுதிதமான குவலயாபீடத்தின்கொம்பை முறித்து, கம்ஸன்மயிரைப்பிடித்து விழவிட்டு, அவனைத்தகர்த்த உபகாரகன். கோயிற்பக்கமெல்லாம். (பைம்பொனித்யாதி) அழகியபொன்னுடனே வெண்முத்தைப்புன்னைகாட்ட, பலாப்பழங்கள் தேன்சொரிய. (படவரவித்யாதி) அரவின்படத்தையொத்த அல்குலையும் அம்புபோன்ற கண்ணையுமுடையராயிருக்கிற ஸ்த்ரீகள், "இன்னதிலே யின்னதுண்டாகக்கடவது என்று வ்யவஸ்தையின்றிக்கேயிருந்ததீ!" என்று இவைகண்டு ஆச்சர்யப்படுகிறவூர். ... ... ௩.

மூன்றாம்பாட்டு.— (உம்பருமித்யாதி) தேவஜாதியும், இந்த ஏழுவகைப்பட்டலோகங்களும், இத்தைச் சூழப்போந்திருக்கிற கடல்களேழும், இவையடைய ப்ரளயத்திலே நோவுபடப்புக வயிற்றிலே வைத்துநோக்கின உபகாரகன்; க்ருஷ்ணனாய்வந்தவதரித்து இடையர் கண்டு ப்ரீதராம்படியாக, குடம்போலே பெரியமஸ்தகத்தையுடைத்தாய் மதமுதிதமாயிருந்துள்ள குவலயாபீடத்தினுடையகொம்பைமுறித்து, அநந்தரம் கம்ஸனுடைய மயிரைப்பிடித்துத் தலைகீழாகத்தள்ளி முதுகிலே யறைந்து அவனையழியச்செய்த உபகாரகனுடைய கோயில்.

பரிஸரமடைய. (பைம்பொனொடுவெண்முத்தம்பலபுன்னைகாட்ட) புன்னைகளானவை மொட்டும்பூவுமாய்ப்பூத்துநின்றபோது பொன்னிலே முத்தையழுத்தினாப்போலே காட்டாநின்றது; பலாப்பழங்கள் தேன் காட்டாநின்றது; படத்தையுடைத்தான அரவுபோலே அழகிய அல்குலையுமுடையராய், அம்போடொத்த கண்களையுமுடையரான ஸ்த்ரீகளானவர்கள், "இன்னபோதின்னது, இன்னதிலின்னதுண்டாம் என்னும் வ்யவஸ்தையின்றிக்கே யிருந்ததீ!" என்று அவற்றைக்கண்டு த்ருப்தைகளாகிற. ... ... ௩.

மூன்றாம்பாட்டு.— (உம்பரித்யாதி.) கீழ்த்திருமொழியில் "அண்டமும்" என்கிறபாட்டில் - ஆபத்ரக்ஷணமும், "பெண்மைமிகு" என்கிறபாட்டில் - ப்ரஸ்துத பூதநாநிரஸநத்தால் அவளையேவின கம்ஸநிரஸநமும் திருவுள்ளத்தில் தோன்றி, அவற்றையிப்பாட்டிலே யருளிச்செய்கிறாரென்று முதற்பாட்டோடே ஸங்கதி.

"அண்டர்கள்" என்றதினர்த்தம் (இடையரென்றது.)

"ஏர்" என்றதினர்த்தம் (அழகியவென்றது.) "காட்ட - மகிழ்வெய்தும்" என்ற வர்த்தமாநநிர்த்தேசத்தால் - எப்போதும் பழுத்து மதுசொரிந்திருக்குமென்கை ஒலிக்கையாலே யருளிச்செய்கிறார் (இன்னபோதின்னதென்றது.) "புன்னை-பொன்-முத்தம் - காட்ட" என்கையாலே (இன்னதிலின்னதென்றது.) ... ௩.

நாலாம்பாட்டு.— (ஓடாதவித்யாதி.) கீழ்த்திருமொழியில் முதற்பாட்டிலும் இரண்டாம்பாட்டிலும் ப்ரஸ்துதமான நரஸிம்ஹாவதாரத்தாலே - விரோதிநிரஸநமும் ஆஸ்ரிதனாபத்துக்குதவின ஸமயமுமருளிச்செய்கிறாரென்று, இதுக்கும்முதற்பாட்டோடே ஸங்கதி.

http://acharya.org

மூ.—ஓடாதவாளரியினுருவமதுகொண்டன்
றுலப்பில்மிகு பெருவரத்தவிரணியனைப்பற்றி
வாடாதவள்ளுகிரால்பிளந் தவன்றன்மகனுக்
கருள்செய்தான்வாழுமிடம் மல்லிகைசெங்கழுநீர்
சேடேறுமலர்ச்செருந்தி செழுங்கமுகம்பாளை
செண்பகங்கள் மணநாறும் வண்பொழிலினூடே
ஆடேறு வயலாலைப்புகைகமழுநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௪.

ப - ரை.—அன்று-ப்ரஹ்லாதனைநிர்ப்பந்திக்கிறகாலத்திலே ; ஓடாத - ஹிரண்யனுடைய பலத்தைக்கண்டு பிற்காலியாத, ஆளரியின்உருவம் கொண்டு - நரஸிம்ஹமானவடிவைக்கொண்டு, உலப்புஇல்-ஸங்க்யாரஹிதமான, மிகுபெருவரத்த-மிகவும் பெரியவரங்களையுடைய, இரணியனை-அந்தஹிரண்யனை, பற்றி-பிடித்து, வாடாத - வளையாத, வள் - தீக்ஷ்ணமான, உகிரால் - நகங்களால், அவன்மார்வை, பிளந்து - இருபிளவாம்படிபண்ணி, அவன்றன்மகனுக்கு - அவன்பிள்ளையான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு, அருள் செய்தான் - அருளைப்பண்ணின ஸ்வாமி, வாழும் இடம்-வர்த்திக்கிற ஸ்தாநமாய் ; மல்லிகை - மல்லிகைகளும், செங்கழுநீர் - ரக்தோத்பலங்களும், சேடேறுமலர் - திரளப்பூத்தபூவையுடைய, செருந்தி-சுரபுன்னைகளும், செழு - அழகிய, கமுகம்பாளை - பாக்குப்பாளைகளும், செண்பகங்கள் - செண்பகப்பூக்களும், மணம்நாறும் - பரிமளம்கமழுகிற, வண்பொழிலினூடே - அழகிய சோலையினிடையே, ஆடேறுவயல்-கரும்புஆடுகைக்காக ஏறினவயலில், ஆலைப்புகைகமழும் - ஆலைப்புகைபரிமளிக்கிற, நாங்கூர்—. ... ... (௪)

நாலாம்பாட்டு. (ஓடாதவித்யாதி) ஹிரண்யனுடைய பலத்தைக்கண்டு பிற்காலியாத நரஸிம்ஹமான வடிவைக்கொண்டு, முடிவில்லாத தேவர்கள்கொடுத்த வரத்தையுடைய ஹிரண்யனைப்பிடித்து. [உரு (வாடாதவித்யாதி) வளையாதவுகிராலே அவன்மார்வைப்பிளந்து அவன் மகனுக்கு அருள்செய்தான் வாழுமிடம்.

நாலாம்பாட்டு.— (ஓடாதவித்யாதி) ஹிரண்யனுடைய முரட்டுடலைக் கண்டால் பிற்காலியாதபடியான நரஸிம்ஹத்தினுடையவெ ன்றுதல்; அன்றிக்கே, நாட்டில்நடையாடாத நரஸிம்ஹமென்னு[கூடி தல். (உலப்பில்)அஸங்க்யேயமாய் ஒரோவரங்களே முடிவுகாணவொ ண்ணாதபடியாயிருப்பதாய், வரங்கொடுத்த தேவதைகளுக்குங்கூடக் குடியிருப்பரிதாம்படிபெரியவரத்தையுடையஹிரண்யனைப்பற்றி.(வாடாத) ஹிரண்யனுடைய முரட்டுடலிலே தைத்தால் வளையக்கடவ தன்றிக்கே கூர்மைமிக்கிருக்கிற திருவுகிராலே இரண்டுகூறும்படி பிளந்து, அவன்பக்க லிழவுதீரும்படி "அவன்மகன்" என்று ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலே அருளைப்பண்ணினவன் வர்த்திக்கிற தேசம்.

"மிகு" என்றதுக்குதாத்பர்யம் (ஒரோவித்யாதி.) உகிருக்குவாட்டமாவது-வளைகையென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஹிரண்யனுடையவித்யாதி.) அவன் பக்கலிழவுதீரும்படி யென்றது-ஹிரண்யன் தன்னருளுக்கு விஷயமாகாமல் முடிந்தானே ! என்னும் திருவுள்ளத்தில் குறைதீரும்படியென்றபடி.

http://acharya.org

மூ.—கண்டவர்தம் மனம்மகிழ மாவலிதன் வேள்விக்
களவில்மிகுசிறுகுறளாய் மூவடியென்றிரந்திட்
டண்டமுமிவ்வலைகடலுமவனிகளுமெல்லாம்
அளந்தபிரானமருமிடம் வளங்கொள்பொழிலயலே
அண்டமுறு முழவொலியும் வண்டினங்களொலியும்
அருமறையினொலியும் மடவார்சிலம்பினொலியும்
அண்டமுறு மலைகடலினொலிதிகழுநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ரு

ப - ரை.—கண்டவர்தம்மனம்-கண்டவர்களெல்லாருடைய நெஞ்சும், மகிழ-ஆநந்திக்கும்படி, மாவலிதன்வேள்வி - மஹாபலியஜ்ஞவாடத்திலே, களவில்மிகு-க்ரித்ரிமத்தில்மிக்கு, சிறுகுறளாய்-வடிவில்சிறுத்தவாமநனாய், மூவடி என்று-மூன்று அடிகள் தரவேணும் என்று, இரந்திட்டு - யாசித்து, அண்டமும் - ஆகாசத்தையும், இ-இவ்வருகான, அலைகடலும் - அலையெறியாநின்றுள்ள ஸாகரங்களையும், அவனிகளும் - ஸப்தத்வீபமான பூமிகளையும், எல்லாம்-இவையெல்லாவற்றையும், அளந்த-அநாயாஸேந அளந்துகொண்ட, பிரான் - உபகாரகன், அமரும் - நித்யவாஸம் பண்ணுகிற, இடம் - தேசமாய்; வளங்கொள் - ஸம்ருத்தியுடைத்தான, பொழில் அயலே - பொழிலின் அருகே, அண்டம் உறும் - ஆகாசத்திலே சென்று வ்யாபரிக்கிற, முழவு ஒலியும்-வாத்யகோஷங்களும், மதுபாநம்பண்ணிக் களித்துப்பாடுகிற, வண்டினங்கள் ஒலியும் - வண்டுகளின்த்வநியும், அருமறையின் ஒலியும் - துர்க்ரஹ வேதகோஷமும், மடவார் சிலம்பின்ஒலியும் - ஆபிஜாத ஸ்த்ரீகளுடைய சிலம்பின் கோஷமும்; அண்டம் உறும் - அண்டபித்தியிலேசென்று, அலை - அலையெறிகிற, கடலின் ஒலி-ப்ரளயார்ணவகோஷம்போலே, திகழும் - விளங்குகிற, நாங்கூர்—.

சேடு - திரட்சி. திரளப்பூத்தசெருந்தி, அழகிய கமுகம்பாளை. (செண்பகமித்யாதி) செண்பகப்பூ மணங்கமழுகிற அழகிய பொழிலின்நடுவே ஆடுகையிலேயுற்றவயலில் ஆலைப்புகைகமழும் நாங்கூர். ௪.

மல்லிகை, செங்கழுநீர், சேடு - திரட்சி. திரளப்பூத்த பூவையுடைத்தான செருந்தி, அழகியகமுகம்பாளை, செண்பகம், இவை பரிமளத்தைப் புறப்படவிடாநின்றுள்ள அழகியபொழிலின் நடுவே ஆடுகைக்காக ஏறினவயலில் ஆலைப்புகையானது கமழுமாய்த்து. ச.

ஆடுகைக்காக - கரும்பாடுகைக்காக. ... ... ச.

அஞ்சாம்பாட்டு.— (கண்டவரித்யாதி.) கீழ்த்திருமொழியில் நரஸிம்ஹாவதார மநுபவித்தவர் ராமாவதாரத்தில்போய் அநுபவித்தார்; அப்படியே இங்கும்-நரஸிம்ஹாவதாராநுஸந்தாநாநந்தரம் ராமாவதாரத்தில் போகவொருப்பட, நடுவே வழிபறிக்காரரைப்போலே களவில்மிக்க குறள்வந்து நெஞ்சைவஞ்சிக்க, அங்கே அகப்பட்டநுபவித்துக்கொண்டு,தேவர்க்குதவினதும் எல்லார்க்குமுதவித் திருவடிகளைப்பரப்பினமையுமநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி. ஆகையிறே, "கண்டவர்தம் மனம்மகிழ" என்று - தன்னெஞ்சு அபஹ்ருதமானத்தையும் ஸூசிப்பித்தது.

http://acharya.org

அஞ்சாம்பாட்டு. (கண்டவரித்யாதி) அநுகூல ப்ரதிகூல விஷம மன்றியே கண்டாரெல்லாரும் ஆநந்திக்கும்படி, மஹாவலியுடைய யாகத்திலே க்ருத்ரிமம்மிக்க குறளாய், மூன்றடிதா என்றிரந்து. (அண்டமுமித்யாதி) ஆகாசத்தையும் அலையெறிகிற கடலையும் ஸப்தத்வீபமான பூமிகளையெல்லாமளந்த உபகாரகன் நித்யவாஸம்பண்ணுகிறவிடம். (வளங்கொளித்யாதி) அழகுடைத்தான பொழிலருகே அண்டத்திலே சென்றுகிட்டுகிற வாத்யகோஷங்களும், மதுபாநம் பண்ணிக்களித்துப் பாடுகிற வண்டுகளின்த்வநியும், வேதகோஷமும், ந்ருத்தம்பண்ணுகிற மடவாருடைய சிலம்பொலியும், அண்டத்திலேமு செல்ல த்வநிக்கிற கடலோசையாலும் விளங்காநின்றுள்ள நாங்கூர்.

அஞ்சாம்பாட்டு.— (கண்டவர்தம்மனம்மகிழ) அநுகூலப்ரதிகூல விஷமமின்றிக்கே கண்டவர்கள் நெஞ்சானது மகிழும்படியாக, மஹாவலியுடைய யஜ்ஞவாடத்திலே, "இவன்தேவகார்யம் செய்கிறான்" என்று தோற்றாதபடியாக "நாட்டில் வாமநர்கள் திருவுலகளந்தருளினவிடம்" என்னும்படியான வாமநவேஷத்தை பரிக்ரஹித்து, "எனக்குமூன்றடிவேணும்" என்று அர்த்தித்து, ஆகாசத்தையும் அலையெறியாநின்றுள்ளகடலையும் த்வீபங்களையுமெல்லாம் அநாயாஸேந அளந்து கொண்ட உபகாரகன் நித்யவாஸம் பண்ணுகிறதேசம்.

(வளமித்யாதி) ஸம்ருத்தியையுடைத்தாயிருக்கிறபொழிலினருகே, ஆகாசத்தில் அவகாசமுள்ளவிடமெங்கும் போய் வ்யாபரிக்கிற வாத்யகோஷமும், மதுபாநம்பண்ணுகிற வண்டுகளினுடைய த்வநியும், வேதகோஷமும், ஆடுகிறஸ்த்ரீகளினுடையசிலம்பொலியும், அண்டபித்தியிலே சென்று அலையெறிகிற ப்ரளயார்ணவகோஷம்போலே விளங்காநின்றுள்ள. ... ... ௫.

களவில்-களவில்லை என்னும்படி தோற்றுமவனாய், மிகவும்சிறிசாய்க்குறளான வேஷத்தையுடையனாய் என்று பூர்வார்த்தம் திருவுள்ளம்பற்றி, உத்தரார்த்தமருளிச்செய்கிறார் (இவனித்யாதி;) லோகத்தில் வாமநர்களெல்லாரும் த்ரிவிக்ரமனோடொப்பாரென்னும்படி மிகவும்குள்ளே யென்றபடி.

"அயல்" என்றதினர்த்தம் (அருகேயென்றது.) "முழவொலி" என்றதினர்த்தம் (வாத்யகோஷமென்றது.) ... ... ௫.

ஆறும்பாட்டு.— (வாளித்யாதி.) நடுவேவழிபறித்தவர் மாண்வேஷத்தை அநுஸந்தித்தவநந்தரம், "மின்னனையநுண்மருங்குல்" என்கிறபாட்டிலநுஸந்தித்த ராமாவதாரத்தை அநுஸந்திக்கிறாரென்றுஸங்கதி.

http://acharya.org

மூ.— வாணெடுங்கண் மலர்க்கூந்தல் மைதிலிக்கா விலங்கை
மன்னன்முடியொருபதும் தோளிருபதும்போயுதிர
தாணெடுந்திண் சிலைவளைத்த தயரதன்சேயென்றன்
தனிச்சரண்வானவர்க்கரசு கருதுமிடம் தடமார்
சேணிடங்கொள் மலர்க்கமலம் சேல்கயல்கள்வாளை
செந்நெலொடு மடுத்தரியவுதிர்ந்த செழுமுத்தம்
வாணெடுங்கண் கடைசியர்கள் வாருமணிநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௯.

ப - வுர.—வாள் - வாள்போலே கூரிதாய், நெடு - நீண்ட, கண் - திருக்கண்களையும், மலர் - பூஅணிந்த, கூந்தல் - மயிர்முடியையுமுடைய, மைதிலிக்கா - பிராட்டிக்காக, இலங்கைமன்னன் - லங்காதிபனான ராவணனுடைய, ஒருபதுமுடியும்- பத்துத்தலைகளும், இருபதுதோளும் - இருபதுதோள்களும், போய் உதிர-உதிர்ந்து போம்படி, தாள்-பூட்டப்பட்டநாணையுடைத்தாய், நெடு-நீண்ட, திண்-திடமான, சிலை - வில்லை, வளைத்த - வளையப்பண்ணின, தயரதன்சேய்-தசரதன்பெற்றமகனாய், என்றன் - எனக்கு, தனிச்சரண் - அத்விதீயரக்ஷகனான, வானவர்க்கரசு - நித்யஸூரிநிர்வாஹகன், கருதும் இடம்-வர்த்திக்கிற ஸ்தானமாய்; தடம் ஆர் - பொய்கைகள் நிறைந்திருப்பதாய், சேண் இடம்கொள் - ஆகாசமுள்ள விடமெங்கும் ஓங்கியிருக்கிற, மலர் - பூக்களையுடைத்தான, கமலம் - தாமரையையும்,சேல்கயல்கள்வாளை-சேல்கயல்வாளை என்னும் மத்ஸ்யங்களையும், செந்நெலொடும் - செந்நெலோடே, அடுத்து அரிய - அடுத்துப்பிடித்து அறுக்க, உதிர்ந்த - அவற்றினின்று உதிர்ந்த, செழு - அழகிய, முத்தம் - முத்துக்களை, வாள் - வாள்போலே கூரிய, நெடு-நீண்ட, கண் - கண்களுடைய, கடைசியர்கள்-கர்ஷகஸ்த்ரீகள், வாரும் - வாருகிற, அணி - சுந்தரமான, நாங்கூர்—. ... ... (௯)

ஆறும்பாட்டு. (வாணெடுங்கணித்யாதி) வாள்போலே கூர்ந்து நெடிதானகண்ணழகையும், மலரையுடைய குழலையுமுடைய பிராட்டிக்காக. (இலங்கையித்யாதி) லங்கேஶ்வரனான ராவணன் பத்துத்தலையும் இருபதுதோளும் உதிர, தாளையுடைத்தாய் நெடிதாய் வலியுடைய சிலையைவளைத்த சக்ரவர்த்தித்திருமகன். சேயென்று — பிள்ளை. எனக்கு அத்விதியமான புகலிடம், நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகன் விரும்பிவர்த்திக்கிறதேஶம்.

ஆறும்பாட்டு.— (வாளித்யாதி) ஒளியைச்சொல்லுதல்; வாள்போலேயிருக்கிற நெடியதிருக்கண்களையும் மலரையுடைத்தான மயிர்முடியையுமுடைய ஸ்ரீஜநகராஜன் திருமகளுக்காக, லங்கைக்கு நிர்வாஹகனாயிருக்கிறவனுடைய பத்துத்தலையும் இருபதுதோளும் உதிரும்படியாக,தாளையுடைத்தாய் நெடிதாய்த் திண்ணிதாயிருக்கிற வில்லைவளைத்த டஶரதாத்மஜன். சேய் - பிள்ளை. (என்றன்தனிச்சரண்) “ தயரதற்குமகன்றன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே” என்னுமாப்போலேகாணுமிருப்பது. * அயர்வறு மமரர்களதிபதி வர்த்திக்கிற ஸ்தானம்.

. “தாள்” என்று-பூட்டாய்,பூட்டப்பட்ட நாணைச்சொல்லுமென்று கொள்வது.

ரூ.— திமனத்தான்கஞ்சனது வஞ்சனையில் திரியும்
தேனுகனும் பூதனைதன்னாருயிரும் செகுத்தான்
காமனைத்தான் பயந்த கருமேனியுடையம்மான்
கருதுமிடம் பொருது புனல்துறைதுறைமுத்துந்தி
நாமனத்தால் மந்திரங்கள் நால்வேதமைந்து
வேள்வியோடாறங்கம் நவின்று கலைபயின்றங்
காமனத்து மறையவர்கள் பயிலுமணிநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. எ.

ப - ரை.—திமனத்தான் - பொல்லாதநெஞ்சையுடையனான, கஞ்சனது - கம்ஸன்ப்ரேரிதனாயிகே, வஞ்சனையில் - க்ரித்ரிமவேஷங்கொண்டு, திரியும் - திரிகிற தேனுகனும் - தேநுகாஸுரனுடையவும், பூதனைதன் - பூதனையுடையவும்,ஆர்உயிர்-ப்ராணனை, செகுத்தான் - முடித்தவனும், காமனை-தன்னழகால்நாட்டைவெருட்டித்திரியும் மன்மதனை, பயந்த - பெற்ற, கருமேனி உடை அம்மான் - கறுத்ததிருமேனியையுடைய ஸ்வாமி, கருதும் இடம் - விரும்பிவர்த்திக்கிற தேசமாய்; பொருது புனல் - திரைமோதிக்கொண்டுபொசிகின்றுள்ள புனலானது, துறைதுறை-ப்ரதிதுறையிலும், முத்துஉந்தி - முத்துக்களைத்தள்ளாநிற்பதாய், நா - நாவாலும், மனத்தால்-மனஸ்ஸாலும், மந்திரங்கள் - பகவன்மந்த்ரங்களும், நால்வேதம்-சதுர்வேதங்களும், ஐந்துவேள்வியோடு - பஞ்சமஹாயஜ்ஞங்களும், ஆறுஅங்கம் - ஷடங்கங்களும், நவின்று - அப்யஸித்து, கலைபயின்று-மற்றுமுள்ளஶாஸ்த்ரங்களும்ஓதி, அங்கு ஆம் மாற்ற - பரிகர்த்தாமரராமனான, மறையவர்கள்-வைதிகர், பயிலும்-நெருங்குகையால் வந்த, அணி-அழகையுடைய, நாங்கூர்— ... ... (எ)

(சேலைதியாதி) ஆகாஶாவகாஶமடையத் தனக்கே போரும்படியான பெரியபக்கங்களையுடைய தாமரை, சேல், கயல்கள், வாளைகள், இவற்றைச்செங்கெலோடே அடுத்துப்பிடித்துஅரிய,உதிர்ந்துஅழகிய[உடு முத்துக்களைக் கதிர்பொறுக்க வயலிலே யிழிந்தவர்கள், வாள்போலே நெடுகிக்கூரிய கண்ணையுடையார் வாரி மடியிலிடுநாங்கூர். ௬.

பொய்கைகள் நிறைந்திருப்பதாய் ஆகாஶமுள்ள விடமெங்கும் வளர்ந்திருக்கிற மலரையுடைத்தான தாமரை, சேல், கயல்கள், வாளை, இவற்றைசெந்நெலோடே அடுத்தறுக்க, உதிர்ந்த அழகியமுத்துக்களை, கதிர்பொறுக்கவிழிந்தவர்கள் வாருவார்களாய்த்து. ... ௬.

பொய்கைகள் நிறைந்திருப்பதாயென்றது - பொய்கையெல்லாம் வ்யாபித்திருப்பதா யென்று தாமரைக்கு விஶேஷணம். முத்துக்கள் தாமரையிலும் மீன்களிலு முண்டென்னும் ப்ரஸித்தியைப்பற்ற வருளிச்செய்கிறார் (அழகியவித்யாதி.)

ஏழாம்பாட்டு.—(திமனத்தானித்யாதி.)கீழ் ராமாவதாரத்தில் போனவரையும் வஶீகரிக்கும்படியான விரோதிநிரஸந பரம்பரையுள்ளது க்ருஷ்ணாவதாரத்திலே யாகையாலே,கீழ்"கஞ்சன் குஞ்சிபிடித்தடித்தபிரான்"என்றுசொன்னத்தால்த்ஸங்கதியாகையாலே,இனி மேற்பாட்டுக்களிலெல்லாம் க்ருஷ்ணபதாநங்களை வாய்வந்தபடியே பேசியநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

http://acharya.org

ஏழாம்பாட்டு. (தீமனத்தானித்யாதி) பொல்லாத நெஞ்சையுடைய கம்ஸன்ப்ரேரணையாலே க்ருத்ரிமவேஷங்கொண்டுதிரிகிற யேநகனுடையவும் பூதனையுடையவும் உஜ்ஜீவனைப்போக்கினவன். (காமனையித்யாதி) காமனைப்பயந்த க்ருஷ்ணன் விரும்பி வர்த்திக்கிறதேசம். திரையோடு திரை பொராநின்றுள்ள புனலானது துறைதோறும் முத்துக்களைத் தள்ளாநிற்பதாய். (நாமனத்தாலித்யாதி) நாவாலும் மநஸ்ஸாலும், ஸமவங்மந்த்ரங்களை, நாலுவகைப்பட்ட வேதம், பஞ்சமஹாயஜ்ஞம், அங்கங்கள் துடக்கமானவற்றைப் பலகாலும் அப்யஸித்து பரிசுத்தியாஞ்சுகரணர் நெருங்குகையாலேவந்த அழகையுடைய நாங்கூர். ... ... எ.

எட்டாம்பாட்டு. (கன்றதனாலித்யாதி) கன்றாலேவிளவையெறிந்து, அதிற்பழத்துடனே விளவையுதிர்த்தபிள்ளை. எல்லாராலும் விரும்பப்பட்ட அழகிய காளமேகம்போன்ற வடிவழகையுடையவன், பசுக்களை ரக்ஷிக்கைக்காகக் கல்லெடுத்துக் கல்மாரிகாத்துக் குடக்கூத்தாடினவன் கொண்டாடி வர்த்திக்கிறவிடம்.

ஏழாம்பாட்டு.— (தீமனத்தானித்யாதி) தீதான நெஞ்சையுடையனாய் – ஸமவத்தத்த்வம் ஓரிடத்திலே புண்டென்னப்பெறாத நெஞ்சையுடைய கம்ஸன்; அவனுக்குறுப்பாய் க்ருத்ரிமத்தாலே நம்மிவாறு நந்திரிந்த யேநகன், பூதனை, அவர்களை முடித்துப்போகட்டவன். அற்றில்வந்தால் காமனுக்குமுத்பாதகனாய், அவ்வளவல்லாதபடி ஸ்ரமஹரமான திருமேனியையுடையனாயிருக்கிற ஸர்வேச்வரன் விரும்பிவர்த்திக்கிற தேசமாய்த்து.

திரையோடு திரைபொராநின்றுள்ள புனலானது துறைதோறும் துறைதோறும் முத்துக்களைத்தள்ளாநிற்பதாய், நாவாலும் மநஸ்ஸாலும், ஸமவங்மந்த்ரங்கள், நாலுவகைப்பட்ட வேதம், பஞ்சமஹாயஜ்ஞம், அங்கங்கள் துடக்கமானவற்றைப் பலகாலுமப்யஸித்து பரிசுத்தியாஞ்சுகரணர்நெருங்குகையால்வந்த அழகையுடைய. ... எ.

எட்டாம்பாட்டு.— (கன்றதனாலித்யாதி) கன்றாய்நின்ற அஸுரனைக்கொண்டு விளாவாய்நின்ற அஸுரனைமுடியும்படிபண்ணி லீலாரஸமநுபவித்த செல்லப்பிள்ளை; காமருவப்படுவதாய் – ஆசைப்படப்படுவதான, சீருண்டு - குணம், அத்தையும், ஸ்ரமஹரமாயிருக்கிற திருமேனியையுமுடையவன், பசுக்களைரக்ஷிக்கைக்காக கோவர்த்தனத்தாலே மழைதடுத்து, மன்றிலே ஸர்வாநுபவயோக்யமாம்படி குடக்கூத்தாடினவன் கொண்டாடிவர்த்திக்கிற தேசம்.

விவரணம் (ஸமவததத்த்வமித்யாதி.) அகங்கமனதது-ஸமஷ்டி விஷயத்துக்காயிருக்கிற மனத்தென்றாய், அதினர்த்த மருளிச்செய்கிறார் •(பரிசுத்தியாஞ்சுகரணரென்று.) ... ... எ.

எட்டாம்பாட்டு.— (கன்றித்யாதி.) "விளங்கனியை" என்றது பின்னாட்டிபின்னும் சிலகூட்டியநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

http://acharya.org

மூ.— கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்தகாலே
காமருசீர்முகில்வண்ணன் காலிகள் முன்காப்பான்
குன்றதனாலமழைதடுத்துக் குடமாடு கூத்தன்
குலவுமிடம் கொடிமதிள்கள் மாளிகைகோபுரங்கள்
துன்றுமணிமண்டபங்கள் சாலைகள் தூமறையோர்
தொக்கீண்டித்தொழுதியொடு மிகப்பயிலும்சோலை
அன்றலர்வாய்மதுவுண் டங்களிமுரலுநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. அ.

ப - ரை.—கன்றதனால - வத்ஸாஸுரனாலே, விளவு எறிந்து - விளாவாய்[நி]ன்ற அஸுரனை எறிந்து, கனி - அதின்பழத்தை, உதிர்த்த - உதிரும்படிபண்ணி பாலக்ரீடாரஸமநுபவித்த, காலே - நவயௌவநனாய், காமரு - எல்லாராலும்விரும்பப்பட்ட, சீர் - அழகிய, முகிலவண்ணன் - காளமேகம்போன்ற வடிவழகையுடையனாய், முன் - முன்னே, காலிகள் - பசுக்களை, காப்பான் -ரக்ஷிக்கைக்காக, குன்றதனால் - பர்வதத்தாலே, மழை - வர்ஷத்தை, தடுத்து - நிரோதித்து, குடமாடு கூத்தன் - குடக்கூத்தாடினவன், குலவும் இடம் - கொண்டாடிவர்த்திக்கும் தேசமாய ; கொடி - த்வஜங்களையுடைத்தான, மதிள்கள் - ப்ராகாரங்களையும், மாளிகை - மாளிகைகளையும், கோபுரங்கள் - கோபுரங்களையும், துன்று - நெருங்கின, மணி - மணிமயமான, மண்டபங்கள் - மண்டபங்களையும், சாலைகள் - யாகசாலைகளையுமுடைத்தாய், தூ - பரிசுத்தரான, மறையோர் - ப்ராஹ்மணர், தொக்கு ஈண்டி - கூடித்திரளுகையாலுண்டான, தொழுதியொடு - ஆரவாரத்தால் மிக்கிருப்பதாய், மிகப்பயிலும் - மிகவும் நெருங்கின, சோலை - சோலையிலுண்டான, அன்று அலர்வாய் - அப்போது விகஸித்த செவ்விப்பூவில், மது உண்டு - மதுவைப்பாநம்பண்ணி, அங்கு - அவ்விடத்தில, அளி - வண்டுகள், முரலும் - காநம்பண்ணுகிற, நாங்கூர்—. ... ... (அ)

(கொடிமதிளிதியாதி கொடிகளாலே அலங்க்ருதமான மதிள்கள், கோபுரங்கள், நெருங்கின மணிமயமான மண்டபங்கள், யாகசாலைகள், தூயரான ப்ராஹ்மணர்கூடித்திரண்ட ஆரவாரத்தால் மிக்கிருப்பதாய், மிகவும் நெருங்கினசோலையில் அப்போதலர்ந்த செவ்விப்பூவில் மதுவைப்பருகி வண்டுகள் களித்துப்பாடும். ... ... அ.

கொடியையுடைத்தான மதிள்கள், மாளிகைகள், கோபுரங்கள், நெருங்கின மணிகளையுடைத்தான மண்டபங்கள், சாலைகள், இவற்றையுடைத்தாய் ; ப்ராஹ்மணர் கூடித்திரண்ட ஆரவாரத்தால் மிக்கிருப்பதாய், சோலையிலுண்டான செவ்விப்பூவிலே மதுபாநம்பண்ணி வண்டுகள் பாடாநிற்பதுமான. ... ... அ.

சாலைகள் - யஜ்ஞசாலைகள். ... ... அ.

ஒன்பதாம்பாட்டு.— (அஞ்சனையிகயாதி.) "ஆய்ச்சியர்வைத்ததயிர்வெண்ணெயாங்குளிரவமுதுசெய்து" என்றதபினனுட்டி, உண்டவைவையெல்லாம சொல்லியநுபவிக்கிறுமென்றஸங்கதி.

http://acharya.org

மூ.—வஞ்சனையால் வந்தவள்தன் னுயிருண்டு வாய்த்த
தயிருண்டு வெண்ணெயமுதுண்டு வலிமிக்க
கஞ்சனுயிரதுவுண் டிவ்வுலகுண்டகாளை
கருதுமிடம் காவிரி சந்தகில் கனகமுந்தி
மஞ்சுலவுபொழிலூடும் வயலூடும்வந்து
வளங்கொடுப்பமாமறையோர் மாமலர்கள் தூவி
அஞ்சலித்தங்கரிசரணென் றிறைஞ்சுமணிநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௯.

ப - ரை.—வஞ்சனையால - க்ருத்ரிமவேஷங்கொண்டு, வந்தவள்தன்-வந்தபூதனையுடைய, உயிர் - ப்ராணனை, உண்டு - க்ரஸித்து, வாய்த்த-அருகேயிருந்த, தயிர் உண்டு - தயிரைப்பாநம்பண்ணி, வெண்ணெயமுது உண்டு-வெண்ணெயை அமுது செய்து, வலிமிக்க - மிடுக்குமிக்கிருந்த, கஞ்சன் உயிரது - கம்ஸனுடைய ப்ராணனை, உண்டு - பக்ஷித்து, இவ்வுலகு - இந்தலோகத்தை, உண்ட - திருவயிற்றிலே வைத்தருளின, காளை-யுவாவானவன், கருதும்இடம்—; காவிரி-காவேரிநதியானது, சந்து - சந்தநமரங்களையும், அகில - அகருவ்ருக்ஷங்களையும், கனகம் - ஸ்வர்ணத்தையும், உந்தி - தள்ளிக்கொண்டுவந்து, மஞ்சுலவுபொழிலூடும் - மேகத்தளவும் ஓங்கின சோலையிலும், வயலூடும் - வயலினுள்ளும், வந்து - ப்ரவேசித்து, வளம்கொடுப்ப - ஸம்பத்தைஉண்டாக்க, மாமறையோர் - மஹாவேதிகளான ப்ராஹ்மணர், மாமலர்கள்தூவி - ச்லாக்யமானபுஷ்பங்களை ஸமர்ப்பித்து, அங்கு அஞ்சலித்து-அங்கே அஞ்சலிபண்ணிக்கொண்டு நின்று, அரிசரண்என்று -“ஹரி உனதிருவடிகளே சரணம்” என்று, இறைஞ்சும் - ஸ்தோத்ரபூர்வகமாக ஆச்ரயிக்கிற, அணிநாங்கூர்-அழகிய திருநாங்கூரில், அரிமேயவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே—. (௯)

ஒன்பதாம்பாட்டு. (வஞ்சனையித்யாதி) * * *

ஒன்பதாம்பாட்டு.— (வஞ்சனையித்யாதி) க்ருத்ரிமத்தையுடையளாய் வந்த பூதனையுயிரையுண்டு, கிட்டின தயிரை அமுதுசெய்து, வெண்ணெயமுதுண்டு – வெண்ணெயை அமுதுசெய்து, பெருமிடுக்கனாயிருக்கிற கம்ஸனுடைய வுயிரைஉண்டு. அநுகூலப்பட்டருடைய த்ரவ்யத்தோடு ப்ரதிகூலருடைய ப்ராணன்களோடு வாசியறவிருந்தபடி. (இவ்வுலகுண்ட) வெண்ணெயமுதுசெய்த வோபாதியாய்த்து ஸூமியையெடுத்து வயிற்றிலேவைத்ததுவும்.

(காவிரியித்யாதி) காவிரியானது, சந்தநம், அகில், பொன், இவற்றைக்கொடுவந்துதள்ளி, மேவபடித்தளவும் செல்லவோங்கின பொழிலூடும் வயலுள்ளிட்டும்வந்து நிரவதிகஸம்பத்தையுண்டாக்க, ஆற்று வரவைக்கண்டு ப்ராஹ்மணர் புஷ்பங்களைத்தூவி அஞ்ஜலிபண்ணி, “ஸர்வேஸ்வரன் நம்முடைய ஜீவநத்துக்குறுப்பாக வரவிட்டான்” என்று அவனை ஆச்ரயித்துவர்த்திக்கிற. ... ... ௨.

தயிர்வெண்ணெய்களோடொகக உயிரைவிடங்களை ஊறுகச்சொலலுகையெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (அநுகூலேத்யாதி.) ... ... ௯.

* * * இங்குவிட்டுப்போனசாரநத்தைச் சோமாநதாட ... ௪.

http://acharya.org

மூ.—சென்றுசினவிடையேழும் படவடர்த்துப் பின்னை
செவ்வித்தோள்புணர்ந்துகந்த திருமால்தன்கோயில்
அன்றயனுமரன்சேயு மனையவர்கள்நாங்கூர்
அரிமேயவிண்ணகரமமர்ந்த செழுங்குன்றை
கன்றிநெடுவேல்வலவன் மங்கையர்தம்கோமான்
கலிகன்றியொலிமாலை யைந்தினொடுமூன்றும்
ஒன்றினொடுமொன்றுமிவை கற்றுவல்லா ருலகத்
துத்தமர்கட்குத்தமரா யும்பருமாவர்களே. ௧0.

ப - வ்ய.— ஏறுதழுவினார்க்கு ஸ்ரீஜநகராஜன்திருமகளைக்கொடுக்கக்கடவோமென்று எருதுகளைநிறுத்த, சென்று - தானே அங்கே சென்று, சினம்-க்ரௌர்யத்தையுடைய, ஏழுவிடையும் - ஏழுரிஷபங்களையும், படஅடர்த்து-முடியும்படி பொருது, பின்னை-நப்பின்னைப்பிராட்டியுடைய, செவ்வித்தோள்-அழகியதோளோடே, புணர்ந்து - ஸம்ஶ்லேஷித்து, உகந்த - ஸந்தோஷித்த, திருமால்தன் - ஸ்ரீய:பதி வர்த்திக்கிற, கோயில்-ஸ்தாநமாய்; அயனும்-ப்ரஹ்மாவையும், அரன்சேயும்-ருத்ரன் பிள்ளையான ஸுப்ரஹ்மண்யனையும், அனையவர்கள் - ஒத்தசாந்தியையும் அழகையுமுடையவர்கள் வர்த்திக்கிற, நாங்கூர் - திருநாங்கூரில், அரிமேயவிண்ணகரம்-அரிமேயவிண்ணகரத்தில்,அமர்ந்த-நித்யவாஸம்பண்ணுகிற,செழுங்குன்றை-அழகிய பர்வதம்போன்ற ஸ்வாமியை ; கன்றிநெடுவேல்வலவன்-கறைமாறுதநெடியவேலைக் கையிலே யுடையராய், மங்கையர்தம்கோமான் - திருமங்கையிலுள்ளார்க்குத்தலைவராய், கலிகன்றி - கலிவைரியான ஆழ்வார், கவிபாடின, ஒலிமாலை - ஒலியுடைய தொடையான, ஐந்தினொடு - க்ருஷ்ணாவதாரங்கள் விஷயமான ஐந்துபாட்டும், மூன்றும் - நாரஸிம்ஹவாமநராமாவதாரங்கள் விஷயமான மூன்றுபாட்டும், ஒன்றினொடும் - அர்ச்சாவதாரபரமான முதற்பாட்டும், ஒன்றும் - பலஶ்ருதியான இப்பாட்டும், இவை - ஆகஇப்பத்துப்பாட்டுக்களையும், கற்று-அப்யஸித்து,வல்லார்-அர்த்தாநுஸந்தாநம் பண்ணவல்லவர்கள், உலகத்து - இஹலோகத்திலே, உத்தமர்கட்கு உத்தமராய் - "எம்மையாளும்பரமர்" என்னும்படியான வைஷ்ணவர்களுக்குத்தலைவராய்,பின்பு, உம்பரும்ஆவர்கள்-நித்யஸூரிகளோடு ஒருகோவையுமாவர். (௧0)

பத்தாம்பாட்டு. (சென்றித்யாதி) ஏறுதழுவினார்க்குக் கொடுக்கக்கடவோமென்று எருதுகளைஸங்கல்கமாகவிட, அங்கேசென்று, சினவிடைகளேழையும்படும்படி பொருது, பின்னையுடைய செவ்வித்தோளுடனே கலந்துகந்த திருமால்தன் கோயில்.(அன்றயனுமரன்சேயும்) ப்ரஹ்மாவும் ருத்ரனும், இவனுடைய பிள்ளை ஸுப்ரஹ்மண்யனையும் ஒத்தவர்கள் நாங்கூரரிமேயவிண்ணகரமமர்ந்த செழுங்குன்றைக்கவிபாடிற்று.

பத்தாம்பாட்டு.— (சென்றித்யாதி) அவைநின்றவிடத்திலே தானேசென்று, சினத்தையுடைத்தாயிருக்கிற ரிஷபங்களேழையும் முடியும்படி அடர்த்து, நப்பின்னைப்பிராட்டியுடைய செவ்வியையுடைத்தான தோளோடே அணைந்துகந்த ஸ்ரீய:பதி வர்த்திக்கிற கோயில். (அன்றித்யாதி) ஶாந்திக்கு ப்ரஹ்மாவும், அழகுக்குஸுப்ரஹ்மண்யனும் ஒப்பாம்படியிருக்கிறவர்கள்வர்த்திக்கிற திருநாங்கூரில்அரிமேயவிண்ணகரமமர்ந்த செழுங்குன்றைக் கவிபாடிற்று.

' '

http://acharya.org

(கன்றிநெடுவேல்வலவன்) ஶத்ருஶரீரங்களிலே தைத்துக் கறை கழுவ அவஸரமின்றிக்கே யிருக்கிற வேலை ஆயுதமாகவுடையராய், திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநரான ஆழ்வாரருளிச்செய்த ஒலியையுடைத்தான தொடை எட்டுமிரண்டும் பத்தான இவற்றை அப்யஸிக்கவல்லவர்கள், இஹலோகத்திலே வைஷ்ணவர்கள். * பயிலுந் திருவுடையார்யவரேலுமவர் எம்மையாளும் பரமர், அவர்களுக்குத் தலைவராய் பின்னை உம்பருமாவர். ... ... ௧௦.

நஞ்ஜீயர்திருவடிகளேஶரணம்.

(கன்றிநெடுவேல்) ஶத்ருஶரீரங்களிலேதைத்துக் கறைகழுவவு மவஸரமின்றிக்கேயிருக்கிற வேலை ஆயுதமாகவுடையராய், திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநரான ஆழ்வாரருளிசசெய்த ஒலியையுடைத்தான தொடை எட்டுமிரண்டும் பத்தானவிவற்றை அப்யஸிக்கவல்லவர்கள், இஹலோகத்திலே வைஷ்ணவர்கள் ; "பயிலும்திருவுடையார் யவரேலும் - எம்மையாளும் பரமரே" என்னும்படி அவர்களுக்குத் தலைவராய், பின்னை, உம்பருமாவர்கள் - திருவடி திருவனந்தாழ்வானோடே ஒருகோவையாகப பெறுவர். ... ... ௧௦.

அடிவரவு.— திரு வென்றி உம்பர் ஓடாத கண்ட வாள்
தீமனம் கன்று வஞ்சனை சென்று போது.

திருமங்கையாழ்வார் திருவடிகளேஶரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

நிகமத்தில, தந்திருவுள்ளத்தை முன்னிட்டுச்சொன்ன க்ஷேத்ரஜ்ஞபதார்த்தங்கள் விஷயமான ஐந்துபாட்டையும், நரஸிம்ஹவாமநராமபதார்த்தங்கள் விஷயமான மூன்றுபாட்டையும், விபவவிஷயத்வாவிஶேஷேண க்ரோடீகரித்து (எட்டும் என்றது.) ப்ரஸ்துதமான அர்ச்சாவதாரபரமான முதற்பாட்டையும் ஸஹ்ருதயுமாகப்பிரித்தருளிச்செய்தவற்றை ப்ரதிபாத்யவிஷயப்ரதிபாதகதயாக்ரோடீகரித்து (இரண்டுமென்றது.) இங்ஙனன்றாகில், பத்தானவிப்பத்தை எண்ணுமுல் மூலஸங்க்யாபரிகணனையிலொருமையில்லையிறே. ஆக, ஆழ்வாருமிவரும் ஸாபிப்ராயமாக இங்ஙன் ப்ரயோகித்தார்களென்னத்தட்டில்லை. ... ... ௧௦.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

மூன்றாம்பத்து ஸம்பூர்ணம்.

ஆக, திருமொழி - ௩௦ - க்கு, பாட்டு - ௩௦௦.

http://acharya.org